# உயிரகத்தே ஒளியாகி...!



ஜெய்சக்தி

தமிழ்த்தேன் பதிப்பகம்

முதற்பதிப்பு: அக்டோபர், 2011
உரிமை: ஆசிரியருக்கு ©

UYIRAGATHE OLIYAGI

By: Jaisakthi

First Edition: October, 2011

No. of Pages: 272

Paper used: 11.6 White

விலை ரூ. 125/-

TAMILTHEN PATHIPAGAM
Old No:26, New No:23
Raja Annamalai Road,
Saibaba Colony,
Coimbatore - 641 011.
Ph:0422 - 4202731.
Cell: 98422 32646.

Laser Typeset By : TamilThen Pathipagam.

Printed at : MAHA OFFSET, CHENNAI

# உயிரகத்தே ஒளியாகி...!

## அத்தியாயம் 1

"நல்லா கும்பிட்டுக்கம்மா. நல்லதே நடக்கும்" என்றார் பாக்கியம், இளமதியின் அம்மா.

இளமதியும் தங்கள் வீட்டு பூஜை அறையில் திபாராதனை காட்டி மனமுருகி வழிபட்டுக் கொண்டாள்.

"ஆமாக்கா! நல்லா ஐஸ் வச்சுக்கோ. அதுவும் இந்த விநாயகரை ரொம்ப நல்லா ஐஸ் வச்சுட்டேன்னா எங்க போனாலும் வந்து ஹெல்ப் பண்ணுவாரு" என்று சிரித்தான் வருண், அவளுடைய தம்பி.

"ஆமாடா. நமக்கு மீறின சக்தி ஒன்னு இருக்கு. அதை நம்பித்தான் நாம வாழ்க்கையை நடத்தியாகணும்"என்றாள் இளமதி.

"சூப்பர் தத்துவம் அக்கா" என்று மேலும் கிண்டல் செய்து சிரித்தான் வருண்.

"அதெல்லாம் உனக்கு எங்கே புரியப்போவுது? உனக்குப் புரிந்ததெல்லாம்..."என்று அவள் இழுக்கும் முன்னே...

"எனக்குப் புரிந்ததெல்லாம் நீ செய்யறியே லட்டு, ஜிலேபி எல்லாம் அதிலே இருக்கிற இனிமை தான், ஸ்வீட் தான்" என்றான் வருண்.

"ஓகோ! ஜாடையா இப்பவே ஸ்வீட் செஞ்சு குடுன்னு கேட்டுட்டே. பொறுத்துக்கடா கண்ணா. சாயங்காலம் வந்து கண்டிப்பா செஞ்சு தர்றேன்"என்று சொன்னாள் இளமதி.

என்ன தான் அவள், சகோதரனுக்கு ஈடாக கிண்டல் செய்தாலும் அவன் மேல் அபரிமிதமான அன்பு என்பது பாக்கியத்துக்கு தெரியும். அதனால் அவர் இந்த உரையாடலில் தலையிடாமல் சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தார்.

“என்னடா ரெடியாயாச்சா இல்லையா?” என்று ஆர்ப்பாட்டமாக வந்தார் கந்தவேல். இளமதியின் தந்தையின் மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர்.

தந்தைக்குத் தந்தையாக கந்தவேலும், ஆதிமூலமும், கருப்பு சாமியும் ஆகிய மூன்று பேரும்தானே அவளைப் பார்த்துக் கொள்கிறார்கள்.

உண்மையில் இளமதிக்குத் தந்தை இல்லை என்ற குறையே இருக்கவில்லை. பெரியப்பா, சித்தப்பா, மாமா என்று இந்த மூன்று பேருமே மாற்றிமாற்றி உறவு கொண்டாடும் அளவிலே அவளைத் தங்கள் புதல்வியைப் போலவே பார்த்துக் கொண்டார்கள். ஆனால் ஏனோ அவர்கள் மூன்று பேருமே தங்களை ‘மாமா’ என்று தான் அழைக்க வேண்டும் என்று சொல்லி விட்டார்கள்.

இதிலே என்ன இருக்கிறது என்பது அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும் அவர்கள் விருப்பப்படி அவள் அவர்கள் மூன்று பேரையும் மாமா என்றே குறிப்பிட்டு வந்தாள்.

ஒரு வித்தியாசம் தெரியவேண்டும் என்பதற்காக பெரிய மாமா, சின்ன மாமா, நடு மாமா என்று அழைத்துக் கொள்ளுவாள். அதற்கும் கூட வருண் கிண்டல் செய்வான்.

“ஏன்க்கா...கந்தவேல் மாமாவுக்கு மூத்தவரா யாராவது இருந்திருந்தால் அவரை எப்படிக் கூப்பிடுவே? பெரிய பெரிய மாமா அப்படீன்னா...இல்ல கருப்புசாமி மாமாவை விட சின்னவங்களா யாராவது இருந்திருந்தா எப்படிக் கூப்பிட்டிருப்பே...சின்னச் சின்ன மாமா அப்படீன்னா...”என்று கிண்டல் செய்தான்.



அதற்கு இளமதியும், பாக்கியமும் சிரித்துக் கொண்டார்கள்.

“என்னம்மா, இன்னும் ரெடியாகலையா?” என்று மறுபடியும் கேட்டுக் கொண்டே கந்தவேல் உள்ளே நுழைய... “இதோ மாமா. ரெடியாயிட்டேன்”என்றாள்.

“வாம்மா.இன்னைக்குத் தான் ஆஃபீஸே கலகலப்பா இருக்கப்போவுது. அதுக்கே ஒரு களையே வரப் போவுது” என்று பூரித்த முகத்தோடு சொன்னார் கந்தவேல்.

பாக்கியத்தின் கண்களில் கண்ணீர் நிரம்பியது.

“அண்ணா! உங்களுக்கெல்லாம் நான் எப்படி நன்றி சொல்லப்போறேன்”என்று ஆரம்பிக்க...

“எதுக்குச் சிரமப்படுறே. எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை... இல்லை. விட்டுரு. கஷ்டப்படாதே”என்று சிரித்தார் கந்தவேல்.

“இல்லைங்கண்ணா... என்ன இருந்தாலும் அவர் போனதுக்கப்பறம்...”என்று ஆரம்பிக்க...

“இப்ப ஏம்மா... அதையெல்லாம் பேசிக்கிட்டிருக்கே. இப்ப நல்ல விஷயம் நடக்குது. மகள் ஆபீஸுக்கு வரப் போறாள்... அதை மட்டுமே நினைக்கணும். மத்ததையெல்லாம் எதையும் நினைக்கக்கூடாது. சரியா?”என்றார் கந்தவேல்.

“சரிங்கண்ணா...” என்று கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டார் பாக்கியம்.

“ம்... அது கரெக்ட்”என்று சிரித்தார் கந்தவேல்.

இளமதியும் கந்தவேலும் புறப்பட்டுப் போய் காரில் ஏறுவதைப் பார்த்து மகிழ்வோடு நின்று கொண்டிருந்தார் பாக்கியம்.

★ ★ ★

ஒரு பக்கம் மனதிலே மகிழ்ச்சி இருந்தாலும் இன்னொரு பக்கத்தில் பாக்கியத்தின் மனதிலே கொஞ்சம் சுமையும் இருந்தது. மீண்டும் ஒருமுறை பூஜை அறைக்குப் போய், "முருகா..எல்லாம் நல்லபடியா நடக்கணும். இந்தப் பொண்ணு சின்னப் பொண்ணு. அவங்களோட அனுபவத் துக்கு ஈடு கொடுப்பாளான்னு தெரியல. அவளுக்கு நீ தான் கூட இருந்து வழி நடத்தணும். இந்த மூணு பேரோட உறவு கெட்டுப் போகாம என்றைக்கும் அவங்க துணையா இருக் கறதுக்கு நீ தான் வழி வகுக்கணும்" என்று மனமுருகிக் கும்பிட்டுக் கொண்டார்.

வருண் அப்போது வந்து, "அம்மா! ஃப்ரண்ட்ஸ் எல்லாம் கிரிக்கெட் விளையாடக் கூப்பிட்டிருங்காங்க. எங்களுக் குள்ள ஃப்ரண்ட்லி மேட்ச் ஒண்ணு இருக்கு. நான் போகணும்" என்றான்.

"சரிடா... போயிட்டு வா. பாத்து விளையாடு. வெயில்ல காயாதே"என்றார் பாக்கியம்.

"ஐயோ அம்மா! வெயில்ல காயாம விளையாட முடியுமா? வெயில்ல காய்ஞ்சா ரொம்ப நல்லதும்மா. விட்டமின் டி கிடைக்கும்" என்று ஆரம்பிக்க...

"அப்பா சாமி. போதும். ஆரம்பிச்சிடாதே. கிளம்பு" என்று அவனுக்கு ஈடாக கேலி செய்து சிரித்தார் பாக்கியம்.

"தட்ஸ் குட்" என்று சிரித்து விட்டு கிளம்பினான் வருண்.

தன்னுடைய மனக் கஷ்டங்களையெல்லாம் மறைத்துக் கொண்டு மகளிடமும், மகனிடமும் எப்போதும் சிரித்த வண்ணமாக இருப்பார் பாக்கியம்.

முகத்தில் சோகமும், துக்கமும் இருந்தால் அதை வெளிப் படுத்திக் கொண்டே இருந்தால் சுற்றி இருக்கிறவர்களுடைய மகிழ்ச்சியும் பாதிக்கப்படும் அல்லவா? அதை மனதில் வைத்துக் கொண்டு எப்போதுமே அவர் தன்னுடைய துக்கத்தையோ, சோகத்தையோ வெளியேக் காட்டிக் கொண்டதில்லை.



ஏற்கனவே தந்தை இல்லை என்ற குறை அந்தக் குழந்தைகளுக்கு இருக்கிறது. இதில் தானும் புலம்பிக் கொண்டும், சோகமாகவும் நடமாடிக் கொண்டிருந்தால் உள்ள மகிழ்ச்சியும் அவர்களுக்குப் போய் விடும் அல்லவா? எனவே தானே தந்தையாகவும் தாயாகவும் இருக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டு இருந்தது.

அதனால் அவர் தன்னுடைய சோகத்தையும் 'துக்கத் தையும் வெளிக்காட்டிக் கொள்வதே இல்லை, வாழ்கிற வரை மகிழ்ச்சியாக வாழ்ந்தோம். நோயுற்ற காலத்தில் துன்பங்களைச் சந்திக்க வேண்டித் தான் இருக்கிறது. அதையெல்லாம் மீண்டும் மீண்டும் நினைப்பதினால் ஆகப்போவது என்ன?' என்று தன் மனத்தைத் தானே நிலைப்படுத்திக் கொண்டார்.

தியானம், யோகா என்று தன் மனத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும் என்று வழிமுறைகளையும் அவர் தேடிக் கண்டுபிடித்து வைத்திருந்தார்.

அவையெல்லாம் அவரை புத்துணர்ச்சியோடு வைத் திருந்தது மட்டுமில்லாமல் ஆரோக்கியமான எண்ணப் பாங்கோடு உலவுவதற்கும் அவருக்குத் துணை செய்தது.

இளமதிக்கு அந்த விஷயத்தில் தாயைப் பற்றி பெருமிதம். மகிழ்ச்சியும் கூட. வருணுக்கு இதெல்லாம் புரியக்கூடிய வயதில்லை என்றாலும் அம்மாவை அவனுக்குப் பிடிக்கும்.

பிற வீடுகளிலே தாயாரின் புலம்பலைப் பற்றிச் சொல்லும்போது அவன் பெருமையாகச் சொல்லிக் கொள்வான்.

"எங்கம்மா. அப்படியெல்லாம் புலம்பவே மாட்டாங் கடா. எங்க அம்மா போல்டு. பிராக்டிக்கல்"என்றெல்லாம் பெருமையாகச் சொல்லிக் கொள்வான்.

அவ்வளவு தான் அவனுக்குப் புரிந்தது.

பாக்கியம் இப்போது ஸோஃபாவில் வந்து அமர்ந்தார்.

காலையிலேயே மகளுடன் ஒன்றாக உணவருந்தி இருந்தார். ஸோஃபாவில் அமர்ந்த மகள் காரில் சென்ற பாதையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பழைய நினைவுகளெல்லாம் ஓடின.

மிகச் சிறிய வயதிலேயே பாக்கியத்துக்கும், மாணிக்க வேலுக்கும் திருமணம் நிகழ்ந்து விட்டது. அப்போது அவருக்கு அநேகமாக பத்தொன்பது வயதிருக்கும். மாணிக்க வேலுக்கு அதிகபட்சமாக இருபத்து நாலு, இருபத்தைந்து வயதிருக்கும்.

இரண்டு பேரும் மகிழ்ச்சியாகத் தான் வாழ்ந்தார்கள். ஆனால் இறைவனுக்கு அது பொறுக்கவில்லை போலும். திருமணமாகி அநேகமாக அவருக்கு பதினைந்து பதினாறு ஆண்டுகள் ஆகியிருக்கும். அப்போது தான் அது நிகழ்ந்தது.

அவர்களின் வாழ்க்கையில் இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் கந்தவேல், மாணிக்க வேல், ஆதிமூலம், கருப்புசாமி... இவர்கள் நான்குபேரும் கல்லூரி நாட்களில் இருந்தே மிக நெருங்கிய நண்பர்கள்.

இத்தனைக்கும் அவர்கள் ஒரே வகுப்பில் படிக்கவில்லை. ஒரே கல்லூரியில் படித்தார்கள். ஆனால் வேறுவேறு பாடப் பிரிவில் படித்தார்கள். வயதொத்தவர்களாக இருந்தார்கள். அந்தக் கல்லூரியிலே இந்த நான்கு பேருக்குள்ளாக நட்பு முகிழ்த்தது.

அந்த நட்பு அதோடு நின்று விடாமல் கல்லூரி படிப்பு முடிந்த பின்பும் தொடர்ந்தது. அது வேறு விதமாகவும் உருவெடுத்தது. மாணிக்க வேல்தான் ஆரம்பித்தாராம்.

''ஏம்ப்..பா... நாம நாலு பேரும் சேர்ந்து ஏதாவது பிசினஸ் ஆரம்பிச்சா என்ன?''என்று!

உடனே மற்றவர்கள், ''செய்யலாம். ஆனா... என்ன இருந்தாலும் வேலைக்குப் போனா ரிஸ்க் கிடையாது.



போனமா... ஒண்ணாந் தேதியானா சம்பளம் வாங்குவோமான்னு. நிம்மதியா வாழ்க்கை நடத்தலாம்'' என்றார் கந்தவேல்.

''ரிஸ்க் எடுக்காத வாழ்க்கை என்ன வாழ்க்கை? எவ்வளவுக்கெவ்வளவு ரிஸ்க் எடுக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு பலன் கிடைக்கும். எவ்வளவுக்கெவ்வளவு பாது காப்புத் தேடறோமோ அவ்வளவுக்கவ்வளவு பாதுகாப்பு கிடைக்கும், ஆனா பலன் இருக்காது''என்றார் மாணிக்க வேல்.

''நீ சொல்றது என்னமோ நிசந்தான். ஆனா... நானெல்லாம் பணத்துக்கு எங்க போறது?''என்றார் கருப்ப சாமி.

இந்த நான்கு பேருடைய பின்புலமுமே சற்று வித்தியாச மான பின்புலம். மாணிக்க வேலும் கந்தவேலும் நடுத்தரக் குடும்பத்திலே இருந்து வந்தவர்கள். ஆதிமூலம் சற்று வசதி யான குடும்பத்தில் இருந்து வந்தவர் என்றால் கருப்புசாமி நேர் எதிராக மிக வசதி குறைவான இடத்தில் இருந்து வந்தவர். அதனால் கருப்புசாமிக்கு சொந்தத் தொழில் என்றவுடனேயே நடக்கிற காரியமே இல்லை என்று தான் தோன்றியது.

முதல் எதிர்ப்புக் குரல் கருப்புசாமியிடம் இருந்து தான் கிளம்பியது.

''போங்கப்பா... இதெல்லாம் சொல்றதுக்கு நல்லா இருக்கும். செஞ்சு பார்த்தாத் தானே தெரியும்''என்றார் கருப்புசாமி.

''அதைத் தாண்டா நானும் சொல்றேன். செஞ்சு பாத்தாத் தான் தெரியும். செய்யாம வெளியிலே உட்காந்துட்டு இது கஷ்டம் கஷ்டம்னு சொல்லிட்டு இருந்தால் எப்படி இருக்கு? இப்போ நாம முதன்முதல்ல யோகா கிளாஸ்க்கு போறதுக்கு முன்னாடி.... இந்த கழுத்து வளையறது கை வளையறது,

எல்லாம் என்னமோ பெரிய கஷ்டம் மாதிரி தோணிச்சு. ஆனா அங்க போயி செய்ய ஆரம்பிச்ச பிறகு தான் அதெல்லாம் ஈசி அப்படீன்னு தெரிஞ்சது. அது மாதிரி தாண்டா வாழ்க்கையும், வெளியே உட்காந்துட்டே நீச்சல் வரலை வரலைன்னு சொல்லிகிட்டிருந்தா எப்படி? குதிச்சுப் பார்த்தாத் தான் தெரியும்''என்றார் மாணிக்க வேல்.

ஆதிமூலமும், கந்தவேலும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

''என்னடா சிரிப்பு?''என்றார் மாணிக்க வேல்.

''டேய். நீ தான் பேச ஆரம்பிச்சாலே போதுமேடா. எப்படியோ மனசைக் கரைச்சுடுவே. ஏதோ முடிவு பண்ணிட்டு உட்காந்துருக்கே, சொல்லு. நீ சொல்லு. நாங்க கேட்கிறோம்'' என்றனர் மற்ற இருவரும்.

கருப்புசாமி இது ஏதோ தனக்கு சம்பந்தமில்லாத விஷயம் போல, ''போதுமப்பா.. சொல்லுங்க, கேட்டுக்கறேன்'' என்று கதாகாலட்சேபம் கேட்கிறவர் போல அமர்ந்து கொண்டார்.

மாணிக்கவேல் தன்னுடைய திட்டத்தைச் சொன்னார்.

''இந்த மைக்ரோ ஃபைனான்ஸ்ன்னு சொல்றாங்களே அதை ஆரம்பிப்போம்''என்றார்.

''அப்படீன்னா...?''என்று கேட்டார் கந்தவேல்.

''சுயஉதவிக் குழுக்கள்னு சின்ன சின்ன குழுவாப் பெண்களை வச்சு அவங்களுக்கு பணத்தைக் கொடுத்து தவணையிலே வசூல் பண்றது''என்றார்.

''ஆகா... நடக்கற காரியமாச் சொல்லுப்பா...''என்றார் ஆதிமூலம்.

''நடக்கற காரியம்தாய்ப்... பா... ஏன்னா பண வசதி படைச்சவங்களுக்கும், செக்யூரிட்டி கொடுக்க முடிஞ்சவங் களுக்கும் பெரியபெரிய பைனான்ஸ்காரங்க பணம் கொடுக்



கறாங்க. ஆனா இந்த சின்னச்சின்ன குடும்பங்களெல்லாம் இந்தக் கந்து வட்டியிலயும் ரொம்ப அதிகமான வட்டியிலயும் மாட்டிட்டு முழிச்சுகிட்டிருக்காங்க. அவங்களுக்கு நாம சின்ன தொகையாக் கொடுத்து செஞ்சா என்ன?'' என்றார்.

''சரி. இது ஒர்க் அவுட் ஆகுமா? பார்க்கலாம்''என்றார் ஆதிமூலம்.

உடனே கருப்புசாமி, ''அப்படின்னா முதல்ல எனக்குக் கடன் குடுங்க.''

''முதல் கடன்காரனா நானாகவே இருந்துட்டுப் போறேன்'' எனக் கூறவும் மற்ற மூவரும் சிரித்தார்கள்.

''டேய்! நிஜமாத்தான் சொல்றேன்'' என்றார் கருப்புசாமி.

மாணிக்கவேல் சிரித்துவிட்டு ''டேய், நீ எங்க முதல் கடன் காரன் இல்லடா. நீ ஒன் ஆஃப் தி பார்ட்னர்ஸ்''என்றார் மாணிக்கவேல்.

''பார்ட்னரா... எங்க வீட்ல போய் பாரு. பாட்...பாட்டு பாட்டுன்னா தெரியுமா, சட்டி பானை தான் இருக்கு. அதில் இருந்து என்னத்தைக் கொணாந்து குடுக்கறது''என்றார் கருப்புசாமி.

''ஏன். உனக்கு கையும் காலும் இருக்கில்ல. ம்..உழைக்க முடியும்தானே, 'வெறுங்கை என்பது மூடத்தனம். விரல்கள் பத்தும் மூலதனம்' அப்படீன்னு ஒரு கவிதை இருக்குடா. பத்து விரல் இருக்கு. உழைக்க உடம்பிருக்கு. நாலு இடத் துக்குப் போயி கேன்வாஸ் செய்ய தெம்பிருக்கில்ல''என்றார் மாணிக்கவேல்.

''ம்... அதுக்கென்ன நிறைய கிடக்குது''என்றார் கருப்புசாமி.

''அப்புறம் என்ன? நீயும் பார்ட்னர் அப்ப நீ ஒர்க்கிங் பார்ட்னர்'' என்று விளையாட்டுப் போல பேச ஆரம் பித்தார்கள்.

அது ஒரு பெரிய திட்டமாக உருவெடுத்தது. அது இப்போது பெரிய நிறுவனமாகி பல கிளைகளோடு பரவியிருப்பதை எண்ணிப் பார்த்தார் பாக்கியத்தம்மாள்.

நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

அதே நேரத்தில் இளமதியின் கார் அலுவலகத்துக்குள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

★ ★ ★

## அத்தியாயம் 2

வரவேற்பு தடபுடலாக இருந்தது.

இளமதிக்கு சற்றே கூச்சமாக இருந்தது. என்றாலும் கல்லூரியில் படிக்கிற காலத்தில் கல்லூரி விழாக்களுக்கு வருகிற முக்கிய விருந்தினர்களை வரவேற்ற பழக்கம் இருந்தது.

கல்லூரி மாணவர் அவையில் முக்கிய பொறுப்புகளில் இருந்ததால் ஏற்பாடுகளிலும் அவளுக்குப் பழக்கம் இருந்தது. அதனால் அந்தக் கூச்சத்தை ஜீரணித்து சூழ்நிலையை இயல்பாக எடுத்துக் கொள்ள அவளால் முடிந்தது.

காரை விட்டு இறங்கிய உடனேயே வரிசையாக முக்கிய மான பணியாளர்கள் அழகான உடைகளை அணிந்து அவளுக்கு ரோஜாப்பூ கொடுத்து வரவேற்றார்கள். ஒரு தட்டிலே ரோஜாப் பூக்களும், கற்கண்டும் வைக்கப்பட்டு இருந்தது.

அவள் மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொண்டாள். அதே நேரத்தில் மனத்தின் உள்ளே இந்தப் பெரிய நிறுவனத்துக்கு அடித்தளமாக இருந்த தந்தையின் நினைவும் வந்து போனது.

"அப்பா! நீங்களும் இருந்து நானும் இந்தமாதிரி வந்திருந் தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் "என்ற எண்ணமும் தோன்றியது.



உடனே உள்ளே உறுதி எடுத்துக் கொண்டாள்.

அப்பாவைப் போலவே மகளும் திறமைசாலி. அப்பாவை போலவே மகளும் நான்கு பேருக்கு நல்லது செய்யக் கூடியவளாக இருக்கிறாள் என்று பெயர் எடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு, "அப்பா... நீங்கள் கூடவே இருந்து எனக்கு உதவி செய்ய வேண்டும். வழி நடத்த வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

கந்தவேல், ஆதிமூலம், கருப்புசாமி... மூன்று பேருமாக அவளை உள்ளே அழைத்துப் போனார்கள். சற்றுப் பின்னாலேயே அவர்களுடைய புதல்வர்களும் வந்தார்கள்.

கருணாகரன் முகத்தில் மட்டும் ஒரு குறும்புச் சிரிப்பு இருக்கிறாற் போலத் தோன்றியது. கருணாகரன் ஆதி மூலத்தின் மகன்.

திரும்பி இன்னொரு இளைஞனான சக்திவேலைப் பார்த்து, "பாரப்பா! இப்ப தான் ஆஃபீஸே.. பளீச்சுன்னு வெளிச்சமானது மாதிரி இல்லை" என்று கேட்டான்.

சக்திவேல் சிரித்தான். "ஆரம்பிச்சுட்டியா...?"என்றான்.

"என்னடா... உண்மையைச் சொன்னா உனக்கு கோபம் வருதா? இவ்வளவு நாள் எப்படி தூங்கி வழிஞ்சிட்டு வருவே. இன்னிக்கு எப்படி டிப்டாப்பா ட்ரெஸ் பண்ணிட்டு வந்துருக்கே?" என்று கிண்டல் செய்யவும், "நீ மட்டும் என்னவாம்?" என்று அவன் காலை வாரினான்.

அவர்கள் இருவருமாகச் சிரித்துக் கொண்டு முன்னாலே சென்றார்கள். அவர்கள் பேசிக் கொள்வது காதில் விழவும் மெல்ல புன்னகைத்துக் கொண்டாள் இளமதி.

அவர்களை முன்பே தெரியும். எப்போதுமே சிறு வயதில் இருந்தே ஒன்றாக பழகியவர்கள் என்பதால் அவர்களின் குறும்புப் பேச்சுகள் அவளுக்கு சிரிப்பாகத்தான் இருக்கும்.

அவர்கள் இரண்டு பேரும் முன்னாலே போய்க் கொண்டிருக்க சற்றுத் தள்ளி அவளுக்குப் பின்னாலே சின்னசாமி வந்து கொண்டிருந்ததை ஓரக்கண்ணால் கவனித்தாள்.

சின்னசாமி... அவன் கருப்புசாமியின் மகன். நல்ல திறமைசாலிதான். ஆனால் ஏனோ அவனுக்குள்ளே ஒரு தாழ்வு மனப்பான்மை. சற்றுக் கறுப்பாக இருப்பான். ஆனால் முகம் களையாக இருக்கும். நல்ல உயரமாக... ஆகிருதியாக இருப்பான். தன்னை மீறிய ஒரு குழந்தைத் தனம் அவன் கண்களில் இருப்பதாக இளமதிக்கு எப்போதும் தோன்றும்.

என்னமோ இதுவரை இந்தத் தொழில் உலகம்... பிசினஸ் உலகத்தில் பூடகமாகப் பேசிக் கொள்வார்களே... அப்படிப் பேசுகிற திறமையெல்லாம் வரவில்லை. மனதில் எதை நினைக்கிறானோ... அதைச் சற்று வெளிப்படையாகவே பேசுவான். அதனால் மற்றவர்களிடம் எல்லாம் அடிக்கடி குட்டு வாங்கிக் கொள்வான்.

“இப்படியெல்லாம் பேசக்கூடாது” என்பது அவனுக்குச் சொல்லப்படும் உபதேசமாக இருக்கும். “ஏன் பேசக்கூடாது? எதற்காக பொய்யாக நடிக்க வேண்டும்?” என்பது அவன் பதில் கேள்வியாக இருக்கும்.

கந்தவேல்தான் தான் பொறுமையாகச் சொல்லுவார். “இதைப் பார் சாமி... குறை சொல்றோம், நடிக்கிறோம் அப்படீங்கறது இல்ல. சில இடங்கள்ல வெளிப்படையாக உண்மையைச் சொல்லத் தேவையில்லை என்பது தான் அதற்குப் பொருள். எங்கே தேவையோ, அங்கே சொல்லிக் கலாம், புரியுதா?” என்று குழந்தைக்கு சொல்லுவது போல சொல்லுவார்.

“புரியுது பெரியப்பா! ஆனாலும் மனசு ஒத்துக்க மாட்டேங்குது” என்று முணுமுணுத்துக் கொள்வான்.



அதனால் முக்கியமான கூட்டங்களில் அவன் அமைதியாக இருப்பான்.

அப்படி அவன் முழுமையாகப் பேசாமல் இருந்தாலும் மற்றவர்களுக்கு கஷ்டமாக இருக்கும். அதனால் எல்லாரு மாகக் கூடி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அது என்ன வென்றால்... அவனுக்கு ஏதாவது சொல்ல வேண்டிய திருந்தால் சட்டென்று எழுந்து கூட்டத்தின் நடுவில் சொல்லாமல் ஒரு காகிதத்தில் எழுதி சக்திவேலிடமோ அல்லது ஆதிமூலத்திடமோ... இப்படி யாராவது அன்றைய முக்கிய கூட்டம் நடத்துகிறவர்கள் யாரோ அவர்களிடம் கொடுத்து விட வேண்டியது என்று ஒரு ஒப்பந்தத்துக்கு வந்திருந்தார்கள்.

பலநேரங்களில் சின்னசாமி கொடுக்கும் யோசனைகள் ப்ராக்டிகலாக என்பார்களே அதுபோல நடைமுறைக்கு ஏற்றதாகவும், சிறப்பாகவும் கூட இருக்கும். அதனால் இந்த வெளிப்படையாக பேசுவது என்ற ஒரு குறையைத் தவிர அவனிடத்தில் பல திறமைகள் இருந்ததால் சின்ன சாமியையும் தங்கள் அலுவலகத்திலேயே முக்கியப் பொறுப்பு கொடுத்து வைத்திருந்தார்கள்.

அவனது இயல்பைத் தெரிந்து சாமர்த்தியமாக கையாளக் கூடிய ஒரு அனுபவம் மிக்க செயலாளரையும் அவனுக்கு நியமித்து இருந்தார்கள்.அதனால் எல்லாமே இயல்பாகப் போய்க் கொண்டிருந்தது.

இளமதி அலுவலகத்துக்கு வருவதற்கு முன்பாகவே அவள் இதையெல்லாம் ஓரளவுக்கு ஆராய்ச்சி செய்து தான் வந்திருந்தாள். அவளுக்குரிய பங்கு என்ன என்பது பற்றி இனிமேல் தான் சொல்லுவார்கள் என்பதும் தெரியும்.

அலுவலகத்திற்கு அழைத்துப் போனார்கள். அவளுக் கென்று ஒரு அலுவலகம் இருந்தது. கேபின் கொடுத்திருந் தார்கள். அந்தப் பெரிய அலுவலகத்திலே ஒவ்வொரு

பகுதியிலும் பங்குதாரர்களுடைய குழந்தைகளுக்கென்று ஒவ்வொரு பொறுப்பு கொடுக்கப்பட்டு தனி அலுவலகம் கொடுக்கப்பட்டு இருந்ததை இளமதி அறிவாள்.

கந்தவேலும், ஆதிமூலமும், கருப்புசாமியும் அவர்கள் பயிற்சி எடுக்க வேண்டும் என்பதற்காக சிறுசிறு பொறுப்பு களை அவர்களிடம் கொடுத்து அதை அவர்கள் எப்படி நிறைவேற்றுகின்றனர் என்பதை கவனித்துக் கொண்டிருப் பார்கள்.

அதுபோலத்தான் தனக்கும் ஒரு பொறுப்பு கொடுக்கப் போகிறார்கள் என்பது இளமதிக்கு தெரியும்.

உண்மையில் இளமதிக்கு மேலே படிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. பி.எச்.டி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் பங்குதாரர்களாகிய மற்ற மூன்று பேரும், "இல்லம்மா... நீ மேல மேல படிச்சுகிட்டே இருக்காதே... சீக்கிரமா ஆபீசுக்கு வா" என்று சொல்லிச் சொல்லி வற்புறுத்தி அவளை அலுவலகத்துக்கு கொண்டு வந்து விட்டார்கள்.

உள்ளே நுழைந்தபோதே இளமதிக்கு ஒரு விஷயம் புரிந்தது. கல்லூரிப் பருவத்திலே தோழிகளோடு தான் பழகி யதைப் போல அவ்வளவு ஈஸியாக... அவ்வளவு மகிழ்ச்சி யாக... அவ்வளவு கோலாகலமாக இங்கே இருந்து விடமுடியாது.

இது வேறு உலகம். இங்கே தான் கற்றுக் கொள்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கிறது. தான் கற்றுக் கொள்வதற்கு நிறையப் பாடங்களும் இருக்கின்றன என்று அவளுக்குத் தோன்றியது.

ஏதேதோ நினைவுகளோடு தான் அலுவலகத்துக்குள்ளே போனாள். இளமதி நினைத்ததற்கு நேர் மாறாக கந்தவேலும் ஆதிமூலமும், கருப்புசாமியும் அவள் எதிரே அமர்ந்து கொண்டு அவளுக்கு உற்சாகமூட்டினார்கள்.



கந்தவேல் சொன்னார். "அம்மா, எதுக்கும் பயப்படாதே. 'டு எர் இஸ் ஹ்யூமன்...' என்று சொல்வார்கள். தவறுகள் மனிதனுக்கு இயற்கை. தவறுகளில் இருந்து தான் நாம கத்துக்கப்போறோம். 'ஐயோ... இப்படி தப்பு பண்ணிட் டோமே. மாமாவெல்லாம் என்ன சொல்வாங்களோ' என்று பயந்துகிட்டே செஞ்சேன்னா எந்த வேலையையுமே செய்ய முடியாது. தைரியமா செய்'' என்றார்.

இளமதி அவர்களைப் பார்த்தாள். பார்த்து விட்டு பிறகு சொன்னாள். "அதெல்லாம் சரி தான் மாமா. ஆனா உண்மையில... மத்த எந்த விஷயத்தையும் விட இந்த விஷயத்திலே கொஞ்சம் ஃகேர் புல்லா இருக்கணும். ஏன்னா... நாம நிதி நிறுவனம், பணத்தைக் கையாள்றோம். பணத்திலே ஏதாவது தவறு நடந்து கைவிட்டுப் போச்சுன்னா ஈடுகட்டறதுக்கு கஷ்டமாக இருக்குமில்ல மாமா "என்றாள்.

பொறுப்பாக அவள் பேசியதைக் கேட்டு மூவருக்கும் மகிழ்ச்சி பொங்கியது.

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மெல்லப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"அது சரிம்மா. அதனால தான் நாங்க எடுத்த உடனே உங்கிட்ட பணத்தைக் கையாள்ற பொறுப்பைக் குடுக் கலை. நீ முதல்ல அக்கவுண்ட்ஸைப் பாரு. ஒவ்வொரு டிபார்ட் மென்டாப் போய் உட்கார்ந்து அங்க இருக்கக் கூடிய சூபர்வைசரோட வேலை செஞ்சு அந்த டிபார்ட் மென்ட்டோட நடவடிக்கைகளைத் தெரிஞ்சுக்க. இன்னும் மூணு மாசத்துக்கு அதுதான் உனக்கு வேலை"என்றார்கள்.

இளமதி மகிழ்ச்சியானாள். "அப்ப சரி, மாமா" என்றாள், உற்சாகமாக.

"குட்... ஒவ்வொரு டிபார்ட்மென்ட்டிலும் பணியாளா களோடு பணியாளராக உட்கார்ந்து ஏதாவது ஒரு வேலையை வாங்கி நீ செஞ்சு அதிலே இருந்து என்ன

தெரிஞ்சுக்கணுமோ அதை ஸ்டடி பண்ணித் தெரிஞ்சுக்கோ. ஓரளவுக்கு எல்லா டிபார்மென்டைப் பற்றியும் தெரிஞ்சதுக் கப்புறம் நாம உட்காந்து பேசுவோம். அதுக்கப்பறம் உனக்கு முக்கியமான பொறுப்புகளைக் கொடுப்பது பற்றி யோசிப்போம். ஆனா... என்ன... நீ ஒரு பங்குதாரரோட மகள் என்பதால சட்டுன்னு போய் ஒரு கீழ் சேர்ல உட்காராம ஆபீசில உட்காந்து வேலையை வாங்கறதுக்குப் பழகு. இந்த ஒரு சலுகையை மட்டும் தான் இப்ப நாங்க உனக்கு குடுக்கிறோம்''என்றார்கள்.

உடனே அவள் புன்னகைத்தாள்.

''வேண்டாம், மாமா. அந்த சலுகை கூட வேண்டாம்'' என்றாள்.

''இல்லம்மா. என்ன இருந்தாலும் முதலாளி என்கிறபோது கொஞ்சம் இடைவெளி இருந்தால் நல்லது''என்றார் ஆதிமூலம்.

''சரி மாமா'' என்று தலையாட்டினாள் இளமதி.

''ஆனா... உள்ளே.. எப்ப அந்த இடைவெளி வருதோ... அப்ப இங்க நட்புக்கு வாய்ப்பே இருக்காது'' என்று லேசான சங்கடமும் அவளுக்குள்ளே தோன்றியது.

''ஆமாம்மா... உன்னை முதல்ல கருணாகரன் பொறுப்புல அனுப்பறோம். கருணாகரன் அக்கவுன்ட்ஸ் டிபார்ட் மென்ட்ல எல்லா விஷயங்களும் தெரிஞ்சு வச்சுருக்கான். எங்களுக்கே ஏதாவது சந்தேகம் வந்தா அவன்கிட்டத் தான் கேட்போம். அதனால முதல்ல... ஒரு மாசம் கருணாகரன் கிட்ட வேலை செய்'' என்றார்கள்.

'கருணாகரனா...' என அவளுக்குள் தோன்றியது. ஏனென்றால் கருணாகரன் எப்போதும் அவளைக் கிண்டல் செய்து கொண்டே இருப்பான்.

ஆதிமூலம் சிரித்தார். 'அவன் கிண்டல் செய்வான்னு பார்க்கறியோ... இங்க போயி பாரு. ஆபீசுன்னு வந்துட்டா, அவன் வேறு ஆளா இருப்பான். வேலைன்னு வந்துட்டா அவனது பிஹேவியரே வேறு மாதிரியாக இருக்கும். இன்னொண்ணும் சொல்லிடறேன். நம்ம இளமதி ஆச்சே... அப்படீன்னு எந்தவிதமான சலுகையும் கொடுக்க மாட்டான்'' என்றார்.



மறுபடியும் இளமதி உற்சாகமாக தலையாட்டினாள்.

''அதைத்தான் மாமா நான் எதிர்பார்க்கிறேன்''என்றாள்.

இப்போது ஆச்சரியப்படுவது அவர்கள் முறையாயிற்று.

''ஆமாம்மா. சலுகைகள் எப்ப வாங்கினாலும் நமக்கு சரிவர விஷயங்கள் தெரியாமல் போயிடும். ஒரு உழைப் பாளியோட உழைப்பாளியா இருந்தாத்தான் நமக்கு விஷயங்கள் தெரியும்''

''அது மட்டுமில்ல மாமா. நான் நிறைய புத்தகங்கள்ல படிச்சிருக்கிறேன். இந்த மேலாண்மை பற்றியப் புத்தகங் கள்ல. ஒரு நிறுவனத்தில மேலாண்மையில உட்காரும் போது நுனி முதல் அடி வரை இருக்கிற எல்லா விஷயங் களையும் தெரிஞ்சுகிட்டு உட்காரணும். ஒரு நேரம் ஒருத்தர் வர்லைன்னாக் கூட அந்த இடத்திலே போய் அந்த வேலையைச் செய்யற அளவுக்கு நமக்குத் திறமை இருக்கணும். அப்பத்தான் அந்த வேலையை எடுத்துக் கணும்னு சொல்றாங்க''என்றாள்.

''அப்படிப் போடு'' என்று மகிழ்ச்சியாகச் சிரித்தார் கந்தவேல்.

அவள், ''போங்க மாமா. கிண்டல் பண்ணாதீங்க'' என்று செல்லமாகச் சிணுங்கினாள்.

''இல்லைம்மா... உண்மையாகவே நான் சந்தோஷப் படறேன். யாரு பொண்ணு? மாணிக்கவேலோட பொண்ணுல்ல. அப்ப மாணிக்கவேலோட ஜீன்ஸ்ல்லாம் இருக்கும்ல. அவனது மூளையில இருந்து உருவானது தானே

இந்தத் திட்டமே. அப்போ கண்டிப்பாக உன்னால எளிமையா ஹேண்டில் பண்ண முடியும்''என்றார்.

''எளிமையா ஹேண்டில் பண்ண முடியுமான்னு தெரியலை மாமா. ஆனால் கண்டிப்பா நான் விஷயங்களைக் கத்துக்குவேன். 'இப்படி ஒரு பொண்ணைக் கொண்டு வந்த உட்கார வச்சது பெரிய தலைவலியாப் போச்சே.' அப்படீன்னு நீங்க நினைக்காத அளவுக்கு நடந்துக்கணும் அப்படீன்னு தான் நான் ப்ரே பண்ணிக்கிறேன்''என்றாள்.

அவர்கள் மறுபடியும் மகிழ்ச்சியாகச் சிரித்தார்கள்.

கருப்புசாமி சொன்னார். ''அம்மணி. அப்படியெல்லாம் ஒண்ணும் கவலைப்பட்டுக்காத அம்மணி. நீ பாட்டுக்கு வேலை செய். ஒரு தடவை விழுந்தா எந்திரிக்கிறோம். இன்னொரு தடவை விழுந்தா இந்த இடத்திலே விழக் கூடாதுன்னு தெரிஞ்சுக்குவோம். என்ன... மூணாவது தடவை விழக்கூடாது, அதே இடத்திலே. அதை மட்டும் பாத்துக்க அம்மணி''என்றார்.

இப்போது எல்லோரும் மறுபடியும் கலகலவென்று சிரித்தார்கள்.

''கரெக்ட் மாமா. உங்களோட பாணியில ரொம்ப அழகாச் சொல்லிட்டீங்க..''என்றாள் இளமதி.

அதே நேரத்தில் சிற்றுண்டி வந்தது.

கருணாகரன் உள்ளே நுழைந்தான். ''அப்பா! இப்ப வேலையைப் பாக்கறது முக்கியமா இல்லை, டிஃபன் சாப்பிடறது தான் முக்கியமா?'' என்றான்.

''இல்லைப்பா. முதன்முதலா வந்திருக்கா.''

''ஓ.கே. பதினைந்து நிமிஷம் டைம். சாப்பிட்டுட்டு என்னோட கேபினுக்கு வரச்சொல்லுங்க'' என்று சொல்லி விட்டு நிற்காமல் போய் விட்டான்.



அப்போது அவனது முகத்தைப் பார்த்த இளமதிக்கு உள்ளே லேசாக பயம் தோன்றியது.

''இது என்ன இதுநாள் வரை பார்த்த கருணாகரன் வேறாக இருக்கிறார். இப்போது பார்க்கிற கருணாகரன் வேறாக இருக்கிறார்'' என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்குள்ளாக ''சாப்பிடு அம்மணி ''என்றார் கருப்புசாமி அன்பாக.

அவள் இனிப்பை எடுத்து வாயிலே போட்டாள்.

* * *

## அத்தியாயம் 3

''ஏப்பா, அந்த அர்பன் ஏரியாவுக்குரிய ஃபைல்களை கொண்டு வாங்க''என்று சொல்லிக் கொண்டிருந்தான் கருணாகரன்.

நிறைய கடனுக்கான விண்ணப்பம் குவிந்த வண்ணம் இருந்தன. அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து தகுதியுள்ள விண்ணங்களை அவனுக்கு அனுப்பி வைத்து இருந்தார்கள்.

உண்மையில் விண்ணப்பங்களை சரி பார்த்து அனுப்புவது சக்திவேலின் வேலை. என்றாலும் கடைசியாக ஒரு முறை சரி பார்த்து விட்டுத்தான் தங்களுடைய தந்தைமார்களின் பார்வைக்கு அனுப்புவான். மற்றபடி அன்றன்றைக்கு நிகழ்கிற வசூல்கள்... அன்றன்றைக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பது அவனுடைய பொறுப்பிலே இருந்தது.

அவனது பிரிவிலே மட்டும் கிட்டத்தட்ட முப்பது பேர் வேலை செய்தார்கள். ஒவ்வொரு ஏரியாவாகப் பிரித்து அவர்களுடைய பொறுப்பிலே விடப்பட்டு இருந்தது.

கோடிக்கணக்கான தொகை பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது.

அதிகபட்சம் ஒருவருக்கு முப்பது ஆயிரம் ரூபாய்க்கு மேல் கொடுப்பதில்லை என்று வைத்திருந்தார்கள். மேலும் அதிகம் தேவை என்றால் சரியான முறையில் பொறுப்பாகத் திருப்பிக் கொடுக்கிறார்கள் என்றால் ஐம்பதாயிரம் ரூபாய் வரைக்கும் ஒரு குடும்பத்துக்குக் கொடுத்தார்கள்.

இந்த கொடுக்கல் வாங்கலின்போது அவனுக்கு ஒரு ஆச்சரியமான விஷயம் புரிந்தது. பெரிய பெரிய தொழிலதிபர்களிடத்தில் இல்லாத எளிமை இந்த ஏழை மக்களிடம் இருந்தது.

ஒரு முறைக்கு இரண்டு முறை கேட்டுவிட்டால் உயிரைக் கொடுத்தாவது அந்தப்பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அந்த ஒரு ரோஷத்தின் காரணமாகவோ அல்லது அந்த அவசியத்தின் காரண மாகவோ சில நேரங்களில் கந்து வட்டிக்காரர்களிடம் போய் மாட்டிக் கொள்கிற பரிதாபமும் அவனுக்குப் புரிந்திருந்தது.

அவன் மனத்திலே அது குறித்த கவலையும் இருந்தது. தங்கள் பங்குதாரர்களிடம் கூட அதைப்பற்றி அடிக்கடி பேசிக் கொண்டிருந்தான். இதற்கு ஏதாவது செய்ய வேண்டும், என்று!

அப்போது ஆதி மூலம் சொல்வார், ''இதுல நாம ஒண்ணும் செய்ய முடியாதுப்பா. அரசாங்கம் தலையிட வேண்டும்'' என்று.

''ஏம்பா அப்படிச் சொல்றீங்க?''என்று கேட்டான்.

''இல்லப்பா, எப்படி இருந்தாலும் நம்மகிட்ட அப்ளி கேஷன் வந்து பிராசஸ் பண்ணி மற்ற அரசு வங்கிகளைப் போல இல்லாமல் சீக்கிரமாக் கொடுத்தாலும் கூட குறைந்த பட்சம் ஒருமாதமாவது காலம் வேண்டியதிருக்கிறது. அவர்கள் ஒரு மாதம் காத்துக் கொண்டிருந்தால் தான் நம்மால் பணம் கொடுக்க முடியும். ஆனால் அவர்கள் அவசரத்துக்கு போய் சட்டென்று நிற்பது கந்து வட்டிக்காரர் களிடம் தான். இன்னொன்று உனக்குத் தெரியுமோ, தெரியாதோ சில நேரங்களில் அவர்கள் கந்து வட்டிக் காரர்களை நண்பர்களாகக் கூட நினைக்கிறார்கள். ஏனென்றால் 'தங்களை நம்பிப் பணம் கொடுக்கிறார்களே,' என்ற நன்றி உணர்வுதான் அதற்குக் காரணம். பிணை கொடுப்பதற்காக... ஈடாகக் கொடுப்பதற்கு அவர்களிடத்தில் சொத்துக்கள் இல்லை. மதிப்பான பொருட்கள் இல்லை என்கிறபொழுது நம்பிக்கையின் அடிப்படையில் கொடுக்கிற வர்களை அவர்கள் தெய்வமாகவே நினைக்கிறார்கள். அதனால் தான் அரசாங்கங்கள் என்ன முயற்சி செய்தாலும் இந்தக் கந்து வட்டியைச் சீக்கிரம் ஒழிக்க முடியவில்லை'' என்று நடைமுறை உண்மைகளை அவனுக்குச் சொல்லுவார்.



அப்போது அவனுக்குத் தோன்றும், 'இதில் ஏதாவது நாம் செய்ய வேண்டும்,' என்று!

''ஏம்பா... அந்த ஃபைலை கொண்டு வா ''என்று குரல் கொடுத்து விட்டுத் திரும்பும்போது அவனுடைய அறையை நோக்கி இளமதி வந்து கொண்டிருந்தாள்.

கருணாகரன் உதட்டிலே லேசான ஒரு புன்னகை ஓடியது. என்னதான் கிண்டல் செய்தாலும் இளமதியைக் கொஞ்சம் பிடிக்கும்.

பொறுப்பாகப் படித்தாள். தனக்கு தந்தை இல்லை என்று உணர்ந்து கொண்டு தாய்க்கு பெரிய அளவில் தொல்லைகள் கொடுக்காமல் நடந்து கொண்டாள்.

''அது வேண்டும், இது வேண்டும்'' என்று அடம் பிடித்ததாக ஒருநாளும் அவளுடைய தாய் குறை சொல்லிக் கேட்டதில்லை. வருணிடமும் மிகவும் அன்பாக நடந்து கொள்வாள்.

இதையெல்லாம் பார்த்த சில நேரங்களில் அவனுக்கு, இந்தப் பெண் தன்னை ஒரு மாடல் என்று சொல்வார்களே,

"அதுபோல முன்மாதிரிப் பெண்ணாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இன்றைய இளவயது பிள்ளைகள் இருப்பது போல இல்லாமல் கொஞ்சம் அதிகப் பக்குவத்தைப் பெற்றிருக்கிறாளோ" என்று தோன்றியது.

அதில் அவனுக்கு உடன்பாடு இல்லை. குழந்தைகள் அந்த வயதில் குழந்தைகளாகத் தான் இருக்க வேண்டும். இளவயது பெண்கள், இளவயது ஆண்கள் அந்தந்த வயதுக்குரிய கனவுகளோடும் - கற்பனைகளோடும் உற்சாகமாகத் துள்ளித் தான் திரிய வேண்டும். அது தான் அழகு.

இளமை என்ற பெயரில் அத்துமீறல்கள் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம்...

இளவயதில் அனுபவிக்க வேண்டிய விஷயங்களை இந்தப் பெண் அனுபவிக்கிறாளா என்று கூட அவனுக்குச் சந்தேகம் இருந்தது.

சுருங்கச் சொன்னால் அவன், இளமதியை ஒரு சீரியஸ் டைப் என்பார்களே அதுபோல ஒரு தீவிரமான பெண் என்று தான் கருதிக் கொண்டிருந்தான்.

இளமதி அவன் எதிரிலே வந்து நின்றாள்.

"வா இளமதி உட்காரு" என்றான்.

அவள் அமர்ந்தாள்.

"ஹ..ம்.. இந்த பெரிய குகைக்குள்ள வந்து மாட்டிக் கிட்டியா?"என்றான்.

"ஏன் அப்படி நினைக்கணும். இது பெரிய வீடு. இதுல நானும் குடியிருக்க வந்துருக்கேன்னு நினைச்சுக்கலாம்ல..." என்றாள் இளமதி.

"நினைச்சுக்கப்பா... நினைச்சுக்க... நீ என்ன வேணும் னாலும் நினைச்சுக்க. எனக்கு அதைப்பற்றி எந்த ஆட்சே



பணையும் இல்லை''என்று அவன் சொல்லிவிட்டு அவனுடைய பி.ஏ.வை அழைத்தான்.

''பாருங்க சார். இவங்க இளமதி. தெரியுமில்லே மாணிக்கவேல் ஐயாவோட பொண்ணு. இன்னையில் இருந்து நம்ம நிறுவனத்துல அவங்களும் நேரடியாக பங்கு பெறப் போறாங்க. இங்க..இப்போ இந்த ஏரியாவிலுள்ள விஷயங்களைக் கத்துக்கிட வந்துருக்காங்க. அவங்களுக்கு அந்த கேபின்ல ஒரு சீட் குடுத்துருக்கேன். அங்கே இருப் பாங்க. இங்கே என்னென்ன நடக்குதுங்கறதை எல்லாம் அவங்களுக்கு தினமும் சொல்ல வேண்டியது உங்களோட வேலை. சின்னச் சின்னதா ஏதாவது வேலை கொடுத்துகூட அவங்களைப் பயன்படுத்திக்கலாம். இன்ஃபேக்ட் அவங் களுக்கும் அது பயனுள்ளதாக இருக்கும். எவ்வளவு தான் வெளியில இருந்து நீந்தத் தெரியும், நீந்தத் தெரியும்னு சொல்லிக்கிட்டு இருந்தாலும் உள்ளே இறங்கி நீந்தும் போது தான் எந்தப்பக்கம் போகக்கூடாது, எந்தப்பக்கம் சுழல் இருக்கு, எந்தப்பக்கம் மீன் காலைக் கடிக்கும்... இதெல்லாம் தெரிஞ்சுக்க முடியும்''என்றான்.

அவனது பி.ஏ., சற்றே அனுபவசாலியாக இருந்தார். நாற்பது... நாற்பந்தைந்து வயதுக்குள்ளாக இருக்கும் அவருக்கு. அவரும் மெல்லப் புன்னகைத்துக் கொண்டார்.

''சரிங்க மேடம். வர்றீங்களா'' என்று அழைத்துக் கொண்டு போய் அவளுடைய கேபினில் அமர வைத்தார்.

''மேடம். ஒவ்வொரு விஷயத்தையும் நான் சொல்லி புரிவதைக் காட்டிலும் உங்களுக்கு போன வருஷத்து ஃபைல்களைத் தர்றேன். முக்கியமான டேட்டா எல்லாம் இந்தக் கம்ப்யூட்டர்ல இருக்கு. கம்ப்யூட்டர் ஆப்பரேட் செய்யத் தெரியுங்களா?'' என்றார்.

''தெரியும் சார்'' என்றாள் இளமதி.

"சரிங்க மேடம். அப்ப இந்த ஃபைலை ஸ்டடி பண்ணுங்க. இந்த ரெண்டு மூணு ஃபைலையும் திரும்பத் திரும்ப ரெண்டு மூணு நாளைக்கு படிங்க. அப்போ உங்களுக்குத் தெரியும். சில டர்ம்ஸ் உங்களுக்கு ஃபெமிலியர் ஆகும். அதுக்கப் பறமா அது பத்தின விஷயங்களை நீங்க சேகரிக்கும்போது இன்னும்கூட உங்களுக்கு ஈஸியாக இருக்கும்''என்று சொன்னார்.

"சரிங்க சார்'' என்று இளமதி கேட்டுக் கொண்டாள்.

ஒரு ஃபைலைக் கையில் எடுத்தாள்.

நேரம் போனதே அவளுக்குத் தெரியவில்லை. அங்கே இருந்த ஒரு குறிப்பு நோட்டை எடுத்து தனக்கு அதில் என்னென்ன புரிகிறது என்பதையும், என்னென்ன புரிய வில்லை என்பதையும் குறித்துக் கொண்டே வந்தாள்.

எப்போது நண்பகல் வந்தது என்பதே அவளுக்குத் தெரியவில்லை.

கருணாகரனுடைய பி.ஏ. வந்து, "சாப்பிடப் போலாம்னு சார் சொன்னாங்க''என்று அழைத்தார்.

அவர்களுக்கெல்லாம் அங்கே தனியாக ஒரு டைனிங் ரூம் இருந்தது. அங்கே உணவு பரிமாறப்பட்டது என்பதை யெல்லாம் அவள் ஏற்கனவே அறிவாள்.

கருணாகரனுடன் நடந்து போனாள். அவர்கள் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்த கருணாகரனின் பி.ஏ சுப்பிரமணி மெல்லச் சிரித்துக் கொண்டார்.

'ஒருவேளை ஜோடியாக ஆனாலும் ஆவார்களோ, அதற்கான வாய்ப்புகள் இருக்கிறதோ' என்று எண்ணிக் கொண்டார்.

இடுப்பளவு தொங்கிய பின்னல்... உடலுக்குப் பொருத்த மான... பாந்தமான சின்னச்சின்ன பூக்கள் போட்ட அழகிய நிறம் படைத்த புடவை. அதற்கேற்ற ப்ளவுஸ்...



ஒரு கையில் வாட்ச். இன்னொரு கையில் மெல்லியதாக இரண்டு வளையல்கள். அழகான ஒரு செயின்...அதிலே தொங்கிக் கொண்டிருந்த டாலர். சின்னதாக இரண்டு கம்மல்கள்... மெல்லியதாக ஒரு மோதிரம் கையிலே... என்று அவள் அலங்கரித்துக் கொண்டிருந்த விதத்திலேயே வசதியும் தெரிந்தது. எளிமையும் தெரிந்தது.

இந்தப் பெண்ணிடத்திலே ஒரு ஸ்பார்க் என்பார்களே அதுபோல ஒரு சுடர் தெரிந்தது. இந்தச் சுடரை மட்டும் தூண்டி விட்டால் இவள் மிகவும் கெட்டிக்கார பெண்ணாக வருவாள் என்று அவர் மனத்திலே பட்டது.

அதே நேரத்தில் கருணாகரன் அவளோடு டைனிங் ஹாலுக்கு நடந்து போய்க் கொண்டிருந்தவன், திரும்பி அவளிடத்தில் "மதி! கொஞ்ச தூரம் நடக்கணும். டைனிங் ஹால் அந்த பிளாக்கில இருக்கு''என்றான்.

"பரவாயில்லைங்க, கருணா''என்றாள் அவள்.

"மதி, போறவரைக்கும் ஒரு கதை சொல்லட்டா?''என்று கேட்டான்.

"சொல்லுங்க''என்றாள் அவள்.

அவன் ஒரு கதை சொன்னான்.

"ஆடு... ஆடு..கேள்விப்பட்டிருக்கியா?''என்றான்.

"ம்..''என்று அவள் புன்னகைத்தாள்.

"ஒரு ஆட்டை ஒரு குகை மாதிரியான பாதையில கூட்டிட்டுப் போனாங்க. கூட்டிட்டுப் போயி... திடீர்னு பார்த்தா... பெரிய திடல் மாதிரி இருந்தது. அங்கப் போயி அந்த ஆட்டை விட்டாங்களாம். அந்த ஆடு நேர் எதிர்ல பார்த்தது. மூணு பெரிய கூண்டு இருந்தது. ஒரு கூண்டுல ஒரு புலி... இன்னொரு கூண்டுல ஒரு சிங்கம். இன்னொரு கூண்டுல ஒரு சாதுவான பிராணி. என்ன பிராணின்னு வச்சுக்கலாம்?''என்று கேட்டான்.

"நீங்க தானே கதை சொல்றீங்க. நீங்களே சொல்லுங்க" என்றாள் இளமதி.

"அதானே... நான் தானே கதை சொல்ல ஆரம்பிச்சேன்" என்று ஒரு வினாடி யோசித்தவன், "காட்டெருமைன்னு வச்சுக்கலாமா?"என்று கேட்டான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. புன்னகைத்தபடி தலையசைத்தாள்.

இந்த ஆட்டைக் கொண்டு போய் விட்டுட்டு கதவைச் சாத்திட்டாங்க. இந்த ஆட்டுக்கு மூன்று வழி தான் இருக்கு. ஒரு வழியில போனா சிங்கம். ஒரு வழியில போனா புலி. இன்னொரு வழியில போனா காட்டெருமை. ஆனா அந்த ஆட்டுக்கு கண்டுபிடிக்கறதுக்காக இன்னொரு வழியும் வச்சுருந்தாங்க. அந்த வழி அந்த வளையத்துக்குள்ளே ஏதோ ஒரு பக்கம் தான் இருக்குது"என்றான்.

அவள் சட்டென்று சிரித்தாள். "என்னமோ இந்த ரோமா புரியில சண்டை நடக்குமே. அதுமாதிரியில்ல சொல்றீங்க. சிங்கத்துக்கும் மனிதனுக்கும் சண்டை நடக்குமே அதுமாதிரி யில்ல இருக்குது" என்றாள்.

அவன் சிரித்தான். "கிட்டத்தட்ட அந்த மாதிரிதான்னு வச்சுக்கயேன். அந்த ஆடு என்ன செய்யும்?" என்று கேட்டான்.

"அது... அந்த ஆட்டைத் தான் கேட்கணும்"என்றாள் அவள்.

"ஆட்டைக் கேட்க முடியாது. இது கதையாச்சே. நீ உன்னை ஆடா நினைச்சுகிட்டு இதுமாதிரி சூழ்நிலையில என்ன செஞ்சுருப்பே?"என்று கேட்டான்.

அவள் யோசனையுடன் அவனைப் பார்த்தாள்.

நான் சொல்வது புரிகிறதா என்பது போல அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்.



அவள் புன்னகையுடன் சொன்னாள்.

"அந்த ஆடு என்ன செய்யும் தெரியுமா? இந்தக் கதைக்கு விடை கண்டுபிடிக்கறதுக்கு கொஞ்சம் டைம் வேணும்னு கேட்கும்"என்றாள்.

அவன் சட்டென்று சிரித்தான்.

"ஓகே எத்தனை நாள் டைம் கேட்கும்?"என்றான்.

"மே பி ஒரு மூணு மாசம்..."என்றாள் அவள்.

"ரைட். இன்னையில இருந்து மூணு மாசம் கழிச்சு இந்தக் கதைக்கு உரிய விடையை நீ சொல்லணும், ஓகே..யா? அக்ரீட்"என்றான்.

அவளும் சிரித்துக் கொண்டு "அக்ரீட்" என்றாள்.

அதற்குள் டைனிங் ஹால் வந்து விட்டது. அங்கே போனார்கள். சரிவிகித உணவு அவர்களுக்குக் காத்துக் கொண்டிருந்தது. "வீக்லி ஒன்ஸ் நான்வெஜ் இருக்கும். பிரியப் பட்டவங்க சாப்பிடலாம். தினமும் கீரை இருக்கும், காய் இருக்கும்... இல்லைன்னா ஒரு சுண்டல் இருக்கும். இதில் எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். பஃபே... போய் வாங்கிக்கலாம். வாங்க அம்மணி" என்று அழைத்துக் கொண்டு போனார் கருப்புசாமி.

அங்கே அவளுக்காக காத்துக் கொண்டிருந்தார்.

சாப்பாடு மெல்லமெல்ல உள்ளே இறங்கியது. கூடவே பல கேள்விகளும் அவள் மனதுக்குள் எழுந்தன. எதற்காக கருணாகரன் இப்படியொரு கதை சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டே... சாப்பிட்டுக் கொண்டே கருணாகரனின் முகத்தைப் பார்த்தாள்.

அந்தப்பக்கமாக ஒரு சேரில் அமர்ந்திருந்த கருணாகரனும் அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

★ ★ ★

## அத்தியாயம் 4

கந்தவேல் டைனிங் டேபிளுக்கு வந்து அமர்ந்தார்.

கந்தவேலின் மனைவி பிரேமா அவருக்கு பரிமாறு வதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தார்.

கந்தவேல் தன்னுடைய பிளேட்டைப் பார்த்தார்.

"என்ன, இன்னைக்கும் அந்த சுக்கா சப்பாத்தி தானா?" என்றார்.

பிரேமா சலித்துக் கொள்ளாமல் சிரித்தார்.

"ஏங்க, நீங்களே தானே அடிக்கடி சொல்வீங்க. நாற்பது வயது வரைக்கும் ருசிக்கு சாப்பிடலாம். அதுக்கு மேல பசிக்குத் தான் சாப்பிடணும்னு... அப்படீன்னு. அப்படியுங் கூட அப்பப்ப நாங்க ஏதாவது செஞ்சு தானே தர்றோம்" என்றார்.

"கரெக்ட்டா எதையாவது சொல்லி வாயை அடைச்சுடு" என்றார்.

லேசான காரம், அளவான உப்பு போட்டு பிரேமா செய்திருந்த சிற்றுண்டி நன்றாகத் தான் இருந்தது. சப்பாத் திக்கு சைட் டிஷ்ஷாக தால் என்று சொல்லப்படும் பருப்புக் கூட்டு செய்திருந்தார்.

சப்பாத்தியை ஒரு கிள்ளு கிள்ளி எடுத்து அந்தப் பருப்பைத் தொட்டு வாயிலே போட்ட கந்தவேல் சொன்னார். "என்ன... சொல்லு பிரேமா. உன்னோட கைவண்ணம் கைவண்ணம் தான். நல்லாத்தான் இருக்கு. ஆனா... என்ன, எப்பவாவது ஆஃபீஸ்ல மத்தவங்களோட நம்ம வீட்டு உணவைச் சாப்பிடும்போது என்ன சொல்றாங் கன்னா... உங்க வீட்ல உப்புசப்பு இல்லாத சாப்பாடு அப்படீன்னு சொல்றாங்க" என்றார்.

பிரேமா பொறுமையாகச் சொன்னார். "எங்க வீட்ல எப்படி உப்புசப்பு இல்லையோ அதேபோல நோயும் இல்லை, தெரியுமா... அப்படீன்னு நீங்க கேட்க வேண்டியது தானே" என்றார்.

"அட...டா! எனக்குத் தெரியாம போச்சே. உடனே உனக்குப் போன் பண்ணி உங்கிட்ட இப்படி புத்திசாலித் தனமான பதில்களை வாங்கிச் சொல்லலாம், இல்லை..." என்று அவர் கிண்டல் செய்ய பிரேமா சிரித்தார்.

"என்னமோ உங்களுக்கு பதில் சொல்லவே தெரியாதது மாதிரியும் அதுக்கொரு அசிஸ்டென்ட் தேவை என்கிற மாதிரியும் ஓவராக நடிப்பீங்க" என்றார்.

"கண்டுபிடிச்சுட்டியா? இப்படி ஏதாவது நடிச்சாத்தான் வீட்ல பொம்பளைங்களுக்கு ஒரு சந்தோஷம். பரவா யில்லையே, நம்ம வீட்டுக்காரர் கேள்விக்குப் பதில் கூட சொல்லத் தெரியாம என்னமா மந்தமா இருக்கிறாரு. நம்ப பதில் சொல்லித் தான் அவருக்கே புரியுது. எல்லாம் நடக்குது... அப்படிங்கற நினைப்பு உங்களுக்கு இருந்தா நல்லது தானே" என்றார்.

"அது தான்..அப்படி ஏதாவது ஒரு நினைப்பைக் கொடுத்து எங்களை ஒரு ஓரமாக உட்கார வச்சுடுவீங்க, அப்படி இல்லைன்னா... நகை, புடவைன்னு வாங்கிக் கொடுத்து ஒரு ஓரமாக உட்கார வச்சுடுவீங்க. நீங்க பாட்டுக்கு வெளியில ராஜாங்கம் பண்ணுவீங்க. இங்க வந்தா எங்ககிட்ட ஏதோ பணிஞ்சு போறது போல நடிப்பீங்க. நாங்களும் அதை நம்பிக்குவோம்" என்றார் பிரேமா.

"நீ என்னைச் சொல்றியா?" என்று அவர் கேட்க, "இல்லை இல்லை... நான் பொதுவாத் தான் சொன்னேன்" என்றார் பிரேமா.

"அதுசரி, உங்க காலத்துல அப்படியெல்லாம். நீங்க வர்ல... நாங்களும் கூப்பிடல. ஆனா, இப்ப அப்படியில்லை தெரியுமா? நேத்துத் தான் நம்ப புள்ள வந்திருக்கா உள்ளே... காலையில இருந்த சாயந்தரத்துக்குள்ள எவ்வளவு விஷயம்

தெரிஞ்சுருக்காத் தெரியுமா? இந்த கருணா கிட்ட அசிஸ்டென்டா விட்ருக்கோம். ஓரளவுக்கு விஷயங்களை டக்குன்னு புரிஞ்சுக்கிறா அப்படீன்னு கருணாகரன் சொல்றான். இத்தனை நாள் வீட்ல தான் இருந்தீங்க. இனி ஆஃபீஸ்லயும் வந்து மிரட்டப் போறீங்க..."என்று சிரித்தார்.

"மனசாரச் சொல்லுங்க. மாணிக்க வேல் அண்ணா மகள் ஆபீஸ்க்கு வந்தது உங்களுக்குச் சந்தோஷமாக இல்லியா?" என்று கேட்டார் பிரேமா.

"கண்டிப்பா சந்தோஷம் தான். பின்னே... மாணிக்கவேல் அப்படி ஒரு ஐடியா கொடுக்கலைன்னா இன்னைக்கு நாமெல்லாம் இவ்வளவு வசதியா இருக்க முடியுமா?" என்றார்.

"என்னமோ உங்க வீட்ல வசதியில்லாதது மாதிரி சொல்றீங்க"என்று பிரேமா கேட்க...

"பிரேமா, என்ன தான் வசதியிருந்தாலும் அவனவன் சுய சம்பாத்தியத்துல காலூணி நிற்கும்போது அதுல ஒரு பெருமை இருக்கு தெரியுமா?"

"கண்டிப்பாங்க. அது என்னவோ உண்மைதானுங்க. நான் ஒரு கதை படிச்சிருக்கேன்"என்றார்.

"சப்பாத்திக்கு சைட் டிஷ் கதையா? சொல்லு சொல்லு" என்றார்.

"எப்பவுமே சுயசம்பாத்தியத்துல வர்ற பொருளுக்குத் தான் மதிப்பு அதிகமாம். அக்பரும் பீர்பாலும் ஒரு தடவை உப்பரிகையில் நின்னுகிட்டு இருந்தாங்களாம். அப்போ அவங்க அரண்மனையின் வாயில்ல... ரொம்ப தூரத்திலே ஒருத்தன் வந்துக்கிட்டு இருந்தானாம். அவன் தன் தோளில் ஒரு சால்வை போட்டிருந்தானாம். அதை ரொம்ப அலட்சியமாப் போட்டிருந்தானாம். ஆனால் கால்..ல செருப்பு போட்டிருந்தானாம். அந்தச் செருப்பை மட்டும்



குனிந்து குனித்து பெருமையாக பார்த்துக் கொண்டே இருந்தானாம்"என்றார்.

கந்தவேலுக்கு அந்தக் கதை தெரியும். என்றாலும் மனைவி ரொம்ப உற்சாகமாகச் சொல்வதை ரசித்தபடியே, "ஏன் அப்படி?"என்று கேட்டார்.

"அதைத் தான் அக்பர், பீர்பால்கிட்டக் கேட்டாராம். பீர்பால்... அதைப் பாத்தீங்களா... அந்தச் சால்வை ரொம்ப விலை உயர்ந்ததாக இருக்கு. ஆனால் என்னமோ அலட்சியமாப் போட்டுட்டு வர்றான். ஆனால்... அந்தச் செருப்பை குனிஞ்சு குனிஞ்சுப் பாத்துக்கறானே... இதுல ஏதாவது விஷயம் இருக்கா? அப்படீன்னு கேட்டாராம். உடனே பீர்பால் சொன்னாராம். 'அரசே, அந்தச் சால்வை அவன் சம்பாதிச்சு வாங்கினதா இருக்காது. அநேகமாக பெத்தவங்க யாராவது கொடுத்திருப்பாங்க... ஆனா அந்த செருப்பு அவனது சொந்த சம்பாத்தியத்தில வாங்கினதா இருக்கும்' அப்படீன்னாராம்."

"ஒருவேளை அப்படி இல்லைன்னா..".என்று கேட்டாராம் அக்பர்.

"இல்லை, அரசே கண்டிப்பா அப்படித்தான் இருக்கும். வேணும்னா விசாரிச்சுப் பாருங்க" என்றார்.

உடனே காவலர்களை அனுப்பி அந்த ஆளைக் கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்கள். அவன், தான் எந்தத் தவறும் செய்யவில்லையே என்று பயந்துபோய் வந்தான்.

விசாரித்தார்கள். பீர்பால் சொன்னது அப்படியே உண்மையாயிற்று. அவனை... பாவம் அனாவசியமாக மிரட்டியதற்காக அவனுக்கும் பரிசுகளைக் கொடுத்து அனுப்பினார் அக்பர். பீர்பாலையும் பாராட்டிப் பரிசுகளைக் கொடுத்தாங்களாம்"என்றார் பிரேமா.

"அது சரி, அது சரி" என்று அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கையிலேயே சக்திவேல் அங்கு வந்தான்.

"என்னடா எங்கூட வர்றியா... நீ தனியாப் போறியா?" என்று கேட்டார்.

"இல்லப்பா... நம்ம பீல்ட் ஆபீஸர் ஒருத்தரைப் பார்க்க வேண்டியதிருக்கு. பாத்துட்டு வந்துடறேன்ப்பா..." என்றான்.

"யாரு பீல்ட் ஆபீசர்... உன் ஃபிரண்டை போட்டிருக் கியே... அவன் பேரு என்ன... சிம்மேந்திரனா... அது என்னடா பேரு.. சிம்மேந்திரன்?"என்று சிரித்தார்.

"அது அவன் அப்பாவுக்கு இந்த சரித்திர நாவல்க ளெல்லாம் ரொம்பப் பிடிக்குமாம். அதனால அவரே ஒரு பெயரை உருவாக்கி சிம்மேந்திரன்னு வச்சுட்டாராம்"என்று சிரித்தான் சக்திவேல்.

"சரி. உட்காரு. உன் மகனுக்கும் அதே சுக்கா சப்பாத்தி தானா?"என்று கேட்டார்.

"இல்லையில்லை... அவனுக்கு வேற அயிட்டம்"என்று அவள் சிரிக்க..."ஆனா இது ரொம்ப அநியாயம்"என்று கோபப்படுவது போல் சொல்லிக் கொண்டாலும் அவர் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

"இதே சப்பாத்திக்கு குருமா ஏதாச்சும் செஞ்சு வச்சிருப்பா பாரு"என்றார்.

உடனே பிரேமா சொன்னார். "அவனுக்கு குருமா மட்டுமல்ல. கூட்டும் போட்டுத் தருவேன்"என்றார்.

"சரி, சரி சாப்பிடுங்க. நான் கிளம்பறேண்டா..." என்றவர்,..ம்... என்று ஏதோ நினைவுக்கு வந்தவர் போல மறுபடியும் அமர்ந்தார்.

"ஏன் சக்தி! கருணா என்ன சொன்னான்?" என்று கேட்டார்.



"கருணா... எதைப்பத்தி...?"என அவன் கேட்க...

"இல்லை. நேத்து நம்ம இளமதி வந்துருக்கே ஆபீஸ்க்கு... அதைப்பத்தி என்ன சொன்னான்?"என்று கேட்டார்.

"ஓ! அதைக் கேட்கிறீங்களா?" என்று சொன்னவன், "அப்பா! இளமதி ரொம்ப சூப்பரா கத்துக்கறாளாம்ப்பா... ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கா.. எப்படி நடந்துக்கணும்னு நல்லா தெரிஞ்சுருக்கு. ஸ்டாஃப்கிட்ட அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கறாளாம். அந்த சீனியர் சூப்பிரெண் டெண்ட் இருக்காரே அவருகிட்டேயும் ரொம்ப கரெக்ட்டா நடந்துக்கறாளாம். வந்த ஒரு நாள்லேயே எல்லாருக்கும் புடிச்சுப் போச்சாம்ப்பா... இளமதியை.." என்றான் சக்திவேல்.

கந்தவேல் நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டார்.

"அப்படியா விஷயம்?"என்றார்.

"ஏன், சக்திவேல். இந்த காலத்துப் பொண்ணுங்க ரொம்பப் பரவாயில்ல... இல்லை" என்றார்.

"ஆமாம்ப்பா... இந்த காலத்துப் பொண்ணுங்க பரவாயில்ல மட்டுமில்ல... சில சமயத்துல எங்களையே தூக்கி அடிக்கிற மாதிரி விஷயங்கள் பண்றாங்க"என்றான்.

"அது சரி... இந்த பொண்ணுங்க எல்லாம் ஆபீஸ்ல... வேலை செய்யறது... கொஞ்சம் ஆக்டிவா இருக்கறது... இதைப்பத்தி யெல்லாம் நீ என்ன நினைக்கறே...?"என்று கேட்டார்.

சக்திவேல் லேசாக புருவத்தை சுருக்கிவிட்டு நீவிக் கொண்டான். அப்பாவை ஒரு குறும்புச் சிரிப்புடன் பார்த்தான்.

"என்னப்பா...? காலையில பேட்டி?" என்று கேட்டான்.

"நாங்க பாட்டுக்கு பெரியவங்களா யோசிச்சு இளமதியைக் கொண்டு வந்து இறக்கிட்டோம். என்ன

இருந்தாலும் ஆண், பெண் என்றாலே ஒரு ஈகோ பிரச்னை வரும். நீங்கல்லாம் வேற சின்னப் பசங்க. உங்களுக்கு எப்படி...? தொடர்ந்து அந்தப் பொண்ணை ஆஃபீஸ்ல வச்சுக்கறதுல... ஆட்சேபனை இல்லையே? அவ எப்படி நடந்துக்கறா... உங்களுக்கு எப்படிப் புடிக்குது... இதெல்லாம் தெரியணும்ல'' என்று கேட்டார்.

அவன் புன்னகைத்தான். ''அதெல்லாம் ஒண்ணுமே பிரச்னையில்லைப்பா...''என்றான்.

உடனே தொடர்ந்து, ''ஏம்ப்பா... எங்களுக்குன்னா எங்க மூணு பேருக்கும் சொல்றீங்களா. இல்லை என்ன மட்டும் சொல்றீங்களா? ''என்றான்.

''மூணு பேரையுமே கேட்கிறேன்னு வச்சுக்கயேன். உன்னத் தானே நான் உரிமையாக் கேட்க முடியும். அவங்க கிட்ட எல்லாம் போய்க் கேட்டாலும் ஏதோ ஒரு பிக்சர் கொடுப்பாங்க. சரின்னு வரவேண்டியது தான். உங்கிட்ட தானே உரிமையாக் கேட்க முடியும்'' என்றார்.

அவன் அப்பாவை நேராகப் பார்த்தான். ''அப்பா, மாணிக்கவேல் அங்கிளோட பொண்ணு இளமதி. அந்த ஒரு வாக்கியத்துக்கப்பறம் எல்லாமே அடிபட்டுப் போகுது. எங்களுக்கெல்லாம் எப்படி இந்த நிறுவனத்திலே ஒரு உரிமை இருக்கோ அதே மாதிரி மாணிக்கவேல் அங்கிளோட குழந்தைகளுக்கும் உரிமை இருக்கு. அந்த உரிமையில இளமதி வர்றா. அவளுக்கு எவ்வளவு தூரம் சப்போர்ட் கொடுத்து அவளை உருவாக்கி விடணுமோ அந்த அளவுக்கு செய்யறது தான் பெருந்தன்மை. பெருந்தன்மை மட்டுமில்ல நம்ம கடமையுங் கூட''என்றான் சக்திவேல்.

கந்தவேல் கடகடவென்று சிரித்து விட்டார். ''சக்தி! ஒரு பெரிய லெக்சரே அடிச்சுட்டே போ'' என்றார்.

''சரிப்பா... என்ன ஏற்பாடு பண்ணியிருக்கீங்க இளமதிக்கு?'' என்று கேட்டான்.



''இல்லப்பா... இந்த மன்த் பூராவும் கருணாகரன் கூட இருந்து அக்கவுண்ட்ஸ் தெரிஞ்சுகிடட்டும். நெக்ஸ்ட் மன்த் பூராவும் ஃபீல்ட்... உங்கூடவோ அல்லது ஃபைல் செக்ஸன்... அந்த மாதிரி ஏதாவது பிரிச்சு விட்டுடலாம். ஒரு மாதம் உங்கூட... ஒரு மாசம் சின்னசாமி கூட ட்ரெயினிங் எடுத்துக் கிடட்டும். அதுக்கப்புறமாக அவளுக்கு எந்த ஃபீல்டு பிடிக்குதோ அந்த ஃபீல்டில இறக்கி விட்டுடலாம்னு யோசனை''என்றார்.

''நல்ல ஐடியா..ப்பா..அப்டியே செய்யலாம். ஒரு வேளை இந்த ஃபீல்டெல்லாம் பிடிக்கலைன்னு வச்சுக்குங்க...''என்று கேட்டான்.

கேட்டுவிட்டு குறும்பாகச் சிரித்தான்.

''பிடிக்கலைன்னா என்ன பண்ண முடியும். கல்யாணம் பண்ணி வச்சுட வேண்டியது தான்''.

''ஓகோ! அப்ப கல்யாணம்தான் ஆல்டர்நேடிவா...?''

''அதாம்ப்பா... ஈவில் நெசஸிட்டின்னு சொல்றாங்களே பிடிக்கலைன்னா என்ன பண்ண முடியும்? கல்யாணத்துல இறக்கிட வேண்டியது தான்''என்றார்.

''அப்போ அதுக்கும் பிளான் வச்சிருக்கீங்களா? அதுக்கும் மாப்பிள்ளை பார்த்துட்டீங்களா?''என்று கேட்டான் சக்திவேல்.

இரண்டு பேருக்கும் இடையே ஒரு கண்ணாமூச்சி ஆட்டம் நடப்பதைப் புரிந்து கொண்டவராக பிரேமா தன்னை மறந்து சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந் தாள்.

''ஏம்ப்..பா! இளமதிக்கு ஒரு மாப்பிள்ளை கிடைக்காமப் போயிருமா? வேணுங்கற மாப்பிள்ளை இருக்குப்பா... கையில வெண்ணெயை வச்சுகிட்டு ஏன் நெய்க்கு அலையணும். கல்யாணம் தான்னு இளமதி சொல்லட்டும். அப்புறம் பாரு''என்றார் கந்தவேல்.

"ஓகோ, இளமதி வந்து நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்ற வரைக்கும் காத்திருக்கப் போறீங் களா?" என்று மறுபடியும் வாயைப் பிடுங்கினான் சக்திவேல்.

"அப்படியில்லைப்பா... எனக்கு இந்தத் தொழில் வேண்டாம். கல்யாணந்தான்னு · ஒரு கோடிட்டுக் காட்டட்டும். பாத்துக்கலாம்"என்றார்.

"அதை... அந்தப் பொண்ணே! வந்து கோடி காட்டுமா?" என்று மறுபடியும் கேட்க, "எங்ககிட்ட இல்லைன்னா என்னப்பா... நீங்க தான் மூணு பேரு இருக்கீங்களே... உங்க யாருகிட்டேயாவது கோடி காட்டினாக்கூட சரி"என்றார்.

அப்படிச் சொல்லும்போதே மூன்று பங்குதாரர்களுக்கும் இடையே அதாவது தங்களுக்கு இடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தம் அவரது மனதுக்குள்ளே ஓடியது.

அரசல்புரசலாக அதைப் புரிந்து கொண்டிருந்த சக்திவேலின் மனத்திலும் குறும்புச்சிரிப்பு தோன்றியது.

மனதுக்குள்ளாகவும் ஒரு கேள்வி தோன்றியது. அப்பாவின் வாயில் இருந்து வரட்டுமே என்று அவனும் விதவிமாக வாயைப் பிடுங்கிப் பார்க்கிறான். ஆனால் கந்தவேல்... பல ஆண்டுகளாக கொட்டை போட்ட தொழிலதிபர் அல்லவா... அதனால் அவர் வாயில் இருந்து அவனால் எதையும் வருவிக்க முடியவில்லை.

அதேபோல அப்பாவும் மகனுடைய வாயில் இருந்து எதையாவது வரவழைக்க முடியுமா என்று முயன்று கொண்டிருந்தார்போலும்.

இப்போது சக்திவேல் சொன்னான். "அப்பா! பொண்ணுங்கன்னா ஒண்ணு வேலை... இல்லைன்னா கல்யாணம் அப்படீன்னு இல்லாம அவங்களுக்கு வேற ஐடியாஸ் கூட இருக்கலாம்ப்பா... எதுக்கும் கேளுங்க"என்று சொன்னான்.



"விடப்பா... இப்ப தான் வந்து ஒரு நாள் தான் ஆயிருக்கு. கொஞ்ச நாள் பார்க்கட்டும். எப்படியிருந்தாலும் தி கேட் ஹேஸ் டு கம் அவுட் ஆஃப் தி பேக் இல்லையா?"என்றார்.

"அதென்னமோ உண்மை தானப்பா... சரியப்பா..." என்றபடி கிளம்பிய கந்தவேல் திரும்பவும் வந்து, "பாருப்பா... அந்தப் பொண்ணு இப்ப வீட்ல இருந்து நேரடியா ஆபீஸ்க்கு வந்துருக்கு. அதுக்கு வெளியுலக அனுபவம் போதாதுப்பா... நீங்க எல்லாம் அந்தப் பொண்ணை நல்லாப் பாத்துக்கணும். நல்லபடியா அதுக்கு ட்ரெயினிங் குடுக்கணும். முன்னபின்னே இருந்தாலும் அட்ஜஸ்ட் பண்ணி பார்த்துக்கப்பா"என்றார்.

"சரிப்பா..."என்றான் சக்திவேல்.

"இதெல்லாம் நீங்க சொல்லணுமாப்பா... நாங்கெல்லாம் பாத்துக்குவோம்ப்பா..."என்றான்.

"நீங்களே இல்லப்பா... பர்ட்டிகுலரா நீ... நீ கொஞ்சம் கேர் எடுத்துப் பார்த்துக்கோ, சரியா?"என்றார்.

"சரிப்பா..."என்றான் சக்திவேல்.

இப்படிச் சொல்லிவிட்டு வேகமாகப் புறப்பட்டுப் போன தந்தையை அவன் டைனிங் டேபிளில் அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தான்.

என்னென்னவோ சிந்தனைகள் அவன் மனதுக்குள் ஓடியது.

எத்தனையோ பெரிய சாம்ராஜ்யங்கள் ஒரு பெண்ணால் ஆட்டம் கண்டிருக்கிறது. இங்கே இந்த சாம்ராஜ்யத்திலும் இந்த பெண்ணின் வருகையில் ஏதாவது பெரிய போட்டா போட்டி நிகழுமோ என்ற கவலை முதன்முதலாக சக்திவேல் மனத்தில் தோன்றியது.

★ ★ ★

## அத்தியாயம் 5

"உங்களுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைக்கிறதுன்னே தெரியலையே'' என்று கிட்டத்தட்ட குழம்பினான் சிம்மேந்திரன்.

குழம்புவது அவனது வழக்கமே இல்லை. ஆனால் இந்தச் சூழ்நிலையில் அவனுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.

''பாருங்க. நீலாம்மா, நான் சொன்னா நீங்க புரிஞ்சுக்கணும்'' என்றான்.

"புரியுது தம்பி. ஆனா எனக்கு இப்போ வேறு வழியே இல்லையே''என்று பரிதவித்தாள் அந்த தாய்.

அவருடைய இரண்டாவது மகன் ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருந்தான். அவருக்கு பணம் தேவைப்பட்டது. யாரோ சொன்னார்கள். சிம்மேந்திரனுடைய பேங்கில் பணம் தருகிறார்கள் என்று.

சிம்மேந்திரன் ஏதோ சொந்தமாக ஒரு வங்கி வைத்திருக் கிறாற்போலவும் அதிலே பணம் கேட்டால் கிடைக்கும் என்பது போலவும் யாரோ நீலாம்மாளிடம் சொல்லி விட்டார்கள்.

சிம்மேந்திரன் அவருக்குப் புரிய வைப்பதற்காக முயன்று கொண்டிருந்தான்.

"நாங்க இருக்கிறது சுழல்நிதி நிறுவனம் மாதிரி. அதுல இது மாதிரி சொந்த தேவைகளுக்காக எல்லாம் பணம் கொடுக்க மாட்டாங்க. சுயஉதவிக்குழுன்னா பணம் கொடுப்பாங்க. அதை ஒரு குறிப்பிட்ட தவணையில கட்டலாம். அது மட்டும்தான் முடியும்''என்றான்.

நீலாம்மா உடனே, "சரி. அப்படியாவது ஏற்பாடு செய்து கொடு''என்று கேட்டார்.



''சிம்மேந்திரனுக்கு அவரைப் பார்த்துப் பரிதாபமாக இருந்தது. அவனால் என்ன செய்ய முடியும் என்று தோன்ற வில்லை.

''நீலாம்மா... சொன்னா புரிஞ்சுக்கோங்க''.

''இல்ல தம்பி. எப்படியாவது ஏற்பாடு செஞ்சுக் குடுங்க'' என்றார்.

சிம்மேந்திரன் சற்று நேரம் யோசித்தான்.

அந்தத் தாயின் நிலைமை பரிதாபகரமாக இருந்தது. வேறு வழியில்லாமல் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே இருந்து இரண்டாயிரம் ரூபாய் பணம் எடுத்துக் கொடுத்தான்.

''ரொம்ப நன்றி தம்பி, ரொம்ப தாங்ஸ்''என்று விதவிதமாக நன்றி சொல்லிவிட்டு அவர் கிளம்பிப் போனார்.

அப்போது நீலா என்ற பெண்ணை அழைத்துக் கொண்டு வந்த தங்கள் குழுவைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் சொன்னான்.

"பாருங்க. ராஜாத்தி அக்கா! நீங்க பாட்டுக்கு அவங்களைக் கூட்டிட்டு வந்திட்டீங்க. இப்ப பணம் இப்படியெல்லாம் அரேஞ்ச் பண்ணித் தரமுடியாது. சுயஉதவிக்குழு அப்படீன்னா அங்க ஃபைனான்ஸ்ல இருந்து வாங்கித் தர்றேன். நான் ஃபீல்ட் ஆஃபீஸரா இருக்கேன். அவ்ளோ தான். அப்படியே கூட்டிட்டு வந்தாலும் ஐநூறோ ஆயிரமோ வேண்ணா குடுக்கலாம். அப்படியிருந்தாலும் நா எத்தனைப் பேருக்கு குடுக்க முடியும்க்கா...?'' என்றான்.

"தெரியும் தம்பி. பெரும்பாலும் யார் வந்து கேட்டாலும் அவங்களுக்கு நான் சொல்லிடுவேன். ஆனா இவங்களை பாக்க ரொம்ப பாவமா இருந்தது. ஏதாவது வழியிலப் போயி ஏற்பாடு பண்ணித் தர முடியுமான்னு கேட்கலாம்னு தான் நான் உங்ககிட்ட வந்தேன்''என்றார்.

அப்போது தான் அவனுக்கு அந்த யோசனை தோன்றியது.

தன்னுடன் இருக்கிற குழுவில் இருக்கிறவர்களிடத்தில் எல்லாம் அதைப் பற்றிப் பேசினான்.

"இது நல்ல யோசனையா இருக்கு. ஆனா... பார்க்கலாம். எங்களாலும் முடியணும்ல..." என்றார்கள்.

இப்போதைக்கு அந்த யோசனையைத் தள்ளிவைத்தான்.

அதே நேரத்தில் சின்னசாமி அவனைத் தேடிக் கொண்டு வந்தான்.

"வா, வா. சின்னசாமி" என்று வரவேற்றான் சிம்மேந்திரன்

உண்மையில் சக்திவேலிடம் இவனை அறிமுகப்படுத்தியதே சின்னசாமி தான்.

சிம்மேந்திரன் மிகச் சாதாரணக் குடும்பத்திலே இருந்து வந்திருந்தான். பெரிய வசதிகள் அவனுக்கு இல்லை. அவனுக்கென்று சின்ன ஓட்டு வீடு இருந்தது. அது ஒரு நாலு சென்ட் இடத்திற்குள்ளாக அந்த ஓட்டு வீடு அமைந்திருந்தது.

சுற்றிலும் இருந்த இடத்தை அழகாக சின்னச் செடிகள் போட்டு அந்த ஓட்டு வீடு ஏதோ ஒரு சோலைக்குள் இருக்கிற மாதிரி செய்திருந்தான் சிம்மேந்திரன்.

அப்பா இல்லை. அம்மா மட்டும் தான். ஒரே ஒரு சகோதரி. அவளுக்கும் திருமணமாகி இருந்தது. அவளுக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து முடித்து விட்டார்கள்.

அம்மா அடிக்கடி சகோதரி வீட்டுக்குப் போய் விடுவார். ஏனென்றால் அவனுடைய சகோதரி பத்மாவுக்கு சமீபத்தில் தான் குழந்தை பிறந்திருந்தது. அந்தக் குழந்தையைப் பராமரிப்பதற்கு உதவுவதற்காக அம்மா அடிக்கடி போய் விடுவார்.



சிம்மேந்திரன் கணிதத்தில் முதுநிலை பட்டதாரி. ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் போய்ச் சேரலாம் என்று தான் முயற்சி செய்து கொண்டிருந்தான். அவனுக்கு அதற்கான வாய்ப்புகள் கூட எளிதாகக் கிடைத்திருக்கும். ஆனால் இடையில் சின்னசாமி தான் நுழைந்து அவன் மனத்தை மாற்றி விட்டான்,

"ஒரே ஒருநாள் மட்டும் எங்கூட வா.. நாங்க எந்தத் துறையில சர்வீஸ் பண்ணிகிட்டு இருக்கோம்னு பாரு. அதுக்கப்பறம் முடிவு பண்ணு" என்று அவனை தங்கள் தொடர்பான இடங்களுக்கு அழைத்துச் சென்றான். இதை ஒரு நாள் என்று சொல்லி அழைத்துக் கொண்டு போனாலும் ஒரு வாரம் அவன் கோவை நகரைச் சுற்றியிருக்கிற இடங்களுக்கெல்லாம் அழைத்துக் கொண்டு போனான்.

அப்போது தான் சிம்மேந்திரனுக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது புரிந்தது. பெரிய நிறுவனங்களுக்குக் கோடிகோடியாக கொட்டிக் கொடுப்பதற்கு பெரிய நிதி நிறுவனங்கள் முன்வந்தன. ஆனால் பெரிய நிறுவனங்களில் தான் பெரிய ஏமாற்றுகளும் நடந்திருப்பதாக பத்திரிகைகளில் படிக்கிறோம்.

சின்ன நிறுவனங்கள் அவர்களுக்கும் கூட அரசாங் கத்தில் இருந்து மானியம், கடன்கள் என்று கிடைத்தன. ஆனால் ஏழைகளுக்கு பெரிய அளவில் யாரும் நம்பி கடன் கொடுக்க தயாரில்லை. அதிலும் பெண்கள் படிப்பறிவு இல்லாதவர்களாக இருந்து விட்டால் அந்தப் பெண்களை அவர்கள் படுத்தும் பாடு கொஞ்ச நஞ்சமில்லை என்பதைப் பார்த்தபோது அவனுக்கு நெஞ்சம் கரைந்துவிட்டது.

மிக ஏழ்மையான குடும்பங்களில் இருந்து வருபவர்களுக்கு ஒரு குழுவை ஏற்படுத்தி அந்த குழுவுக்கு ஒரு தொகையைக் கொடுத்து அதை அவர்களுக்குள்ளாகவே பங்கிட்டுக் கொள்கிற மாதிரி பல திட்டங்களை வைத்திருந்

தார்கள்,
நிறுவனம்.
இந்தக் கருத்து அவனுக்குப்பிடித்துப் போனது. அதனால்
சிம்மேந்திரன் விரிவுரையாளர் வேலையை விட இது
இன்னும் கொஞ்சம் ஏழைகளுக்கு சேவை செய்த மாதிரி
இருக்கும் என்று தோன்றவே இதிலே புகுந்து விட்டான்.
ஒன்றிரண்டு மாதங்களிலே சிம்மேந்திரனின் திறமையைப்
புரிந்து கொண்ட அவனது நிறுவனமும் அவனுக்கு மிக
உயர்ந்த ஒரு பதவியையும் கொடுத்தார்கள்.
மேனேஜிங் டைரக்டர், டைரக்டர்ஸ் என்று அவர்களின்
குடும்பத்தார் இருந்தாலும் கூட இவனுக்கு எடுத்த
உடனேயே மேனேஜர் பொறுப்பு கொடுக்க வேண்டும்
என்பதற்காக டிபுடி மேனேஜர் ஒன்று ஒரு போஸ்ட்
கொடுத்தார்கள்.

இவனுக்கு கீழாக ஃபீல்டு ஆபீஸர்ஸ் நிறைய பேர் வேலை செய்தார்கள். அவர்கள் அத்தனை பேரையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கு அவ்வப்போது தேவையான புதிய புதிய கருத்துக்களை, ஐடியாக்களைச் சொல்லி அவர்களை வழிநடத்துவதில் கெட்டிக்காரனாக இருந்தான், சிம்மேந் திரன்.

சின்னசாமி அவனை அறிமுகப்படுத்தியபோது சக்தி வேலும், சிம்மேந்திரனும் கிட்டத்தட்ட நண்பர்களாகி விட்டனர்.

சக்திவேல் தான் ஒருநாள், "உனக்கு இவ்வளவு திறமை இருக்கிறது. இதைப்பயன்படுத்திக் கொள். பேசாமல் எம்.பி.ஏ மாதிரி ஏதாவது மேலாண்மை பற்றிப் படி"என்று அறிவுரை சொல்ல, அவன் ஃபைனான்ஸ் மேனேஜ்மென்ட் என்ற நிதி தொடர்பான மிகப்பெரிய மேலாண்மையை இப்போது தபாலில் படித்துக் கொண்டிருந்தான்.

வாழ்க்கை அவனுக்கு சுவாரஸ்யமாகத் தான் இருந்தது.



வாழ்க்கையின் உண்மையை நேரடியாக சந்திக்கிற ஒரு வேலையில் இருந்தான். தேடிப்பிடித்து குடிகார கணவன் களிடம் கஷ்டப்படுகிற பெண்களை, கந்துவட்டிக் காரர்களிடம் மாட்டிக் கொண்டு விழிக்கிற பெண்களை எல்லாம் அவன் கண்டுபிடித்து அவர்கள் நாணயத்தைப் பற்றி நன்கு விசாரித்துக் கொண்டு அவர்களுக்கு ஒரு தொகை கொடுக்கச் செய்து அவர்கள் வாழ்வில் பெரிய ஒளியை ஏற்றிவிட்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அவனைத் தெய்வ மாகவே நினைத்தார்கள். இத்தனைக்கும் அவன் வெளிப் படையாகச் சொல்வான்.

"நீங்கள் நினைக்கிற அளவுக்கு நான் ஒன்றும் வள்ளல் இல்லை. நான் ஒரு நிறுவனத்திலே வேலை செய்கிறேன். அந்த நிறுவனத்துக்காரர்களின் நோக்கம் நல்லதாக இருக்கிறது. உங்களுக்குத் தேவை இருக்கிறது. அவர்களுக்கு கொடுக்கிற மனம் இருக்கிறது. இந்த இரண்டையும் நான் ஒருங்கிணைப்புச் செய்கிறேன், அவ்வளவு தான்"என்றான்.

ஆனாலும் அவர்கள், "இப்படித் தேடிப்பிடித்து எங்கள் கஷ்டங்களைப் புரிஞ்சுகிட்டு எங்களுக்கு இப்படி பண உதவி செய்றியேப்பா... வாங்கிக் குடுக்கிறியே..ப்பா... நீ சொன்னா அவங்க மறுபேச்சு இல்லாமக் கொடுக்கிறாங்களேப்பா... இதுக்கு நாங்க எங்கப்போயி நன்றி சொல்றது"என்று நன்றி உணர்வை விதவிதமான வார்த்தைகளில் சொல்வார்கள்.

"நன்றி உணர்வைக் காட்டலாமே. கொஞ்சமா ஒரு ஃகாபி கொடுங்க"என்று ஏதாவது ஒரு வேடிக்கை செய்து அவர்களுடைய உணர்ச்சிகரமான பேச்சை மாற்றி விடுவான் சிம்மேந்திரன்.

எத்தனை விதமான பெண்களைப் பார்த்து விட்டான்.

அவன் இந்த துறைக்கு வந்ததற்குப் பிறகு நிறைய கண்ணீர்க் கதைகளைக் கேட்டு விட்டான், பார்த்து விட்டான்.

இங்கே பெண்கள் திருமணம் என்ற பெயரிலே அடிமைகளாக ஆக்கப்படுகிறார்களோ என்ற சந்தேகம் கூட சிலநேரங்களில் அவனுக்குத் தோன்றும்.

சுயசிந்தனையும் சுயசார்புமற்ற முறையில் அவர்கள் வடிவமைக்கப்படு கிறார்கள்,

சுயசார்பற்றதாலேயே ஒரு ஆணைச் சார்ந்திருக்கிறதாலேயே பெண்கள் பலவிதமான கொடுமைகளுக்கு ஆளாவதையும் அவன் பார்த்து வருந்தி இருக்கிறான்.

மேல்மட்டங்களிலும் சில குடும்பங்களில் சுயசார்பு இருந்தாலும் கூட அங்கு வேறுவிதமான டார்ச்சர் இருக்கிறது என்பதையும் சில குடும்பங்களைப் பார்த்து தெரிந்து வைத்திருந்தான் என்றாலும் அவன் எந்தெந்தக் குடும்பத்தினரை வாடிக்கையாளர்களாக்கி கடன் பெற்றுத் தருகிறானோ அந்தக் குடும்பங்களில் இருக்கிற ஆண்களுக்கெல்லாம் சிம்மேந்திரனைப் பற்றி ஒரு அச்சம் இருந்தது.

அந்த பெண்கள் எல்லாம் சொல்வார்கள், "சிம்மேந்திரன் இல்லை நீ... சிம்ம சொப்பனம் எங்க வீட்டுக்காரருக்கு" என்று கூறிச் சிரிப்பார்கள்.

அவனுடன் அறிமுகம் ஏற்பட்டதற்குப் பின்பு ஒரு பெண்ணை கைநீட்டி அடிப்பதையோ அல்லது ஒரு பெண்ணை வன்கொடுமைக்கு ஆளாக்குவதையோ எந்த ஆண் மகனும் செய்ய முடியாது என்பதை அவன் சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு வகைகளையும் பயன்படுத்தி உணர்த்தியிருந்தான்.

முடிந்தவரை அவர்களிடம் சொல்லித் திருத்தப் பார்ப்பான். அவனால் திருந்தியவர்களும் நிறையபேர் இருக்கிறார்கள்.

சிம்மேந்திரன் வந்ததற்குப்பிறகு தான் அவர்களுடைய கதிரவன் ஃபைனான்ஸ் நிறுவனத்திலே ஒரு மாற்றம் கூட ஏற்பட்டது.



நடைமுறைக்கு ஒத்துவருகிற மாதிரி எத்தனையோ கருத்துக்களை அவன் அவர்களிடத்தில் வைத்தான்.

மேனேஜிங் டைரக்டர்ஸ் கூட்டத்திலும் கூட அவனை ஒரு உறுப்பினராக்கி அழைத்தார்கள். அங்கே அவன் வைக்கிற கருத்துக்கள் முதலில் கற்பனை போலவும் இதனால் அதிகபட்சமாக கருணை இருக்கிறதா நாம நினைக்கிற மாதிரியும் தேவையில்லா பிரச்னைகளை வாங்கிக் கொள்ளக் கூடாது என்பது போன்ற கருத்துதான் போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் எல்லாருக்குமே முதலில் தோன்றியது.

"ஒரு சின்ன ஏரியா மட்டும் எங்கிட்ட கொடுங்க. ஒரு சின்ன ப்ராஜெக்டா நான் பண்ணிக் காட்டறேன். ஒன் இயர் டைம் குடுங்க. அந்த ஒன் இயர்ல நான் என்ன மாற்றம் கொண்டு வர்றேன்னு பாருங்க. அதுக்கப்புறம் ஒத்துக்குங்க" என்று அவன் சொன்னதற்குப் பிறகு அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

உதாரணமாக ஒரு சின்ன ப்ராஜெக்ட். குடிப்பழக்கமுள்ள ஆண்களுக்கு கவுன்சிலிங் கொடுப்பது... அவர்களைப் படிப்படியாக மாற்றுவது, மாற்ற முயற்சிப்பது என்று ஒரு சின்ன ப்ராஜெக்ட் எடுத்துக் கொண்டான்.

ஒரே ஒரு ஸ்லெம் ஏரியா என்று சொல்வார்களே. அப்படி நெருக்கமான அடர்ந்தபடி வீடுகள் இருக்கக் கூடிய பகுதியை எடுத்துக் கொண்டு அதிலே ஒரு மாதத்திற்குள்ளாகவே இருபத்தைந்து குடும்பங்களை உறுப்பினர்களாக்கியது மட்டுமில்லாமல் நூறு பேருக்கு மேல் குடிப்பழக்கம் உள்ளவர்களைத் திருத்தி கிட்டத்தட்ட ஐம்பது பேரை அந்தப் பழக்கத்தில் இருந்து விடுவித்து விட்டான் என்றபோது தான் கதிரவன் ஃபைனாஸ் போர்டு ஆப் டைரக்டர்களெல்லாம் நிமிர்ந்து அமர்ந்து அவனைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்கள்.

'இவனிடம் ஏதோ ஒரு விஷயம் இருக்கிறது. இவன் இந்த நிறுவனத்துக்குச் சொத்தாகத் தான் இருக்கப் போகிறான். இவனை விட்டுவிடக் கூடாது' என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

அதே சமயத்தில் சிம்மேந்திரனைப் பற்றி சில நெருடல்களும் அவர்களுக்கு இருந்தன. அதிலே முக்கியமான நெருடல் என்னவென்றால் அவனுக்குச் சரியென்று பட்டால் தான் ஒரு காரியத்தைச் செய்வான். சற்றுக் குறைவாகத் தோன்றினாலும் விளக்கம் கேட்டு அதை சரியான முறையில் வாங்கிக் கொண்டு தான் செய்வான்.

பணிக்கு வரும்போதே அவன் சின்னச்சாமியிடம் சொல்லிவிட்டான். "சின்னு! இல்லீகலா நான் எதுவும் செய்யமாட்டேன். லீகலா எதைச் சொன்னாலும் செய்யறேன். இல்லீகல் விஷயம் இங்கே எதுவும் இருக்காதுல்ல. இந்த பிளாக்... அக்கவுண்ட் டூ என்றெல்லாம் எதுவும் வச்சிருக்க மாட்டீங்கல்ல"என்று கேட்டான்.

சின்னு சிரித்தான். "அப்படியெல்லாம் எதுவும் இல்லைப்பா. இது லிமிடெட் கம்பெனி. அப்படியெல்லாம் எதுவும் செய்ய முடியாது"என்று அவனுக்கு விளக்கம் சொன்னான். சமாதானம் ஏற்பட்டதற்குப் பிறகு தான் சிம்மேந்திரன் இந்தப் பணியில் வந்து சேர்ந்தான். பணிக்கு வந்த முதல் நாளிலே இருந்து அவன் தன் உயரத்தை அதிகமாக்கிக் கொண்டு தான் போனான் என்று தான் சொல்ல வேண்டும்.

ஒரு பக்கத்தில் சிம்மேந்திரன் இல்லாவிட்டால் அங்கே இயக்கமே இருக்காது என்கிற அளவிற்கு தன்னை அந்தப் பெரிய நிறுவனத்தில் இன்றியமையாத அங்கமாக ஆக்கிக் கொண்டான்.

அவனது வளர்ச்சியைப் பற்றி எண்ணிக்கொண்டே சின்னுசாமி உள்ளே நுழைந்தான்.



"உட்காரு சின்னு" என்று வரவேற்றான் சிம்மேந்திரன்.

"என்னாச்சு, அம்மா இல்லையா?"என்றான்.

"அம்மா, பத்மா வீட்டுக்குப் போயிருக்காங்க. பத்மாவுக்கு குழந்தை பிறந்திருக்கு தெரியுமில்ல"என்றான்.

"ஆமா... யில்ல.. நீ சொன்ன... நான் இன்னும் போயி பார்க்கல. எப்பப் போயி பார்க்கலாம்?"என்றான் சின்னு.

"இந்த வீக் என்ட்ல போலாமா?"என்று அவர்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கிற நேரத்துக்குள்ளாகவே அவன் பேசிக் கொண்டே போய் சின்னுசாமிக்கு குளிர் பானத்தை ஃப்ரிட்ஜில் இருந்து எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

சிறிய வீடாக இருந்தாலும் அவங்கே தேவையான வசதிகளை வைத்திருந்தான். எளிமையான வீடாக இருந்தது. தேவையற்ற அலங்காரங்கள் இருக்கவில்லை. வேண்டும் அளவிற்கு அறைகள் பெரிதாகவே இருந்தன. மூன்று நான்கு அறைகளே இருந்தாலும்கூட அவன் பொருட்களை வைத்திருந்த விதத்தில் அங்கே... ரிச்னஸ் என்பார்களே அதுபோல அழகு மிளிர்ந்தது.

தனக்கும் ஒரு கப்பை எடுத்துக் கொண்டு வந்து சின்னு சாமி எதிரே அமர்ந்த சிம்மேந்திரன், "என்ன சின்னு, ஒரு புயல் தென்றலா வந்துருக்காமே. ஆபீஸுக்கு..." என்று கேட்டான்.

சின்னசாமி ஆச்சரியமாக சிம்மேந்திரனைப் பார்த்தான். பொதுவாக பெண்கள் என்றால் அவர்களை அவ்வளவாகக் கண்டு கொள்ள மாட்டான்.

"யார் சொன்னா?" என்று கேட்டான்.

"வேற யாரு? சக்தி தான். அங்கே ஒரே புகழ்ச்சி தான்"என்றான்.

சின்னசாமி முகத்தில் தீவிரமான சிந்தனை தெரிந்தது.

"ஒரே நாளைக்குள்ள சக்தி வந்து இத்தனையும் உங்கிட்டச் சொல்லிட்டானா?"என்று கேட்டான்.

"ஆமாப்பா... ஒரே புராணம் தான். இளமதி... இளமதின்னு... எனக்கே காது சுளுக்கிப் போச்சுன்னா பாத்துக்கியேன்"என்றுச் சிரித்தான் சிம்மேந்திரன்.

சின்னசாமியின் முகம் லேசாக வாட்டமுற்றாற் போல ஆகியது.

"ஏம்ப்... பா உனக்கென்ன மூட் அவுட் ஆயிட்டே..." என்று கிண்டல் செய்தான் சிம்மேந்திரன்.

"போப்பா... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே"என்று அவன் சொன்னாலும் அவன் முகத்தில் ஏற்பட்ட வாட்டம் சிம்மேந்திரனையும் சிந்தனைக்குள்ளாக்கியது.

'இளமதியின் வருகை அந்தக் கம்பெனிக்கு வரமா, சாபமா?' என்ற சிந்தனையில் சிம்மேந்திரன் மூழ்கி விட்டான்.

★ ★ ★

## அத்தியாயம் 6

இளமதி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

ஏனோ தூக்கம் பிடிக்க வில்லை.

மனத்தில் ஒரு உற்சாகம் இருந்தது.

அவள் அலுவலகத்துக்கு போக ஆரம்பித்து இன்று இரண்டாவது நாள். நேற்று வேலை முடித்து வந்தவுடனேயே மாலையில் அம்மா ஆசையாக, "ஏண்டி! இளமதி, வேலையெல்லாம் இன்ட்ரஸ்ட்டா இருந்ததா? உன்னையெல்லாம் நல்லபடியாக நடத்தினாங்களா?" என்று கேட்டார்.

"அதெல்லாம் நல்லாத்தாம்மா நடத்தினாங்க. இன்னைக்கு ஜஸ்ட் இன்ட்ரொடக்ஷன் மட்டும் தான். வேலையெல்லாம் எப்படி இருக்குன்னு போகப் போகத் தானே தெரியும்"என்றாள்.



"இருந்தாலும் முதல்நாளே ஓரளவுக்குத் தெரியுமேடீ... இன்ட்ரஸ்டிங்கா இருக்கும். இது கொஞ்சம் போரடிக்கும்... அப்படீங்கற மாதிரி"என்று; கேட்டார் அம்மா.

"இல்லைம்மா... அதை இப்பவே முடிவெடுக்க முடியாது. பெரிய ஆஃபீஸ்..நிறைய செக்ஷன்ஸ் இருக்கு. ஒரே ஆட்கள் மயமா இருக்கு. கம்ப்யூட்டர்மயமா இருக்கு. மூணு பெரிய வங்க... மூணு யங்ஸ்டர்ஸ்... எல்லாருமாச் சேர்ந்தா அந்தக் கம்பெனி தூள் பறக்காதா என்ன? பறந்துகிட்டு இருக்கு"என்றாள் இளமதி.

அம்மா புன்னகைத்தார்.

"சும்மா சொல்லக்கூடாதடீ... உங்கப்பா போனவுடனேயே நம்மைக் கழட்டி விட்டிருக்கலாம். என்ன தான் இருந்தாலும் அப்பா தான் இதை ஆரம்பிச்சு வச்சாரு. ஒரு பெரும்பங்கு முதலீடு கொடுத்தாரு. அப்படியெல்லாம் இருந்தாக்கூட அந்த முதலீட்டுத் தொகைக்கு ஒரு வட்டியாகவோ அல்லது ஒரு காம்பன்ஸ்சேஷனாகவோ ஒரு அமௌண்ட்டைக் கொடுத்து இதோட நீங்க கழண்டுக்கோங்க... அப்படீன்னு நம்ம கழட்டி விட்டிருக்கலாம். ஆனா பேருக்கு என்னையும் ஒரு பார்ட்னரா வச்சுகிட்டு இத்தனை நாளா அந்தக் கம்பெனியைக் கட்டிக் காப்பாத்தி அதுலயும் நமக்கு முதல்ல இருந்து எந்த அளவுக்கு பங்கு இருந்ததோ அதே அளவு பங்கு... அப்படீன்னு மெயின்டெயின் பண்றாங்களே. அது எவ்வளவு பெரிய விஷயம். மூணு அண்ணாக்களுக்குமே ரொம்ப நல்ல மனசுடீ..."என்றார் அம்மா.

இளமதிக்கு உண்மையிலேயே அது ஒரு ஆச்சரியம் தான். "அப்பா தான் இந்தக் கம்பெனிக்கு கரு கொடுத்தாராம். அவர் கொடுத்த கருவின் அடிப்படையில் தான் இந்த கம்பெனியே உருவாச்சாம். அதுமட்டுமில்லாமே கிட்டத் தட்ட ஐம்பது பர்சன்ட் முதலீடும் அப்பா தான் போட்டாராம். ஆனாலும் ஒரு நட்பு இவ்வளவு காலம் நீடிக்கிறதே

அப்படீங்கறது ஒரு பெரிய விஷயம் இல்லைம்மா... அதுவுமில்லாம அந்த நட்பை அடுத்த தலைமுறைக்கும் தொடர்கிறது அப்படீங்கறது இன்னும் அற்புதமான விஷயம், இல்லம்மா..."என்றாள்.

"ஆமாண்டி.. எனக்கும் அது ஆச்சரியம்தான். எல்லார் கிட்டேயும் ஒரு பக்குவம் இல்லைன்னா... இப்படி இருக்க முடியாது. யாராவது ஒருத்தர் ஏதாவது பிரச்னை பண்ணிட்டு இருந்தாக்கூட இந்த மாதிரி தொடர்ந்து இருக்க முடியாது. அப்படியே பிரச்னை இருந்தாக்கூட அதை சரிப்படுத்திட்டு போகிற பக்குவம் மூணு பேருகிட்டேயும் இருக்கிறதுனால தான் இந்தக் கம்பெனி இப்படி வளர்ந்து நிக்குது. அது மட்டுமில்ல. அடுத்த தலைமுறையும் அதுல ஈடுபாட்டோட இருக்காங்க... அப்படீன்னா அதுவும் ஆச்சரியம் தான்"என்று எண்ணிக் கொண்டாள் இளமதி.

எப்போதாவது ஒருமுறை அந்த அலுவலகத்துக்கு ஏதாவது விழாவிற்காக அவர்கள் செல்வதுண்டு. அப்படிச் செல்லும் போதெல்லாம் அக்கறையாக கந்தவேலோ அல்லது ஆதி மூலமோ அல்லது கருப்புச்சாமியோ அம்மாவை அழைத்துக் கொண்டு போய் சுற்றிக் காட்டுவார்கள். ஒவ்வொரு வருடமும் அந்த பெரிய நிறுவனத்தில் ஏதாவது ஒரு வகையில் முன்னேற்றம் இருக்கத்தான் செய்யும்.

அவருக்குப் புரிகிறதோ இல்லையோ... அவரை அமரச் செய்து முழுவதுமாக விளக்கம் கொடுப்பார்கள். அவர் ஓரளவுக்குப் புரிந்து கொள்வார். என்றாலும் கடைசியாக "நீங்கெல்லாம் இருக்கிறப்ப எனக்கு என்ன கவலை?" என்று சொல்லிவிட்டு வந்து விடுவார்.ஆனாலும் அவருக்கு ஒரு உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

வருடத்துக்கு ஒருமுறை பங்குதாரர்கள் கூட்டத்திற்கோ அல்லது ஏதாவது விழாக்களுக்கோ அவர் போய்விட்டு வந்தாலும் நம்முடைய பங்களிப்பு என்று எதுவுமே இதில்



இல்லை... அப்படி இருக்கும்போது இதன் பலன்களை மட்டும் இவ்வளவு அனுபவிக்கலாமா? என்கிற வருத்தம் இருந்து கொண்டே இருந்தது.

என்ன செய்ய முடியும்?. இன்னொரு விஷயம் என்னவென்றால் மாணிக்கவேல் இந்தக் கம்பெனியை ஆரம்பிப்பதற்காக உறுதுணையாக நிற்கையில் அவருக்கு மட்டும் தான் சிறிய குழந்தை. அப்போது இளமதிக்கு இரண்டு மூன்று வயது தான் இருக்கும். ஆனால் மற்ற மூன்று பங்குதாரர்களுடைய குழந்தைகளும் பத்து வயது, பதினொரு வயது, பன்னிரெண்டு வயது என்று இருந்தார்கள். ஆண் மக்களாகவும் இருந்தார்கள்.

ஒரு பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகள் தாக்குப்பிடித்தால் அடுத்த தலைமுறை வந்து உதவி செய்யக்கூடிய வாய்ப்பு மற்றவர்களுக்கு இருந்தது. மாணிக்கவேலுக்கு அதுவும் இருக்கவில்லை. இருந்தாலும் கூட அதைப்பற்றியெல்லாம் யோசிக்காமல் மாணிக்கவேல் நண்பர்களுக்காகவே இந்தத் திட்டத்தை ஏற்படுத்தினார்.

நட்பு பிரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தத் திட்டத்தை ஏற்படுத்தினார். அதையெல்லாம் அவர்கள் இப்போதும் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து நடந்து கொள்கிறார்கள் என்பது அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஆச்சரியங்களுக்கு நடுவே இன்னொரு விஷயமும் அவளை உறுத்திக் கொண்டே இருந்தது. 'எதற்காக கருணா அப்படியொரு கதை சொன்னார்? அதுல அந்த ஆடு யார்? சிங்கம் யார்? காட்டெருமை யார்?' என்று எண்ணிக் கொண்ட போதே அவளுக்கு குபீரென்று சிரிப்பு வந்தது. 'அது யாராக இருந்தாலும் சரி, போயும்போயும் ஒரு எருமையை சமானமாக சொல்லியிருக்க வேண்டாம்' என்று எண்ணிக் கொண்டாள்.

“உடனேயே... இல்லையில்லை... காட்டெருமை ரொம்ப பலசாலியாக இருக்கும். ஒரு முட்டு முட்டினாலும் ஆள் காலி என்பார்களே... வலிமை இருக்கறது. ஆனால் சிங்கத்தைப் போலவோ, புலியைப் போலவோ பாய்ந்து தாக்குகிற தன்மை இருக்கிறதே என்பதனால் அப்படிச் சொல்லியிருப்பாரோ? இருந்தாலும் முதல் நாளிலேயே இப்படி ஒரு கதையைச் சொல்லி தன்னை பயமுறுத்தியிருக்க வேண்டாம், இந்த கருணா...” என்று நினைத்தபோது அவளுக்கு லேசாக புன்னகை மலர்ந்தது.

கதையைச் சொல்லி முடித்ததற்குப் பிறகு... இப்படியொரு கதையை இவர் தான் சொன்னாரா என்பது போல அவன் முற்றிலும் அதை மறந்தாற்போல நடந்து கொண்டான்.

அடுத்த நாள் அவன் அலுவலகத்துக்குச் சென்றபோது அவளுக்கான பணிகள் தயாராக அவளது மேஜை மீது குறித்து வைக்கப்பட்டு இருந்தன. அவளுடைய செயலர் அந்தப் பணிகளைப் பற்றி அவளுக்குச் சொன்னார். வேலையை ஆரம்பித்தாள்.

நாள் போனதே தெரியவில்லை.

கொஞ்ச நாட்கள் பார்த்தவுடனேயே அவளுக்கு கதிரவன் ஃபைனான்ஸ் மீது நல்ல அபிப்பிராயம் தோன்றியது. ஏனென்றால் அது வெறும் ஃபைனான்ஸ் நிறுவனமாக மட்டுமில்லாமல் எத்தனையோ ஏழைகளை கைதூக்கி விடுகிற நிறுவனமாக இருந்தது. இந்த மாதிரி நிறுவனங்கள் நாடு முழுவதும் இருந்தால் ஏழைகள் தற்கொலை செய்து கொள்வது கண்டிப்பாகக் குறையும் என்பது அவளுக்கு தோன்றியது.

●

ஒரு தடவை அவளுடைய தோழியின் அம்மா ஒருவர், வடநாட்டுக்கெல்லாம் டூர் போய் விட்டு வந்து சொன்னார். “இளமதி! ஆச்சரியமான விஷயம் அல்லது வருத்தமான விஷயம் என்னவென்றால்... வடமாநிலங்களிலெல்லாம்



கிராமங்களெல்லாம் இன்னும் அப்படியே தான் இருக்கின்றன. நம்ம ஊர்கள்ல கிராமங்கள் கொஞ்சம் வளர்ச்சியடைஞ்சுட்டு வர்ற மாதிரி தெரியுது”என்று சொன்னார். பின்னர் உடனே அதனை மறுதலிப்பது போல...”ஆனா... எனக்குத் தெரிஞ்சு எங்க சொந்தக்காரங்க கிராமம் ஒண்ணு... நான் சின்ன வயசுலயிருந்து பாக்கறேன். அப்படியே தான் இருக்கு”என்றார்.

எந்தப் பொருளாதார வளர்ச்சியும் கிராமங்களைச் சென்றடையவில்லை என்பதும் பெரிய அரசியல் மட்டங்களில் கோடிகளில் பேசப்படும்போது இன்னும் ஆயிரங்களையே எட்டிப்பிடிக்காத ஏழைகள் நிறையபேர் இருக்கிறார்கள் என்பதும் அவளுக்கு புரிந்தது.

அப்படிப்பட்டவர்களுக்கு இந்த நிறுவனம் கொடுக்கிற சில ஆயிரங்கள் எவ்வளவு உதவிகரமாக இருக்கிறது என்பதும் அவளுக்குப் புரிந்தது.

தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று சொன்ன பாரதியினுடைய தீர்க்கமான கோபம் அவளுக்கு இப்போது புரிந்தது.

ஒரு நூறு கேஸ்கள் மட்டும் தான் அவள் பார்த்திருப்பாள். அதற்குள்ளாகவே இதில் கடன் வாங்குகிறவர்களில் நிறைய பேர் பெண்கள் என்பதும், அவர்கள் மிகக் கீழ்மட்டத்தில் இருக்கிற குடும்பங்களில் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதும் அவர்களுடைய பின்னணிகளிலே பல சோகமயமான சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதும் புரிந்தது.

அவளுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. இது வரை தான் கல்லூரியிலே கண்டு கொண்டிருந்த உலகம் வேறு. தன்னுடைய வாழ்க்கைத் தரம் வேறு. இப்போது தான் நுழைந்திருக்கிற உலகம் வேறு. இப்படியெல்லாம் கூட துன்பப்படுகிற மனிதர்கள் இருக்கிறார்களா? என்று அறிய

வருகிறபொழுது தன்னுடைய சிந்தனைப் போக்கிலே பெரிய மாற்றம் ஏற்படப்போகிறது என்பது அவளுக்கு அப்போது புரியவில்லை.

ஒன்று மட்டும் புரிந்திருந்தது. இந்த வேலை பிடித்திருக் கிறது. இந்த வேலையில் ஒரு நோக்கம் இருக்கிறது. இந்த வேலையில் ஒரு நல்ல விளைவு இருக்கிறது. சில நேரங்களில் சொல்வார்கள். பிடிக்கிற வேலை கிடைக்காது என்று. ஆனால் அவளுக்கு கிடைத்திருக்கிற வேலை பிடித்ததாகவும் இருந்தது. சமுதாயத்துக்கு ஓரளவு பயனுள்ளதாகவும் இருந்தது என்று பார்க்கும்பொழுது ஆச்சரியமாக இருந்தது.

இன்னொரு விஷயத்தையும்கூட அவள் கவனித்து இருந்தாள். எல்லா பாஸ் புத்தகங்களிலும் இருபத்தாறு சதவீதம் வட்டி என்று வெளிப்படையாக அச்சடித்து இருந்தார்கள். கருணாகரனிடம் கேட்டாள்.

''இப்படி வட்டி சதவீதத்தை வெளிப்படையா அச்சடிச் சுருக்கீங்க''என்று.

''ஆமாம். நம்ப கம்பெனியோட பெரிய பலமே அது தான். நாம ஹிட்டன் சார்ஜஸா எதுவும் வாங்கறதில்லை. இங்கே அதிகபட்ச வட்டியே இருபத்தாறு சதவீதம் தான். அதுவுமில்லாம... கட்டக் கட்ட இந்த வட்டி குறைகிற மாதிரி தான் நாம வசூலிக்கிறோம். பெரிய நிதி நிறுவனங்களால்... ஏன் வங்கிகளில் கூட இந்த வட்டி சதவீதத்தைக் குறிப்பிடற தில்லை. நாம் குறிப்பிடுறோம். அது நம்முடைய நம்பகத் தன்மையையும் வெளிப்படைத் தன்மையையும் ஊக்கு விக்கும். அதுக்காக...''என்றான்.

அவளுக்கு அந்த ஐடியா மிகவும் பிடித்திருந்தது. ''ரொம்ப நல்ல ஐடியா''என்று பாராட்டினாள்.

''நன்றி மேடம்!''என்று அவன் ஏர் இந்தியா வணக்கம் போட்டான்.

அவள் சிரித்தாள்.



''என்ன கருணா, நீங்க?..''என்று லேசாக வெட்கப் பட்டாள்.

''இல்லம்மா... சீரியஸா நன்றி சொல்றேன்''என்றான் கருணா.

அவன் புரியாமல் பார்க்க...

''கம்பெனியினுடைய பங்குதாரர்கள்ல லேட்டஸ்ட்டாக வந்து நுழைந்திருக்கக் கூடிய இளைய நிலா நீங்கள். உங்களுக்கே இந்த ஐடியாவெல்லாம் பிடிச்சுருக்கு அப்படீன்னா... நாம சக்ஸஸ் ஃபுல்லான பாதையில போய் கிட்டு இருக்கோம்... அப்படீன்னு தானே அர்த்தம்'' என்றான்.

தன்னுடைய இளமதி என்ற பெயரை இளையநிலா என்று வேறுவிதமாகக் குறிப்பிட்டதில் அவளுக்கு வாய் நிறைய புன்னகை.

''காலையில இருந்து ரொம்ப சீரியஸா இருந்தீங்க. பயமாக இருந்தது எனக்கு''என்றாள்.

''அப்படித்தான் கொஞ்சம் பயம். கொஞ்சம் சுதந்திரம்... அப்படி இருக்கணும்''என்றான்.

''என்னமோ கவிதைப் புத்தகத் தலைப்பு மாதிரி இருக்கு''என்று சிரித்தாள் இளமதி.

''கவிதை போல இளையநிலா வந்திருக்கீங்க. உங்ககிட்ட கவிதையாத் தானே பேசணும்''என்றான் கருணா.

''ஒருவிதமா முடிவே பண்ணிட்டீங்களா?''என்றாள் இளமதி.

''என்ன முடிவு பண்ணிட்டேன்'' என்றான் கருணாகரன்.

''ஒண்ணு கதை சொல்லி என்னைக் கலங்கடிக்கிறது. இல்ல கவிதை சொல்லிக் கிறங்கடிக்கிறது அப்படீன்னு...'' என்றாள்.

"கதை சொல்லி கலங்கடிக்கிறது. கவிதை சொல்லி கிறங்கடிக்கிறது. வெரி குட்... நல்லாயிருக்கே... ரொம்ப ரைமிங்காப் பேசுவியோ? என்றான்.

"இல்லயில்ல... அது எதிர்ல மாட்றவங்களைப் பொறுத்து" என்று இவளும் பதிலுக்கு வாரினாள்.

அவன் கடகடவென்றுச் சிரித்தான்.

"தட்ஸ். குட்... இன்னைக்கு ஏன் உங்கிட்ட சிரிச்சுப் பேசினேன் தெரியுமா?"என்றான்.

"ஏன்?" என்று அவள் தலையைச் சாய்த்துக் கொண்டு கேட்க...

"இன்னைக்கு காலையில இருந்து கொடுத்த வேலையை எல்லாம் ஒழுங்கா முடிச்சுட்டே... யூ ஆர் எ குட் கேர்ள். அதனால் உங்கிட்ட சிரிச்சுப் பேசலாம்னு தோணிச்சு. அதான் பேசினேன்"என்றான்.

"ஓகோ... அப்ப நாளைக்கு முடிக்கலைன்னா...?"

"அப்ப வேற கருணாகரனைப் பார்ப்பே..."என்றான் அவன் நாடகப் பாணியில்.

"வேற கருணாகரன்..னா..எப்படி? கதை முடிஞ்சுது. கவிதையும் முடிஞ்சுது. நாளைக்கு..."என்று அவள் மறுபடியும் வேடிக்கையாகப் பார்த்தபடி "ஒருவேளை குஸ்தி போடுவீங்களோ"என்றாள்.

அவன் இப்போது மறுபடியும் கடகடவென்றுச் சிரித்தான்.

"இளமதி. நீ இப்படியெல்லாம் வாயடிப்பியா?"என்று கேட்டான்.

"நான் தான் சொன்னேனே... எதிரில் இருக்கிறவங்களப் பொறுத்து..."என்று அவள் மறுபடியும் இழுக்க...

"ஓகே. ஓகே. நானா பொதுவா வாயடிக்க மாட்டேன். போனாப் போகுது ஏதோ சின்னப் பொண்ணு வந்திருக்கியே அப்படீங்கறதுக்காகப் பேசினேன்"என்றான்.



"ஓகே. ஓகே. லைட்டா காஃபி, டீ வரும் சாப்பிட்டுட்டு உடனே மீட்டிங்குக்கு வந்துரு"என்று சட்டென்று துண்டித்துக் கொண்டு போய் விட்டான்.

வந்த இரண்டு நாட்களிலேயே அவளுக்குத் தெரிந் திருந்தது. ஒவ்வொரு நாள் மாலையிலோ... ஏதோ ஒரு நேரம் ஒரு மீட்டிங் நடந்தது. நடைமுறையில் என்னென்ன போய்க்கொண்டு இருக்கிறது என்பதை விவாதித்துக் கொண்டார்கள்.

அவளையும் அதற்கு அழைத்தார்கள். நேற்றே கருணா கரன் சொல்லி விட்டான். "இளமதி! ஒரு மாசத்துக்கு இந்த மீட்டிங்கெல்லாம் அப்சர்வ் பண்ணிக்கோ, அவ்வளவு தான். எதுவும் வாயைத் திறக்காதே. கருத்துக் கேட்டா மட்டும் சொன்னாப் போதும்"என்று மிரட்டினாற்போல சொல்லி யிருந்தான்.

இப்போது படுத்தபடி யோசிக்கையில், இளமதிக்கு குழப்பமாக இருந்தது. இந்த கருணாகரன் யார்? ஒரு நேரம் இளையநிலா என்று தன்னிடம் குழையடிக்கிறான். ஒரு நேரம் தான் சொன்னது போல கதை சொல்லி கலங் கடிக்கிறான். வேலை செய்தால் பாராட்டுகிறான். தன்னிடத்திலே என்ன எதிர்பார்க்கிறான். ஆனால் ஏதோ குறிப்பாகச் சொல்வதற்கு முயல்கிறான் என்று புரிந்தது. அது என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டே உறங்கிப் போனாள்.

★ ★ ★

## அத்தியாயம் 7

"ஏங்க இளமதி, கருணா கதை சொல்லியிருப் பானே..." என்று கேட்டான் சின்னசாமி.

"ஆமாம். உங்களுக்கெப்படி தெரியும்?" என்றாள் இளமதி.

“அதான் அவன் வழக்கமாச்சே... சொல்லுங்க என்ன கதை சொன்னான்?”என்று கேட்டான்.

இளமதியும் உற்சாகமாக அந்தக் கதையை விவரித்தாள்.

சின்னசாமி கடகடவென்று சிரித்தான்.

“ஒண்ணு சிங்கம். ஒண்ணு புலி. இன்னொண்ணு காட்டெருமையா?”என்று கேட்டான்.

“ஆமாம். ஆடு யாருன்னு தெரிஞ்சதுங்களா?” என்று அவன் கேட்க... அவள் ஒரு முறை அவனைப் பார்த்து விட்டு, “அநேகமா என்னத் தான் சொல்லியிருப்பாருன்னு நினைக்கிறேன்” என்றாள்.

“அப்படிப் போடு. பாயின்டைப் புடிச்சீங்க...”என்றான் சின்னசாமி.

“அப்புறம் காட்டெருமை தெரிஞ்சதுங்களா?”என்று கேட்டான்.

இளமதி உண்மையாகவே கொஞ்சம் கவலையான முகத்துடன், “தெரியலீங்க...”என்றாள்.

மறுபடியும் சிரித்தான். “காட்டெருமைன்னு சொன்னது நம்மளைத்தானுங்க”என்றான்.

அவன் தனிப்பட்ட முறையில் பேசும்போது பேசுகிற அந்த சாதாரண கொங்குத் தமிழ் அவளுக்குச் சிரிப்பை வரவழைத்தது.

“ஏனுங்க சிரிக்கிறீங்க. உண்மைதானுங்க. என்னைத் தான் சொன்னான்”என்றான்.

“உங்களுக்குக் கோபம் வரலையா?”என்று கேட்டாள் இளமதி.

“எதுக்குக் கோபம் வரணும்? நல்லவேளை கௌரவமாக் காட்டெருமைன்னு சொல்லியிருக்கானே... காட்டெருமை வீட்டெருமையை விட கொஞ்சம் பெட்டர்... தெரியுங்களா?” என்றான்.



இப்போது சிரிப்பது இளமதியின் முறையாயிருந்தது..

அந்த உணவு இடைவேளைகளையும், சிற்றுண்டி இடை வேளைகளையும் இளமதி இப்போது ரசிக்க ஆரம்பித்து இருந்தாள். மூன்று பேரில் யாராவது ஒருவர் அவளைத் தொடர்பு கொண்டு கூட வருவதும், அல்லது மூன்று பேருமாக நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கேட்பதும் அவளுக்குக் கொஞ்சம் சுவாரஸ்யமாக இருந்தது.

மூவரும் மூன்று விதமாக இருந்தார்கள். கருணா கரனுடைய பேச்சிலே... நடையிலே எல்லாவற்றிலுமே ஒரு கம்பீரம் தெரியும். ‘அவ்வளவு சீக்கிரம் என்கிட்டே வரமுடியாது பார்...’என்பது போல அணுகுவதற்குக் கடினமானத் தன்மை அவனிடத்திலே இருக்கும்.

சக்திவேல் இன்னொரு விதமாக இருந்தான். அவனுக்கு கொஞ்சம் இலக்கியம், கவிதை... இவையெல்லாம் பிடிக்கும் என்பது புரிந்தது. “போடா... பணத்தை எண்ணிஎண்ணி போரடிக்குது... கொஞ்சநேரம் மனசை நினைச்சு எண்ணிப் பார்ப்போம்டா...”என்பான்.

வந்த கொஞ்ச நாட்களிலேயே சக்திவேலின் மனத்தில் பணம் ஈட்டுவதில் பெரிய ஈடுபாடு இல்லையென்றாலும் கூட தன் கடமையில் தவறி விடக் கூடாது என்பதற்காக அலுவலக வேலைகளையெல்லாம் அவன் சிறப்பாகவே செய்தான் என்பது இளமதிக்குப் புரிந்தது.

சின்னசாமி இன்னொரு விதம்.

எதையுமே வெளிப்படையாகப் பேசுகின்ற ரகம். “அது எதுக்குங்க. பாலீஸ் போட்டுக்கிட்டு... ஒண்ணு மாலீஷ் பண்றாங்க. இல்லைன்னா பாலீஸ் போடுறான்க... இதுக்குப் பின்னாடி தோலுரிச்சா என்ன இருக்குன்னு நமக்குத் தெரியுது. அப்புறம் எதுக்குங்க நடிப்பு?”என்றான் இளமதியிடம்.

இளமதி புன்னகைத்துக் கொண்டே சொன்னாள்.

"அது உண்மை தான். ஆனா... எல்லா உண்மையையும் கேட்கறவங்களுக்கு அதை தோலுரிச்சிக் காட்டினா ஜீரணிக்க முடியாதுங்க. சிலதுகளை எல்லாம் பாலிஷாகத் தான் கொண்டு போக வேண்டியதிருக்கு" என்று பதில் சொன்னாள்.

இரண்டு பேரும் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவள் இப்படிப் பதில் சொன்னவுடனே... சின்னசாமி நின்று திரும்பி அவளைப் பார்த்தான்.

"என்ன இப்படி அசத்துறீங்க?" என்றான்.

அவள் புரியாமல் விழிக்க... "பெரிய பெரிய உண்மையை எல்லாம் சர்வ சாதாரணமா போட்டு உடைக்கிறீங்க" என்று கேட்டான்.

வாழ்க்கையினுடைய மிகப்பெரிய உண்மையை அவள் மிக எளிதாகச் சொல்லி விட்டாள் என்பதை அவன் அப்படிச் சுட்டிக்காட்டியபொழுது அவளுக்கும் கூட லேசாக வெட்கம் ஏற்பட்டது.

"இல்லைங்க. வாழ்க்கையில நடக்கறதைத் தானே சொல்றேன். இப்ப நான் உங்ககிட்டப் பேசிக்கிட்டிருக் கேன்னா... நான் வெளியே சில வார்த்தைகளைச் சொல்லி கிட்டிருக்கேன். உள்ளுக்குள்ள இன்னொரு லைன் ஓடிக் கிட்டே இருக்குது. ஆனால் அந்த ஒரு லைனையும் வெளிப் படையாச் சொல்கிற அளவுக்கு நாம சிந்திக்க ஆரம்பிச் சுட்டோம்னா நாம ரொம்ப புனிதமானவங்களா ஆயிட் டோம்னு அர்த்தம். மனிதர்கள் என்கிற லெவலுக்கு மேல புனிதர்கள் ஆயிட்டோம்... அப்படீன்னு அர்த்தம்" என்றாள் இளமதி.

"மனிதனோ புனிதனோ... அது தெரியாதுங்க. எனக்கு மனசுல என்ன தோணுதோ அதை டக்குன்னு சொல்வேன். அது சிலவேளைகளிலே கருணாவுக்கு, சக்திக்கெல்லாம்



பிடிக்காமக்கூட இருக்கும். ஆனா வேறு வழியில்லை. இந்த தலைவலியை அவங்கப் பொறுத்துக்கிட்டுத் தான் ஆகணும். பொறுத்துக்கிறானுங்க..." என்றான் சின்னசாமி.

இளமதி அவனை வாஞ்சையாகப் பார்த்தாள்.

"அதையே கொஞ்சம் நாகரீகமாகச் சொல்லலாம்ல..." என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"இல்லை... இல்லை பரவாயில்லை. நீ கேட்டது கரெக்ட் தான். நாகரீகம்னா என்ன? கொஞ்சம் சாக்லெட் கலந்து சொல்லணும். அது தானுங்க நம்மளுக்கு வர மாட்டேங்குது" என்றவன், "ஆனா ஒண்ணுங்க... இவங்க எல்லாருமே எனக்கு ஃப்ரண்ட்ஸ் தான். இருந்தாலும் நான் என்ன பேசினாலும் அப்படியே எடுத்துக்கறவன்... அதுல எந்தக் குறையையும் காணாம என்மேல் அன்பைப் பொழிகிற வன்னுப் பார்த்தா... சிம்மேந்திரன் தான். அந்த ஃபிரண்டுங்க..." என்றான் சின்னசாமி.

"ஆனா..சிம்மேந்திரன் என்கிற பேரு... இங்கே ஆபீஸ்ல அடிபட்டுதே" என்றாள் அவள்.

"ஆமாம். ஃபீல்ட் ஆபீஸர்களுக்கெல்லாம் அவர் தான் டெபுடி மேனேஜர். நம்ம ஏரியா ஃபீல்ட் ஆபீஸ்... அது தெரியுங்களா?" என்றான்.

"ஓ! அது தெரியும்" என்றாள் இளமதி.

'ரவி எருகுனு தாவு கவி எருகுனு' அப்படீன்னு தெலுங்குல ஒரு பழமொழி சொல்வாங்க. அதாவது சூரியன் கூட நுழையாத இடத்துல கவிஞன் நுழைஞ்சு பாத்துரு வானாம். அது மாதிரி இவன் எங்கெங்கே ஜனங்களுக்குப் பணம் தேவையிருக்கு... அப்படீன்னு சந்துபொந்தெல்லாம் நுழைஞ்சு நமக்கு வாடிக்கையாளர்களைக் கூட்டிட்டு வந்துருவான்" என்றான்.

இளமதிக்கு அந்த சிம்மேந்திரனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

"பரவாயில்லையே. அப்படி ஒருத்தர் இருக்கிறதாலத் தான் நம்ம ஆபீஸ் எல்லாம் ரொம்ப சக்ஸஸ்புல்லாப் போயிட்டிருக்கு. இல்லீங்க"என்றாள்.

"பின்னே... இவங்கெல்லாம் பிரெயினுங்க... நம்ம சக்தி, கருணா, அவங்க அப்பாக்களெல்லாம் இருக்காங்களே இவங்கெல்லாம் பிரெய்ன் அப்படீன்னா... மூளை அப்படின்னு சொன்னா அவன் இரண்டு கை... அந்த மூளை சொல்றதை இந்த கை செஞ்சாத்தானே காரியம் நடக்கும். அது மாதிரி நாம போடறத் திட்டங்களையெல்லாம் கொண்டு போய் சேர்க்கிறது சிம்மேந்திரன் தான். அவன் கீழே நூற்றுக் கணக்கான பேரு வேலை செஞ்சுகிட்டிருங்காங்க. அந்த நூற்றுக்கணக்கான பேரையே சமாளிக்கிறான். எல்லார் கிட்டேயும் நல்ல பேரும் வாங்கிக்கிறான்"என்று பெருமை யாகச் சொல்லிக் கொண்டான்.

"உங்களுக்கு ரொம்ப காலமாக ஃபிரண்ட்டா...?"என்று கேட்டாள் இளமதி.

"ஆமாம். ஏழு எட்டு வருஷமா ஃபிரண்டு..ஒரு விஷயம் தெரியுங்களா... ஐயா தான் இங்க சிம்மேந்திரனை அறிமுகப் படுத்தினது. அப்புறம் சக்திவேலுக்கு ஃபிரண்ட் ஆயிட்டாரு. கருணா தான் ஆச்சே. அவன் கிட்ட நெருங்கறது கஷ்டம். ஆனா கருணாவையே ஒரு தூரத்துல... லைன் விட்டு நிறுத்திருவான் சிம்மேந்திரன். அவன் சிங்கம்னா... இவன் புலி"என்று நண்பனைப் பற்றி மிகப்பெருமையாகச் சொல்லிக்கொண்டான் சின்னசாமி.

அவன் அப்படிப் பேசுவதைக் கேட்டவுடனேயே இளமதிக்கு அந்த சிம்மேந்திரனைப் பார்த்தே ஆக வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஆனால் திரும்பவும் அதை வெளிப்படுத்தினால் நாகரீகமாக இருக்காது என்பதால் அதை அவள் அப்படியே நிறுத்திக் கொண்டாள்.



எப்படியிருந்தாலும் ஒரு நாள் அந்த சிம்மேந்திரனை சந்தித்துத் தானே ஆக வேண்டும் என்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இரண்டு பேருமாக சிற்றுண்டி உண்பதற்காக மாலை தங்களுடைய கேன்டீனுக்கு வந்திருந்தார்கள். அவர்களுக் கென்று பிரத்யேகமாக ஒரு கேன்டீன்... ஒரு மெஸ் இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே உயரதிகாரிகள், மானேஜர்கள், ஆபீஸர்ஸ் ரேங்கில் இருப்பவர்களுக்காக ஒரு மெஸ்சும் இருந்தது. எல்லா இடங்களிலும் நல்ல சிற்றுண்டி கொடுப் பார்கள். அதையெல்லாம் விட இந்த இடங்களில் வரும் போது பலரும் தங்கள் பிரச்னைகளைக் கலந்து ஆலோசித்துக் கொண்டார்கள்.

சில நேரங்களில் சில பிரச்னைகளுக்கான தீர்வுகளை கருணாவிடத்திலோ அல்லது சின்னசாமி இடத்திலோ அல்லது சக்திவேலிடத்திலோ கேட்கிறார்கள். இவர்களும் இங்கெல்லாம் வந்து பேசலாமா என்பது போல இல்லாமல் நின்று அதைக் கேட்டு அதற்குத் தீர்வு சொல்கிறார்கள்.

'பரவாயில்லை' என அவள் நினைக்கும்பொழுது இவள் மனத்தைப் புரிந்து கொண்டவன் போல, சக்திவேல் சொன்னான். "இதெல்லாம் அப்பா, பெரியப்பாவோட ஐடியா. மாணிக்கவேல் அங்கிள் தான் சொல்வாராம். எப்பவும் !பிரச்னைகளைக் காது கொடுத்துக் கேட்கறதுக்கு நாம தயாராக இருக்கணும். ஒரு முக்கியமான பிரச்னையைச் சொல்லத் தேடி வரும்பொழுது நாம ஏதும் வேற முக்கிய மான வேலையில இருந்தோம்னா... அதனால் ஏற்படுகிற விளைவுகள் சில சமயத்துல பெரிசாப் போயிடலாம்... அப்படீன்னு சொல்வாராம்"என்றான்.

இளமதிக்கு முகத்தில் ஒரு பெருமித உணர்வு தோன்றி மறைந்தது. சக்திவேல் அதைக் கவனித்து புன்னகைத்துக் கொண்டான்.

“இளமதி இந்த பத்து இருபது நாள்ல இந்த ஆபீஸ்ல நீங்க என்னத்தைக் கத்துகிட்டீங்க”என்று கேட்டான் சக்திவேல்.

“கருணா சாரை... எப்படிக் கையாள்றதுன்னு கத்துக் கிட்டிருக்கேன்” என்று சிரித்தாள் இளமதி.

“ஆகா... அது பெரிய விஷயம் தான். அவனைக் கையாள்றது என்பது பெரிய விஷயம் தான்”என்று சிரித்தான் சக்திவேல்.

“கதை, கவிதை... ஏதாவது மேற்கோள்னு ஏதாவது சொல்லிகிட்டே இருப்பானே”என்றான்.

“ஆமாங்க. அதுல பல நேரங்கள்ல... ரொம்ப ஆழமான உண்மைகளும் இருக்கிற மாதிரி தெரியுது”என்றாள் இளமதி.

“எப்படியோ ஐயா அறிவு ஜீவி அப்படீன்னு காட்டிக் கிறாராக்கும்” என்று கிண்டல் செய்து கொண்டிருக்கும் போதே கருணாகரன் அங்கே வந்து சேர்ந்தான்.

“என்னடா பாடம் படிக்கிறீங்க?”என்று கேட்டான்.

“இல்லை. நீ ரொம்ப அறிவு ஜீவி மாதிரி பேசறியாம்” என்று கிண்டலாகச் சொன்னான் சக்திவேல்.

“அது உன்னால முடியாத விஷயம்டா... அதை ஏண்டா நீ தொடறே”என்று திருப்பிக் கிண்டல் செய்தான் கருணாகரன்.

அப்போது சக்திவேல், “ஏண்டா... நீ ஒண்ணும் சொல்லலை..” என்று சின்னசாமியைக் கேட்க, “இருக்கிற வங்க பேசிக்கிறீங்க. இல்லாதவங்க நான் என்னத்தப் பேசறது?”எனவும் குபீரென்று சிரித்தார்கள்.

இப்படியெல்லாம் பேசும்போது என்னமோ சின்னசாமி அவர்களுக்கு ஈடுகொடுக்கிறாற் போலவும் சிலவேளைகளில் அவர்களே எதிர்பாராத அளவிற்கு பட்டென்று ஒரு கருத்தை எடுத்து போடுகிறான் என்பதையும் இளமதியால் புரிந்து கொள்ள முடிந்தது.



மற்றவர்களெல்லாம் நினைக்கிறாற்போல சின்னசாமி ஒன்றும் வெகுளி இல்லை என்பதும் அவனிடத்திலும் ஆழமான விஷயம் இருக்கிறது என்பதும் ஆனால் வெளிப் படையாக பேசுகிறவனாக இருப்பதால் அணுகுவதற்கு எளிமையாக இருக்கிறான் என்பதும் அவர்கள் எல்லோருக்கும் பிடிக்கிறது என்பதும் இளமதிக்குப் புரிந்தது.

அதுமட்டுமில்லாமல் சின்னசாமியை அவளுக்கும் கூட பிடிக்க ஆரம்பித்து இருந்தது. அதனால் பத்துபேர் குழுவாக இருக்கும்போதோ, அங்கங்கே செல்ப் சர்வீஸ் முறையில் உணவு உண்ணும்போதோ அவள் சட்டென்று ஒரு தட்டை எடுத்துக் கொண்டு போய் சின்னசாமி அருகில் தான் நின்று பேசுவாள்.

இதை மற்ற இருவரும் கூட கவனித்து ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொள்வார்கள்.

“ஏன், நான் தான் கதை சொல்வேனா, நீயும் தான் கதை சொல்லுவே”என்றான் கருணா.

“ஆமாம். கதை தெரிஞ்சவங்கெல்லாம் கதை விட வேண்டியது தான்”என்றான் சக்திவேல்.

“ஏம்ப்..பா... நீ இந்த இலக்கியத்துல இருந்தெல்லாம் ஏதாவது எடுத்து விடுவியே... அதை மாதிரி இப்ப சின்னதா ஒரு கதை சொல்றது”என்று கேட்டான் கருணா.

“சரி. எல்லாம் இளவட்டங்களா இருக்கோம். அதுக்குத் தகுந்தமாதிரி ஒரு கதை சொல்லட்டா”என்றான்.

“ம்...”என்று உற்சாகமானார்கள் மற்றவர்கள்.

“இல்ல. குறுந்தொகைன்னு நினைக்கிறேன். அதுல ஒரு விஷயம் படிச்ச ஞாபகம் இருக்கு... ரெண்டு மான்கள். ஒரு ஆண் மான். ஒரு பெண் மான். இந்த ரெண்டு மான்களும் தண்ணியில்லாத ஒரு பஞ்ச காலத்துல தண்ணிக்காகத் தேடித்தேடி சுத்துதுங்க”

"ஆகா... அந்த காலத்துலேயும் வாட்டர் பிராஃப்ளமா? நல்லவேளை பவர் ப்ராப்ளம் இல்ல..."என்றான் சின்னசாமி.

"சும்மா இர்றா... இடையில பேசிக்கிட்டு..."என்றான் கருணாகரன்.

சக்திவேல் அதைச் சட்டை செய்யாதவன் போல தொடர்ந்தான்.

"இரண்டு மான்களும் தண்ணி தேடி அலைஞ்சு கடைசியில... ஒரு இடத்துல குட்டையில கொஞ்சமா தண்ணி இருந்துதாம்"என்றான் சக்திவேல்.

உடனே சின்னசாமி, "ம்..."என்றான், குழந்தை போல.

அவனைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு... "சரி, ரெண்டு மானும் இந்தத் தண்ணியைக் குடிச்சுக்கலாம் அப்படீன்னு தண்ணீர்ல வாயை வச்சுதாம். ஆனா இரண்டு மானும் குடிக்கிறாற் போல பாவ்லாப் பண்ணிகிட்டே இருக்கு. ஆண் மான் நினைச்சுதாம் பெண் மான் குடிக்கட்டுமேன்னு... பெண் மான் நினைச்சுதாம் ஆண் மான் பாவம் குடிக்கட்டுமேன்னு... ஆக மொத்தம் அங்கே தண்ணி தீரவேயில்லையாம்"என்றான் சக்திவேல்.

இளமதி ஆழமான முகபாவத்தோடு அதைக் கேட்டுக் கொண்டாள்.

"அந்த இரண்டு மான்களுக்கும் ஒருத்தரு ஒருத்தரு மேல எவ்வளவு பிரியம் இருந்திருக்கணும்"என்றாள் உருகிப் போய்.

கருணாகரன் குபீரென்று சிரித்தான்.

"அப்படிப் போடு... நான் சொன்ன கதையை விட இது நல்லாயிருக்கு. இல்லையா, இளமதி?"என்றான்.

"ஆமாம், கருணா"என்றாள் இளமதி.

சக்திவேலும், சின்னசாமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.



"இல்லை. உண்மையிலேயே இந்தக் கருத்து ரொம்ப நல்லாயிருந்ததுங்க"என்றாள் இளமதி.

அதற்குள்ளாக சின்னசாமி போய் அவர்கள் எல்லோருக்கும் சிறிய தட்டுக்களிலே கொஞ்சம் கேசரியும் பஜ்ஜியுமாகக் கொண்டு வந்து கொடுத்தான். அவர்கள் எல்லோரும் வாங்கிக் கொண்டார்கள்.

அப்போது மெல்லிய குரலில் சக்திவேல், இளமதியிடம் கேட்டான். "ஏன் இளமதி. இன்னும் அந்த ஆடு யாருன்னு தெரியலையோ?"என்று!

இளமதி திகைத்துப்போய் அவனைப் பார்த்தாள்.

"கண்டுபிடி.... இளமதி கண்டுபிடி.... இன்னும் நிறைய கதை சொல்லுவான் பாரு..."என்று சற்று தூரத்தில் யாருடனோ பேசிக்கொண்டிருந்த கருணாகரனைப் பாாத்தான்.

அந்தப் பார்வையில் என்ன இருந்தது? எரிச்சலா, கோபமா இல்லை எதுவுமே அற்ற வெறுமையா? என்பது இளமதிக்குப் புரியவில்லை.

ஒன்று மட்டும் புரிந்தது. இந்த மூன்று பேருக்கும் தன் விஷயமாக ஏதோ ஒரு கண்ணாமூச்சி நடக்கிறது, என்று!

கொஞ்சம் கவலையில் ஆழ்ந்து போனாள்.

★ ★ ★

## அத்தியாயம் 8

கந்தவேல் ஒய்வாக ஃசோபாவில் அமர்ந்திருந்தார். அவர்களுடைய ஆபீஸுக்கென்று இரண்டு மூன்று இடங்களில் மிக அருமையான கெஸ்ட் ஹவுஸ்கள் இருந்தன. அந்த மாதிரி ஒரு கெஸ்ட் ஹவுஸில் அமர்ந்து கொண்டிருந்தார்.

முன்னொரு நாள் நடந்த விஷயம் மனதில் ஓடியது.

ஆதிமூலத்திற்காகவும், கருப்புசாமிக்காகவும் காத்துக் கொண்டிருந்தார் கந்தவேல். வந்தார்கள்.

"என்னப்பா, ரொம்ப யோசனையில இருக்கிற மாதிரி இருக்கு?" என்றார் ஆதிமூலம், கந்தவேலைப் பார்த்து.

"ஆமாப்பா... கொஞ்ச நாளாகவே ஒரு யோசனை தான்" என்றார் கந்தவேல்.

"அப்படி என்னப்பா யோசனை?"என்று கேட்டார் கருப்புசாமி.

"இல்ல. நம்ம ஃபேக்டரி இப்போ வரைக்கும் நல்லா போயிட்டிருக்கு" என்றார்.

"இனிமேலும் நல்லாப் போகும். அதிலென்ன சந்தேகம்?" என்று கேட்டார் ஆதிமூலம்.

"இல்லப்பா... அடுத்த மாசம் ஒரு மாற்றம் வருதே" என்றார் கந்தவேல், சிந்தனையுடன்.

"என்ன மாற்றம்? நம்ம மைக்ரோ ஃபைனான்ஸ் நல்லாப் போயிட்டிருக்கு. அரசாங்கத்துக்கூட டைஅப் வைச்சாச்சு. இனி நிறைய இந்த சுயஉதவிக் குழுக்களைப் பிடிச்சு பணத்தைக் குடுக்க வேண்டியது தான். எனக்கென்னமோ சாதாரணமாப் பண்ற ஃபைனான்ஸை விட இது கொஞ்சம் கெட்டிக்காரத்தனமாகவும் இருக்கு. காசும் பத்திரமா வந்து சேருது. இதிலேயே எக்ஸ்பேன்ட் பண்ணலாம். அவ்வளவு தானே. இதிலே என்ன கவலைப்படுறதுக்கு இருக்கு?"என்று கேட்டார் ஆதிமூலம்.

"கம்பெனியோட ரன்னிங் பற்றி நான் கவலைப் படலைப்பா... நம்ம உறவுகள் என்னைக்கும் ஒரே மாதிரி இருக்கணுமே. அப்படீங்கற கவலை தான் இப்ப எனக்கு" என்றார் கந்தவேல்.

"போச்சுடா..."என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்தார் கருப்புசாமி.



"அட.... போப்பா. உனக்கு நக்கலா இருக்கு. ஆனா... ஆச்சு... பத்து பதினாறு வருஷமா நாம ஒத்துமையா இருந்துட்டோம். இதே ஒற்றுமை என்னைக்கும் நிலைக்கணுமே. அப்படீன்னு எனக்கு க் கவலையா இருக்கு" என்று மறுபடியும் சொன்னார் கந்தவேல்.

"ஏம்ப்..பா... திடீர்னு இப்படி அவநம்பிக்கையான எண்ணங்களெல்லாம் வரவேண்டிய அவசியம் என்ன வந்துச்சு? நாம என்னைக்கும் ஒண்ணு போலத்தானே இருக்கோம். இனிமேலும் இருப்போம். எப்போதும் போல மீட்டிங்... தனிப்பட்ட மீட்டிங் போடுறோமே... இதுல எல்லாச் சண்டைகளையும் போட்டுறலாம். போட்டுட்டு அப்பவே மறந்துட்டு வழக்கம்போல கட்டி புடிச்சுகிட்டு அடுத்தது என்னன்னு பார்க்க வேண்டியது தானே"என்றார் ஆதிமூலம்.

"அது அப்படித்தான். ஆனா அடுத்த மாசத்திலே இருந்து மாணிக்க வேலோட பொண்ணு நம்ம இன்டஸ்டிரிக்கு வர்றாப்பல... தெரியுமா?" என்று கேட்டார்.

"என்ன தெரியுமான்னு எங்கிட்டே கேட்கிறே... நாம எல்லாரும் சேர்ந்து எடுத்த முடிவு தானே"என்று கேட்டார் ஆதிமூலம்.

"அதாம்ப்பா... எனக்கு கவலையா இருக்கு..."என்று இழுத்தார் கந்தவேல்.

"எது கவலையா இருக்கு? அந்தப்பொண்ணு வரப் போகுதே அதா..."என்று கேட்டார் கருப்புசாமி.

"இல்லப்பா. அப்படிக் கவலைப்படுவேனா... மாணிக்க வேலோட பொண்ணு. வந்தா அது மாணிக்கவேலே வந்தமாதிரி. இவ்வளவு பெரிய ஆலமரத்தைத் தூக்கி நிறுத் தினவனே மாணிக்கவேல் தானே. அந்தப் பொண்ணு வர்றதுல எனக்கு சந்தோஷம் தான். ஆனா..."என்று இழுத்து நிறுத்தினார் கந்தசாமி.

''என்ன ஆனா... ஆவன்னா-...?'' என்றார் ஆதிமூலம்.

''இல்லப்பா... எதுக்குச் சுத்தி வளைச்சுட்டு... ஒப்பனாகவே வர்றேன். எங்க வீட்லேயும் உங்க வீட்லேயும் கருப்புசாமி வீட்லேயும்... மூணு பேரு வீட்லேயும் பசங்க இருக்காங்க. நம்ம நாலு குடும்பத்துக்கும் இது தான் ஒரு பொண்ணு. கொஞ்ச நாளாகவே எனக்கு ஒரு யோசனை. அந்தப் பொண்ணை ஏன் வெளிக் குடும்பத்துக்குக் கொடுக்கணும். நம்ம மூணு பசங்கள்ல யாராவது ஒருத்தருக்குக் கல்யாணம் கட்டிக்கிட்டா என்ன?''என்ற எண்ணம் என் மனசுலே வந்துகிட்டே இருக்கு''என்றார் கந்தவேல்.

ஆதிமூலம் ஆச்சரியமாக அவரைப் பார்த்தார்.

''கந்தவேலு கலக்கிட்டியேப்பா...''என்றார்.

''இல்லப்பா... உண்மையாவே இந்த யோசனை வந்துட்டுத் தான் இருக்கு''என்றார் கந்தவேல்.

ஆதிமூலம் ஒருமாதிரியாகப் பார்த்து விட்டு, சற்றே அசடு வழிய, ''இந்தா பாருப்பா... எனக்கும் தான் அப்படியொரு யோசனை''என்றார்.

கந்தவேல் முதலில் கொஞ்சம் அதிர்ச்சி அடைந்தாற் போல இருந்தாலும் தேற்றிக் கொண்டு அவரைப் பார்த்தார்.

பிறகு திரும்பி கருப்புச்சாமியிடம், ''ஏம்ப்... பா உனக்கு அந்த யோசனை வர்லையா? ''என்று கேட்டார்.

கருப்புசாமி கசப்பாகப் புன்னகைத்துக் கொண்டு ''ஏம்ப்... பா... கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டத்துக்குப் போக முடியுமா? நீங்க ரெண்டு பேரும் முடி உள்ள சீமாட்டிங்க. எப்படி வேணும்னாலும் முடிவீங்க. என்னை ஏம்ப்... பா இந்தப் போட்டியில இழுக்கிறீங்க. ஏதோ ஓர்க்கிங் பார்ட்னராச் சேர்த்திங்க. இன்னைக்கு ஓகோன்னு இருக்கிறேன். இந்த வண்டி எப்பவும் இப்படியே ஓடினாப் போதுமப்பா...'' என்றார் கருப்புசாமி சலித்தாற் போல.



''நீ இன்னும் தாழ்வு மனப்பான்மையை விடவே மாட்டேங்கற. உன்னை என்ன பண்றது... வெள்ளாவி வச்சுத்தான் வெளுக்கணும் போல இருக்குது. ஏதோ சினிமா பாட்டுல வந்துருக்கே... அது மாதிரி.''

கருப்புசாமி குபீரென்றுச் சிரித்தார்.

''ஏய்... அது காதல் பாட்டு''என்றார்.

''அது என்னமோ பாட்டா இருந்துட்டு போகட்டும். நமக்கு இப்ப ஒத்து வருதுல்ல. அதனால கோட் பண்ணினேன்''என்றர் ஆதிமூலம்.

''நீ கோட் பண்ணுவியோ... வேறு ஏதாவது பண்ணுவியோ... எனக்கு என்னமோ இந்தப் போட்டியில நம்ம பையன் சின்னச்சாமி நுழைவுத் தேர்விலேயே தோத்துப் போயிருவான்னு தோணுது''என்றார், கருப்புசாமி.

கந்தவேல் கருப்புசாமியின் தோள் மீது கை போட்டுக் கொண்டு, சிரித்தாற் போலச் சொன்னார். ''எப்பவும் நீ ஜோக்கர் தானப்பா...''என்று.

''ஆமாம். ஜோக்கர் லெவல்லேயே வச்சுக்கலாம். அது தான் நல்லது''என்று கருப்புசாமி லேசாக முணுமுணுத்துக் கொண்டார்.

''என்ன என்ன?''என்று கேட்டார் ஆதிமூலம்.

''ஒண்ணுமில்லை''என்று சொல்லி விட்டார் கருப்புசாமி.

''சரி... இப்ப விஷயத்துக்கு வாங்க''என்றார் கந்தவேல்.

''என்ன விஷயத்துக்கு வரணும். ஏன் நம்ம எல்லாருக்கும் பசங்க இருக்காங்க. இந்த கருப்புசாமி உளறிக்கிட்டு கிடந்தாலும் நாம எப்பவும் அவனை ஒரே மாதிரியாத்தான் வச்சுகிட்டு இருக்கிறோம். அதனால... மூணு பசங்க... நம்ம மூணு வீட்ல இருக்காங்க. ஒரு கல்யாண வய்சுல இருக்கிற பொண்ணு... நம்ம ஆபீஸ்க்கு வரப்போறா... இந்த மூணு பசங்கள்ல யாராவது அந்தப் புள்ளையக் கல்யாணம்

பண்ணிக்கிற மாதிரி இருந்தா நல்லாயிருக்காது?''என்றார் கந்தவேல்.

''ஏம்ப்பா... என்ன நீ... பார்ட்னர்ஷிப்ல அக்ரிமென்ட் போட்ட மாதிரி போடற... இதெல்லாம் நடக்கிற காரியமா? இந்த காலத்துக் குழந்தைங்க அவங்கவங்க எத்தனையோ ஐடியா வச்சுருப்பாங்க. நாம போயி அந்தப் பொண்ணைக் காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்லவா முடியும்?''என்று கேட்டார் ஆதிமூலம்.

''இரு... இரு... அங்க தான் வர்றேன். நாம சொல்ல வேண்டாம். ஆனா... அப்படியொரு சிச்சுவேஷன் வந்தால்... என்ன செய்றது?''என்று தான் நான் கேட்கிறேன்''என்றார்.

ஆதிமூலமும், கருப்புசாமியும் சிந்தனையுடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஓகோ... இப்படியொரு வாய்ப்பும் இருக்கிறதோ...'' என்ற எண்ணம் அவர்களுக்குள் தோன்றியது.

''நடக்குமோ... நடக்காதோ... அது வேற,நடந்தா என்ன பண்றது? அதுக்கொரு முடிவு சொல்லுங்க''என்றார் கந்தவேல்.

''போப்பா... சினிமாக் கதையாட்டம் நினைச்சுகிட்டு பேசிக்கிட்டிருக்கே. பாக்கலாம். நாளைக்கு நடந்தா என்ன பண்றதுன்னு பாக்கலாம்''.

கந்தவேல் சொன்னார். ''ஆதி! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. 'அந்த மாதிரி ஒண்ணு நடந்தா... அது உண்மை யாகவே நம்ம தொழிலுக்கு நல்லது. ஆனா அதே சமயத்தில இன்னொரு பிரச்னை என்னன்னா... அப்படி ஏதாவது நடந்து அதனால நமக்குள்ளே பிரிவினை வந்துடக் கூடாதே... அதான் எனக்குக் கவலையாயிருக்கு''என்றார்.

''என்னமோ அந்தப் பொண்ணு ஹீரோயின் மாதிரியும், நம்ம பசங்க எல்லாரும் துரத்தித் துரத்திக் காதலிக்கிற மாதிரியும் அவ... அந்த மூணு பேர்ல ஒருத்தரை செலக்ட் பண்ணப் போற மாதிரியும்... நல்லா சினிமாக் கதை எழுதறப்பா...''என்று சிரித்தார் கருப்புசாமி.



''இல்ல, கருப்பு. உண்மையாத் தான் நான் சொல்றேன். அப்படி ஏதாவது நடந்தா நாம என்ன பண்ணப் போறோம். ஒரு வேளை ஆதிமூலத்தின் பையனை அவளுக்குப் புடிச்சதுன்னு வச்சுக்கோ...''

''எனக்கென்னமோ... என் பையனைப் புடிக்கும்னு தோணலை. அவன் இப்பவே புல்டோஸர் மாதிரி தான் முகத்தை வச்சுக்கிறான்''என்றார் ஆதிமூலம்.

''அப்படியெல்லாம் இல்லப்பா... கருணா கிட்டே நல்ல விஷயம் இருக்கு''.

''சரி. சக்திவேலுக்கு என்ன குறை?''என்றார் ஆதிமூலம்.

''இல்ல... சின்னச்சாமிக்குத் தான் என்ன குறை?''என்றார் கந்தவேல்.

''அதாம்ப்... பா இப்ப பிரச்னையே... ஒருத்தருக்கும் ஒண்ணும் குறையில்ல. மூணு பசங்களும் எலிஜிபிள் பர்ஸனாத்தான் இருக்காங்க. அப்படியொரு சிச்சுவேஷன் வந்தா நாம என்ன செய்யப்போறோம், யோசிப்போமா?'' என்றார் கந்தவேல்.

அப்போது அவர்கள் விளையாட்டு போல பேசிக் கொண்டாலும் கந்தவேல் எடுத்து வைத்த உண்மை... ஆதிமூலத்தின் மனத்திலும் ஒரு கேள்வியை எழுப்பியது. கருப்புசாமி மனத்திலும் ஒரு கேள்வியை எழுப்பியது.

இரண்டு பேரும் ஒரு நிமிடம் அமைதியாக இருந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சரி. நீயே சொல்லு. என்ன பண்ணலாம்?'' என்றார் ஆதிமூலம், ஒரு நிமிடம் கழித்து.

கந்தவேல் நன்றாக அசைந்து கொடுத்து... சோபாவில் அழுத்தமாக அமர்ந்து கொண்டு சொன்னார்.

"என்ன பண்றோம்னா... நாம நம்ம பசங்களுக்கு எந்தத் தடையும் சொல்ல வேண்டாம். எந்த ஐடியாவும் கொடுக்க வேண்டாம். எப்படியிருந்தாலும் இந்த மூனு பேருக்குள்ள ஒருத்தரை அந்தப் பொண்ணு செலக்ட் பண்ணினா... செலக்ட் பண்றான்னே வச்சுக்குவோம். அப்ப மத்த இரண்டு பேர் ஃபேமிலியும் சந்தோஷமா அதை எடுத்துக்கிட்டு ஒத்துழைப்புக் கொடுக்கணும். ஏன்னா... அந்தப் பொண்ணு நம்ம குடும்பத்தில... எந்தக் குடும்பத்துக்கு வந்தாலும் அது நமக்கு நல்லது தானே" என்றார் கந்தவேல்.

கருப்புசாமி அதிர்ச்சியானவர் போலப் பார்த்தார்.

"ஏம்ப்..பா... எங்க குடும்பத்தையும் அதுல சேர்த்துக்குறீங்களா? இந்த ஜாதி... உயர்ந்த ஜாதி... இதெல்லாம் பாக்க மாட்டீங்களா? வேண்டாம்ப்... பா"என்றார்.

"இதப்பாரு கருப்புசாமி. இந்த ஜாதி நியாயம் பேசாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்" என்று கடிந்து கொண்டார் ஆதிமூலம்.

"ஓகே.. ஓகே... லிஸ்ட்ல வேணும்னா வச்சுக்குங்கோ. எனக்கொண்ணும் ஆட்சேபணை இல்ல. கரும்பு தின்னக் கசக்குமா?"என்றார் கருப்புசாமி.

"சரி. இன்னைக்கு நாம இங்க ஒரு முடிவு எடுக்கறோம். இளமதி ஆபீஸ்க்கு வரட்டும். மூனு பசங்ககிட்டேயும் பழகட்டும். மூனு பசங்க மட்டுமா இருக்காங்க. எவ்வளவோ பேரு ஆபீஸ்ல இருக்காங்க. இருந்தாலும் ஒரே அளவு வசதி எல்லாம் பார்த்தா நம்ம பசங்க தான் ஓரளவு எலிஜிபிளா இருப்பாங்க. சப்போஸ், இளமதி இந்த மூனு பசங்கள்ல ஒருத்தரைத் தேர்ந்தெடுத்தா மத்த ரெண்ட ஃபேமிலியும் அதை சந்தோஷமாக ஏத்துக்கறோம். ஓகே.. டீலா?"என்றார் கந்தவேல்.



"ஓகே..ப்பா... டீல்..ப்பா..." என்று மத்த ரெண்டு பேரும் உள்ளங்கையிலே கையை வைத்து அழுத்திக் கொண்டார்கள்.

அவர்கள் தனிமையான சந்திப்பின்பொழுது வழக்கமான ஆபீஸ்ல இருக்குற அந்த கட்டு செட்டோடு... அல்லது கம்பீரத்... தோற்றத்தோடோ அல்லது முகமூடி போட்டாற் போல நடமாடிக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதால் கல்லூரி நண்பர்களைப் போலவே கலாட்டாவாகப் பேசிக் கொள்வார்கள். சிரித்துக் கொள்வார்கள்.

அதேபோல இப்போது ஒரு பெரிய விஷயத்தையும் கூட அவர்கள் விளையாட்டாக பேசி முடித்துக் கொண்டார்கள். ஆனா அந்த நிமிடத்தில் இருந்தே அவர்களுக்குள் அந்தப் பெண் நம் வீட்டுக்கு வந்தால் தேவலை... என்பது போல எண்ணம் துளிர்க்க ஆரம்பித்து விட்டது.

அந்த எண்ணம் ஒருபக்கம் வளரப்போகிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை, அப்போது.

அந்த எண்ணத்தினால் அவர்களுக்குப் பின்னாலே என்னென்ன பிரச்னைகள் வரப்போகிறது என்பதும் அப்போது அவர்களுக்குப் புரியவில்லை. சூழ்நிலையை இதமாக்க சட்டென்று ஆதிமூலம் கேட்டார். "ஏம்ப்..பா... கருப்புசாமி இந்த வாரம் உன் ஒய்ஃப்கிட்ட எத்தனை தோப்புக்கரணம் போட்டே..." என்று.

கருப்புசாமி அலட்டிக்காம, "நீ போட்டதை விட ஒண்ணு கம்மின்னு வச்சுக்கியேன்"என்றார்.

உடனே கந்தவேல் நுழைந்து, "அப்ப நீ எத்தனை போட்டே... நீ எத்தனை போட்டே?"என்று கேட்டார்.

கருப்புசாமி அலட்டிக்கொள்ளாமல், "நீ போட்டதை விட ஒண்ணு கூடன்னு வச்சுக்கியேன்"என்றார்.

பளிச்சென்று மூன்று பேரும் சிரித்து விட்டார்கள்.

''எப்படியோ ஆபீஸ்ல மிரட்டு மிரட்டுன்னு மிரட்டுறோம். வீட்டுக்குப் போனா தோப்புக் கரணம் போடறோம்'' என்று மறுபடியும் சிரித்தார்கள்.

''இங்க பாருப்பா... அப்படி தோப்புக்கரணம் போடறதே ஒரு சொகம் தான். அவங்க நினைச்சுக்கிட்டிருப்பாங்க... நம்ம தான் இவங்களை மிரட்டிக் கிட்டு இருக்கோம்னு. சரிம்மா... நினைச்சுக்கோன்னு விட்டுட்டு நாம பாட்டுக்கு இங்க நம்ம ராஜ்ஜியத்தை நடத்துவோம்''என்றார் ஆதி மூலம்.

''ம்... அதுவும் நல்லாத்தான் இருக்கு''என்றவர், ''ஏம்ப்.. பா... நான் கேட்கணும்னு நினைச்சேன். இந்த சிம்மேந்திரன் பையன்... புதுசு புதுசா ஐடியா குடுத்துக் கிட்டிருக்கான்'' என்றார் கந்தவேல்.

ஆதிமூலம் ஆழ்ந்த அமைதியுடன் சொன்னார். ''சிம்மேந் திரனை லேசா நினைச்சுக்காதேப்பா... நிறைய ஐடியாஸ் வச்சிருக்கான். அது எல்லாமே ஒர்க்கவுட் ஆகிற ஐடியாவாத் தான் இருக்கு. ஏன்னா... அவன் ஃபீல்டுக்குள்ளே இறங்கிப் பார்க்கிறான். அதனால அங்கங்க என்னென்னப் பிரச்னைகள் இருக்கு. அதுக்கு தீர்வு எப்படி சொல்லலாம்ங்கறப் பத்தி யெல்லாம் நல்லா யோசிக்கிறாம்ப்..பா..''என்று பாராட்டிக் கொண்டார்.

அப்போது கருப்புசாமி கேட்டார். ''இப்ப நம்ம பசங்களைப் பத்தி பேசிக்கிட்டு இருக்கும்போதே சிம்மேந் திரனைப் பத்தி எதுக்கு இடையில பேச்சு? ஆபீஸ் மேட்டரே வேண்டாம்ப்பா... வேற பேசுவோம்''என்று திசை திருப்பி...'' போன வாரம் அந்த பார்ட்டி நடந்துதே. அந்த பார்ட்டிக்கு போனீங்களே... அங்க என்னாச்சு?''என்று ஆரம்பிக்க... கந்தவேலும், ஆதிமூலமும் அந்த பார்ட்டியில நடந்த கலாட்டாக்கள் பற்றி விரிவாகப் பேச ஆரம்பித்தார்கள்.



எந்த சிம்மேந்திரன் பற்றிய பேச்சு இப்போது தேவை யில்லை என்று நினைத்தார்களோ அந்த சிம்மேந்திரனைப் பற்றித் தான் பின்னாலே தாங்கள் விரிவாக பேசி அலச வேண்டியிருக்கும் என்பது அப்போது அவர்களுக்குப் புரியவில்லை.

* * *

## அத்தியாயம் 9

**கா**ரில் ஏறி அமர்ந்தார்கள் சின்னசாமியும், இளமதியும். இண்டிகா காரில் பின்சீட்டில் அமர்ந்தார்கள்.

இளமதி அலுவலகத்துக்கு வர ஆரம்பித்து இரண்டு மாதங்கள் ஓடி இருந்தது.

முதல் மாதம் முழுவதும் அவள் கருணாகரனுடைய அலுவலகத்தில் அக்கவுண்டிங் செக்ஷன் என்பார்களே அதுபோல் கணக்கு வழக்குகள் பற்றிய ஒரு தெளிவான அறிவைப் பெற்றுக் கொண்டாள் என்றால் அடுத்த மாதம் முழுவதும் சக்திவேலிடம் அலுவலக நிர்வாகம் பற்றிய நடைமுறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டாள்.

இரண்டு மாதமும் அவளுக்குப் பொழுது நன்றாகப் போனது. கருணாகரன் பொதுவாக கொஞ்சம் கடுமையான முகபாவம் வைத்துக் கொண்டிருப்பவன் என்றாலும் கூட முதல் வாரத்தில் அவளிடத்தில் ஸ்டிரிக்ட்டாகப் பேசிக் கொண்டிருந்தவன் அடுத்த வாரத்தில் இருந்தே அவளிடம் கொஞ்சம் நட்புடன் பேச ஆரம்பித்து இருந்தான்.

''இளமதி! நீ பரவாயில்லை... விஷயங்களையெல்லாம் சீக்கிரம் புரிஞ்சுக்கறே...''என்று பாராட்டவும்கூட செய்தான்.

இளமதிக்கு அலுவலகத்தினுடைய பணிகளில் முழுமை யான ஆர்வம் ஏற்பட்டு விட்டதால் அவள் மற்ற எதையும் கவனிக்கிறவளாக இருக்கவில்லை. கருணாகரன், தான் நடமாடும்பொழுது... மற்ற அலுவலர்களிடம் பழகும்போது விஷயங்களை கிரகித்துக் கொள்ளும் பொழுது... இதை யெல்லாம் தன்னைக் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறான் என்பதை அவள் கவனிக்கவே இல்லை.

வேலை அவளுக்கு மிகவும் பிடித்து போய் விட்டது. ஒரு மாதம் ஓடி விட்டது, திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக!

அடுத்தநாள்! கந்தவேல், ஒரு மாதம் முடிந்ததற்குப் பிறகு திடீரென்று அவள் வீட்டுக்கு வந்தார்.

''ஏம்மா, இளமதி! எப்படி போயிட்டிருக்கு ஆபீஸ்...'' என்று கேட்டார்.

''மாமா, ரொம்ப நல்லாயிருக்கு. இத்தனை விஷயங்கள் இங்கே இருக்கா... அப்படீன்னு ஆச்சரியமா இருக்கு. இத்தனை அக்கவுண்ட்ஸையும் கருணா நல்லா மேனேஜ் பண்றாரு''என்றாள்.

''அதான் நிறைய ஸ்டாஃப் கொடுத்திருக்கோமே...'' என்றார் கந்தவேல்.

''குடுத்தாலும் திறமையாச் செய்யறது என்பது ஒரு பெரிய விஷயம்தானே...''என்று பாராட்டினாள் இளமதி.

பாராட்டுவது... புதிதாக வந்த... அனுபவமே இல்லாத இளம்பெண் என்றாலும் கூட. அது தன் மகனைப் பற்றிய பரராட்டு என்பதால் ஆதிமூலம் மகிழ்ந்து போனார்.

''அவன் கெட்டிக்காரன்தான்...''என்று கொஞ்சம் அடக்கமாகவே சொல்லிக் கொண்டார்.

''அப்புறம்மா... நான் விஷயத்துக்கு வர்றேன்''என்று சொல்லி விட்டு, ''இந்த மாசம் முழுக்க சக்திவேல் ஆபீஸ்க்கு போயிடணும்''என்றார்.



''சரிங்க மாமா. போன மாசமே கருணா சொல்லிக்கிட்டு இருந்தாரு...''என்றாள்.

''ஆமாம். இன்னையில இருந்து நீ சக்திவேலோட ஆபீஸ்க்குப் போறே... அங்க முழுக்க முழுக்க இந்த மேன்.. பவர்... நிர்வாகம் மேனேஜ்மென்ட் பற்றித் தெரிஞ்சுக்கப் போறே. எங்கெங்கு எத்தனை ஆட்கள் இருக்காங்க... என்ன.. அவங்களை எப்படி நிர்வாகம் பண்றது... என்னென்ன துறைகள் இருக்கு... ஃபீல்டும் இருக்கு. வெளியிலே போகக் கூடியவங்களும் இருக்காங்க. எத்தனை பேரு இருக்காங்க... என்ன... எல்லா விபரங்களையும் நீ தெரிஞ்சுக்கணும்மா...'' என்று சொன்னார்.

''சரிங்க மாமா...''என்று அதை அவள் ஏற்றுக் கொண்டாள்.

அந்த மாதம் முழுவதும் சக்திவேலுவுடன் செலவழிப்பது மிகவும் எளிதாக இருந்தது. கருணாகரனுடன் நேரம் செலவழிப்பதில் கூட... ஒரு இறுக்கம் இருந்தாற்போல இருந்தது. ஆனால் சக்திவேலிடம் பழகுவது என்பது இன்னும் கொஞ்சம் எளிதாக இருந்தது. சக்திவேல் அடிக்கடி அவளுக்கு இலக்கியத்தில் இருந்து கதைகள் சொல்வான்.

ஒவ்வொரு நாளும் சற்றுநேரம் அவளோடு செலவழிப் பான். மற்றபடி கருணாகரன் எப்படிச் செய்தானோ அதே போல அலுவலகத்தினுடைய ஒவ்வொரு பிரிவிலும் தேவைப்படும் நாட்கள்... இரண்டு நாட்கள்... மூன்று நாட்கள் என்று அமர்ந்து அந்தந்தப் பிரிவினுடைய நடவடிக்கைகளைக் கண்காணித்துக் கொண்டாள்.

அங்கு போலவே இங்கும் அவளுக்கு கூடவே இருந்து வழிகாட்டுவதற்கும் கவனித்துக் கொள்வதற்குமாக ஒரு பி.ஏ.வையும் சக்தி அமர்த்தி இருந்தான். ஆனால் என்ன ஆச்சரியம் என்றால் அமர்ந்து பேசுவதற்கு அங்கே நேரமே இருக்கவில்லை.

காலையில் போனால் ஏதாவது ஒரு விஷயம் வந்தால் அதை முடித்து விட்டுத் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக உணவு நேரம் வந்து விடும். அதை முடித்து விட்டுத் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக சிற்றுண்டி நேரம் வந்து விடும். இந்த இரண்டு மாத காலத்தில் அவள் ஒன்று கவனித்திருந்தாள்.

சக்திவேலாகட்டும் சின்னசாமியாகட்டும் பட்டனைத் தட்டினால் அவர்களுக்குத் தேவையான சிற்றுண்டி அல்லது உணவு அவர்கள் அறைக்கே வந்துவிடும் என்றாலும் மூன்று பேரும் சேர்ந்து உணவருந்துவதை கூடியமட்டும் விரும்பினார்கள் என்பது அவளுக்குப் புரிந்தது. பல நேரங்களிலும் அவளும் உடனிருப்பாள்.

சில நேரங்களில் அவள் அவர்களுடன் செல்வதைத் தவிர்த்து விடுவாள். ஏனென்றால்... "என்ன இருந்தாலும் அவர்களுக்கு தங்களுக்குள் பேசிக் கொள்ள விஷயங்கள் இருக்குமல்லவா...?"என்று.

"இன்னைக்கு மத்தியானம் பேசலாண்டா..."என்று சக்தி வேலோ, கருணாகரனோ ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டால் அன்றைய தினத்தில் அவள் அலுவலகத்துக்கே உணவு வரவழைத்து உண்பாள்.

அல்லது வீட்டுக்குப் போகிறேன் என்று வீட்டுக்குக் கிளம்பி விடுவாள்.

"என்னடியம்மா... நீ வேலைக்குப் போனாலும் போனே... கொஞ்சநேரம் கூட என்னோட இருக்க மாட்டேங்கறே..." என்று அம்மா கவலைப்பட்டுக் கொண்டதால் அந்த ஏற்பாடு இந்த மாதிரி நாட்களில் சௌகரியமாகப் போய் விட்டது..

அம்மாவிடமும் அலுவலக நடைமுறைகளை எல்லாம் கொஞ்சம் சொல்லிக் கொள்வாள்.

கல்லூரிப் படிப்பு முடித்து வீட்டில் இரண்டு மாதம் இருப்பதற்குள்ளாக அவளுக்கு பொழுதைப் போக்குவது என்பது மிகப்பெரிய கடினமான காரியமாக இருந்தது.



இப்போது பொழுது போதவில்லை என்பது போல பொழுது வேகமாக போய்க்கொண்டிருந்தது. பின்னங்கால் பிடரியில் பட ஓடுவார்கள் என்பார்களே அது மாதிரி நேரம் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதுவும் அவளுக்கு ஒருவகையில் பிடித்திருந்தது.

இப்போது மூன்றாவது மாதம் சின்னசாமியோடு ஃபீல்டுக்குப் போகவேண்டும் என்றார்கள். இந்த இரண்டு மாதங்களும் அலுவலகத்திலேயே இருந்து அலுவலகத்தைப் பார்த்துப் பழகிக் கொண்டதால் இந்த வெளி உலக அனுபவம் அவளுக்கு நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

"என்ன இளமதி. புறப்படலாமா?"என்று கேட்டான் சின்னசாமி.

"கண்டிப்பா... சின்னு... போகலாம்"என்றாள் அவள்.

அவள் சின்னு என்று சின்னசாமியை தன்னுடைய பாணியில் அழைத்தாள். அது அவனுக்கு மிகவும் பிடித் திருந்தது. பெரும்பாலானவர்கள் அவனை சாமி என்று தான் அழைத்தார்கள்.

இவள் மட்டும் தனியாக சின்னு என்றழைப்பது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அதேநேரம் காரோட்டுவதற்காக வந்த இளைஞனை அவள் பார்த்தாள். அவள் முகத்தில் ஆச்சரியம் தேங்கியது. ஏனென்றால்... கார் டிரைவர் அல்ல. சின்னசாமியின் நண்பனாகவும் அலுவலகத்தின் முக்கியத் தூண்களில் ஒருவனாகத் திகழுகிற சிம்மேந்திரன்.

"போப்பா... நான் பைக்கிலே வர்றேன்னா. கேட்க மாட்டேங்கறே..." என்று சொல்லிக் கொண்டே வந்து காரை எடுத்தான் சிம்மேந்திரன்.

"இல்லை..இல்லை... உங்கூட பேசுவதற்கு எப்பவாவது தான் டைம் கிடைக்குது. இந்த ரெண்டு நாளை உன்னோடு செலவழிக்கிறது என்று நானும் இளமதியும் முடிவு

பண்ணிட்டோம். அதனால... நீ பைக்கில வேண்டாம். எங்ககூட கார்லேயே வா''என்றான் சின்னசமி.

''அதான் சொல்லிட்டியே. வந்துட்டேனே''என்றான்.

சற்று நேரம் அமைதியாக காரை ஓட்டிக் கொண்டிருந் தான். பிறகு திரும்பி, ''மேடம். வெல்கம் டு அவர் ஃபீல்ட் ஓர்க்''என்றான்.

''தேங்க்..யூ... தேங்க்யூ..''என்றாள் இளமதி.

''நீ இவனை இந்தர் என்றே கூப்பிடலாம்''என்றான் சின்னசாமி.

இளமதி சட்டென்று சிரித்தாள்.

''ஆமாங்க... சின்னு நான் யோசிச்சுக்கிட்டிருந்தேன். சிம்முன்னு கூப்பிடுறதா... என்னன்னு கூப்பிடுறதுன்னு என்று யோசிச்சுகிட்டிருந்தேன். நல்லவேளை... இது நல்ல ஐடியாவாயிருக்கே இந்தர் ''என்றாள்.

சிம்மேந்திரன் லேசாக இதழோரத்தில் ஒரு புன்னகையைத் தேக்கிக் கொண்டு அவளைக் குறுகுறு என்று பார்ப்பதை அவள் காரின் முன் கண்ணாடி வழியாகப் பார்த்தாள்.

ஒரு நிமிடம் அவள் முகம் சிவந்து அடங்கியது.

''அப்புறம் சார், உங்க ஃபீல்டு பற்றிச் சொல்லுங்க''என்று கேட்டாள் இளமதி.

சிம்மேந்திரன் அழுத்தமான ஒரு புன்னகையுடன், ''ஃபீல்டு அப்படீன்னாலே இறங்கிப் பாக்கணும்... மேடம். அதெல்லாம் சொல்லக்கூடாது''என்றான்.

இளமதி புன்னகைத்துக் கொண்டாள். சரி அப்படித் தான் பார்ப்போமே என்று எண்ணிக் கொண்டாள்.

''ஏன் சின்னசாமி சார்...''என்றான் சிம்மேந்திரன்.

''டே..டே..போதும்டா... இந்த நடிப்பெல்லாம். சும்மா சாமின்னே கூப்பிடு''என்றான் சின்னசாமி.



''சரி அப்படித் தான் வச்சுக்குவோம். இப்போ ரெண்டு மூணு நாள்ல இந்த ஃபீல்டைப் பத்தி முழுமையாத் தெரிஞ்சுக்க முடியுமா?''என்று கேட்டான்.

சின்னசாமி கலீரென்று சிரித்தான்.

'எப்படா... இந்தக் கேள்வி கேட்பே... ஏன் இந்நேரம் இந்தக் கேள்வி கேட்கலைன்னு நினைச்சுகிட்டுத் தாண்டா இருந்தேன்''என்றான்.

''இல்ல. ரொம்ப ஷார்ட் டைம்ல... டு டேஸ்க்குள்ள என்ன ஃபீல்டைப் பத்தி புரிஞ்சுக்க முடியும்னு நினைக் கிறேன்''என்றான்.

''அப்படி இல்லை இந்திரன்... இந்த மாதம் முழுக்க நீ போகக்கூடிய ஏரியாக்களுக்கு அவங்களை கூட்டிட்டுப் போயி அவங்களுக்கு சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லிக் கொடு''என்றான்.

சிம்மேந்திரன் முகத்தில் ஏதும் மாற்றமில்லை. அழுத்தமாக இருந்தாலும் அவனுக்கு ஏனோ இந்தக் கருத்து பிடிக்க வில்லை என்பது போல தோன்றியது.

ஒரு மாதம் ஒரு பெண்ணைக் கூட வைத்துக் கொண் டிருந்தால் ஏதோ பூனையை மடியில் கட்டிக்கொண்டது போல இருக்கும் என்று அவனுக்கு ஒரு எண்ணம் உள்ளே ஓடியது. இளமதிக்கும் கூட அந்த மாதிரி... எப்படி ஒருவருடன் சுற்றுவது என்ற எண்ணம் தோன்றியது போலும்.

இளமதியினுடைய முகத்தை ஆர்வமாக கவனித்துக் கொண்டிருந்த சின்னசாமி, சிரித்துக் கொண்டான்.

சிம்மேந்திரன் அமைதியாக இருப்பதைப் பார்த்து மறுபடியும் சீண்டுவது போல கேட்டான், ''ஏண்டா உனக்கு இந்த ஐடியா பிடிக்கலையா?''என்று.

"ஐடியா பிடிக்கறதும் பிடிக்காததும் என் கையில இல்லியே. நிர்வாகத்தில் என்ன சொல்றீங்களோ அதைச் செய்ய வேண்டியது தானே. எனக்கொண்ணும் அவங் களைக் கூட்டிட்டுப் போறதுல கஷ்டம் இல்லை"என்றான்.

"அப்படீன்னா இளமதிக்கு கஷ்டமாக இருக்கும்னு சொல்றீயா?"என்று கேட்டான்.

"ஆமாம். இதை சொல்லி வேற தெரியணுமா? அவங்க வீட்ல சௌகரியமாக இருந்து பழகினவங்க. அவங்களை ஒவ்வொரு ஸ்லம் ஏரியாவுக்கும்... ஒவ்வொரு... கூட்டமாக ஜனங்கள் வசிக்கக்கூடிய இடங்களுக்கும் கூட்டிட்டுப் போனா அவங்களுக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ" என்றான்.

"நீ அப்படித் தானே போய் செஞ்சுகிட்டு இருக்கே..." என்று கேட்டான் சின்னசாமி.

"இந்தாப் பாரு... சின்னசாமி, டோன்ட் கம்பேர். எனக்கு அது பிடிச்சிருக்கு. அந்த மக்களோடு போய்ப் பழகுறதுல எனக்கும் ஒரு ஆர்வம் இருக்கு. அவங்க என்னை ஏத்துக்கிற துக்கும் ஆர்வமாக இருக்காங்க"என்றான்.

அந்த பதில் ஏனோ, இளமதியை டிஸ்கரேஜ் செய்வ தென்று சொல்வார்களே... அதுபோல அவளைத் தேவை யில்லாமல் குழப்புவதாக தோன்றியது.

"நீ பாத்துக்கிட்டே இருடா... உன்னை விடவும் இளமதியை அவங்களுக்குப் பிடிக்கப்போவுது"என்றான் சின்னசாமி.

அதற்கு சிம்மேந்திரன் பதில் ஏதும் சொல்லவில்லை. ஸ்டீரியங்கை இரு கைகள்ால் பிடித்துக் கொண்டு லேசாகத் தோளைக் குலுக்கினான்., எனக்கென்ன அதைப்பற்றி என்பதைப் போல.



இளமதி முகத்தில் லேசாக வாட்டம் தோன்றியது. இந்த சிம்மேந்திரனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லையோ... இவனுக்கு மேலிடத்துப் பெண்கள் பற்றி ஏதோ ஒரு வெறுப்பு இருக்கிறதோ... வசதியான பெண்கள் எல்லாம் உழைக்க மாட்டார்கள். வளைந்து கொடுக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறானோ... என்ற எண்ணம் மெதுவாக அவளுக்குள்ளே தோன்றியது.

அப்படியெல்லாம் நினைப்பதற்கு யார் இவருக்குச் சுதந்திரம் கொடுத்தார்கள் என்ற கோபமும் தோன்றியது. உடனே அவளுடைய அறிவு அவளுக்குச் சொல்லியது. இளமதி ஒரு அலுவலகம் என்று வந்தால் இப்படித் தான் எத்தனையோ விஷயங்கள் இருக்கும். இதையெல்லாம் சமாளித்து இதே சிம்மேந்திரன், "நீங்க ரொம்ப நல்லா வேலை செய்யறீங்க, மேடம்"என்றோ அல்லது அவனுக் கெல்லாம் அவளைப் பிடிக்கிறது என்றோ சொல்ல வைக்க வேண்டும். இதைத் தான் சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டும்"என்று எண்ணிக்கொண்டாள்.

அவள் முகத்தில் தீவிர சிந்தனை தோன்றுவதையும், முகபாவங்கள் மாறுவதையும், கடைசியில் அவள் தெளிவாக முடிவு எடுப்பதையும் அவள் முகம் கண்ணாடியில் தெரிகிற பிம்பத்தை போலக் காட்டுகிறது என்பது அப்போது அவளுக்கு புரியவில்லை.

சிம்மேந்திரன், ஆனால்... தன் முன்னால் இருக்கிற கண்ணாடியில் இருந்து அவளைக் கவனித்துக் கொண்டிருக் கிறான் என்பதையும், அவளுடைய முகபாவங்கள் முழு வதையும் அவன் ஆராய்பவன் போல பார்த்து விட்டு இதழிடையே ஒரு இகழ்ச்சிச் சிரிப்பொன்றை வைத்துக் கொண்டு காரோட்டுகிறான் என்பதையும் அவள் கவனிக்க வில்லை. சின்னசாமி, இரண்டையுமே கவனித்தான்.

அவன் இதழ்களில் ஒரு குறும்புப் புன்னகை ஓடியது.

ஒரு பெரிய திரைப்படக் கதையே தனக்கு முன்னால் விரியப்போகிறது என்பது போல ஒரு எண்ணம் தோன்ற ஒரு சுவாரஸ்யம் அவனுடைய முகத்திலே தோன்றியது.

★ ★ ★

## அத்தியாயம் 10

"இந்தாய்யா... உனக்கு இதே வேலையாப் போச்சு... நான் பாடுபட்டு சம்பாதிச்சுட்டு வர்றது. நீ அதை அப்படியே கொண்டுபோய் டாஸ்மாக்லே கொண்டு விடறது. இதுக்குத் தான் என்னை எங்க அப்பா அம்மா பெத்து போட்டிருக்காங்களா?"என்று கத்திக் கொண்டிருந்தாள் சிவப்பாயி.

"இந்தா புள்ளை... நிறுத்து. என்னமோ நீ தான் உலகமகா தியாகி மாதிரியும் நான் என்னமோ கஷ்டப்படுத்திகிட்டு இருக்கிற மாதிரியும் சத்தம் போட்டுக்கிட்டிருக்கே... நானும் தான் புள்ள கஷ்டப்பட்டுக் கொண்டாறேன்..."என்றான் முத்துச்சாமி.

"நிறுத்து நிறுத்து... என்ன நீ கஷ்டப்பட்டு கொண்டார்றே...? வாரத்துக்கு மூணு நாள் வேலைக்குப் போறே... மீதி நாலு நாள் கை வலிக்குது... கால் வலிக்குதுன்னு படுத்துக்கறே... அந்த மூணு நாள் கூலியை வாங்கி அதுல ரெண்டு நாளு வெட்டியா செலவு பண்ணிட்டு ஒரு நாளைக்கு ஏதோ மீனும், கறியுமா வாங்கி வந்து குடுத்துட்டு நானும் தான் ஆக்கிப்போடுறேன்... நானும் தான் செய்யறேன்னு சொல்றே. நீ அந்த ஒரு நாள் கூலியையும் கொடுக்க வேண்டாம். நானும் உனக்கு சோறு போட வேண்டாம். நாளையில இருந்து பாரு. காலையில சாப்பாடு ஆக்கி நானும் எடுத்துட்டு... பையனுக்கு குடுத்தனுப்பிச்சுட்டு சட்டியைக் கவிழ்த்து வச்சுட்டுப் போறேன் பாரு. அப்ப தான் உனக்குப் புத்தி வரும்"என்று சொன்னாள் சிவப்பாயி.



"கவுத்து வச்சுட்டுப் போ. நல்லதாப் போச்சு. முதலுக்கே மோசம் வந்துரும். எனக்கென்ன... இந்த வீடு இல்லாட்டி இன்னொரு வீடு"என்றான் முத்துச்சாமி.

சிவப்பாயியின் கண்களில் உண்மையிலேயே சிவப்பேறியது.

"ஓகோ! அப்படி வேற உனக்கு ஐடியா இருக்குதா? ஒரு பொண்டாட்டிக்கும் ஒரு புள்ளைக்குமே சோறு போட வழியைக் காணோம். இதுல இன்னொண்ணு வேற கேட்குதா உனக்கு? அப்படி எவளாவது வரட்டும். பேசிக்கிறேன். உங்கிட்டப் பேசமாட்டேன்ய்யா... அவளை வகிர்ந்துருவேன்"என்று சீறினாள்.

முத்துச்சாமிக்கு கோபத்தை மீறிச் சிரிப்பு வந்தது.

"என்ன புள்ளே... கோவிச்சுக்கறே... சரிசரி... வுடுவுடு... இந்தா பாரு... இன்னைக்கு சாயந்தரம் கண்டிப்பா நான் கறியும் மீனும் வாங்கிட்டு வர்றேன். எனக்கு இப்போதைக்கு ஒரு ஐம்பது ரூபா கொடுப்பியாம்... ஒரு நூறு ரூபாய்..".என்று ஆரம்பித்தான்.

"பத்து பைசா கிடையாது, கிளம்பு"என்றாள் சிவப்பாயி.

இத்தனை நாடகமும் நடந்து கொண்டிருக்கையில், சிம்மேந்திரனும், இளமதியும் அந்த சின்ன ஓட்டுக் கட்டடத்தின் ஒரு ஓரத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந் தார்கள்.

சிம்மேந்திரன் முகத்தில் லேசான ஒரு சிரிப்புடன் திரும்பி இளமதியைப் பார்த்தான்.

இளமதி கொஞ்சம் அதிர்ந்து போய் இருந்தாள்.

கல்லூரியில் படிக்கிற காலங்களில் எப்போதாவது சமூக சேவை என்று இதுமாதிரி மக்கள் கூட்டம் அடர்ந்த பகுதிகளுக்கு... குடிசைப் பகுதிகளுக்குச் செல்வார்கள்.

அந்த மாதிரி நேரங்களில் பெரும்பாலும் அரை மணி நேரம், ஒரு மணி நேரம் இருந்து விட்டு வருவார்கள். இருநூறுக்கு மதிப்பெண், நூறுக்கு மதிப்பெண் என்று வாங்குவதில் மட்டும் தான் அவர்கள் ப்ராஜெக்ட் என்று சொல்வார்களே... அந்தத் திட்டங்களில் கவனம் செலுத்தினார்கள்.

ஆனால் இப்போது நேரடியாக ஒரு வீட்டினுள்ளே நடைபெறுகிற சண்டையைக் கேட்கையில் அவளுக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது.

''சினிமாவில பார்த்ததில்லை...?''என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

''சில சினிமாக்களில் இதுபோன்ற காட்சிகளைப் பார்த்திருக்கிறாள் தான் இளமதி. என்றாலும் நேரில் அதைப் பார்க்கும்பொழுது சினிமாவில் இருக்கிற காட்சிப்படுத்துதல் இருக்காமல் நேரடியான இந்த காட்சிப்படுத்தலில் இருந்த ஒரு அலங்கோலத் தன்மை வெட்டவெளிச்சமாக அவளுக்குப் புரிந்தது.

சிவப்பாயி மறுபடியும் ''வேண்டாய்யா... முதல்ல... மிஞ்சுவே... அப்புறம் கெஞ்சுவே... உனக்கு இதே வேலையாப் போச்சு. இன்னைக்குப் பத்து பைசா கிடையாது. நான் குழுவுக்கு கட்றதுக்காக பணம் எடுத்து வச்சுருக்கேன். சிம்மேந்திரன் ஐயா வருவாரு. மரியாதையாக் கிளம்பு'' என்றாள்.

''ஓகோ! சிம்மேந்திரன்...' அந்த ஆளு வேற வந்துருவாரா? அந்த ஆளு இந்த ஏரியாவுக்கு வந்ததுனாலத் தான் உங்களுக்கெல்லாம் துளுத்திருச்சு''என்றான் முத்துசாமி.

''சரி, அப்படித்தான் வச்சுக்கோ. நாங்க என்ன துளிர்த்துப் போய் உன்னைப் போல வெட்டியா ஆடிட்டா இருக்கோம். உருப்படி தான் பண்றோம். பாரு, இந்தக் கூரை எப்படி



இருந்தது. அந்தப் பணத்தை வாங்கித்தான் எல்லாத்தையும் சரி பண்ணினேன்''என்றாள்.

''சரி, சரி... ஆரம்பிச்சுடாதே. உன்னோட பைசாவும் வேண்டாம். இந்தப் பாட்டும் வேண்டாம். நான் கிளம் பறேன்'' என்று வெளியே வந்த முத்துசாமி எதிரிலே சிம்மேந் திரன் நிற்பதைக் கண்டு... அசடு வழிந்தபடி,''வாங்க சார்'' என்றான்.

பக்கத்திலேயே ஒரு இளம்பெண் நிற்பதைப் பார்த்தவுடன்... இன்னும் கொஞ்சம் அசடு வழிந்தான். என்ன இருந்தாலும் ஒரு இளம் பெண் எதிரே நிற்கையில் நாகரீகத் தன்மை வந்து விடுமில்லையா?

''வாங்கம்மா...''என்று வணக்கம் சொன்னான்.

இதைக் கேட்டவுடன் சிவப்பாயி உள்ளே இருந்த வேகமாக வெளியே வந்தாள்.

''வந்துட்டீங்களா... ய்யா... நல்லவேளையா வந்திங்க. இல்ல... இன்னைக்கு அப்படி இப்படின்னு நான் சேத்து வச்சுருக்கிற ஐநூறு ரூபாய்க்கு இந்த ஐயா வேட்டு வச்சிருப்பாரு''என்று புகார் சொன்னாள்உரிமையாக.

''ஏன், முத்துசாமி! ஏன் இப்படிப் பண்றீங்க?'' என்று ஆரம்பித்தான்.

'ஐயோ, தம்பி. நீங்க ஆரம்பிக்காதீங்க. இப்ப தான் இவகிட்ட வேட்டு வாங்கிட்டு வந்திருக்கேன்''என்று நெளிந்தான் முத்துசாமி.

''அதுதான் கேட்கிறேன். ஏன் அவங்கெல்லாம் பேசற மாதிரி நீங்க வச்சுக்கிறீங்க. நீங்க நினைச்சா ஆயிரம் என்ன...? வாரத்துக்கு இரண்டாயிரம் கூட சம்பாதிக்க முடியும். நீங்களும் பேசாம குழுவில சேருங்க. இப்ப ஆண்களுக்காகக் கூட மெம்பர் ஷிப் ஆரம்பிக்கிறோம்''என்றான் சிம்மேந் திரன்.

என்று அவன் நெளிந்தான்...

"நீங்க வேற தம்பி..."

"என்ன வேற தம்பி. நல்லா நினைச்சுப் பாருங்க. இன்னைக்கு குழந்தைக்கு பத்து வயசு... நாளைக்கு அவன் ஒரு இன்ஜினியரோ... டாக்டரோ ஆக வேண்டாமா? இல்ல..வேறே ஏதாவது நல்ல வேலைக்குப் போக வேண்டாமா? என்று கேட்டான் சிம்மேந்திரன்.

உடனே சிவப்பாயியின் முகம் மலர்ந்தது. அவள் முகத்திலே சிரிப்பு. "இன்ஜினீயர்... டாக்டரா..."என்றாள்.

"ஆமாம், சிவப்பாயி... ஏன் உன் குழந்தை படிக்கக் கூடாதுன்னு ஏதாவது இருக்குதா? "என்றான் சிம்மேந்திரன்.

"நல்லாச் சொல்லுங்க"என்றாள் சிவப்பாயி.

என்ன இருந்தாலும் முத்துச்சாமிக்கு தன் மகன் மேல் ஒரு பிரியம் இருக்கத் தானே செய்யும். இருந்தது.

"அப்படியா... பெரிய காலேஜ் படிப்புக்கு என் மகனை அனுப்ப முடியுமா?"என்று கேட்டான்.

"நீ வேறப்பா... இப்ப கவர்ன்மென்ட்டுல நிறைய சலுகையெல்லாம் கொடுக்கறாங்க. பணமே கட்ட வேண்டியதில்லை. ஸ்காலர்ஷிப் இருக்குது. போக்குவரத்துச் செலவுக்குக் கூட பாஸ் குடுத்திடறாங்க. லேப்டாப் குடுக்கப் போறாங்களாம். இன்னும் என்னப்பா வேணும்"என்றான் சிம்மேந்திரன்.

"அப்படிங்களா... என் பையன் நல்லாப் படிக்கிறானுங்க. வகுப்பிலேயே முதலா வர்றான்"என்றான் பெருமையாக.

"அப்புறம் அப்படியொரு பையன் கிடைச்சிருக்கான்ல. நீ சந்தோஷப்படனும்ல... அவனை ஊக்குவிக்கனும்ல..." என்றான்.

"ஆமாங்க. கண்டிப்பா..."

"சரி விடு. நான் ஒரு கேள்வி கேட்கிறேன். இப்ப பத்து வயசு. இன்னொரு நாலு வருஷம் போகட்டும். இளவட்டம்



ஆயிருவான். அன்னைக்கு உன் சட்டையப் புடிச்சு, நீ என்னய்யா எனக்குச் செஞ்சிருக்கே. அம்மா சம்பாதிச்சதையும் வாங்கித் தண்ணி போட்டே. உன்னால எனக்கு என்ன பிரயோஜனம்... அப்படீன்னு கேட்டா நீ என்ன சொல்லுவே?"என்றான்.

முத்துச்சாமி லேசாக... கொஞ்சம் தெளிவது போல... யோசிப்பது போல நின்று கொண்டிருந்தான்.

"அதை விடு. ஒரு பையன் ஒரு மீட்டிங்ல சொன்னான். நான் சொல்ற கதையை நல்லாக் கேளு"என்றான் சிம்மேந்திரன்.

"சொல்லுங்க தம்பி"என்றான் முத்துச்சாமி.

"ஒரு பையன் ரொம்ப கெட்டிக்காரன். நல்லா படிச்சு. நல்லா மேலுக்கு வந்தான். ஒரு பெரிய வேலைக்குப் போனான். அது மட்டுமில்ல... போன வேலையில... எதையோ ரொம்ப நல்லா பண்ணி அதுக்கு அவனுக்கு ஒரு அவார்டு கூட கிடைச்சுது".

"அவார்டுன்னா...?"என்றான் முத்துச்சாமி.

"பரிசுன்னு வச்சுக்குங்களேன்"என்றான் சிம்மேந்திரன்.

"அந்த பரிசு கிடைச்சப்ப... பத்திரிகைகாரங்க எல்லாம் கேட்டாங்க. அதுக்கு அவன் சொன்னான். இதுக்கெல்லாம் காரணம் எங்க அப்பா தான்"என்றான்.

"அப்படியா...?"

"ஆமாம். ஒரு அப்பா... எப்படியெல்லாம் இருக்கக் கூடாது அப்படீன்னு எங்கப்பா மூலம் தெரிஞ்சுகிட்டேன். அதனால இவர் மாதிரி இருக்கக்கூடாது. நாம நல்லா வரனும் அப்படீன்னு பாடுபட்டு படிச்சேன். இந்த நிலைமைக்கு வந்தேன் அப்படீன்னு சொன்னான்.

"அப்போ அந்த அப்பனுக்கு எப்படி இருந்துருக்கும்?" என்று கேட்டான் சிம்மேந்திரன்.

முத்துச்சாமி முகத்தில் பளீரென்று அறைந்தாற்போல ஒரு உணர்வு தோன்றியது.

''யோசிச்சுப் பாரு. உம்பையன் நாளைக்கு அப்படிச் சொன்னான்னு வச்சுக்கோ. உனக்கு எப்படி இருக்கும்?'' என்று கேட்டான்.

முத்துச்சாமி முகத்தில் வீசி எதையோ அடித்தாற்போல என்பார்களே அதுபோல அதிர்ந்து போய் நின்றான்.

''அதுக்குத் தான் சொல்றேன். நம்ம வாழ்க்கையை நல்லபடியா நடத்தணும். நம்மால உதவி செய்ய முடியலைன்னாலும் கூட உபத்திரவம் செய்யாமல் இருக்கணும். நீ பாவம், அந்த அம்மா கஷ்டப்பட்டு கூலி வேலை செய்து சம்பாதிச்சு கொண்டு வர்ற காசை பிடுங்கிட்டுப் போனா... என்ன முத்துச்சாமி நியாயம்?''என்று கேட்டான் சிம்மேந்திரன்.

''நியாமில்லை தான்'' என்றான் முத்துச்சாமி.

''சரி. நீங்க கிளம்புங்க''என்றான்.

''சரிங்க தம்பி. நான் வர்றேன்...'' என்று விட்டால் போதும் என்பது போல முத்துச்சாமி ஓடினான்.

ஓடினாலும் கூட அவன் முகத்தில் ஒரு சிந்தனை தோன்றியது.

சிவப்பாயி, சிம்மேந்திரனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''ஏனுங்கய்யா... எப்படி இது உங்களுக்குப் புரிஞ்சுது'' என்று கேட்டாள்.

''எது?''என்றான் சிம்மேந்திரன்.

''இல்லை. எங்க வூட்டுக்காரருக்கு... என்னதான் இருந்தாலும் மகன் மேல ஒரு பாசம் இருக்குது. அதனால அந்தப் பாயின்டை எப்படிப் புடிச்சிங்க''என்று கேட்டாள்.

''அதெல்லாம் கேட்கக்கூடாதுல்ல. அது நம்ம தொழில் ரகசியம் சிவப்பாயி. அக்கம்பக்கம் எல்லாம் விசாரிச்சேன்.



முத்துச்சாமியோட வீக் பாயின்ட் எதுன்னு? முத்துச்சாமியோட வீக் பாயின்ட் மகன் தான்னு சொன்னாங்க. அங்க தொட்டுருக்கேன். இது மாதிரி ரெண்டு மூணு தடவை வேப்பிலை அடிச்சோம்னு வையி; ஐயா திருந்திருவாரு. சாமியாடறதை நிறுத்திடுவாரு''என்றான்.

சிவப்பாயி கன்னத்தில் கை வைத்துக் கொண்டு அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''நிசமாங்கய்யா... உங்களுக்கும் எங்களுக்கும் எந்தப் பிறவித் தொடுப்போ... இப்படி நீங்க வந்து எங்க எல்லாருக்கும் நல்லது செஞ்சிக்கிட்டு இருக்கிங்க''என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

இத்தனையையும் இளமதி ஒரு பார்வையாளராகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்திலே என்னென்னவோ உணர்ச்சிகள் தோன்றின. என்றாலும் அதையெல்லாம் முகத்தில் காட்டிக் கொள்ளாமல் அப்படியே அமைதியாக நின்று கொண்டிருந்தாள்.

''ஆமாம், சிவப்பாயி. இன்னொரு விஷயம் தெரியுமா, இப்ப ரீசன்டா ஒரு ஆராய்ச்சி பண்ணியிருக்காங்க. அந்த ஆராய்ச்சியில என்ன சொல்றாங்கன்னா... இந்தியாவில... எதிர்காலத்துல... நிறைய சாவுகள் மதுப் பழக்கத்தினால தான் வரப்போவுது... அப்படீன்னு சொல்றாங்க. அதனால... ஏதோ எங்களால முடிஞ்ச பங்கு... பத்து குடும்பத்தை தேத்தி விடலாம்ல... அதனால தான் செய்யறோம்''என்றான் சிம்மேந்திரன்.

''ரொம்ப நன்றிங்க ஐயா. ஆண்டவன் உங்களுக்கு நூறாயுசு... நல்ல வாழ்க்கையைக் குடுக்கணும்''என்று உண்மையாகவே... ஆத்மார்த்தமாக பிரார்த்தனை செய்பவள் போல... ஆசீர்வதிப்பவள் போல சொன்னாள் சிவப்பாயி.

"நல்லா ஆசிர்வாதம் செய் சிவப்பாயி. இந்த சின்னப் பயலை நல்லா ஆசிர்வாதம் பண்ணு"என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

சிவப்பாயி, "ஐயோ சின்னப் பயலா நீங்க... பெரியாளுங்க நீங்க..." என்று லேசாக வெட்கப்பட்டுக் கொண்டே அவளும் சிரித்தாள்.

இந்த நாடகத்தை இளமதி மிகவும் ரசித்தாள்.

"ஆனா... இன்னொரு விஷயம் இருக்குது"என்றான் சிம்மேந்திரன்.

"சொல்லுங்கய்யா..." என்றாள் சிவப்பாயி.

"நாங்க ஒண்ணும் சும்மா செய்யலை... எங்களுக்கும் இதுல பலன் இருக்கு" என்றான்.

அப்போது சிவப்பாயி சொன்னாள். "நல்லா சொன்னீங் கய்யா... நல்லா சொன்னீங்க. இருக்கட்டும்... அதனால என்ன தப்பு? எங்களுக்கும் உதவி செஞ்சு நீங்களும் நல்லதை சம்பாதிச்சுக்கிறீங்க. அடுத்தவனை கெடுத்துப் பிழைக்கக் கூடாதுங்க. நீங்க என்ன கொலை பண்றீங்களா... கொள்ளையடிக்கிறீங்களா... என்ன பண்றீங்க... எங்களுக்கு உதவி செய்யறீங்க. நாங்க நாணயமா இருக்கிறோம். எங்களையும் கரையேத்தி விடறீங்க. நீங்களும் நல்லாயிருக் கீங்க" என்றாள்.

"கேட்டுக்குங்க மேடம்..."என்று திரும்பி இளமதியைப் பார்த்துச் சிரித்தான்.

இளமதி புன்னகைத்தாள்.

"அம்மா... யாருங்க...?" என்று சிவப்பாயி இழுக்க....

"இவங்க... நம்ம கம்பெனி முதலாளிகள்ல மாணிக்கவேல் முதலாளின்னு பெரியவங்க. அவங்க பொண்ணு. இவங்களும் ஒன் ஆப் தி பார்ட்னர்ஸ்"என்றான்.

"அப்படீன்னா...,"என்றாள் சிவப்பாயி.



"நம்ம கம்பெனியில நாலைந்து முதலாளிகள்ல இவங்களும் ஒருத்தரு"என்றான் சிம்மேந்திரன்.

"முதலாளி அம்மாங்களா...? அம்மா! வணக்சம்மா. உட்காருங்கம்மா... என்று அவள் அங்கேயும், இங்கேயும் தேடினாள்.

அவள் வீட்டில் ஒரே ஒரு சேர் இருந்தது. அந்த ஸ்டீல் சேரை எடுத்துக் கொண்டு வந்து போட்டாள்.

"உட்காருங்க. உட்காருங்க. என்ன குடிக்கிறீங்க? தண்ணி குடிக்கிறீங்களா? இல்ல டீ வாங்கிட்டு வரட்டுங்களா? கலர்... கலரு... கலர் வாங்கிட்டு வரட்டுங்களா?"என்று பரபரப் பானாள் சிவப்பாயி.

சிம்மேந்திரன் சிரித்தான்.

"சிவப்பாயி இது கொஞ்சங்கூட நியாயமில்லை" என்றான்.

"ஏனுங்கய்யா..." என்று அவள் கேட்க, "இல்ல இத்தனை நாளா நான் வந்துகிட்டு இருக்கிறேன். எனக்கு இல்லாத உபசரிப்பு... இவங்களுக்கு..."என்றான்.

"ஐயோ... படியளக்கிற சாமியில்லைங்க..."என்றாள் சிவப்பாயி.

"அவங்க படியளக்கிறாங்க. நாங்க என்ன பண்றோமாம்..." என்று கேட்டான் சிம்மேந்திரன்.

உடனே பட்டென்று சிவப்பாயி, "அவங்க படி அளந் தாலும் அதை எடுத்துக் குடுக்கிறது நீங்க தானே"என்றாள்.

கலகலவென்று சிரித்தான் சிம்மேந்திரன்.

"சிவப்பாயி, உண்மையில் நீ பிரில்லியண்ட் தான். முத்துச் சாமிக்குத் தான் அதைப் புரிஞ்சுக்க முடியல"என்றான்.

சிவப்பாயி, "ப்ரிலியன்ட்ன்னா...?"என்றாள்.

"இல்ல ரொம்ப புத்திசாலின்னு அர்த்தம்"என்றான்.

சிவப்பாயி வெட்கப்பட்டதைப் பார்க்க அழகாக இருந்தது.

விளையாட்டுப் போல பேசிக்கொண்டே இவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வருகிறான் என்பதைப் பார்க்கப்பார்க்க... இளமதிக்கு கொஞ்சம் ஆச்சரியமாகவே இருந்தது.

திரும்பி வரும்பொழுது சிம்மேந்திரன் அவளிடம் மனம்விட்டுப் பேசினான்.

"இளமதி மேடம்! நீங்க இருக்கிற உலகம் வேறே. இந்த உலகம் வேறே. இங்க வந்து பாத்தீங்கன்னா... எத்தனை விஷயங்கள் இருக்கு தெரியுமா? வாழ்க்கை எவ்வளவு கடினமானது அப்படீங்கறதை இவங்களைப் பார்த்துப் புரிஞ்சுக்கலாம். ஆனா அத்தனை கஷ்டத்தையும், கடினத் தன்மையையும் இவங்க ஒரே ஒரு ஆயுதத்தை வச்சுகிட்டுத் தான் ஜெயிக்கிறாங்க"என்றான்.

அவள் ஆழ்ந்து மௌனமாகக் கேட்டுக் கொண்டாள். ஏனென்றால் சிம்மேந்திரன் உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறான் என்பது அவளுக்குத் தெரிந்தது.

இடையில் குறுக்கிட்டு அந்த உணர்ச்சிமயமான சிந்தனை ஓட்டத்தை கலைக்க வேண்டாம் என்பது போல அவளும் கனவில் இருப்பது போல அவனைப் பார்த்தாள்.

"ஒரே ஒரு ஆயுதங்க..."என்றான் சிம்மேந்திரன்.

அவள் மௌனமாகவே இருந்தாள்.

"உழைப்பு. இந்த உழைப்பு அப்படீங்கற ஒரே ஒரு ஆயுதத்தை வச்சுகிட்டுத்தான் பெண்களெல்லாம் ஜெயிக்கிறாங்க. வீட்டுக்காக உழைக்கிறாங்க... குடும்பத்துக்காக உழைக்கிறாங்க. விட்டுக் குடுக்கிறாங்க... ஆனா... சிவப்பாயி மாதிரி பெண்கள் தங்களைப்பத்தி அவங்க நினைக்கிறதே இல்ல, இளமதி "என்றான்.


அவள் மௌனமாகத் தலையாட்டிக் கொண்டாள்.

அப்போது தான் அவள் மனத்துக்குள் அந்த எண்ணம் ஓடியது. இறைவன் தன்னை எவ்வளவு உயரமான இடத்தில் வைத்திருக்கிறான். எத்தனை வசதிகளைக் கொடுத்திருக் கிறான், என்று!

அதே எண்ணத்தைப் பிரதிபலிப்பவன் போல சிம்மேந் திரன் சொன்னான். "இறைவன் உங்களுக்கெல்லாம்... நமக்கெல்லாம் எத்தனையையோ கொடுத்திருக்கிறான். அதுல வந்து... நாமே அனுபவிக்கிறதைக் காட்டிலும் ஒரு சிறு பங்கு... ஒரு பெரிய திருப்பதி லட்டுல... ஒரு சின்ன பங்கு கிள்ளிக் கொடுக்கிற மாதிரி இவங்களுக்கும் கிள்ளிக் கொடுத்தால் அவங்க வாழ்க்கையும் மேலே வராதா?"என்று கேட்டான்.

இளமதி உணர்ச்சி வயப்பட்டவளாக மேலும் கீழும் தலையாட்டினாள்.

"அதைத் தான் நாம செய்யறோம், இளமதி மேடம். நம்ம கம்பெனியைப் பொறுத்தவரைக்கும் இந்த வேலை ஏன் எனக்குப் பிடிச்சுருக்குன்னா இந்த ஃபீல்டு ஓர்க்குக்காகத் தான்" என்றான்.

அப்போது இளமதி சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காக, "ஏங்க சிம்மேந்திரன் சார், ஒருவேளை இந்த டிபார்ட்மென்டில் இருந்து மாற்றினால்..."என்றாள்.

"அடுத்த நிமிடம் ஐயா ரிசைன் பண்ணிருவாருல்ல"என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

இளமதி திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

"ஆமாங்க. இந்த அக்கௌவுண்ட்ஸ், மேனேஜ் மென்ட்... இதெல்லாம் நமக்கு வேண்டாம். இப்படி மனிதர் களோடு உறவாடி அவங்களுக்கு செய்யக்கூடிய உதவி களுக்கு இந்த வேலையில வாய்ப்பு இருக்கு... அப்படீங் கறதுல தான் நான்

பேராசிரியர் வேலையையே விட்டுட்டு இதுக்கு என்னோட வந்திருக்கேன்'' என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

''என்னங்க... என்னமோ வேற்றுக்கிரகத்து பிறவியைப் பார்க்கிற மாதிரி பார்க்கறீங்க. மனுஷந்தானுங்க நானு'' என்றான்.

''ஆமாங்க. நீங்க உண்மையிலேயே மனுஷன்தான்'' என்றாள் இளமதி மெல்லிய குரலில்.

''அப்படிப் போடுங்க. இன்னைக்குத் தான் நம்ம கம்பெனியில இருந்து பெரியதொரு அவார்டு கிடைச்ச மாதிரி இருக்கு''என்று அவன் உண்மையிலேயே மகிழ்ச்சி யாகிப் போனான்.

அந்த மகிழ்ச்சியை உள்வாங்கிக் கொள்வதிலும், அதை அனுபவிப்பதிலும் ஏதோ ஒருவிதமான சுகம் தன் மனதுக் குள்ளே பொங்கிப் பிரவாகிப்பதைப் போல உணர்ந்தாள் இளமதி.

ஏனோ சிம்மேந்திரன், அவள் முகபாவத்தைப் பார்த்த பிறகு மேற்கொண்டு பேசாமல் அமைதியாகவே காரை ஓட்டினான்.

கார் வழுக்கிக் கொண்டு ஓடியது.

★ ★ ★

## அத்தியாயம் 11

கருணாகரனுக்குச் சிரிப்பாக வந்தது.

தன்னைக் குறித்து ஆச்சரியமாக இருந்தது. யாருக்காகவும் போய் எந்த நேரத்திலும் அவன் இப்படியெல்லாம் பரிசுகள் எல்லாம் தேடித்தேடி வாங்கியதில்லை. அதுவும் பெண் களுக்கு எது பிடிக்கும் என்று யோசித்து அதிலும் இளமதிக்கு என்ன பிடிக்கும் என யோசித்து அதற்காக நேரம் செலவு



செய்து தான் போய் பரிசு வாங்கியது குறித்து அவனுக்கு ஒரே ஆச்சரியம்.

இளமதிக்கு அடுத்த வாரம் பிறந்தநாள் வருகிறது என்று பேச்சுவாக்கிலே அவனுடைய தந்தை சொன்னார். சொன்னதை மனதிலே குறித்து வைத்துக் கொண்டு அதற்கு பிறகு இரண்டு நாட்களில் அவளுக்காக நகைக்கடைக்குப் போனான்.

தங்கத்திலேயே ஏதாவது வாங்கலாமா? என்று யோசித் தான். அது கொஞ்சம் அதிகமாக இருக்குமே, அதுவும் இப்போது விற்கிற விலையில்... எதற்காக இவ்வளவு விலையில் விலை உயர்ந்த பரிசு... என்று இளமதி யோசித் தால் என்ன செய்வது?... ஒருவேளை இப்படி காஸ்ட்லியான பரிசெல்லாம் வேண்டாம் என்று மறுத்துவிட்டால் என்ன செய்வது?... இவ்வளவு நாள் பழகியதில் இளமதியைப் பற்றி ஒரு விஷயம் தெரிந்திருந்தது.

கொஞ்சம் சுயமரியாதைக்காரியாக இருந்தாள். சட்டென்று யாராவது ஏதாவது கொடுத்தால் ஆகா... கிடைத்தது என்பது போல வாங்கிக் கொள்கிறவளாக அவள் இல்லை. அவளுக் கென்று சில கொள்கைகள் இருந்தன.அதனால் தான்..பரிசு என்ன வாங்குவது என்று இவ்வளவு யோசித்தான்.

கடைசியில் ஒருவழியாக கொலுசு ஒன்றைத் தேர்ந் தெடுத்தான். அதையும்கூட அவள் ஏற்றுக் கொள்வாளா...? என்றிருந்தது. ஆனாலும் பிறந்தநாள் அன்றைக்குக் கொடுத் தால் மறுக்க மாட்டாள் என்று தோன்றியது.

அந்த கொலுசின் விலையே ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வந்தது. எதற்காக இவ்வளவு காஸ்ட்லியாக வாங்கினீர்கள் என்று கேட்டால் அப்போது வேண்டுமானால்... இதற்கும் குறைவாக வாங்கினால் என் தகுதிக்கு சரியில்லை என்று சொல்லிவிடலாம்... எதையாவது சொல்லி சமாளித்துக்

கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு கிட்டத்தட்ட அரை மணி நேரம் அமர்ந்து கொலுசைத் தேர்ந்தெடுத்தான்.

சலங் சலங் என ஒலிக்கிற விதமாக இல்லாமல் ரொம் பவும் சிம்பிளாகவும் இல்லாமல் நடுத்தர மாக ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்குள் போதும்போதும் என்றாகி விட்டது.

ஆனாலும் ஆர்வமாக செய்தான்.

எப்போதோ ஒரு சினிமாவில் பார்த்த ஞாபகம் வந்தது. எல்லோரும் ஜவுளிக்கடையிலேயே பல் தேய்த்துக் கொண்டிருக்கவும் அதில் ஒருவர் கேட்க, நாங்கள் நேற்றைக்கு வந்தவர்கள் என்று சொல்லிச் சலித்துக் கொண்டார்களாம், வந்தவர்கள் அப்படி காத்துக்கிடப் பதைப் பற்றிய ஜோக்குகளை அவன் நிறையப் படித்து விட்டான்.

இப்போது அவனுக்குத் தோன்றியது. இந்த கொலுசைத் தேர்ந்தெடுக்க அரை மணி நேரம் ஆகிவிட்டது. ஒருவேளை இளமதி வந்திருந்தால்... எப்படித் தேர்ந்தெடுத்திருப்பாள்... என்ற யோசனை தோன்றியது.

அதை வீட்டிலே கொண்டு போய் மறைத்தாற் போல வைக்கவும் அவனுக்கு சில பிரச்னைகள் இருந்தன. அதனால் அவசியம் போல ஒரு ரெண்டு மூன்று நாட்களுக்கு ஹேண்ட் பேக் எடுத்துக் கொண்டு போவது போல ஆபீஸ்க்குக் கொண்டு போய் அதற்குப் பிறகு மூன்றாவது நாள் அந்த ஹேண்ட் பாக்கில் அந்த கொலுசை வைத்து வீட்டிலே வைத்திருந்தான்.

இளமதியின் பிறந்த நாளுக்கு இன்னும் எத்தனை நாள் இருக்கிறது? என்று எண்ணிக்கொண்டே இருந்தான்.

அந்தப் பெண்ணின் மீது தனக்கு எப்படி இப்படியொரு ஆர்வம் வந்தது என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் ஒன்றில் மட்டும் அவன் தெளிவாக இருந்தான். இளமதி குறித்த தனது உணர்வுகள் எந்த வகையைச் சார்ந்தது



என்பதை அவன் ஆராய்ந்து பார்க்க முயற்சிக்க வில்லை. அதற்கு அவன் தயாராகவும் இருக்க வில்லை.

இப்படியொரு பரிசைத் தேர்ந்தெடுத்ததற்குப் பின்பு இளமதியைப் பார்க்கும்போதெல்லாம் தன்னை அறியாமல் அவன் முகத்தில் ஒரு புன்முறுவல் தோன்றியது. கண்களில் ஒரு குறுகுறுப்பும்கூட தோன்றியது.

இளமதிக்கே அது குறித்து ஆச்சரியமாகி விட்டது. ஏதோ ஒரு வித்தியாசத்தைக் கண்டுபிடித்தவள் போல அவள் ஒருநாள் கேட்டாள். ''ஏன் கருணா! ரெண்டு மூணு நாளா என்னைப் பார்த்தால் கிண்டலா சிரிக்கிற மாதிரி இருக்கு''என்றாள்.

''ஐய்யய்யோ... அப்படியெல்லாம் இல்லைம்மா. உன்னைப் போய் நான் கிண்டலாச் சிரிப்பேனா?''என்றான்.

''என்னைப் போய் அப்படீன்னா...,''

''இல்லப்பா... நீ ரொம்ப கெட்டிக்கார பொண்ணு. உன்னைப் போய் நான் கிண்டல் செய்து சிரிப்பேனா?'' என்று எதையோ சொல்லிச் சமாளித்து விட்டு வந்து விட்டான்.

ஆனால் அதற்குப் பிறகு எச்சரிக்கையாக அந்த மாதிரிச் சிரிப்பை, குறுகுறு பார்வையை எல்லாம் தவிர்த்துக் கொண்டு விட்டான்.

கருணா இப்படியென்றால்... இன்னொரு புறத்திலே இன்னொரு கூத்தும் நடந்து கொண்டிருந்தது.

அது ஒரு புத்தகக்கடை... அங்கே...!

சக்திவேல் அந்தப் புத்தகக் கடையிலே மேலும் கீழுமாக நடந்து புத்தகங்களைப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தான். இளமதிக்குப் புத்தகங்கள் ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும், பரிசாகக் கொடுக்க வேண்டும், வேறு ஏதாவது

பரிசாகக் கொடுத்தால் அவள் வாங்கிக் கொள்வாளோ என்னமோ என்று அலைபாய்ந்து கொண்டிருந்தான்.

புத்தகக்கடை உரிமையாளரிடமே கேட்டான். "எந்த மாதிரி புத்தகங்கள் நன்றாக போகிறது", என்று!

"எல்லாவிதமான கவிதைப் புத்தகங்களும் இருக்கிறது. உங்களுக்கு எந்த மாதிரி வேண்டும்"என்று கேட்க, தன்னையும் அறியாமல் அவன், "கொஞ்சம் காதல் கவிதைகள் என்றால் நன்றாக இருக்கும்"என்றான்.

உடனே அவர், "தபு சங்கர், வைரமுத்து... என்று இரண்டு மூன்று பெயர்களை சொன்னார்.

அவன் வகைக்கொன்றாக நான்கைந்து புத்தகங்களை வாங்கி அதை பேக் செய்து கொடுக்கச் சொல்லி வாங்கிக் கொண்டான்.

சக்திவேல் இப்போதெல்லாம் கொஞ்சம் தீவிரமான யோசனையில் இருந்தான். ஒரு மாத காலம் தன்னுடைய பிரிவில் இளமதி வேலை செய்து விட்டு போனதற்குப் பிறகு... ஏனோ அவனுக்குள் ஒரு வெறுமை குடிகொண்டாற் போல இருந்தது.

இளமதி இருந்த இருக்கை, அவள் நடமாடிக் கொண்டிருந்தது... இதெல்லாம் ஒரு பத்து நாட்கள் வரை அவன் மனதிலே திரும்பத் திரும்ப ஓடி அவனை அதைப்பற்றியே சிந்திக்க வைத்தது.

இளமதியினுடைய விருப்பங்கள் என்ன? என்பதையெல்லாம் அவள் அவனுடன் வேலை செய்து கொண்டிருக்கும்பொழுதே ஓரளவுக்குக் கேட்டுக்கேட்டு வைத்திருந்தான்.

கவிதைகள் அவளுக்கு மிகவும் பிடிக்கிறது என்பது அவனுக்கு தெரிந்திருந்தது. தன்னைப் போலவே அவளுக்கும் கவிதைகள் பிடிக்கிறது என்பது அவனுக்கு ஒரு நல்ல ஒற்றுமையாகத் தோன்றியது. ஆனால் மேற்கொண்டு



இளமதியைப் பற்றி யோசிப்பதற்கு அவனுக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது.

தன்னுடைய இதயத்தில் அவளுக்கென்று ஒரு இடம் இருக்கிறது என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. அது எந்தமாதிரியான இடம் என்பது கொஞ்சம் கொஞ்சம் அவனுக்குப் புரிகிறாற்போல இருந்தது. அதை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு அவனையும் மீறிய அச்சம் அவனிடத்திலே தோன்றியது.

அன்றிரவு படுக்கையில் படுத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த மேஜை மேல் பார்சலாகக் கட்டி வைத்திருந்த அந்தப் புத்தகங்களை தொட்டுத்தொட்டுத் தடவியபடி தனக்குள்ளே புன்னகைத்துக் கொண்டான். இந்தப் புத்தகங்களைப் படித்து இளமதி என்ன புரிந்து கொள்வாள்? வெறும் கவிதைப் புத்தகங்கள், தனக்குக் கவிதை பிடிக்கும் என்பதற்காக வாங்கிக் கொடுத்திருக்கிறார் சக்திவேல் என்று நினைத்துக் கொள்வாளா அல்லது இதன் மூலமாக ஏதோ ஒரு செய்தியை சக்திவேல் சொல்லுகிறார் என்று யோசிப்பாளா? என்று அவனுக்குள் கேள்விகள் எழுந்தன.

எல்லா நேரங்களிலும் ஏதோ ஒன்று அவளை நினைவு படுத்துவதையும் இந்த நேரத்தில் இந்த இடத்தில் இளமதி இருந்தால் என்ன செய்திருப்பாள் என்ற எண்ணமும் அல்லது இளமதியிடத்தில் இதைப் பேசினால் எப்படி இருக்கும் என்பது போன்ற எண்ணங்களும் அவனுடைய மனத்திலே மாறிமாறி தோன்றிக்கொண்டிருந்தன.

கருணாகரனும், சக்திவேலும் இளமதியினுடைய பிறந்த நாளுக்காகத் தயாராகிக் கொண்டிருக்கையில் இளமதியோ... சின்னச்சாமி யிடத்தில் நேரடியாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஏங்க... சின்னு! எனக்கு நெக்ஸ்ட் வீக் பர்த் டே வருது. எனக்கு என்ன வாங்கித் தரப்போறீங்க?"என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மணி! இந்த பொண்ணுங்களுக்குப் பரிசு வாங்கிக் கொடுத்து பழக்கமே இல்லை. நம்ம வீட்லேயும் பிள்ளைங்க இல்லையா..."என்று இழுக்க... கலகலவென்று சிரித்த இளமதி, "ஏன், காலேஜ்லேயெல்லாம் கேர்ள் ப்ரண்ட்ஸ் எல்லாம் இல்லையா?"என்று கேட்டாள்.

"அந்த வம்பை வேற விலைக்கு வாங்கிக்கணும்கறி யாக்கும். நாமெல்லாம் காலேஜ்ல புள்ளப்பூச்சியாட்டம் போனோமா வந்தோமா... அப்படீன்னு போவோம், வருவோம்... அதனால் பரிசு வாங்கிக் கொடுத்து பழக்கம் இல்லையே அம்மணி. ஆனா உனக்கு வாங்கிக் குடுத்து தான் ஆகணும். நீ சொல்லு. உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

இளமதி சிரித்தாள். "சும்மா, கலாட்டாவுக்காகக் கேட்டேன் சின்னு. எனக்குத் தேவையான பொருட்கள்... ஏன் தேவைக்கு அதிகமான பொருட்கள்ள வீட்ல இருக்கு. நீங்க பரிசுன்னு ஒரு சின்ன பேனா வாங்கிக் கொடுத்தாக் கூட போதும்"என்று சொன்னாள் அவள்.

"பேனா தானே, வாங்கித் தள்ளிடறேன் பாரு. பார்க்கர் பேனா வாங்கித் தந்துடறேன் அம்மணி"என்றான் சின்ன சாமி.

"அப்ப அதை நான் ரொம்ப பாதுகாப்பா வச்சுக்கணுமே. ஐய்யய்யோ... வேண்டாம்"என்று சிரித்தாள் இளமதி.

"வுடு. வேற சின்ன கம்பெனி பேனா... ஒரு பத்து வாங்கித் தந்துடறேன்"என்று அவனும் சிரித்தான்.

இரண்டு பேருமாகச் சிரித்துக் கொண்டு நின்ற இடத்துக்கு சிம்மேந்திரன் வந்து சேர்ந்தான். சிம்மேந்திரன்... ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

"இந்திரா! என்னப்பா... என்னாச்சு?"என்று கேட்டான் சின்னசாமி.



"சின்னு... இல்லை... அந்த வீட்ல கருப்பாத்தா..ன்னு ஒரு அம்மா இருக்காங்க தெரியும்ல..."என்று கேட்டான் சிம்மேந்திரன்.

"ஆமாம். அந்த அம்மா இந்த மாசம் பணம் கொடுத்தது. ஆனா, கூடவே பாவம்... இன்னொண்ணு சொல்லுச்சு. தம்பி, இந்த ஒரு தவணை விட்டுக் கொடுக்க மாட்டீங்களா... அப்படீன்னு கேட்டுச்சு"என்றான்.

சின்னசாமியும், இளமதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மேல் கொண்டு கவனித்தார்கள்.

"ஏன்... னு கேட்டேன். தம்பி, போனவாரம் பூரா மழையாப் போச்சுல்லியா... அதனால வேலைக்கே போக முடியலை தம்பி. இதை அப்படி இப்படின்னு வீட்டுக்கு மளிகை சாமானுக்குன்னு வச்சிருந்தேன். அப்புறம் இந்தத் தவணை.,..ரெண்டு தவணை விட்டுட்டா... நீங்க அடுத்த வாட்டி லோன் குடுக்கலைன்னா நம்ம பாடு... திண்டாட்ட மாப் போயிடும். ஏதோ எதுக்கும் கேட்டுப் பாக்கலாம்னு கேட்டேன்... அப்படின்னாங்க"என்றான்.

உடனே, "நீ என்ன செஞ்சே...?"என்று கேட்டான் சின்னசாமி.

"நான் என்ன செய்யறது. என் கையில ஒரு ஐநூறு ரூபாய் இருந்தது. குடுத்துட்டு இதை வச்சுக்கோங்க... அடுத்ததுல வேணும்னா கழிச்சுக்கலாம். ஆனா கம்பெனிக்கு கட்ட வேண்டிய பணம் கட்டித்தான் ஆகணும். அப்படீன்னு சொல்லிட்டு வந்தேன்"என்றான்.

"நான் வேணும்னா ஒரு ஆயிரம் ரூபாய் தரட்டுமா?" என்று கேட்டான் சின்னசாமி.

"இல்லல்லை... வேண்டாம். ஐநூறு ரூபாய் போதும்னு சொல்லிட்டாங்க. அப்படி வேணும்னா குடுத்துக்கறேன்" என்றான் சிம்மேந்திரன்.

"ஏம்ப்...பா! எத்தனை பேருக்கு இப்படிக் கொடுக்க முடியும்?"என்று கேட்டான் சின்னசாமி.

அப்போது தான் சிம்மேந்திரன் சொன்னான். "அதான்... நாம ஏதாவது செய்யணும் சின்னு. இதுக்கு ஏதாவது திட்டம் போடலாம்"என்றான் சிம்மேந்திரன்.

"போச்சுடா... அடுத்த செலவு வச்சுட்டான் இவன்..." என்றான் சின்னசாமி.

சிம்மேந்திரன் முறைத்தான். "ஏண்டா... இதுவரை நான் வச்ச செலவுல என்ன நஷ்டமாப் போச்சு? எல்லாம் லாபமாத் தான் போச்சு, தெரியும்லே"என்றான்.

"ஐய்...யய்யோ... அதை யாரப்பா இல்லைன்னு சொன்னா..."

"நல்லா தெரிஞ்சுக்கோ. இதுவரை நான் கொடுத்த திட்டங்களிலும் அவங்களுக்கும் பலனிருக்கு-. நமக்கும் பலனிருக்கு"என்றான்.

"அது கரெக்ட்... கையைக் கடிக்காம பாத்துக்கோ..." என்றான் சின்னசாமி.

"இதப்பாருப்பா... நம்ம கம்பெனியில நான் தொடர்ந்து வேலைக்கு இருக்கிறேங்கிறதுக்கு காரணமே என்ன தெரியுமா?"

"என்ன காரணம். நான் இருக்கிறேன்... அதான்" என்றான் சின்னசாமி கெத்தாக.

"நீ இருக்கிறதுனாலேயே நான் எப்பவோ போயிருக் கணும், தெரியுமா..."எனவும் இளமதி களுக்கென்றுச் சிரித்தாள்.

ஒரு வினாடி இளமதி மீது சிம்மேந்திரனுடைய பார்வைப் பாய்ந்து... திரும்பி சின்னசாமியிடம் சென்றது. இளமதி சட்டென்று சிரிப்பதை நிறுத்திக் கொண்டாள்.



"ஆமாப்பா... உன்னோட தொல்லையையும் மீறி இந்த கம்பெனியில் வேலையில இருக்கேன்னா... அதுக்கு ஒரே ஒரு அர்த்தம் தான். காரணம் தான், என்ன தெரியுமா? நம்ம கம்பெனி அடுத்தவங்க மடியில கைவச்சு லாபத்தை எதிர்பார்க்காமல் நியாயமான லாபத்துல போயிட்டிருக்கு. உண்மையிலேயே சர்வீஸ் பண்ணுதுங்கற காரணம் தான்"என்றான்.

"அப்படிப் போடு..."என்றான் சின்னசாமி.

"அதனால தான் இதுக்கு ஏதாவது செய்யணும்னு எனக்குத் தோணுது. அவங்களுக்கும் லாபகரமாக இருக் கணும். நமக்கும் லாபகரமா இருக்கணும்"என்ற சிம்மேந் திரன் காரை எடுத்ததற்குப் பிறகும் இரண்டு மூன்று முறை அதையே சொல்லிக் கொண்டு வந்தான்.

"அட... விடப்பா... அதை விட முக்கியமான விஷயம் அடுத்தவாரம் இருக்கு"என்றான் சின்னசாமி.

"என்னது?"என்று கேட்டான் சிம்மேந்திரன்.

"இளமதிக்கு பர்த் டே...ப்பா..."என்றான் சின்னசாமி.

"ஓ!" என்று ஒரு நிமிடம் கழித்துத் தான் அதை தலைக்குள் வாங்கியவனைப்போல அவளைப் பார்த்து விட்டு, "அட்வான்ஸ் விஷஸ்..மேடம்"என்றான் சிம்மேந்திரன்.

"தேங்க்யூ... தேங்க்யூ"என்றவள், அவனுக்குத் தெரியாமல் சின்னசாமியை முறைத்தாள், இதையெல்லாம் எதற்குச் சொல்கிறீர்கள் என்பதைப் போல.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் சிம்மேந்திரன்... அதை ஏதோ ஒரு செய்தி வாக்கியம் போல காதில் வாங்கிக் கொண்டு தன்னுடைய திட்டத்திலேயே இருந்தான்.

மூன்று இளைஞர்கள் தன்னுடைய பிறந்தநாளுக்காக பெரியதாக திட்டமிட்டுக் கொண்டிருக்கையில் அதைப் பற்றி ஏதோ சுமாரான செய்தியைப் போல காதில் வாங்கிக்

கொண்ட சிம்மேந்திரனின் பிரதிபலிப்பு இளமதியின் உள்ளத்தில் ஏனோ கணை போல பாய்ந்தது.

★ ★ ★

## அத்தியாயம் 12

ஆழ்ந்த ஒரு அமைதி நிலவியது, அங்கே.

கதிரவன் மைக்ரோ ஃபைனான்ஸ் நிறுவனத்தினுடைய போர்டு ஆப் டைரக்டர்ஸ் மீட்டிங்.

ஒரு நிமிடம் தொடர்ந்த அமைதிக்குப் பிறகு மீண்டும் சலசலவென்று சத்தம் எழுந்தது.

''இதெல்லாம் நடக்கிற காரியமே இல்லைங்கறேன்'' என்று ஆதிமூலம் குரல் எழுப்பினார்.

''ஆமாம். எனக்கும் இதெல்லாம் ஓர்க்அவுட் ஆகிற மாதிரி தெரியல''என்றார் கந்தவேல்.

கருப்புசாமி அமைதியாக அமர்ந்திருந்தார்.

கருணாகரன், சக்திவேல், சின்னசாமி... என்ற இளைஞர் பட்டாளம் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

சிம்மேந்திரன் தான் கொஞ்சம் பரபரப்பாக எழுந்தான்.

''சட்டென்று நாம் இந்த முடிவுக்கு வரவேண்டியதில்லை. கொஞ்சமாவது யோசிக்கலாம்''என்றான்.

''என்னத்தைப்பா யோசிக்கச் சொல்றே... நம்ம வேலை பணத்தைக் குடுக்க வேண்டியது. வாங்க வேண்டியது. அதுல முடிஞ்ச வரைக்கும் ரிஸ்க் இல்லாம பாத்துக்க வேண்டியது. இதை விட்டுட்டு ஒவ்வொண்ணுக்கும் அகலக் கால் வச்சா சமாளிக்கிறது யாரு... இதனால நமக்கு என்ன பலன்...? சொல்லு'' என்று மறுபடியும் கிடுக்கிப் பிடி போட்டார் ஆதிமூலம்.



ஆதிமூலத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு அடுத்து கந்தவேலைப் பார்த்தான் சிம்மேந்திரன். ''நீங்க ஏதாவது சொல்றதுக்கு இருக்குங்களா''என்றான்.

''தம்பி! இதுவரைக்கும் நீ சொன்ன எந்த திட்டமும் ஃபெயிலியர் ஆயிடலை. ஆனால் இந்தத் திட்டத்தில் நாம கால் வைக்க வேண்டியது அவசியமா... அப்படீங்கறதை நீ கொஞ்சம் யோசிச்சுக்கப்பா...''என்றார்.

''சார், நான் இதுல யோசிக்கறதுக்கு ஒண்ணுமில்லை. நான் வைக்க வேண்டிய பிளானை வச்சுட்டேன். நீங்கெல்லாம் தான் யோசிச்சு முடிவு செய்யணும். வேணும்னா ஒருமுறை எல்லாருக்கும் ஓரலா விளக்கம் சொல்லிடறேன்''என்றான்.

''சொல்லு...''என்றார் ஆதிமூலம்.

''இப்போ... நம்ம கிட்ட இருக்கிறவங்களுக்கு ஏதோ பிரச்னை வர்றமாதிரியும் அந்தப் பிரச்னைக்காக நாம உதவிக்குப் போற மாதிரியும் இந்த திட்டத்தை வைக்கலை. இந்த திட்டத்தினால நமக்கும் பலனிருக்கு. ஒரு நிறுவனம்னு இருந்தா... அது வளரணும். அது நிறைய துறைகளில் கால் வைக்கணும். அதுமட்டுமில்லை... அப்படிப் பல துறைகள்ல கால் வச்சாத்தான் ஒண்ணு இல்லைன்னாக் கூட இன்னொண்ணு நாளைக்கு கை கொடுக்கும். நம்பர் ஒன் பாயின்ட்.

இரண்டாவது இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரைக்கும் நிறைய பங்குதாரர்கள் இருக்கிறீங்க. அடுத்த தலைமுறை ஆட்களும் நிறைய இருக்காங்க. அதனால ஒரே ஒரு நிறுவனத்தை ஏழு பேர்... எட்டு பேர் கட்டிக் காத்துட்டு இருக்கிறதை விட ஒவ்வொரு வகையில நாம பல்கிப் பெருகினோம்னா... ஒவ்வொரு துறையை ஒவ்வொருத்தர் பார்த்துக்கிறதுக்கு வசதியாக இருக்கும். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க''என்றான்.

முதலில் அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஆதிமூலம், மெதுவாகக் கவனிக்க ஆரம்பித்தார். கந்தவேலும் பெரிய ஆர்வமில்லாதவர் போலவும் ஆனால் அதில் ஒன்றும் வெறுப்புமில்லை என்பது போலவும் இருந்தவர் இப்போது அவரும் கவனிக்க ஆரம்பித்தார்.

அவர்கள் இரண்டு பேரையும் பார்த்து சிம்மேந்திரன், தனக்குள்ளாகச் சிரித்துக் கொண்டு தனது பார்வையை கருப்புசாமியிடம் திருப்பினான்.

"இப்ப நீ சொல்றது தாம்ப்... பா கன் திட்டம்" என்பது போன்ற பார்வை அவருடைய கண்களில் தெரிந்தது. சிம்மேந்திரனின் முகம் மலர்ந்தது.

இளைஞர்களின் பக்கம் பார்வையைத் திருப்பினான். அவர்களெல்லாம் கொஞ்சம் அழுத்தமாகவே அமர்ந்திருந் தார்கள். அதிலம் கருணாகரன் முகத்தில் இருந்து எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை.

இது அத்தனையும் ஒரு கணத்திலே நிகழ்ந்தது.

மீதமிருக்கிற பல்வேறு உறுப்பினர்களை அதுபோல அடுத் தடுத்து இருந்த அதிகாரிகளை எல்லாம் ஒரு பார்வை பார்த்து விட்டு, அவன் சொன்னான். "எப்போதுமே ஒரு நிறுவனம் ஆரம்பிக்கும்பொழுது அதற்கு மார்க்கெட் முக்கியம். ஆனா இப்ப நாம ஆரம்பிக்கப் போற திட்டத்துக்கு வந்து... மார்க் கெட் நமக்கு ரெடியா இருக்கு. இன்னொண்ணு என்ன அப்படீன்னா... நம்மகிட்ட இருக்கக்கூடிய வாடிக்கை யாளர்கள், ஒரு ஃஸேப் ஃபீலிங் கோட, நமக்கும் உதவுறதுக்கு ஆட்கள் இருக்காங்க... அப்படீங்கற ஃபீலிங்கோட இந்தத் திட்டத்திலேயும் பங்கெடுத்துப்பாங்க. இதிலே நமக்குப் பெரிய லாஸூம் வராது"என்றான்.

"எப்படி சொல்றே... வாங்கிட்டு நாளைக்கு பணம் கட்டலைன்னா...?"என்று கேட்டார் ஆதிமூலம்.



"எப்படி கட்டாமப் போவாங்க... அவங்களுடைய தொகை நம்மகிட்ட இருக்கில்ல"என்றான் சிம்மேந்திரன்.

அவனுடைய திட்டம் இதுதான். அவர்களிடத்திலே உறுப்பினராக இருக்கக் கூடியவர்களுக்கெல்லாம் ஒரு அட்டை கொடுத்து விடுவது. அந்த அட்டையில் அவர்கள் ஆயிரம் ரூபாய் வரைக்கும் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என்று ஒரு சலுகை கொடுப்பது. அவர் களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை காய்கறிகள் உள்பட விற்கிற நிறுவனங்களை எந்த ஊர்களி லெல்லாம் அவர்களுடைய வாடிக்கையாளர்கள் நிறைய இருக்கிறார் களோ அந்த ஊர்களிலெல்லாம் ஆரம்பிப்பது.

இதன் மூலமாக வேலைக்குப் போகாத நாட்களில் அவர்கள் வீட்டுக்குத் தேவையான பொருட்களை இந்த மளிகைக்கடைகளில் இருந்து வாங்கிக் கொள்ளலாம். பிறகு வேலைக்குப் போகிற நாட்களில் அந்த கடனை அடைத்துக் கொள்ளலாம்"என்பது தான் அந்தத் திட்டம்.

இது நமக்குத் தேவையில்லாத துறை என்பது ஆதி மூலத்தின் கருத்தாக இருந்தது.

வேண்டுமா, வேண்டாமா? என்ற கேள்விக்குறியோடு நின்றார் கந்தவேல்.

கண்டிப் பாகச் செய்யலாம், நல்ல திட்டம் என்ற மனநிலையில் இருந்தார் கருப்புசாமி.

இவை எல்லாவற்றையும் இளமதி ஒரு ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். உண்மையிலேயே சிம்மேந் திரனைப் பாராட்ட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

இரண்டு பக்கமும் நன்மை தரக்கூடிய ஒரு திட்டத்தை யோசனை செய்ததோடு அழகாகத் திட்டமிட்டு அதைச் செயல்படுத்துவதற்காக அவன் போராடும் விதம் அவளுக்குப் பிடித்திருந்தது.

முதன்முறையாக அந்தக்கூட்டத்தில் அவள் வாய் திறந்தாள். ''எனக்கு அனுபவம் இல்லை. ஆனாலும் என்னைப் பேசறதுக்கு அனுமதிச்சா...''என்று இழுத்தாள்.

உடனே ஆதிமூலமும் 'கந்தவேலும் ஒரு செல்லக் குழந்தையைப் பார்ப்பார்களே...' பேசுடா... பேசு, என்று கன்னத்தைப் பிடித்துக் கொஞ்சுவார்களே அதுபோல கனிந்த பார்வையுடன், ''பேசும்மா...''என்றார்கள்.

''நான் கொஞ்ச நாளா இந்த ஃபீல்டுக்கு சிம்மேந்திரனோடு போய் பார்க்கிறேன். உண்மையாகவே இந்த கீழ்மட்டத்திலே இருக்கிற மக்கள் ரொம்ப கஷ்டத்திலே தான் இருக்காங்க. ஆனா அதையும் மீறி அவர்கள் இந்தக் குழுவுக்குச் செலுத்தவேண்டிய பணத்தையெல்லாம் சரியாச் செலுத்துறாங்க. நாம கொடுக்கிற திட்டங்களையெல்லாம் சரியாப் பயன்படுத்திக்கறாங்க... அப்படீங்கறபொழுது அவங்ககிட்ட ஒரு அடிப்படை நாணயம் இருக்கிறது என்பதை நாம புரிஞ்சுக்கலாம். அந்த அடிப்படை நாணயத்தை நம்பி இந்தச் சலுகையையும் செய்யலாம்'' என்றாள்.

''அப்படிப் போடு...''என்று சிரித்து விட்டார் ஆதிமூலம், அது மீட்டிங் என்பதையும் மறந்து.

அவரைப் பார்த்துத் திரும்பி... மெல்லிய குரலில் ''மாமா...'' என்று சிணுங்கினாள் இளமதி. ''ஓகே.. ம்மா.. ஓகே... ப்ரொசீட்..ம்மா'' என்று இயல்புக்கு வந்தார்.

எல்லாருக்குமே கொஞ்சம் சிரிப்பு வந்தது. ஆனாலும் சிரிப்பை அடக்கிக் கொண்டு மீண்டும் முகத்தைத் தீவிரமாக்கிக் கொண்டார்கள்.

இளமதி தொடர்ந்தாள். ''இதுலே இன்னொரு நன்மையும் இருக்கு. ஏன்னா... சில நேரங்கள்ல அவர்களுக்கு ரெகுலர் வேலை இல்லைன்னா... அவர்களால பணம் கட்ட முடியறதில்லை. ஏன் கட்ட முடியலைன்னா... வீட்டுக்குத்



தேவையான அடிப்படை பொருட்களுக்காக செலவு செஞ்சே ஆகணும். அப்ப அதுக்கு ஒரு ஃப்ரொவிஷன் கொடுத்தோம்னா... நமக்கு வரவேண்டிய வசூல் தடையில்லாம இருக்குமில்ல?''என்றாள் இளமதி.

சின்னசாமியும், சக்திவேலும் தன்னை மறந்து கைதட்டி விட்டார்கள்.

''இந்த கிரெடிட் எல்லாம் சிம்மேந்திரன் சாருக்குப் போகவேண்டியது. என்னோட கருத்தைச் சொன்னேன். திங்க் பண்ணிப் பாருங்க''என்று சொன்னாள் இளமதி.

இந்தக் கருத்து மிகவும் எடுப்பாக இருந்ததோடு அல்லாமல் எல்லோருடைய மனதிலும் ஒரு இடத்தைப் பிடித்தது. இது முதலில் உதவி மட்டுமல்ல. இந்த உதவியில் இருந்து லாபமும் இருக்கிறது என்பதைத் தான் சிம்மேந்திரன் இத்தனை நேரம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அதையே இளமதி வேறுவேறு வார்த்தைகளில் சொன்னாள்.

சிம்மேந்திரன் அவளிடம் ஒரு நன்றிப் பார்வையை வீசி விட்டு பிறகு சொன்னான்.

''நம்ம கம்பெனியில புதுசா வந்திருக்கிற டைரக்டர் மேடம் கூட, எங்களோட ஃபீல்டுக்கு வந்ததனால உண்மையைக் கண்டுபிடிச்சுருக்காங்க. அதனால நான் சொன்ன கருத்துக்கு கூடுதலாக ஒரு வலு சேருது'' என்றான்.

ஒருவழியாக அந்தக் கூட்டத்தில் அது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

''இன்னொரு திட்டமும் கூட எங்கிட்ட இருக்கு...''என்று ஆரம்பித்தான் சிம்மேந்திரன்.

''போடப்பா... போடு...''என்று சிரித்தான் சக்திவேல், அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில்.

"இதேபோல நம்ம குழுவிலே ஃபைனான்ஸ் வாங்குகிற அவர்களுடைய குழந்தைகளுக்கான செயின் ஆப் ஸ்கூல்ஸ் என்று சொல்வார்களில்லையா அதுமாதிரி நகரங்களில் இல்லாமல் ரூரல் ஏரியாக்களில் கிராமப்புறங்களில் நாம் பள்ளிகளைக்கூட ஆரம்பிக்கலாம்''என்றான் சிம்மேந்திரன்.

"அதெல்லாம் கஷ்டம்...''என்று ஆரம்பித்த ஆதிமூலத்தை சக்திவேல் அமர்த்தினான்.

"ஓகே. இன்னைக்கு இந்த திட்டம்... இந்த கார்டு ஹோல்டர்ஸுக்கு மளிகைப் பொருட்கள் விற்கிற திட்டம்... அதை மட்டும் நாம ஏத்துக்கறோம். இப்ப நீ சொல்ற திட்டம் ஒருவேளை நாளைக்கு நடக்கறதா இருக்கலாம். தேவை யானதாக் கூட இருக்கலாம். அதை இன்னொரு முறை பார்க்கலாம்''என்று சொல்லவும் சிம்மேந்திரன், இந்த மட்டும் இந்த திட்டம் ஆரம்பித்ததே என்று மகிழ்ச்சி அடைந்தான்.

அதற்குப்பிறகு சிற்றுண்டி வழங்கினார்கள். அவரவர்கள் குழுவாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். எப்போதும் போல இளமதி சின்னச்சாமியிடம் நின்று கொண்டிருந்தாள்.

ஏனோ சின்னச்சாமியிடம் பேசிக் கொண்டிருப்பது என்பது எளிதாக இருந்தது. கருணாகரன் அங்கே வந்தான். "என்ன இளமதி, எங்களையெல்லாம் கண்டுக்கவே மாட்டேங்கறீங்க...''என்று கேட்டான்.

"ஐயோ... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை'' என்று இளமதி ஆரம்பிக்கவும் "இப்ப ஃபீல்டுல இருக்கீங்க. ஃபீல்டு மூட்ல இருக்கீங்க''என்று கிண்டல் செய்து விட்டுப் போனான்.

சக்திவேல் இப்பொழுதெல்லாம் அவளிடத்தில் அதிக மாகப் பேசுவதில்லை. சற்றுத் தொலைவில் நின்று கொள் கிறான். ஆனால் அவன் மனமென்னவோ அவளை முழுமை யாக ஒளிப்பதிவு செய்வதையும்... அவன் கண்கள்



அவளுடைய நடையுடை பாவனைகளை உள்வாங்கிக் கொள்வதையும் தன்னை அறியாமல் அவன் வெளிப் படுத்திக் கொண்டிருக்கிற உணர்வுகளையும் சக்திவேல் கவனித்தாலும், கவனிக்காவிட்டாலும் சிம்மேந்திரனும், சின்னச்சாமியும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சின்னசாமியிடம் நின்று இளமதி பேசிக் கொண்டிருக் கையில், சிம்மேந்திரன் அங்கு வந்தான். "மேடம். ரொம்ப தேங்ஸ்..''என்றான்.

"எதுக்கு?''என்றாள் இளமதி.

"இல்லை, சரியான நேரத்திலே எனக்குச் சப்போர்ட் குடுத்தீங்க. நான் ஒரு அரை மணி நேரமா எதைச் சொல்லணும்னு கஷ்டப்பட்டு சொல்லிக்கிட்டிருந்தேனோ அதை ஒரு ரெண்டு வாக்கியத்துல அழகாச் சொல்லி அவங்களுக்குப் புரிய வச்சுட்டீங்க''என்றான் சிம்மேந்திரன்.

"அட, போப்பா... நீ சொன்னதெல்லாம் நம்ப பெரியவங் களுக்குப் புரியாமலா இருந்திருக்கும். புரியுது. இருந்தாலும் சின்னப்புள்ள சொல்லிச்சேன்னு தட்டிக் குடுத்தாங்க''என்று சிரித்தான் சின்னச்சாமி.

"இல்லைப்பா... அப்படியெல்லாம் இல்ல. அவங்க அழகாச் சொன்னாங்க''என்றான் சிம்மேந்திரன்.

அதற்குள்ளாக யாரோ அழைப்பது போலிருக்க சின்னச் சாமி நகர்ந்தான்.

"இளமதி மேடம்! நிஜமாகவே இன்னைக்கு நீங்க... ரொம்ப ஷார்ட் அன்ட் ஸ்வீட்டா... என்று சொல்வார்களே அதுமாதிரி, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கறதும்பாங்களே அது மாதிரி அழகா சுருக்கமாச் சொன்னீங்க. தேங்க்ஸ்'' என்றான் சிம்மேந்திரன்.

அவளும் திருப்பி, "தேங்க்ஸ்''என்றாள்.

சொல்லிவிட்டு சிம்மேந்திரன் நகர்ந்து விட்டான்.

ஆனாலும் சிம்மேந்திரனுடைய பாராட்டுக்கள் அவளது நெஞ்சிலே இனிய குளிர்ச்சியானதொரு தேன் மழையைப் போல நிரம்பிக் கொண்டிருந்தது.

சக்திவேல் ஒருபக்கமாக இருந்து அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

★ ★ ★

## அத்தியாயம் 13

உலகமே பளிச்சென்று தெரிந்தது.

இத்தனை நாள் வரை காதில் படாத குயிலின் கூவல் காதை நிறைத்தது. தங்கள் அலுவலகத்தைச் சுற்றிலும் நிறைய மரங்கள் இருந்தன என்றாலும் இதுநாள் வரை நின்று கவனித்துப் பார்ப்பதற்கு நேரமில்லாமல் இருந்தது.

இன்றைக்கோ... ஒவ்வொரு மரத்திலும் பூத்திருக்கும் பூக்களெல்லாம் மிகமிக அழகாகத் தெரிந்தன. மஞ்சள் பூவரசம் பூ மே ஃபிளவர் என்று எதைப் பார்த்தாலும் அவன் கண்களிலும், மனத்திலும் அவற்றின் அழகு பாய்ந்து குளிர்ச்சியாக இறங்கியது.

சக்திவேலுக்கு தன் மனத்தைக் குறித்து மிக ஆச்சரியமாக இருந்தது. இப்படியான ரசனையெல்லாம் எப்போது தன்னிடத்திலே கிளம்பியது என்று அவனுக்குப் புரியவில்லை. சமீபகாலமாகவே மனதில் ஒரு நிறைவு. அந்த நிறைவோடு மட்டுமில்லாமல் உள்ளூற ஒரு மகிழ்ச்சியும் ஆனந்தமும் பொங்கிக் கொண்டிருந்தது.

பொங்கிக் கொண்டிருந்த ஆனந்தத்திற்கும், மகிழ்ச்சிக்கும் பின்னாலே அந்த அழகிய முகம் வந்துவந்து போகிறது என்பது அவனுக்குப் புரிந்தது.

அந்த முகம், இளமதியின் முகம்.



இப்போது சக்திவேல் தன்னுடைய உணர்வுகளைத் தானே முறைப்படுத்திக் கொள்ள வேண்டியவனாக இருந்தான்; தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியவனாக இருந்தான். தன் மனம் இளமதியை நோக்கிச் சாய்கிறது என்பது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

ஒரு வகையில் தன் தந்தையும் இதற்குக் காரணம். ''மூணு பசங்க இருக்கீங்களே... யாராவது ஒருத்தருக்கு...''என்று அவர் அடிக்கடி சொன்னது தான் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது.

இப்போது அதே விஷயம் அவன் மனதையும் தாக்கியது. ஆமாம், மூணு பசங்க இருக்கோமே... இதில் இளமதி யாரைத் தேர்ந்தெடுத்தாலும் மற்றவாகளுக்கு வருத்தம் வருமோ... அதைப்பற்றித் தான் தன்னுடைய தந்தைமார்கள் பேசி முடிவு செய்து வைத்திருக்கிறார்களோ... என்ற எண்ணமும் அவனுக்குத் தோன்றியது.

எது எப்படியிருந்தாலும் தன் மனத்தில் தோன்றி இருக்கக் கூடிய இந்த இன்பமயமான உணர்வுகளை அவன் விட்டு விடத் தயாராக இல்லை. அவற்றை விட்டு விலகி விடவும் தயாராக இல்லை. இது தான் நேசம் என்றால் இது தான் காதல் என்றால்... இதை நான் முழுமையாக அனுபவித்துப் பார்ப்பேன் என்று முடிவு செய்து கொண்டான்.

மனம் போகிறபடி போகட்டும். அது எவ்வளவு தூரம் போகிறது என்று பார்க்கலாம். ஆனால் இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டாலும்கூட, அவன் மனம் எல்லை மீறியோ அல்லது கோடு தாண்டியோ நினைக்கவில்லை.

அடிக்கடி கவிதைப் புத்தகங்களை எடுத்து கையிலே வைத்துக் கொண்டான். கண்ணதாசனுடைய கவிதைகளை எடுத்து படித்துப் பார்த்தான்.

காதலைச் சொட்டச்சொட்டச் சொன்னவன் அல்லவா, கண்ணதாசன்? இப்போதும் கூட அவனை விட வயது சற்றே

கூடுதலாக இருக்கக்கூடியவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டது உண்டு.

காதலைப் பெரியவர்களுக்கு மட்டுமே புரிகிற மாதிரி சொல்கிற ஒரு திறமை கவிஞர் கண்ணதாசனுக்கு இருந்தது. பெரியவர்களும் கேட்கலாம், சிறியவர்களும் கேட்கலாம் என்றாலும் பெரியவர்களுக்கு மட்டுமே அது புரிகிற மாதிரி இருக்கும். இப்பொழுது போல பட்டவர்த்தனமாக காதலை துகிலுரித்துச் சொல்கிற சோகம் அப்பொழுது அவருடைய கவிதைகளிலே இருக்கவில்லை.

இப்படியெல்லாம் கவிதை பற்றிய ஆய்வு... குறித்து உணர்வுகள் எல்லாம் தன் மனத்தில் தோன்றிக் கொண்டிருப்பது அவனுக்கு ஒருபக்கம் சிரிப்பாகவும் இருந்தது. ஒரு பக்கம் இனம்புரியாத பரவசமாகவும் இருந்தது.

ஒன்றை மட்டும் தெளிவாக முடிவு செய்து கொண்டான். இளமதியிடம் பேச வேண்டும். எப்படிப் பேச வேண்டும் என்பதையும் முடிவு செய்து கொண்டான். உண்மை யிலேயே அந்த முடிவு எவ்வளவு நல்ல முடிவு என்பது அவனுக்கு இன்னொரு நாளில் தெரிந்தபொழுது அதிர்ந்து போவான் என்பது அப்போதைக்கு அவனுக்குப் புரிய வில்லை.

தன்னுடைய சுழல் நாற்காலியை சுழற்றி விட்டுக் கொண்டே... விரல் விட்டு எண்ணிக் கொண்டான். இளமதி யினுடைய பிறந்தநாளுக்கு இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கிறது. இரண்டே இரண்டு நாட்கள் என்று புன்னகைத்துக் கொண்டு தன் தலையைத் தடவி விட்டுக் கொண்டான்.

* * *

அந்த நாளும் வந்தது!



இளமதியின் அம்மா, மாலையில் தான் எல்லோரையும் விருந்துக்கு அழைத்திருந்தார். இளமதி அம்மாவிடம் கேட்டாள். "அம்மா, எதுக்கும்மா... இத்தனை பெரிய வயசானதுக்கு அப்புறமும் பிறந்தநாள்னு... வருஷா வருஷம் கொண்டாடிக் கிட்டிருக்கே" என்றாள்.

"இல்லைம்மா. உங்க மாமாக்கள் மூணு பேருக்கும் உன்னோட பெர்த் டேயையும், தம்பியோட பர்த் டேயையும் கொண்டாடலைன்னா மனசு ஆறாது. இந்த வருஷம் வேண்டாம்னு பொண்ணு சொல்றான்னு நான் போன வருஷம் சொன்னப்பவே ரொம்ப வருத்தப் பட்டாங்கம்மா..." என்றார்.

"ஏம்மா..?" என்றாள் இளமதி.

"ஆமாம்மா... இதுவே அப்பா இருந்தா...?

"நீ வேற..அவளுக்கு அந்த நினைப்பே வரக்கூடாதுன்னு தான் நாங்க எல்லாத்தையும் எடுத்துக்கட்டி செய்யறோம். ஏன் எங்களைத் தடைபடுத்துறீங்க என்று வருத்தப்பட்டாங் கம்மா" என்றாள் அம்மா.

உடனே இளமதி, கப்பென்று வாயை மூடிக் கொண்டாள். 'சரி, அப்படியானால் இருக்கட்டும்,' என்று.

இந்த முறை சக்திவேல், சின்னச்சாமி, கருணாகரன்... மூன்று பேரும் வரப்போகிறார்கள் என்பது அவளுக்குக் கூடுதலான சந்தோஷம்.

எப்போதுமே வருகிறவர்கள் தான் என்றாலும் எல்லா வருடமும் வருவார்கள் என்று சொல்ல முடியாது. சில வருடங்களில் விட்டுப் போனதும் உண்டு. இந்த முறை அவர்கள் வந்தே தீரவேண்டும் என்று தெளிவாக முடிவெடுத்து வைத்திருக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும். ஏனென்றால் ஒரு வாரமாகவே, "என்ன இளமதி பர்த் டே வருதா? அன்னைக்கு என்ன ஸ்பெஷல். நீ ஏதாவது

சமையல்கிமையல்னு செஞ்சிராதே. நானே செஞ்சேன் அப்படீன்னு கொண்டு வந்து நீட்டி... நாங்க சாப்பிட்டு... அதுக்கு அடுத்த நாளு நானே தான் ஊசி குத்திக்கணும் அப்படீன்னு டாக்டர்கிட்டே போற மாதிரி வச்சிரா தேம்மா..." என்று கருணாகரன் கூட கேலி செய்தான்.

"அப்படீன்னா... கண்டிப்பா உங்களுக்கென்று ஏதாவது செய்யப்போறேன், பாருங்க"என்று இவளும் கூட பதிலடி கொடுத்தாள்.

"அதுக்கெல்லாம் யாராவது ஒருத்தன் வருவான்.. மா... ஆயுசு முழுக்க தண்டனை வாங்கிக்கறதுக்குன்னு ஒருத்தன் வருவான். அவருக்கு ரிசர்வ் பண்ணி வையி"என்று அவன் விடாமல் கேலி செய்தான்.

"போங்க கருணா..."என்று சிரித்துக் கொண்டு வந்து விட்டாள்.

அவள் முகத்தில் தோன்றி மறைந்த அந்த கண நேர வெட்கத்தை கருணாகரன் குறுகுறுவென்று பார்த்துக் கொண்டான்.

இப்பொழுது அது நினைவு வர, டைனிங் டேபிளை ஒருபக்கமாகப் போட்டுக் கொண்டு சிரித்துக் கொண்டாள் இளமதி.

"என்னம்மா...?" என்று அவள் சிரித்த முகத்தைப் பார்த்து அம்மா கேட்க, "அம்மா. இந்த வாரம் முழுக்க கருணாவும் சரி, சக்தியும் சரி, சின்னுவும் சரி... மூணுபேரும் என்னை கலாட்டா செஞ்சு ஒருவழி பண்ணிட்டாங்கம்மா"என்றாள்.

"ஊஹூம்..."என்று அம்மா மகிழ்ச்சியானார்.

"ஆமாம். நீ போயி ஏதாவது வெரைட்டி பண்ணி டாதே என்று கேலி செய்யறாங்கம்மா"என்றாள்.

அம்மாவும் சிரித்துக் கொண்டார். "இருக்கிறது தான். சின்னப் பசங்க தானே"என்று.



"சின்னப் பசங்களா, ஐயோ... நீங்க தான் சொல்லிக் கணும் சின்னப்பசங்கன்னு-... ஒவ்வொருத்தர் தலைக் குள்ளேயும் எவ்வளவு விஷயம் இருக்கு தெரியுமா? ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ஃபீல்டுல எக்ஸ்பர்ட்டும்மா..." என்றாள் இளமதி.

"ம்... அப்படியா?"என்றார் அம்மா.

"ஆமாம்மா. ஒவ்வொருத்தருக்கும் ஒரு டேஸ்ட். இந்த சக்தி இருக்காருல்ல அவருக்கு கவிதைன்னா ரொம்ப இஷ்டம். இங்க ஏதாவது கவிதை சொல்வாரு பாரு..."என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

சரியாக அந்த நேரத்துக்கு சக்திவேல், உள்ளே நுழைந் தான், "யாரைப்பத்தி பேசிக்கிட்டு இருக்கீங்க...?"என்றபடி.

"உங்களைப் பத்தி தான்..."என்றாள் இளமதி.

உடனே அவன் முகம் சிவந்தது. "அப்படியா...?"என்று ஆச்சரியப்பட்டான்.

"ஆமாம். அம்மாகிட்டே சொல்லிக்கிட்டு இருந்தேன். கண்டிப்பா ஏதாவது கவிதை சொல்லி அவஸ்தைப் படுத்து வாருன்னு சொல்லிக்கிட்டிருந்தேன்" என்று கேலி செய்தாள் இளமதி.

சக்திவேலின் முகம் ஒருகணம் வாடியது.

"இல்லை சக்தி! சும்மா தமாஷுக்குத் தான் சொன்னேன். நீங்க என்ன சீரியஸா எடுத்துட்டீங்க"என்று இளமதி சமா தானம் செய்தாள்.

"ஏன் இளமதி, கவிதை பிடிக்காதா?"என்றான் மெல்லிய குரலில்.

"யார் சொன்னாங்க கவிதை பிடிக்காதுன்னு... கண்டிப்பா பிடிக்கும். அதிலும் சக்தி சொன்னா ரொம்ப ரொம்பப் பிடிக்கும்" என்று சிரித்தாள் இளமதி.

"அப்ப சரி..."என்று சமாதானமானான் சக்திவேல்.

ஒவ்வொருவராக வர ஆரம்பித்தார்கள். பெரியவர்கள் எல்லாம் இப்படியும் கூட ஜாலியாக இருப்பார்களா என்பது போல அவர்கள் வீட்டுக்கு வரும் பொழுது மிகவும் கலகலப்பாக இருப்பதைத் தான் இத்தனை வருடங்களில் அவள் பார்த்திருக்கிறாள்.

அதனால் தான் அலுவலகத்தில் அவர்கள் கொஞ்சம் கெடுபிடியாக இருக்கும்பொழுது அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும். அம்மாவிடம் வந்து சொல்லுவாள். "அம்மா, மனிதர்களுக்கு ஒரு முகத்துக்கு மேல இருக்கும்னு சொல்றாங்கல்ல... அது உண்மை தான்ம்மா... இந்த மாமாக் களெல்லாம் இங்க வந்தா எவ்வளவு அன்பா... பிரியமா இருக்காங்க. அந்த அளவுக்கு அங்க ஆபீஸ்ல கெடுபிடி தான்"என்று சொல்லுவாள்.

"ஆமாம்மா. அப்படி இருந்து தான் ஆகணும். இந்த காலத்தில கொஞ்சம் கருணை காட்டினாக்கூட ஏமாத்த ஆரம்பிச்சுடறாங்க.என்ன செய்கிறது?" என்றாள் அம்மா. தனியாக இருந்து குடும்பத்தை சமாளித்தவரல்லவா... அதனால் உலக அனுபவம் அவருக்கு நன்றாகவே இருந்தது.

"ஆமாம்மா..."என்று இளமதியும் ஒத்துப்பாடுவாள்.

இப்பொழுது எல்லாருமாக கலாட்டாவாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

இந்த மாதிரி சமயங்களில் மட்டும் ஒரு சமையல்காரரை வரச் சொல்லுவார், இளமதியின் அம்மா. அவர் தன்னுடைய ஸ்பெஷலாக சில நல்ல உணவு வகைகளை செய்திருந்தார். காளான் பிரியாணி, அதையெல்லாம் சாப்பிடாதவர்களுக்கு சுக்கா... சப்பாத்தி... வெஜிடபிள் சாலட்... என்று வகைவகையாக செய்திருந்தார். புதிதாக மாம்பழ பாயசம் என்றும் ஏதோ செய்திருந்தார்.

இளமதியும் தன் பங்குக்கு ஸ்வீட் வகை ஒன்று செய்திருந்தாள். வேண்டுமென்றே கருணாவைப் பார்த்துச்



சொன்னாள். சக்திக்கும் சின்னுவுக்கும் ஒரு பிளேட்டில் வைத்து நீட்டியவள், "சக்தி, இது உங்களுக்குத் தான். கண்டிப்பா கருணாவுக்கு கிடையாது"என்றாள்.

கருணா அவளைப் பார்த்துச் சிரித்தான், "ஏனாம்..." என்றான்.

"நீங்க தான் சொல்லீட்டீங்களே. ஏதாவது புதுவகை செய்து பரிசோதிக்காதே. அப்படீன்னு".

அவன் கடகடவென்று சிரித்தான். "ஓ! அதை இத்தனை நாள் ஞாபகம் வச்சிட்டு இருக்கியா?"என்றான்.

"பின்ன... அத எங்க கௌரவப் பிரச்னையில்ல..." என்றாள் இளமதி.

"சரி, சரி. உன் கௌரவப் பிரச்னையாப் போச்சுல்ல. அப்போ இவங்கெல்லாம் படற பாட்டை நானும் படறேன். எனக்கு மட்டும் என்ன வித்தியாசமா வேணுங்கற சூழ்நிலையா வேண்டியதிருக்கு... குடு குடு"என்று வாங்கிக் கொண்டான்.

சின்னுவும் வாங்கிக் கொண்டான். வாங்கிக் கொண் டவன் இளமதியிடம் சொன்னான். "இளமதி! ஆனாலும் இப்படி ஒரு தப்பு பண்ணியிருக்கக் கூடாது"என்றான்.

"என்ன தப்பு பண்ணினேன்...?"என்று பதைத்தாள் இளமதி.

"இந்த ஒரு மாசமா ஃபீல்டு ஆபீஸா... பீல்டு ஆபீஸா..., இந்திரன்கூடத் தானே சுத்திக்கிட்டு இருக்கிறே. ஏன் இந்திரனைக் கூப்பிடலை..."என்றான்.

இளமதி திகைத்துப் போனாள்.

"இல்லை. இது குடும்ப பங்ஷன்... அப்படீங்கற மாதிரி" என்றாள்.

"ஓகே. நீ கூப்பிடலைன்னா பரவாயில்லை. என்னுடைய ஃபிரண்ட்ங்கற முறையில இளமதியினுடைய பிறந்த நாளுக்கு கூப்பிட்டிருக்கேன்"என்றான் சின்னசாமி.

கருணா அவனை முறைத்தான். "டேய், உனக்கு இது தேவையில்லாத வேலைடா..."என்றான்.

"ஏண்டா...?"என்றான் சின்னு.

"இதப்பாரு... என்ன தான் ப்ரெண்ட்டுன்னாலும் அவனோட கேடர் வேற. நம்மோட கேடர் வேற. நீ அவனைக் கொண்டு வந்து இதுல நுழைச்சிருக்கக் கூடாது" என்றான்.

சக்திவேல் கூட, "ஆமாம் சின்னு. கூப்பிட்டா? இளமதி கூப்பிட்டிருக்கணும். இளமதியே கூப்பிடலை நீ எதுக்கு கூப்பிட்டே..."என்றான்.

"பரவாயில்லை, வரட்டும்"என்றாள் இளமதி சமாதானம் போல.

சக்திவேல் கொடுத்த கவிதைத் தொகுப்புகளை பார்சலாக வாங்கி வைத்துக் கொண்டாள். கருணாகரன் கொடுத்த கொலுசு அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. "கருணா, உங்க செலக்ஷனா... நீங்களே செலக்ஷன் பண்ணினீங்களா... ஐயோ.. ரொம்ப அழகா இருக்கே"என்று மயங்கிப் போனாள்.

சின்னு அழகான சிம்பிளான பட்டுப்புடவை வாங்கிக் கொண்டு வந்திருந்தான். சின்னுவுடையப் பட்டுப் புடவையும் அவளுக்குப் பிடித்திருந்தது.

சக்திவேல், "நான் கொடுத்ததை மட்டும் உடனே மதிப் பிட்டுச் சொல்ல முடியாது, தெரியுமா?"என்று பெருமை அடித்தான்.

"ஏண்டா நீதான் கவிதையில சிக்கிக்கிட்டு முழிக் கிறேன்னா... அவங்களையும் சிக்க வச்சுகிட்டு..."என்று கலாட்டா செய்தான் கருணாகரன்.

சக்திக்கு அது கொஞ்சம் பெருமையாகக்கூட இருந்தது.



இத்தனைக்கும் நடுவே எங்கே சிம்மேந்திரன் வருவானோ... என்ற அச்சம் அவன் மனத்தில் இருந்தது என்றால் எங்கே சிம்மேந்திரன் வருவானோ என்ற ஆவல் கலந்த எதிர்பார்ப்பும் அச்சமும் இளமதி முகத்தில்கூட இருந்தது. ஆனால் பிறந்தநாள் விழா முடியும்மட்டும் சிம்மேந்திரன் வரவேயில்லை.

* * *

## அத்தியாயம் 14

உறக்கமே வரவில்லை இளமதிக்கு.

புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

அவளது படுக்கைக்கு அருகில் இருந்த அந்த அழகான டீப்பாய் மீது வைக்கப்பட்டு இருந்த புத்தகங்களை எடுத்து மறுபடியும் பார்த்தாள்.

ஆறு புத்தகங்களை அழகான விதத்தில் பேக் செய்து பரிசாக வழங்கி இருந்தான் சக்திவேல்.

ஒன்றிரண்டு கவிதைப் புத்தகங்கள் ஆயிரம் ரூபாய்க்கு மேல் கூட விலையாக இருந்தது. தபுசங்கர் போன்றவர்களின் புத்தகங்கள் விலை குறைவாக இருந் தாலும் அவைகளை ஒரு தொகுப்பாகக் கொடுத்திருந்தான்.

எல்லாத் தொகுப்புகளிலும் மிக முக்கியமான பொது வான அம்சம் என்னவாக இருந்தது என்றால் நிறையக் கவிதைகள் காதல் கவிதைகளாக இருந்தன. வேண்டும் என்றே பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்தாற்போல இருந்தது.

இளமதி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

சக்திவேல் எதற்காக இப்படியொரு பரிசினை அளிக்க வேண்டும். தனக்குப் புத்தகத்தின் மேல் ஆர்வம் உள்ளது

என்றா? வெறும் புத்தகங்களை மட்டும் அவன் பரிசாகக் கொடுத்திருந்தால் கூட அவள் பெரியதாக எடுத்திருக்க மாட்டாள்.

ஒன்றிரண்டு கவிதைகளுக்குக் கீழே அவன் அடிக்கோடிட்டு இருந்தான், ஒவ்வொரு புத்தகத்திலும். அந்த ஒன்றிரண்டு கவிதைகள் எல்லாமே ஒன்றுபோல காதல் கவிதைகளாக அமைந்திருந்தது தான் அவளை கொஞ்சம் அதிர்ச்சியடையச் செய்திருந்தது.

சக்திவேலை அவளுக்குப் பிடிக்கும். சக்திவேலை மட்டுமின்றி கருணாவையும் பிடிக்கும். சின்னசாமியையும் பிடிக்கும். மூன்று பேரையுமே அவளுக்கு பிடிக்கும். ஆனால்... சக்திவேலுக்கு இப்படியொரு எண்ணம் வருமென்பது அவள் எதிர்பார்க்காதது. இப்படியொரு எண்ணம் வந்தால் தான் என்ன பதில் கொடுக்கப் போகிறோம் என்பதும் அவள் இதுவரை யோசித்திராதது.

தன் மனத்தைத் தானே சாடிக் கொண்டாள். "ஏ! மட நெஞ்சே. நீ பாட்டுக்கு அவர் இந்தக் கோணத்தில் தான் சொல்லியிருக்கிறார் என ஏன் எடுத்துக் கொள்கிறாய்? இந்த கவிதைகள் அழகாக இருக்கின்றன. நானும் ரசித்தேன். நீயும் ரசிக்கலாம் என்ற எண்ணத்திலே கூட புத்தகங்களை வாங்கிக் கொடுத்திருக்கலாம் அல்லவா? இல்லையில்லை ஒரு இளம்பெண்ணுக்கு கவிதைகள் கொடுத்தால்... இப்படிக் குறிப்பிட்டா கொடுப்பார்கள்"என்றும் அவளுக்குக் குழப்பம் தோன்றியது.

'பார்க்கலாம். அப்படியொரு ஒரு கருத்து இருந்தால் அவர் நேரடியாகச் சொல்லட்டும். பிறகு பார்க்கலாம்' என்று அப்போதைக்கு அவள் முடிவு எடுத்துக் கொண்டாள்.

சக்திவேலின் பரிசு அவளை எந்த அளவுக்குத் தொல்லைப் படுத்தியதோ... அதே அளவுக்கு சிம்மேந்திரனின் புறக் கணிப்பும் தொல்லைப்படுத்தியது.



வருடா வருடம் கொண்டாடப்படுகிற விழா என்றாலும் இந்த நான்கு குடும்பத்தினர் மட்டும் கலந்து கொள்ளு வார்கள். அதிலும் இளைஞர்கள் சிலசமயம் வருவார்கள், சில சமயம் வரமாட்டார்கள். ஆனால் பெரியவர்கள் கண்டிப்பாக வருவார்கள். அவளும் பெரியவர்களைத் தான் எதிர்பார்ப்பது வழக்கம்.

இந்த முறை பிறந்தநாள் விழா என்று பேசப்பட்ட பொழுதே ஏனோ... சிம்மேந்திரனையும் அழைக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு மூலையிலே இருந்தது. ஆனால் பெரியவர்களெல்லாம், ஒரு ஸ்டாஃபை எதுக்கும்மா கூப்பிட்டே என்று கேட்பார்களோ என்ற எண்ணத்தில் தான் அவள் அதைச் செய்யவில்லை. ஆனால் சின்னசாமி வந்து, என் சார்பாக சிம்மேந்திரனை அழைத்திருக்கிறேன் என்று சொன்னவுடனே அவளுக்குள் குப்பென்று மகிழ்ச்சி பொங்கியது.

சின்னசாமி வேண்டுமென்றே சொல்லி விட்டுத் தன்னை ஆழம் பார்த்தானோ... என்று கூட அவளுக்குத் தோன்றியது.

தனக்கு ஏன் அப்படி மகிழ்ச்சி பொங்கியது. கிட்டத்தட்ட ஒரு மாதமாக அவரோடு ஃபீல்டு என்பார்களே அதுபோல களப்பணியிலே இறங்கி வேலைசெய்து கொண்டிருக் கிறோம். அதனால் ஒரு நட்பு மலர்ந்திருக்கிறது. அதனால் அவர் வருகையை எதிர்பார்த்தேன். இதிலே என்ன இருக்கிறது... என்று அவள் தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

எல்லாரும் கிளம்புவதற்கு ஒன்பது மணியாகி இருந்தது. அதுவரை அவனிடத்தில் இருந்து எந்தச் செய்தியும் வரவில்லை.

சின்னசாமி தான் போகும்பொழுது, "இளமதி! பய... கவுத்துட்டான்..." என்று சொல்லி விட்டு, "அவன் இப்படித்

தான்... அவன் வரலைன்னு பெரிசா எடுத்துக்காதே...'' என்றான்.

"இல்லை... இல்லை... நான் அப்படியெல்லாம் எடுத்துக் கலை... நான் தான் இன்வைட் பண்ணவேயில்லையே...'' என்று அவள் சமாளித்தாள்.

"ம்... அப்படியா?''என்பது போல சின்னசாமி பார்த்துக் குறும்பாகச் சிரித்து விட்டுக் கிளம்பிப் போனான்.

சக்திவேல் வந்தது குறித்தும் அவனது பரிசு குறித்தும் கிலேசப்படுகிற இந்த மனம்... ஏன் சிம்மேந்திரன் வராததைக் குறித்து கவலைப்படுகிறது. வேண்டாம். இதை ஆராயவே வேண்டாம். நாம் அலுவலகத்தில் இருக்கிறோம்.

அப்பா இருந்தால் கூட பரவாயில்லை. இப்பொழுது மூன்று பெரிய வர்கள் தனக்காகப் பொறுப்பெடுத்து இருக்கிறார்கள். அவர்கள் மனதிலே என்ன இருக்கிறதோ... என்ன இருந்தாலும் சரி. அவர்கள் என்ன சொல்கிறார் களோ அதைத் தான் நாம் கேட்க வேண்டும். ஏனென்றால் அந்த மூன்று பேர் கொடுத்த பாதுகாப்பு தான் தன்னையும், தம்பியையும் தாயையும் இத்தனை நாள் நிம்மதியாக வைத்திருந்தது.

தந்தை இல்லாத ஒரு குடும்பத்தில் தான் இவ்வளவு நிம்மதியாக வளர்வதற்கு அவர்கள் தான் காரணம். மூன்று பேரும் தன்மீது உயிரையே வைத்திருக்கிறார்கள். சிம்மேந் திரனைக் கொண்டு போய் அவர்கள் முன்னால் நிறுத்தினால்... அவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்னமோ?... இப்படி யோசிக்கும்பொழுது தான் திடீரென அவள் மனத்தில் அந்த எண்ணம் தோன்றியது.

ஒருவேளை அவர்கள் தங்கள் புதல்வர்களில் ஒருவரைத் தான் நான் திருமணம் செய்ய வேண்டும் என்று- எதிர்பார்ப் பார்களோ... என்ற எண்ணம் தோன்றியவுடனே கொஞ்சம் திகைப்பும் உள்ளே தோன்றியது. அதனால்தான் எல்லோரும்



தன்னை மாமா என்று அழைக்கச் சொல்கிறார்களோ... இந்த மூன்றில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தால்... மாமா பையன் அல்லவா... அதனால் மூன்றில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். இதுநாள் வரை சிரமப் பட்டு சேர்த்த சொத்தும் தங்கள் குடும்பத்தில் யாராவது ஒருவரிடம் போய் சேர வேண்டும் என்று நினைக் கிறார்களோ... அட ஆண்டவா... என்று திடுக்கிட்டு எழுந்து அமர்ந்து கொண்டாள்.

கருணாகரன் இதைத் தான் கதையாகச் சொல்லி தன்னை சீண்டினாரோ... சின்னசாமி அதனால் தான் அடிக்கடி குறும்பாகச் சிரிக்கிறானோ... இதைப் பார்த்து தான் சக்தி வேலுக்கும் அந்த எண்ணம் வந்திருக்குமோ... எளிதாக அனுமதி கிடைத்து விடும் என்ற எண்ணத்தில்தான் இழை விட்டுப் பார்க்கிறரோ... என்று தோன்றியது.

இளமதிக்கு குழப்பம் அதிகமாகியது. சரி, அப்படித்தான் நான் சக்திவேலுக்கு சரி என்று சொன்னால் ஆதிமூலம் மாமாவுக்கும், கருப்புசாமி மாமாவுக்கும் கவலையாகி விடுமே... வருத்தமாகி விடுமே... என்னவோ கருப்புசாமி மாமா அந்த மாதிரி எண்ணம் வைத்திருக்கிற மாதிரி தெரியவில்லை. சின்னசாமிக்கு அதுபோன்ற எண்ணங்கள் இருக்கிற மாதிரி தெரியவில்லை.

அப்படியென்றால் ஆதிமூலம் மாமாவுக்கும், கந்தவேல் மாமாவுக்கும் தன் காரணமாக பிணக்கு ஏற்பட்டு விடுமோ... இது என்னடா புதுத் தலைவலி என்று அவளுக்குக் குழப்பம் மேலோங்கியது.

இறைவா! என்னால் இந்த குடும்பங்களுக்குள் குழப்பம் ஏற்படக் கூடாது. நான் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் தான் தெளிவாகக் காட்ட வேண்டும் என்று தன்னுடைய இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டாள், இளமதி.

இந்தப் பிறந்தநாள் விழா தனக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று நினைத்தால் பல பிரச்னைகளைத் தோற்றுவிக்கிற விழாவாக அமைந்து விட்டதே... என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை.

எழுந்து பார்த்தாள்.

பதினொரு மணி இருக்கும். சொட்டுத் தூக்கம் கூட வரவில்லை.

கவிதையாவது எடுத்துப் படிக்கலாம் என்றால் அந்தக் கவிதைப் புத்தகங்களுக்குப் பின்னாலே சக்திவேலின் முகம் தான் ஜூம் செய்தாற்போல வந்தது.

பணக்கார வீடுகளிலே உறவுகளுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்வது சொத்து வெளியே செல்லாமல் பார்த்துக் கொள்வதையெல்லாம் பற்றி இளமதி நிறைய கேள்விப்பட்டு இருக்கிறாள்.

அவள் கல்லூரியில் கூட ஒரு பெண் மிக அழகாக இருப்பாள். அவளைத் தாய் மாமனுக்குக் கல்யாணம் செய்து வைத்தார்கள். தாய் மாமன் இத்தனைக்கும் பிசினஸில் இருந்தார். படிப்புக்கூட குறைவு தான். ஏதோ ஜவுளி வியாபாரமாம். அந்தப் பெண்ணோ அழகும் அறிவுமாக இருப்பாள். கல்லூரியிலே ஏதாவது பிரச்னை வந்துவிடக் கூடாது என்று முதலாம் ஆண்டு படிக்கும்பொழுதே அவளுக்குத் திருமணம் செய்து கல்லூரிக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

இப்படியெல்லாம் கணக்குப் போடும் மனிதர்கள் இங்கே இருக்கிறார்கள். இதற்கு நடுவே தான் யாருக்கு சரி என்று சொன்னாலும் அதனால் மற்றவர்களுக்குப் பிரச்னை வருமே... என்று அவளுக்குள் கவலை தோன்றியது.

சக்திவேலாவது கொஞ்சம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். கருணாகரன் மனத்தில் என்ன இருக்கிறது என்றே புரியவில்லையே. அவனுடைய அம்மா கூட கேலி செய்து



கொண்டிருந்தார்கள். 'பாத்தியாம்மா... என் மகன்... நகைக் கடைக்குப் போய் ஒரு மணி நேரம் உட்காந்து உனக்காகக் கொலுசு தேர்ந்தெடுத்துட்டு வந்திருக்கான்' என்று கேலி செய்தார்கள்.

அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அவன் தேர்ந்தெடுத்திருந்த டிசைனும் அவளுக்கு மிகவும் பிடித்தது. தனக்குக் கொலுசுகள் பிடிக்கும் என்று எப்போதோ அவனிடம் பேசிக்கொண்டிருந்ததை நினைவில் வைத்துக் கொண்டு அதற்காக முயற்சி எடுத்து இப்படியொரு அழகான பரிசைக் கொடுத்திருக்கிறான் கருணாகரன்.

இதன் மூலமாக தனக்குச் செய்திகள் சொல்லப்படுகிறதா? இவையெல்லாம் வெறும் பரிசுகள் தானா... பேசாமல் நான் அலுவலகத்துக்கு வரவில்லை என்று சொல்லி விட்டு இருந்திருக்கலாமோ... உள்ளே போய் தேவையில்லாத தலைவலிகளை வாங்கிக் கொள்கிறோமோ... என்பதில் அவளுக்குக் குழப்பமாக இருந்தது.

வேண்டாம். இதையெல்லாம் நினைக்கவே வேண்டாம். வேறு எதையாவது யோசிப்போம் என்று டிவியிலே குழந்தைகளுக்கான சேனலைப் போட்டு வேடிக்கைப் பார்க்க ஆரம்பித்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக அதில் லயித்தாள்.

அரை மணி நேரம் போயிருக்கும். அவளுடைய செல் போன் சிணுங்கியது. எடுத்து காதுக்கு கொடுத்தாள். "பிலேட்டட் விஷ்சஸ் மேடம்... ஹேப்பி பர்த் டே..."என்று சிம்மேந்திரனின் குரல் சிங்கம் போல் கம்பீரமாக ஒலித்தது.

சட்டென்று அவள் சுறுசுறுப்பானாள். "தேங்க் யூ சார்... தேங்க் யூ.." என்றாள்.

"சாரி மேடம். நேரம் கெட்ட நேரத்துல கூப்பிட்டுட்டேனோ... தூங்கிட்டீங்களோ..." என்றான்.

"இல்லை... இல்லை... சும்மா தான் டிவி பார்த்துக் கிட்டிருக்கேன்" என்றாள்.

"டி.வியா...? இந்த நேரத்திலா...?"

"ஆமாம். குழந்தைகளுக்கான சேனல்"என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்தான்.

"பிறந்தநாள்ன உடனே குழந்தை ஞாபகம் வந்துருச்சு போல..." என்றவன் ஆழமான குரலில் சொன்னான்.

"இளமதி மேடம்! ஐ ஆம் வெரி சாரி. சின்னு மூலமா நீங்க கூப்பிட்டிருந்திங்க... ரொம்ப தேங்ஸ்... என்னைக் கூப்பிட்டதுக்கு. ஆனா இன்னைக்கு ஒரு முக்கியமான விஷயமா நான் வெளியூர் போயிட்டேன். ஜஸ்ட் நவ்... இப்பத்தான் ஃபைவ் மினிட்ஸ்க்கு முன்னாடி தான் வீட்டுக்கு வந்தேன். அன்னைக்கு ஒரு ஸ்கீம் பிளான் பண்ணினோம்... இல்லையா... அது சம்பந்தமான ஏற்பாடு களுக்காக ரெண்டு நாளா வெளியூர் போயிட்டேன். இல்லை, மேடம். எல்லாரும் சரின்னு சொல்லும் பொழுதே அந்த ஸ்கீம் பண்ணிடலாம் அப்படீங்கற ஆர்வம். எத்தனையோ குடும்பங்களுக்கு இது உதவியாக இருக்கும். அதனால் உங்க ஒருத்தரோட பிறந்த நாளுக்கு லேட்டா விஷ் பண்ணினா... நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்கங்கற நம்பிக்கை... வரமுடியலைன்னாலும் கூட புரிஞ்சுக்கு வீங்க என்கிற நம்பிக்கை"என்றான் இதமான குரலில்.

இளமதி நெகிழ்ந்து போனாள்.

"பரவாயில்லை, பரவாயில்லை. நீங்க சொல்றது கரெக்ட் தான். இது ஜஸ்ட் ஒரு ஃபங்ஷன் அவ்வளவு தானே. ஆனா நீங்க சொன்ன மாதிரி அந்த ஸ்கீம் ரெடியானா எத்தனையோ பேருக்கு மாசத்துக்கு மளிகை வாங்குறதுக்கு ஒரு ஷூரிட்டி இருக்கும். இல்லைங்க சிம்மேந்திரன்"என்றாள்.



"ஆமாம் மேடம். தேங்க் யூ. புரிஞ்சுகிட்டீங்களே... ரொம்ப நன்றி. நூறாண்டு காலம் வாழ்க"என்றான் அந்தப்புறம் இருந்து.

"நூறு வருஷமா...?"என்று அவள் சிரிக்க...

"ஏன் மேடம். நூறு வருஷமா... அப்படீங்கறீங்க... வாழ்க் கையை நேசிச்சோம்னா... நூறு வருஷம் என்ன.. இருநூறு வருஷம்கூட வாழலாம். அதுவும் உங்களுக்கெல்லாம் என்னம்மா... தேவதைகள். நீங்கெல்லாம் அழகா பறந்து பறந்து வாழ்க்கையை நடத்துங்க. மை பெஸ்ட் விஷ்ஸஸ்... குட் நைட். வைக்கட்டுமா-?"என்று போனை வைத்து விட்டான்.

இதயத்தில் இருந்து வந்த யதார்த்தமான அந்த வாழ்த்து இன்றைக்கு வந்த பரிசுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகத் தோன்றியது. மற்ற எல்லாவற்றையும் மறந்து மகிழ்ச்சியோடு அவள் படுக்கையில் சாய்ந்தாள்.

ஆழ்ந்து உறங்கியும் போனாள்.!

இதற்குப் பின்னாலே என்னென்ன பிரச்னைகள் வரப் போகிறது... என்று லேசான ஒரு கவலை தோன்றினாலும் அதை நாளைக்கு... வருகிறபொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக்கொண்டாள். அது அவ்வளவு சுலபமாக இருக்கப்போவதில்லை என்பது அப்பொழுது அவளுக்குப் புரியவில்லை.

★ ★ ★

## அத்தியாயம் 15

**சி**ன்னதொரு துண்டை இடது தோளில் போட்டுக் கொண்டு வாஷ்பேஸினுக்கு முன்னால் நின்றபடி பல் துலக்கிக் கொண்டிருந்தான் சிம்மேந்திரன்.

கூடத்தின் ஓரத்தில் வந்து நின்றார் அம்மா.

"என்னம்மா...?"என்று திரும்பிப் பார்த்தான்.

அம்மா தயங்கினாற்போல நின்றார். "ஏம்மா... ஏதாவது பணம்கிணம் வேணுமா?"என்றான்.

இல்லை என்று குறுக்கும் மறுக்குமாக தலையை ஆட்டினார்.

"அப்புறம். வேறென்ன விசேஷம்? சொல்லுங்க..."என்று புன்னகைத்தான்.

"இல்லை தம்பி. இன்னைக்கு நீ லீவு போட முடியுமா?" என்றார் அம்மா.

"ஏம்மா... திடீர்னு சொல்றீங்களே... லீவுன்னா முதல் நாளே சொன்னாத் தாம்மா... சரிப்படும்"என்றான்.

"அது தெரியும். இன்னைக்கு ஒரு முக்கியமான விஷயம்"என்றார் அம்மா.

"என்ன விஷயம். ஏன்னா... நான் போனாத்தான்... நிறைய விஷயங்கள் அங்கே கோஆர்டினேட் பண்ண முடியும். திடீர்னு லீவு எடுக்க முடியாதேம்மா... விஷயத்தைச் சொல்லுங்கம்மா..."என்றான்.

"இல்லை தம்பி. நம்ம சம்பந்தி வீட்ல இருந்து வர்றாங்க. மாப்பிள்ளையோட அம்மாவும் தம்பியும் தங்கச்சியும் வர்றாங்க..."என்றார்.

"ஓகோ. இப்பத்தான் சொன்னாங்களோ..."என்றான்.

"இல்ல. நேத்து நைட்தான் சொன்னாங்க. நாமளே சமாளிச்சுக்கலாம்னு நினைச்சேன். இருந்தாலும் நீ ஒரு நாள் லீவு போட்டுட்டு இருந்தீன்னா நல்லா இருக்கும்"என்றார்.

"ஓகோ..."என்று யோசித்தான். தங்கைக்காகவாவது சம்பந்தக்காரர்களை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாச்சே... என்று தோன்றியது.

"எத்தனை மணிக்கும்மா வர்றாங்க...?"என்றான் சிந்தனையுடன்.



"அநேகமா ஒரு பதினோரு மணிக்கு வருவாங்கன்னு நினைக்கிறேன்"என்றார் அம்மா.

"சரிம்மா. நான் ஒன்னு பண்றேன். ஆபீஸ்க்கு போயிட்டு. அங்கே கொஞ்சம் ஆர்கனைஸ் பண்ணிட்டு ஒரு பன்னிரெண்டு மணிக்கு நான் வந்துரட்டுமா, ஓகே..." என்றவன் நாக்கைக் கடித்துக் கொண்டு..."அது சரியா இருக்குமாம்மா..."என்றான்.

"போதும்ப்பா..போதும்ப்பா... நீ பன்னிரெண்டு மணிக்கு வந்துட்டாலே போதும்"என்றாள் அம்மா உற்சாகமாக.

"அப்புறம் தம்பி..."என்றார் அம்மா, ஏதோ சொல்ல மறந்து விட்டவர் போல.

"சொல்லுங்கம்மா..."என்றபடி சிம்மேந்திரன் திரும்பிப் பார்க்க...

நினைவை மாற்றிக் கொண்டவர், "சரி, அதை அப்புறம் பேசலாம் தம்பி"என்றார்.

"அம்மா தடபுடலா சாப்பாடு தயார் பண்ணிடுங்க. என்ன விஷயமா! வர்றாங்க..."என்று கேட்டான்.

"இல்லை. இங்க ஒரு முக்கியமான கல்யாணமாம். அதன் ரிசப்ஷன் இன்னைக்கு சாயங்காலம். அவங்க ஊர்ல கல்யாணம். இங்க ரிசப்ஷனாம். ரொம்ப வேண்டியவங்க என்கிறதுனால ரிசப்ஷனுக்கும் வர்றாங்களாம். அதான் மகளைக் கூட கூட்டிட்டு வர்றாங்க. இல்லாட்டி மகனும் அம்மாவும் மட்டும்தான் வந்துட்டுப் போவாங்க. நம்ம வீடு இருக்கிறதுனால மகளைக் கூட கூட்டிட்டு வர்றாங்க"என்று சொன்னார்.

மகளைக் கூட... மகளைக் கூட என்று அம்மா திரும்பத் திரும்பச் சொல்வதன் பொருளை அவன் புரிந்து கொள்ள வில்லை.

"ஓ! அந்தப் பொண்ணா... அவங்க பேரு என்ன சொன்னீங்க..."என்று கேட்டான்.

"அதாம்பா... மல்லிகா. நல்ல லட்சணமா இருப்பாளே..."

"ஓ... ஆமா..மா..."என்றவன் அதற்கு மேல் அதற்கு முக்கியத்துவம் தராதவனாக வெளியே போய் விட்டான்.

அம்மா யோசனையுடன் பார்த்துக் கொண்டு நின்றாள்.

சம்பந்தி வீட்டார்கள் இப்போது புதிதாக ஒரு விஷயத்தைக் கிளப்பி இருந்தார்கள். சிம்மேந்திரன் வீட்டில் இருந்து அவன் தங்கையை திருமணம் செய்யும்பொழுது அவர்கள் சாதாரண குடும்பமாகத் தான் இருந்தார்கள். இவர்களுக்கும் அவர்களுக்கும் ஏற்ற அளவு தான் பொருளாதார நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது சிம்மேந்திரனுடைய அசுர வளர்ச்சி அவர்களுக்கு ஒரு ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தது.

'என்னமோ ஃபீல்டு ஆபீஸர்னு சொன்னாங்க... ஏதோ பத்தாயிரம்... பதினைந்தாயிரம் சம்பளம் இருக்கும்னு நினைச்சுகிட்டோம். ஆனா இப்போ சிம்மேந்திரன் நல்ல சம்பளத்திலே இருக்காராமே' என்று அம்மாவின் வாயைக் கிண்டினார்கள்.

அவர் மகளின் பிரசவத்திற்காக அங்கே சென்றிருந்த பொழுது அம்மாவின் வாயைக் கிண்டினார்கள். அவர்களின் உள் மனம் புரியாத சிம்மேந்திரனின் தாய், "ஐயோ, அதை ஏன் கேட்கிறீங்க? நல்லா வளர்ந்துட்டான். இப்போ நாற்பதாயிரம் சம்பளம்"என்று பெருமையாக வேறு சொல்லி விட்டார்.

"நாற்பதாயிரம் சம்பளமா...?"என்று வாயைப் பிளந்தவர்கள் மெதுவாக அடுத்தக் கட்டத்துக்குத் தாவினார்கள். தாயும் சின்ன மகனும் பேசிக்கொண்டார்கள்.



சிம்மேந்திரனின் தங்கையின் கணவன், அந்த விவகாரங்களில் அவ்வளவு தலையிடுபவனாக இருக்கவில்லை. ஆனால் தாயும் தம்பியும் இது போன்ற பொருளாதார விவகாரங்களில் கொஞ்சம் ஆசை உடையவர்களாகத்தான் இருந்தார்கள்.

சின்ன மகன் தாயிடம் சொன்னான். "அம்மா. நாற்பதாயிரம் சம்பளம் மட்டுமில்லம்மா... அது பெரிய கம்பெனி. அந்த கம்பெனியில விசாரிச்சேம்மா... முக்கியமான ஆளாம்மா.. அங்க டைரக்டர்ஸ் லெவல்..ல தான் மச்சானுக்குப் பழக்கமாம். பேசாம நம்ம மல்லிகாவுக்கு பிடிச்சுப் போட்டிடலாமா?"என்றான்.

"அது சரி தம்பி. நீ சொல்றே... அவங்களுக்குப் பொண்ணைப் புடிக்கணுமே"என்று அம்மா சொன்னார்.

உடனே இளையவன், "ஏம்மா பொண்ணைப் புடிக்காமப் போயிடும்? மல்லிகாவுக்கு என்ன அழகு இல்லையா...? நல்லா லட்சணமாத்தானே இருக்கா...?"என்றான்.

"அது இல்லைப்பா... அந்த தம்பி நல்லா படிச்சிருக்கு. நம்ம பொண்ணு வெறும் பிளஸ் டூ தான். பிடிக்குமோ பிடிக்காதோ" என்று மறுபடியும் தயங்கினார்...

"முதல்..ல ஒரு தடவை இரண்டு தடவை தங்கச்சியைக் கூட்டிட்டு அங்கப் போவோம்மா... ரெண்டு பேரையும் பழக விடுவோம்மா... அதுக்கப்பறம் பேசுவோம்மா..."என்று ஐடியா கொடுத்து விட்டான்.

அதை மனத்தில் வைத்துக் கொண்டு தான் சிம்மேந்திரனின் தாயிடம் அவர்கள் தங்கள் மனதில் இருக்கும் அந்த எண்ணத்தைச் சொல்லி இருந்தார்கள்.

உண்மையில் சிம்மேந்திரனுடைய தாய்க்கும் அதில் விருப்பம் இல்லை. ஏனென்றால் பெண் கொடுத்து பெண் எடுப்பதில் பல சிக்கல்கள் இருந்தன என்பதை அவர்

அறிவார். அதனால் அவர் அதைத் தவிர்க்கத் தான் நினைத்தார். ஆனால் மகளின் கணவர் மிகவும் அமைதியான சுபாவம் உள்ளவர் என்றாலும் தாயும் இளைய மகனும் ஏதாவது ஒரு பிரச்னையைக் கிளப்பி விட்டு அவர்களுக்குள்ளே ஏதாவது ஒரு விரிசலை உண்டாக்கி விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவருக்கு ஏற்பட்டது.

எந்தத் தாய்க்கும் ஏற்படக்கூடிய இயற்கையான பயம் தானே அது?. ஆனால் புரிந்து கொள்ளாதவர் போல இருந்தாலும் கூட, எதற்கும் மகனிடம் ஒரு முறை கேட்டுப் பார்ப்போம். மகன் ஒருவேளை இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்வானோயானால் பிரச்னை இலகுவாக முடிந்து விடுமே என்று ஓரத்திலே ஒரு நப்பாசை. இன்னொரு புறத்திலே அவரது அறிவு சொன்னது, ஒரு பெண்ணைக் கொடுத்த இடத்திலே இருந்து வேறு பெண்ணை எடுப்பது என்பது என்றைக்குமே சிக்கல் தான் என்று.

'சரி, விதி விட்டபடியே ஆகட்டும் என்றபடி தான் மகனிடத்திலே லேசாகப் போட்டுப் பார்த்தார். ஆனால் மகனோ அதைச் சுத்தமாகப் புரிந்து கொள்ளவில்லை. மகளைக் கூட அழைத்து வருகிறார்கள், மகளைக் கூட அழைத்து வருகிறார்கள் என்று மந்திரம் ஜெபிப்பது போல நாலு முறை சொன்னாலும் கூட... அப்படியா அழைச்சுட்டு வரட்டுமே... என்பது போல இருக்கிறானே... என்பது போல எண்ணிக் கொண்டான்.

அதே நேரத்தில் பைக்கில் சென்று கொண்டிருந்த சிம்மேந்திரனுக்கு சட்டென பொறி தட்டியது. 'அதென்ன அம்மா... மகளைக் கூட அழைச்சுட்டு வர்றாங்க... மகளைக் கூட அழைச்சுட்டு வர்றாங்கன்னு ரெண்டு மூணு தடவை சொன்னாங்க' என்று எண்ணிக் கொண்டான்.

அந்தப் பெண்ணை திருமண விழாக்களில் பார்த்திருக்கிறான். ஒன்றும் குறை சொல்வதற்கில்லை, என்றாலும் கூட



அந்த வீட்டில் இருந்து பெண் எடுப்பது, ஏன்... திருமணத்தைப் பற்றியே இப்பொழுது எண்ணமில்லை.

'திடீரென்று ஏன் இப்படியொரு திட்டத்தை இவர்கள் ஆரம்பிக்கிறார்கள். அம்மா ஏதாவது பெருமையாகப் போய் எனக்கு நாற்பதாயிரம் சம்பளம் என்று சொல்லி இருப்பார்களோ...' என்ற எண்ணம் தோன்றியது.

சரி பார்க்கலாம் என்று அலுவலகத்தில் போய் அன்றைக்கு லீவு சொல்லி விட்டு சின்னசாமியிடமும் இளமதியிடமும் பேசினான்.

"திடீர்னு கெஸ்ட் வர்றாங்க சின்னு. நான் இன்னைக்கு அசைன் பண்ணி வச்சிருந்த ஒர்க்கெல்லாம் இது தான். முடிஞ்சா செய்ங்க. ஃபீல்டு ஆபீஸர் கவுதமன்கிட்ட சொல்லிடுங்க. அந்த ஃபீல்டுல வேலுசாமிகிட்ட சொல் விடுங்க" என்றெல்லாம் சொல்லிவிட்டு, "இன்னைக்கு ஒரு நாள் நான் லீவு எடுத்துக்கிறேம்ப்பா... வேற வழியில்ல. தங்கை வீட்டுக்காரங்க வர்றாங்க, சம்பந்திகள்ல! மதிப்பு குடுக்கணுமே" என்று சொல்லிவிட்டு கிளம்பி வந்து விட்டான்.

வந்ததற்குப் பிறகு தான் ஏண்டா வந்தோம் என்பது போல ஆகிவிட்டது அவனுடைய நிலைமை...

★ ★ ★

"சாப்பிடும்மா... என்ன நீ சாப்பிடவே மாட்டேங்கிற... சாப்பிடு"என்று உபசரித்தார் சிம்மேந்திரனின் அம்மா.

"இல்லைங்கத்தை... இவங்களெல்லாம் சாப்பிடட்டும். நான் பரிமார்றேன்"என்று எழுந்து கொண்டாள் மல்லிகா என்ற அந்தப் பெண்.

சிம்மேந்திரனும் அவனது தங்கையின் கொழுந்தனுமாகிய சுரேஷும்..., இரண்டு பேரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்கள்.

"அடிக்கடி அம்மா வேற அங்க வந்துடறாங்களா... நமக்கு இங்கே டேஸ்ட்டான சாப்பாடே இல்ல சுரேஷூ'' என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

"அது சரி. அண்ணியைப் பாத்துக்கிறதுக்கு அத்தை வேண்டியதிருக்கு. அம்மாவுக்கு வேற உடம்பு சரியில்லையே. அப்பப்ப ஒய்ஞ்சு உட்கார்ந்திடறாங்க. உண்மையிலேயே அத்தை வந்தது ரொம்ப ஹெல்ப்ஃபுல்லா இருந்தது''என்றான் சுரேஷ்.

"அதுக்குத் தான் நாங்க இங்க பிரசவத்துக்கு கூப்பிட்டுக் கறோம்னு சொன்னோம்''என்றான் சிம்மேந்திரன்.

"இல்லியே... நீங்க அடிக்கடி வெளியூருக்குப் போயிடறீங் களே... அத்தை மட்டும் தனியா என்ன பண்ணுவாங்க. அதுவும் அண்ணன் அங்கேயே பாத்துக்கலாம். ரெகுலராப் பார்க்கிற டாக்டர்கிட்டேயேப் பார்த்துக்கலாம் என்று ரொம்ப ஸ்டிராங்கா ஃபீல் பண்ணினாங்க. அதான்'' என்றான்.

"அதுசரி, மனசுக்கும் பிடிக்கணும்ல''என்று புன்னகைத் தான் சிம்மேந்திரன்.

அதற்குள்ளாக மல்லிகா, "வடை வைக்கட்டுமா, மச்சான்''என்று ஒரு வடையை எடுத்து வைத்தாள்.

"இல்லையில்லை... போதும் போதும்...''என்று அவன் தடுக்க "அப்படீன்னா கொஞ்சம் கேசரியாவது வச்சுக்குங்க'' என்று ஏதோ அவளே செய்தாற்போல உபசரித்தாள்.

சிம்மேந்திரன் சாதாரணமாக பெண்களோடு பழகிக் கொண்டிருப்பவன் என்பதால் இந்தப் பெண் அவனுக்கு வித்தியாசமாகத் தெரியவில்லை. இயல்பாகவே, "இல்லீங்க மல்லிகா..வேண்டாம், போதும்'' என்று இயல்பாகச் சொல்லி விட்டான்.



அம்மா ஒருவித பதட்டத்தோடேயே சிம்மேந்திரனையும் மல்லிகாவையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் போல தோன்றியது.

வெளி உலகத்திலே பழகுகிறவன் என்றாலும் பல்வேறு மனிதர்களிடம் பழகுகிறவன் என்பதாலும் காலையில் போகிறபொழுது ஏற்பட்ட சந்தேகம் இப்பொழுது லேசாக ஊர்ஜிதம் ஆகிறாற் போல தோன்றியது, சிம்மேந்திரனுக்கு.

அதற்குள்ளாக சுரேஷ் நேரடியாகக் கருத்துக்கு வந்தான்.

"அது சரி மச்சான், அம்மா தான் சாப்பாடு செஞ்சு போடணும்னு இருக்கா... ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்க வேண்டியது தானே...''என்று ஆரம்பித்தான்.

"ஆமாம்ப்பா... சுத்தி சுத்தி எங்க போனாலும் ஒரு பையன் கிடைச்சுடக் கூடாதே. உடனே கல்யாணம்னு ஆரம்பிச்சுடுவீங்களே''என்று கிண்டல் செய்தான் சிம்மேந் திரன்.

"இல்ல மச்சான். நேரங் காலத்துல கல்யாணம் பண்ணிக் கிறது நல்லது. இப்ப அண்ணன் பாருங்க கல்யாணம் பண்ணி செட்டில் ஆகிட்டாரு''என்றான்.

சட்டென்று சிம்மேந்திரனுக்கு விஷயம் புரிந்தது.

தன் அணுகு முறையை வேறுவிதமாக மாற்றிக் கொண்டான்.

"உங்க அண்ணனுக்கென்னப்பா... ஒரு பிரச்னையும் இல்ல. என் பிரச்னை அப்படியில்லையே. நீங்கெல்லாம் என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க. சிம்மேந்திரனுக்கு என்ன நாற்பதாயிரம் சம்பளம்னு நினைச்சுகிட்டிருக்கீங்க. ஆனா உண்மையில... தங்கச்சி கல்யாணத்துக்கு வாங்கின கடன்... இந்த வீட்டு மேல வாங்கின கடன்... அப்பா கடன் பண்ணி வச்சுட்டுப் போயிட்டாங்க. அதையெல்லாம் அடைக்கிற துக்கேச் சரியாயிருக்குப்பா. அதான் இந்த கடன்ல இருந்து

மீள்றதுக்கே இன்னும் இரண்டு மூணு வருஷம் ஆகும் போல இருக்கு. அதுக்கப்புறம் தான் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கணும்'' என்றான்.

அம்மா திகைத்துப் போய் அவன் முகத்தைப் பார்த்தாள். கண்களில் மட்டும் குறும்பு மின்ன அம்மாவைப் பார்த்து விட்டு, திரும்ப சுரேஷிடம் சொன்னான்.

''பேரு பெத்தப் பேரு..தாகேதிக்கு நீலு லேதுன்னு பழமொழி கேட்டிருக்கியா... அப்படித்தான். வெளியில பேரு சிம்மேந்திரன் ஃபீல்டு ஆபீஸர் தான். ஆனா இங்க நிறைய கம்மிட்மென்ட் இருக்கப்பா... அதெல்லாம் முடிக்றதுக்கு மூணு நாலு வருஷம் ஆகும். அதுக்கப்புறமாத் தான் அதைப்பற்றியே யோசிக்க முடியும்'' என்றான்.

சுரேஷின் முகம் வாடி விட்டது. தான் நினைத்த அளவிற்கு இங்கு விஷயம் இல்லை போலிருக்கிறதே என்று பேச்சை மாற்றினான்.

''அப்படீங்களா மச்சான்... இருக்கட்டும்..இருக்கட்டும். செய்ங்க... செய்ங்க'' என்றான்.

அதைத் தொடர்ந்து இன்னொரு வெடிகுண்டையும் போட்டான் சிம்மேந்திரன்.

''பேசாம மல்லிகாவுக்கு கல்யாணம் பண்ணிருங்களேன். அம்மாகிட்டே சொன்னா நல்ல மாப்பிளையாப் பார்த்து... கோயமுத்தூர் பக்கமாவே பார்ப்பாங்க. ஏன், நான் வேணும் னாலும் நல்ல மாப்பிள்ளையாப் பாக்கட்டுமா?'' என்றான்.

சுரேஷுக்கு இதைவிடவும் நேரடியான பதில் தேவையிருக்கவில்லை. அவனும் ஒரு நல்ல அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருப்பதால் பதிலைப் புரிந்து கொண்டான். அதற்குப் பிறகு கல்யாணம் என்ற பேச்சையே அவன் எடுக்கவில்லை.

சிம்மேந்திரன் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டான். அதற்குப் பிறகு மாலை வரை அவர்களை நன்றாக உபசரித்து



பஸ் ஸ்டாண்டிலே போய் பஸ் ஏற்றி விட்டு திரும்ப வண்டியிலே ஏறி உட்காரும்பொழுது தான், தான் சொன்ன பதில்களுக்கான காரணம் என்ன என்பது பட்டென்று புரிந்தது.

ஒரு அழகான முகம்...! அவன் முன்னே மனக்கண்ணிலே வந்து வந்து மோதி கலகலவென்று சிரித்தது.

* * *

## அத்தியாயம் 16

**வெ**டிச் சிரிப்பு சிரித்தார்கள் நான்கு பேரும்.

அதிலும் கருணாகரன், ஓங்கி ஒரு அடி அடித்தான் சிம்மேந்திரனை.

''எப்பா... வலிக்குது'' என்றான் சிம்மேந்திரன்.

எப்பொழுதாவது இப்படி நால்வரும் தனியாக அமர்ந்து பேசிச் சிரிப்பார்கள். முதலிலேயெல்லாம் சின்னசாமி, சிம்மேந்திரனை அழைத்தால், ''நீங்க மூணு பேரும் எதையாவது பேசுவீங்கப்பா... நான் வரமாட்டேன்'' என்பான் சிம்மேந்திரன்.ஆனால் சிம்மேந்திரனின் கலகலப் பேச்சும் குறும்புத்தனமாக நகைச்சுவையும் மற்ற மூவருக்குமே பிடிக்கும் என்பதால் சக்திவேலும் அவனை வற்புறுத்துவான்.

இப்படி ஆரம்பித்தது இப்பொழுது குறைந்தது பத்து நாட்களுக்கு ஒருமுறை இப்படி தனியாக அமர்ந்து பேசிச் சிரிப்பது என்பது வழக்கமாகி விட்டது.

சக்திவேல் முக்கியமான ஒரு நிபந்தனை... அந்த கூட்டத்திற்குப் போட்டிருப்பான்.

''இந்தா பாருங்கப்பா... ஆபீஸ் டெசிஷன்... முடிவுகளைப் பற்றிப் பேசக்கூடாது. பொதுப்படையா நாம பேசிச் சிரிக்கலாம்'' என்பது தான் அவன் விதித்த நிபந்தனை.

அதன்படி ஊர் உலகில் உள்ள விஷயங்களையெல்லாம் பேசிச் சிரிப்பார்கள். அதுமாதிரி அன்றைக்கும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"அப்புறம், எப்படியோ தப்பிச்சுட்டே..."என்றான் சக்திவேல்.

"ஆமாம்ப்பா... திடீர்னு ஒரு மெழுகுச்சிலை மாதிரி ஒரு ஆளைக் கொண்டு வந்து கண்ல காண்பிச்சு கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்கிறாங்க... நான் சிக்குவேனா.. நான் மாட்டேன்னு சொல்லிட்டேன்ப்பா..."என்றான் சிம்மேந்திரன்.

"இந்தப் படலம் எங்க வீட்ல எல்லாம் எப்ப ஆரம்பிக்கப் போவுதுன்னு தெரியலை"என்றான் சக்திவேல்.

"பொறுங்க... பொறுங்க... அதிகபட்சம் ஒரு வருஷம்... ஆரம்பிச்சுருவாங்க"என்றான் சிம்மேந்திரன்.

"அதெப்படியப்பா... முகத்துல எந்த சலனமும் இல்லாம இப்படியெல்லாம் பொய்யை உருவாக்கறே..."என்று கேட்டான் கருணாகரன்.

"அப்புறம், வேறே என்ன பண்றது?. எங்க அம்மாவுக்கு வீட்டு மேல கடன் இருக்குன்னு சொன்னது அதிர்ச்சி யாயிடுச்சு. எப்படா... எனக்குத் தெரியாம வாங்கினேங்கற மாதிரி பார்க்கறாங்க. அப்புறம் அம்மா, அவங்களை தவிர்க்கறதுக்காக பொய் சொன்னேன் அப்படீன்னு விளக்கம் சொன்னேன்"என்றான் சிம்மேந்திரன்.

"டேய்! எந்தெந்த மாதிரி பொய்யெல்லாம் சொல்ல லாம்னு ஒரு லிஸ்ட் போட்டுக் குடுறா..."என்று கேட்டான் கருணாகரன்.

"போங்க சார்... லிஸ்ட்... ரெடிமேடா வச்சுக்க முடியுமா? அதுக்கெல்லாம் அந்த நேரத்திலே பிரசன்ஸ் ஆப் மைன்ட் வேண்டும். டக் டக்குன்னு எதையாவது சொல்லிச் சமாளிக்கணும் சார். இல்லைன்னா எனக்கு ஃபோன் போடுங்க. தகுந்த மாதிரி சொல்றேன்"என்றான்.



"இப்படி பொய் பொய்யாச் சொல்லி தான் நம்ம கம்பெனியை வளர்த்துக்கிட்டு இருக்கியோ..."என்று கேட்டான் சக்திவேல்.

"அது தனி கதையப்பா... சில நேரத்துல இந்த பொம் பளைங்களைப் போட்டு கொடுமை பண்ணுவாங்களே ஆம்பளைங்க... அதெல்லாம் நீங்க ஃபீல்டுக்கு வந்தா தாம்ப்பா தெரியும். நாங்க மிடில் கிளாஸ்... நீங்க ரிச்... ஆனா இந்த ஏழையான குடும்பங்கள்ல வந்து பாருங்க. பெண்கள் எவ்வளவு கஷ்டப்படறாங்கன்னு"என்றான் சிம்மேந்திரன் உருக்கமான குரலில்.

"ஆரம்பிச்சுட்டாண்டா..."என்றான் கருணாகரன்.

"இல்லைப்பா... அவன் சொல்றது உண்மைதான். இறங்கிப் பார்த்தா தான் நிறைய விஷயங்கள் தெரியும்" என்றான் சின்னசாமி.

"ஓகே... ஓகே... அதை விடுங்க. அதை விட்டுட்டு நம்ம ஆபீஸ் கலாட்டா... எதையாவது சொல்லுங்க"என்றான் கருணாகரன்.

உடனே அதற்குத் தாவினார்கள். சற்று நேரம் கலகலப்பாகக் கழிந்தது.

"சரி, அடுத்த மீட்டிங் எப்போ?"என்றான் கருணாகரன்.

அவர்கள் இப்பொழுது சந்தித்து பேசிக் கொண்டிருந்தது ஒரு நல்ல ஹோட்டலில், தனியான ஏசி அறையில். அவர் களுக்கான உணவு வகைகளைச் சொல்லி விட்டு, மெதுவாக நேரத்தைக் கடத்திக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

சிம்மேந்திரன் அப்பொழுது தீவிரமான குரலில் சொன்னான். "இப்போதைக்கு சொல்ல முடியாது கருணா சார்! நான் நம்ம மளிகைக் கடை ஸ்கீம்ல ரொம்பத் தீவிரமா

இருக்கேன். த்ரீ மன்த்ஸ் டைம். அதுக்கப்பறமாதான் இந்த மாதிரி ரிலாக்சேஷனே''என்றான்.

கருணாகரன் எரிச்சலாகத் திரும்பி சக்திவேலைப் பார்த்தான்.

''இவனுக்கு என்ன கிறுக்கா பிடிச்சுடுச்சு? ஒரு ஸ்கீமை எடுத்துட்டா பேய் மாதிரி இறங்கி வேலை செய்யறான்'' என்றான்.

''நீங்க என்ன சொன்னாலும் சரி, இந்த ஸ்கீமைப் பொறுத்தவரை உயிரைக் கொடுத்து வேலை செய்யத்தான் போறேன்''என்றான், சிம்மேந்திரன்.

கேலியாகப் பேசினாலும் கருணாகரன் முகத்திலும் தீவிர பாடம் வந்தது.

''இல்லைப்பா... உண்மையிலே நல்ல ஸ்கீம் தான். செய், நானும் என்ன ஹெல்ப் வேணுமோ செய்யறேன்''என்றான்.

சக்திவேலும் அதேபோல முன்வந்தான்.

நால்வருமாக விளையாட்டுப் பேச்சை விட்டு விட்டு, அந்த திட்டத்திற்கான விஷயங்களைப் பற்றித் தீவிரமாகப் பேசினார்கள்.

சொன்னது போலவே மூன்று மாதங்கள் முடிந்து விட்டது.

★ ★ ★

கோவை நகரத்தின் மையப்பகுதியில் டவுன் ஹால் பகுதியிலே அழகான ஒரு கடை பிடித்திருந்தார்கள். ஆதிமூலம் தான் அந்தக் கடையை ரிப்பன் வெட்டித் திறந்து வைத்தார்.

கோவை மாவட்டத்தில் உள்ள முக்கியமான ஊர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஊரிலும் இரண்டு கடை மூன்று கடை என்று திறந்தார்கள்.



கோவையில் மட்டும் நான்கு திசைகளிலும் நான்கு கடைகள் என்று திறந்தார்கள். நடுத்தரமான ஒரு டிபார்ட் மென்ட் ஸ்டோர்... அதனுடைய நோக்கம் சேவை என்பதாக மட்டும் தான் இருந்தது. அதனால் எந்தவிதமான அலங்காரங்களையும் அவர்கள் செய்து கொள்ளவில்லை.

வாடிக்கையாளர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வாங்கிக் கொள்கிற வகையில் இரவு 10 மணி வரை கடை திறந்திருக்கும்.

காலை 6 மணிக்கே கடையைத் திறந்து விடுவார்கள் என்று வைத்துக் கொண்டார்கள். ஏனென்றால் கூலி வேலைக்குச் செல்பவர்கள் காலை யிலே வந்து வாங்கிக் கொள்ளவோ அல்லது மாலையிலோ வாங்கிக் கொள்ள வசதியாக இருக்கும் அல்லவா?

ரிப்பன் வெட்டித்திறந்து வைத்த பிறகு இருந்தவர்களுக்கு எல்லாம் குளிர்பானங்கள் வழங்கினார்கள். அன்றைக்கு வாங்குகிற பொருட்களுக்கு மட்டும் ஐந்து சதவீதம் கழிவு என்று அறிவித்து இருந்தார்கள். நிறைய் பெண்கள் வந்து வாங்கினார்கள்.

ஆதிமூலம், சிம்மேந்திரன், சின்னசாமி, இளமதி... நான்கு பேரும் அங்கே ஓரத்தில் கிட்டத்தட்ட அலுவலக அறை போலிருந்த அறையில் இருக்கை போட்டு அமர்ந்திருந்தனர். அப்போது ஒரு பெண் கிடுகிடுவென்று அறைக்கு வந்து கதவைத் தட்டினாள்.

சிம்மேந்திரன் தான் எழுந்து கதவைத் திறந்தான்.

உள்ளே வந்த பெண் கண்களைச் சுழற்றிப் பார்த்தாள். இருப்ப திலேயே ஆதிமூலம் தான் கொஞ்சம் வயதான வராக இருந்ததோடு அவரது உடையைப் பார்த்து இவர் தான் முதலாளியாக இருக்கும் என்று நினைத்து சட்டென்று அவரது காலைத் தொட்டு வணங்கினாள்.

"ஐயா, நீங்க நல்லாயிருக்கணும். நீங்க எவ்வளவு பெரிய காரியம் பண்ணியிருக்கீங்க தெரியுமா? ரெண்டு நாள் கூலிப்பணம் இல்லைன்னா... எங்க வீட்டுக் குழந்தைங்க பசியிலதான் இருக்கும். பசி ஆத்திருக்கீங்க ஐயா, பசி ஆத்திருக்கீங்க... எவ்வளவு பெரிய தர்மம் தெரியுங்களா இது... உங்களை மறக்கவே மாட்டேங்கய்யா..."என்று கண்ணீரோடு நன்றி சொன்னாள்.

"என்னம்மா... எழுந்திரு எழுந்திரு..."என்ற பதட்டமாகச் சொன்னார் ஆதிமூலம்.

"ஆமாங்கய்யா...! ரெண்டு நாள் மழை பெஞ்சதுன்னா... எங்க வூட்டு அடுப்பு எரியாதுங்க. அது கேஸ் அடுப்புன்னாலும் சரி, விறகு அடுப்புன்னாலும் சரி. கூலியும் சேர்ந்தாப்புல மூணு நாளைக்கு இல்லைன்னா... அரைப் பட்டினி தாங்க. இப்ப எப்படியோ பள்ளிக்கூடம் போற குழந்தைகளுக்கு..வீட்டு மனுஷங்களுக்கு எதையாவது சாப்பிடக் கொடுக்கலாம் அப்படீங்கற தெம்பு இருக்கு தய்யா... ரொம்ப நன்றிங்கய்யா..."என்று கையைக் கூப்பினாள்.

ஆதிமூலம் நெகிழ்ந்து போனார்.

"என்னம்மா நாங்க பெரிசா செஞ்சுட்டோம். நீங்க உங்க பணத்தை குடுக்கிறீங்க. வாங்கிக்கிறீங்க. திருப்பிக் குடுக் கிறீங்க. சரியாக் குடுத்திங்கன்னா மறுபடியும் வாங்கிக்கலாம். அவ்வளவு தானே..."என்றார்.

"அந்த நம்பிக்கையைக் கூட யாரும் எங்க மேல வைக்கலைங்களே ஐயா. ஒரு முன்னூறு ரூபா காசு வேணுன் னாலும் அண்டா குண்டா வச்சு... அப்படியில்லைன்னா பத்து வட்டிக்குத் தான் போகணும். எங்களையும் மனுஷங் களா நம்பி இப்படி ஒரு ஏற்பாடு செஞ்சு குடுத்திருக்கீங் களே... இதுக்கு நாங்க ஏழேழு ஜென்மத்துக்கும் நன்றி சொல்லணுங்கய்யா..."என்றாள்.



உடனே சிம்மேந்திரன் இடையிலே புகுந்து, "அக்கா, அது மட்டுமில்லைங்க. பள்ளிக்கூடம் கூட கட்டப்போறதா ஐயா சொல்லிக்கிட்டு இருக்காங்க"என்றான்.

அவள் மறுபடியும் படாரென்று காலிலே விழுந்தாள்.

"ஐயா, அது இன்னும் பெரிய காரியங்கய்யா... அது வேற வந்துட்டா நாங்கெல்லாம் உங்களுக்குக் கோயில் கட்டி கும்பிடுவோங்க... எங்க குழந்தைகளும் நல்ல பள்ளிக் கூடத்தில படிக்கணும்னு எங்களுக்கும் ஆசை இருக்குங்க. பணம் கட்டி படிக்க வைக்க முடியலைங்க. அந்த நல்ல படிப்பை நீங்களும் குடுத்திங்கன்னா ரொம்ப நல்லாயிருக் குங்க ஐயா"என்றாள் மறுபடியும் கைகூப்பி.

'இவனுக்கென்னம்மா, இவன் எதையாவது சொல்லிக் கிட்டு இருப்பான். இவன் தான் இந்தத் திட்டத்தையே சொன்னது. யாருக்காவது நன்றி சொல்லணும்னா இந்தப் பயலுக்குச் சொல்லுங்க"என்றார் ஆதிமூலம் சிம்மேந்திரனை கை காட்டி.

"ஐயோ, அந்தத் தம்பியை எங்களுக்குத் தெரியாதுங்களா. மின்னலாட்டம் எங்க பக்கத்துல வந்து வந்து... நல்லது செய்வாரே,. அவர் எப்ப எங்க ஏரியாவுக்கு வந்தாரோ அன்னையில் இருந்தே நல்லகாலம் பிறந்துட்டுதுங்க. அந்தத் தம்பிக்கு நல்ல பொண்ணா வாய்ச்சு... நல்லபடியாக வாழ்க்கை நடத்தணுங்க. நான் தினமும் சாமி கும்பிடும் பொழுது தம்பிக்கும் சேர்ந்து கும்பிடறோங்க..."என்றாள்.

சிம்மேந்திரனே இந்த வார்த்தைகளைக் கேட்டு கொஞ்சம் நெகிழ்ந்து விட்டான். அமைதியாக அமர்ந்து விட்டான்.

"ஆகட்டும்மா. நீங்கெல்லாம் நாணயமா இருந்திங்கன்னா என்னென்ன செய்ய முடியுமோ... அதையெல்லாம் செய்யறோம்" என்றார் ஆதிமூலம்.

"போதுங்கய்யா... இந்த அளவுக்கு எங்களுக்கெல்லாம் சப்போர்ட் கொடுக்கிறீங்களே... எத்தனையோ பொம் பளைங்க வயித்துல பாலை வார்த்திருக்கீங்கய்யா..."என்று அவள் மறுபடியும் வெகுவாக நன்றி சொல்லி விட்டு போனாள்.

அந்தப்பெண் அந்தப்பக்கம் போனவுடனே அறையில் கனத்த அமைதி நிலவியது. ஒரு நிமிடத்துக்குப் பிறகு ஆதிமூலம் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு சிம்மேந் திரனை அருகில் அழைத்தார். சிம்மேந்திரன் பவ்வியமாக வந்து அருகில் நின்றான்.

தோளைத் தட்டிக் கொடுத்து விட்டு, "நல்லப் பையன் தாண்டா நீ... ம்... உன்னைப் பெத்தவ உண்மையிலேயே பெருமைப்படணும். உனக்கு யார் வாய்ச்சாலும் அவ வாழ்க்கை நல்லாத்தாப்பா இருக்கும்"என்று தட்டிக் கொடுத்தார்.

சட்டென்று சிம்மேந்திரனும் அவர் காலைத் தொட்டு வணங்கினான்.

"நல்லாயிருப்பே... நல்லாயிருப்பேப்பா..." என்று மறுபடியும் கூறினார்.

அந்தக் கணநேர இடைவெளிக்குள்ளாக சிம்மேந்திரனின் பார்வை அவனையும் அறியாமல் திரும்பியது.

இளமதி தன்னை மறந்து அங்கே நடந்த நிகழ்வுகளை ஒரு நெகிழ்வோடு அமர்ந்திருந்ததையும் அவள் கண்களின் ஓரத்தில் லேசாக கண்ணீர்த் துளிகள் துளிர்த்ததையும் பார்த்து அவனும் தான் நெகிழ்ந்து போனான்.

"அட... டாடா... ரொம்ப சென்டிமென்டா இருக்கு..." என்றான் சக்திவேல்.

சட்டென்று எல்லாரும் சிரித்துக் கொண்டு இயல்புக்குத் திரும்பினார்கள்.



"ஏம்ப்பா... அவன் செய்த நல்லதைத் தானே எல்லாரும் வந்து பாராட்டறாங்க"என்றார் ஆதிமூலம்.

"ம்ஹூம்... என்னமோ நீயும் நானும் வேலை செய்யாதது மாதிரி. இந்த இளமதி எத்தனை அலைஞ்சது தெரியுமா?" என்றான் சக்திவேல்.

சிம்மேந்திரன் நிற்பதைப் பார்த்த ஆதிமூலம், "உட்காரப்பா..." என்று சொல்ல அமர்ந்து கொண்ட சிம்மேந்திரன் சொன்னான். "ஐயா, நீங்க எல்லாத்தையுமே சொல்லியிருக்கணும். என்னை மட்டும் சொல்லிட்டீங்க. ஐடியா குடுத்தது நான்னாலும் சக்தி சாரும், கருணா சாரும், சின்னு சாரும் இந்த மூணு மாசமா அலைஞ்ச அலைச்சல்... சும்மா சொல்லக்கூடாதுங்க ஐயா, பெரிய நிறுவனங்களாப் புடிச்சு,, ஹோல் சேல்ல வாங்கி ஒவ்வொரு ஊர்களிலும் கடைகள் பிடிச்சு அட்வான்ஸ் கொடுத்து... இத்தனைக்கும் துணிஞ்சு இன்வெஸ்ட்மென்ட் செய்து... இத்தனைக்கும் நீங்க கை குடுத்தீங்களே ஐயா..."என்றான், நெகிழ்ச்சியோடு.

"இருக்கட்டும்ப்பா... சும்மா அன்னதானம் செய்யறதுக்கு நம்மால முடியாது. இருக்கிற பணத்தை ரொட்டேஷன் விட்டு பாவம்... பாரு... ரெண்டு நாள் கூலி இல்லைன்னா பட்டினிங்கறாங்க... கந்து வட்டிங்கறாங்க...அவங்க மாசத்துக்கு ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி நிம்மதியாச் சாப்பிட முடியும். காசு வர்றப்ப கட்டிட்டு திரும்பவும் சாப்பிட முடியும்ங்கற ஸ்கீம் குடுத்தியே... அதுவே பெரிய விஷயம்தான். அதுல யார் உழைச்சிருந்தாலும் சரி, நான் உழைச்சேன், நீ உழைச்சேங்கறது முக்கியமே இல்லை. ஸ்கீம் ஜெயிச்சது... அது தான் முக்கியம்"என்றார்.

"ஆமாங்கய்யா..."என்றான் சிம்மேந்திரன்.

"தட்ஸ் ட்ரூ"என்றான் சின்னசாமி.

"ஆமாம் சித்தப்பா, கரெக்ட் தான்"என்றான் சக்திவேல்.

அங்கே மகிழ்ச்சி நிலவியது.

எத்தனைக்கெத்தனை அந்த நாளில் ஆதிமூலம் பாராட்டினாரோ அத்தனைக்கத்தனை நிலைமை மாறும் என்றோ... இதே ஆதிமூலம், அதே சிம்மேந்திரனை நிற்க வைத்து கேள்வி கேட்கப் போகிறார் என்றோ அவமானப் படுத்தப் போகிறார் என்றோ அன்றைக்கு அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

★ ★ ★

## அத்தியாயம் 17

சக்திவேல் தெளிவாக முடிவெடுத்து விட்டான்.

இப்போதைக்கு மனது சஞ்சலத்தில் தான் இருந்தது. இப்போதைக்கு மனதில் இளமதிக்கு ஒரு இடம் இருந்தது என்பது அவனுக்கு தெளிவாகப் புரிந்தது.

அப்பா ஜாடைமாடையாகச் சொன்னதன் காரண மாகவோ இல்லை தனக்கே அவளைப் பிடித்தது என்பதன் காரணமாகவோ தெரியவில்லை. ஆனால்... இளமதியின் மணமேடை என்ற களத்திலே நிறையபேர் இருக்கிறார்கள் போல அவனுக்குத் தோன்றியது.

கருணாவைக்கூட ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. இளமதியை நேசிக்கிறானோ என்பது போல் இருந்தது. ஏனென்றால் இளமதியை அவன் பார்க்கும்பொழுதே அவன் கண்களிலே கனிவு கூடியது. லேசான புன்னகை அரும்பியது. 'இளமதி...' என்றும் அழைக்கும்பொழுதே அதில் ஒருவிதமான அன்பு தெரிந்தது.

அது என்ன விதமான அன்பு என்பது இப்போதைக்குப் புரியவில்லை.

இன்னொரு பக்கம் எந்தக் கூட்டத்திலாகட்டும்... எந்தப் பார்ட்டியிலாகட்டும் அவள் சட்டென்று ஓடிப்போய் சின்னுவின் அருகில் தான் நிற்கிறாள். அதிலும் புஃபே



என்றால் கட்டாயமாக அவள் போய் சின்னுவின் அருகில் தான் நிற்கிறாள்.

சின்னு வேடிக்கையாகப் பேசுகிறான். இன்னமும் கல்லூரிப் பையன் போலவே கலாட்டா செய்து கொண்டிருக்கிறான். அதைக் கேட்க அவளுக்கு கலகல வென்று சிரிப்பு வருகிறது என்று அதற்குக் காரணம் சொல்லிக் கொள்ளலாம்.

சின்னுவுக்குக் கண்டிப்பாக தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. இந்தக் கம்பெனியில் தங்கள் குடும்பம் ஒரு பார்ட்னராக இருப்பதே பெரிய விஷயம் என்று திரும்பத் திரும்ப அவன் தந்தை சொல்லியிருப்பதால் இளமதியைத் திருமணம் செய்து கொள்வது என்று நினைப்பதெல்லாம் தன்னை மீறிய விஷயம் என்ற தெளிவு சின்னசாமிக்கு இருக்கிறது என்று தான் சக்திவேலுக்குத் தோன்றியது.

யார் கண்டது? இந்த இளமதி போய் அவனிடத்தில் வலிந்து வலிந்து போய் பேசுகிறாள். அவளாகத்தான் வந்து பழகினாள். நாம் வேண்டாம் என்று ஏன் சொல்ல வேண்டும். தனக்கு கிடைக்கிற அதிர்ஷ்டத்தை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் கேட்டால் என்ன சொல்வது?

அப்படிப் பார்த்தால் இந்த சிம்மேந்திரன் கூட போட்டியில் இருக்கிறானோ... என்றும் தோன்றியது. ச்..சே... சிம்மேந்திரனுக்கு என்ன இருந்தாலும் தன்னுடைய இடம் என்ன என்பது தெரியும்.

நண்பர்களாக நானும் கருணாவும், சின்னசாமியும், விட்டுக் கொடுத்தால் கூட பெரியவர்கள் அவனை சமதளத்தில் வைக்க மாட்டார்கள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். வீணாக தன் எதிர்கால வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ள மாட்டான் என்று தோன்றியது.

அப்பொழுது தான் அந்த முடிவைச் செய்தான். எதற்காக இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்க வேண்டும். பட்டென்று இளமதியிடத்திலே... தனக்கு இப்படியொரு எண்ணம் இருக்கிறது என்று சொல்லிவிட வேண்டும்.

முன்பெல்லாம் இந்த இயற்கை அழகையோ, ஏரியின் அழகையோ, சுற்றுப்புற சூழல்களையோ கண்டு கொள்ளாத தன் மனது இப்பொழுது எதைக் கண்டாலும் ரசிக்கிறது. அவளுக்குப் பிடிக்கும் என்பதற்காகக் கவிதைப் புத்தகங் களை எல்லாம் வாங்கி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்று பைத்தியம் பிடித்துக் கொண்டு அலைவது என்பது உணர்வு ரீதியாக சரியென்றாலும் கூட சிந்தனை செய்து பார்க்கும்பொழுது இது அவ்வளவு முக்கியமான விஷயமா என்பது தெரியவில்லை.

எதற்கும் கனவிலே கோட்டைக் கட்டிக்கொண்டு அது கலைந்து போனபிறகு தாடி விட்டுக் கொண்டு திரியாமல் இளமதியிடத்திலே பேசிப் பார்த்து விடலாம்.

இன்னொரு மனத்தின் ஒப்புதலையும் வாங்கிக் கொண்டு தானே நம்முடைய கனவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி அவளுக்கும் சம்மதம் என்றால் தனது கனவுகளை மெய்ப்பித்துக் கொள்வதற்கான முயற்சிகளில் இறங்கலாம்.

ஒருவேளை அவளுக்குச் சம்மதம் இல்லையென்றால்... இல்லையென்றால்... இதை நினைப்பதற்கே அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனாலும் நினைக்க வேண்டிய திருந்தது. எதற்கும் கேட்டு விடலாம். நீண்டதொரு பெருமூச்சு விட்டுக் கொண்டான். தன் மனத்தை தானே சமாதானப்படுத்திக் கொண்டான்.

'நானொன்றும் சின்னக் குழந்தையில்லை... வாழ்க்கையை சந்தித்துத் தான் ஆக வேண்டும். ஒருவேளை இளமதிக்கு வேறு யாராவது மீது விருப்பம் என்றால்



கண்ணியமாக அதை ஏற்றுக் கொண்டு விலகி விடுவது தான் மரியாதை.

பெரிய அளவிலே கனவுகளை வளர்த்துக் கொண்டு பின்னால் வருத்தப்படுவதைக் காட்டிலும் இது நல்ல விஷயம் என்று அவனுக்குத் தோன்றியது.

இளமதியின் அனுமதியைப் பெறாமல் அவளைத் தன் முழுமையான வாழ்க்கைத் துணை என்று கற்பனை செய் கின்ற அபத்தத்தையெல்லாம் அவன் செய்யவில்லை என்றாலும் கூட இளமதி பற்றிய சிந்தனை தன் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது என்பதை அவன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

இன்றைக்கு அலுவலகத்தில் அழகான ரோஜா வண்ண புடவை கட்டி அதற்கேற்ற வகையிலே பவள மாலையும் அணிந்து சின்ன அழகிய பவளக் கம்மல்கள் அணிந்து வந்திருந்தபொழுது அவ்வளவு எடுப்பாக இருந்தது. இன்னொரு பெண்ணை அவளது அனுமதியின்றி ரசிக்கக் கூடாது என்ற கண்ணியத்துக்காகத் தான் அவன் மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டான்.

எத்தனை நாளைக்குத் தான் இப்படி கண்ணியத்துக்கும் காதலுக்கும் இடையே போர் நடக்க முடியும் என்று முடிவு செய்தவுடன் மணியைப் பார்த்தான். அப்பொழுது இரவு எட்டரை மணியாகி இருந்தது. கண்டிப்பாக இளமதியிடம் பேசி விட வேண்டும் என்று முடிவு செய்தான்.

இதேநேரம் போன் ஒலித்தது. அந்தப்புறத்தில் இருந்து பேசியது யார்? இளமதி. இளமதியே தான்.

★ ★ ★

**இளமதியின்** மனதுக்குள்ளே யோசனை ஓடிக்கொண் டிருந்தது. முன்பும் அலுவலகத்துக்குப் போகும்பொழுது நன்றாக உடை உடுத்திக் கொள்வாள் என்றாலும் இப்பொழு

தெல்லாம் கொஞ்சம் நல்லவிதமாக அலங்கரித்துக் கொண்டு போக வேண்டும் என்று தோன்றியது.

தேடித்தேடி மேட்சிங் நகைகள்... செயற்கை நகைகள் போட்டுக் கொள்கிறாள். மிக அழகாக... அளவாகத்தான் போட்டுக் கொள்கிறாள் என்றாலும் கூட சட்டென்று ஒரு நிமிடம் யார் அவளிடம் பேச வந்தபொழுதும் கண்கள் அவள் நகைகள் மீதும் உடைகள் மீதும் ஒரு வட்டம் ஓடி பிறகு தான் அவள் சொல்கிற விஷயத்தைக் கவனிக்கிறார்கள் என்பது புரிந்து ஒரு பெருமை இருந்தது என்றால் அதற்காகவே கொஞ்சம் கூடுதலாக கவனம் செலுத்து கிறோமோ என்று தோன்றியது.

அப்பொழுது தான் அவள் மனத்தில் இந்த சிந்தனை ஓடியது. கருணா இப்பொழுதெல்லாம் மிகவும் அன்பாக நடந்து கொள்கிறார். ஆனால் பார்வையில் எந்த வேறுபாடும் இருப்பதில்லை. கனிவு இருக்கிறது. தனக்கு ஏதாவது ஒரு சின்ன பிரச்னை என்றாலும் கூட அதிலே தலையிட்டு தீர்த்துக் கொடுக்கிற ஆர்வம் இருக்கிறது. அதைத் தாண்டி வேறு எந்த எண்ணமும் இல்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

சின்னுவைப் பொறுத்தவரை இன்னும் கொஞ்சம் தெளி வாகவே இருக்கிறார். அவரிடம் தான் கொண்டிருப்பது நட்பு தான் என்பது நன்றாகப் புரிந்தது.

ஒரே ஒருவரிடத்தில் தான் அவளுக்கு கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டது. சக்திவேல்... அதிலும் இன்றைக்கு இந்த உடை உடுத்திக் கொண்டு போனபொழுது ஏதோ சொல்வதற்காக வந்த சக்திவேல், ஒரு நிமிடம் நின்று விட்டு லேசாக விசிலடித்து விட்டு, ''சூப்பர் அம்மணி. என்ன செலக்ஷன்...! நல்லாயிருக்கு... டிரஸ், ஜூவல்ஸ்...! எல்லாமே நல்லாயிருக்கு, இளமதி 'என்று பாராட்டினான்.



அவன் தன்னை மறந்து அந்தச் செயலைச் செய்து விட்டான் என்றாலும் அவள் மனத்திலும் குப்பென்று ஒரு சந்தோஷம் பொங்கத்தான் செய்தது.

அதை சின்னு பார்த்து விட்டு, ''என்ன விசேஷம் இளமதி? டிரஸ் கிரான்ட்டா பண்ணியிருக்கீங்க''என்று கேட்ட பொழுது அதில் எந்த விகல்பமும் இல்லையென்று புரிந்தது.

கருணா வழக்கம்போல, ''என்ன ஆபீஸ்ல இன்னைக்கு யாரையும் வேலை செய்ய விடறதில்ல என்ற உத்தேசமா...'' என்று கிண்டல் செய்தபொழுது அதுவும் இயல்பாகத் தோன்றியது.

இதற்கெல்லாம் நேர் மாறாக சிம்மேந்திரனிடத்திலே ஏதோ பேசுவதற்காக அவள் சென்றபொழுது திரும்பிய அவனது கண்கள் ஒரு நிமிடம் நிலை குத்தி நின்று விட்டு பிறகு தான் பேச ஆரம்பித்தது. கண்கள் தான் பேசியதே யொழிய வாயில் இருந்து எந்த வார்த்தையும் வரவில்லை.

சட்டென்று அலுவலக விஷயத்தை மட்டுமே அவன் பேசிவிட்டு மிக வேகமாக நகர்ந்து விட்டான். அவளுக்குத் தோன்றியது... அது தான் அவன் கொடுத்த மிகப் பெரிய காம்ப்ளிமென்ட் என்று! ஏனென்றால் நின்றால் ஏதாவது சொல்லி விடுவோமோ என்பது போல அவன் தவித்துக் கொண்டு நகர்ந்து சென்றது அவளுக்கு இதமாக இருந்தது. சிரிப்பாக இருந்தது.

கலங்கடித்து விட்டோம் என்பது போல இருந்தது. அதுவும் ஏனோ அவளுக்குப் பிடித்திருந்தது. மனதிலே குழப்பம் மிஞ்சியது.

நன்றாக யோசித்தாள். ஒரு தெளிவுக்கு வந்து விட்டாள். பேச வேண்டும், கண்டிப்பாக சக்தி வேலிடம் பேச வேண்டும். தன் மனத்து உணர்வுகளை துல்லியமாக யாராவது புரிந்து கொள்வார்கள் என்றால் அது சக்திவேலாகத்தான் இருக்கும்.

அதிலும் சக்திவேலினுடைய கவிதைகள் அவளை மிகவும் தொல்லைப்படுத்தியது. இப்படி கவிதைகளை யெல்லாம் கொடுத்து விட்டு தன்னுடைய நடை, உடை, பாவனைகளை ரசிக்கிற சக்திவேலை அவளுக்கு ஒருபக்கம் பிடித்து தான் இருக்கிறது.

தன் மனதிலே இருப்பது என்னவென்று அவன் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இப்படித் தனியாக அமர்ந்து அலசிக் கொண்டிருக்கிறாள். அதிலும் தங்கள் பங்களாவின் மொட்டை மாடியிலே.

ஒரு மணிநேரமாக நடந்து சலித்து விட்டாள். அம்மா கூட ஒருதடவை மேலே வந்து, "என்னடி பண்றே...?" என்று கேட்டார். "இல்லம்மா... ஆபீஸ்ல ஒரு சின்ன ப்ராப்ளம்... அதுக்கு எல்லாரும் தீர்வு சொல்லணும்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க. நானும் யோசித்து ஒரு வழி கண்டுபிடிக்கணும்னு யோசிக்கச்சுக்கிட்டிருக்கேன்"என்றாள்.

"சரி, சரி. பெரிய முதலாளியம்மாவாகப் போறே... யோசி..." என்று அம்மா கிண்டல் செய்து விட்டு கீழே போய் விட்டார்.

முதலாளியம்மா ஆகிறதுல தான் பிரச்னையே இருக்கும் போலிருக்கிறது. கருணாவுக்குச் சரி சொல்வதா, சக்தி வேலுக்கு சரி சொல்வதா?... அவளுக்குப் புரியவில்லை.

இன்னொரு புறம் அவள் ஆழ்மனது சொன்னது. "உனக் கென்று ஒரு மனம் இருப்பதாக நினைப்பதே தப்பு. உங்கள் குடும்பத்துக்கு இவ்வளவெல்லாம் செய்திருக்கிற அந்த குடும்பங்களில் யாராவது ஒருவருக்கு வாழ்க்கைப்படுவது தான் முறை. அது தான் நீ அவர்களுக்குச் செய்யக்கூடிய நன்றிக்கடன். அந்தக் கனவுகளோடு தான் உன்னை அலுவலகத்துக்கு வர வைத்திருக்கிறார்கள். அதைப் புரிந்து கொண்டு நீ அவர்களுக்கு நன்றி செலுத்து. வீணான ஆசைகளையெல்லாம் வளர்த்துக் கொண்டு பிரச்னைகளை



உருவாக்கிக் கொள்ளாதே" என்று அவளது அறிவு சொன்னது.

முந்தைய காலங்களில் எல்லாம் இளவரசிகளுக்கு அரசியல் காரணங்களுக்காகவே திருமணம் நடக்குமாமே. அவர்கள் வாழ்க்கையில் வசதிகள் இருந்தாலும் தியாகம் தான் அவர்களுடைய வாழ்க்கையில் அடிப்படையாக இருந்ததாமே. தானும் அப்படியொரு தியாகத்தைச் செய்ய வேண்டியது தான் என்று அவள் முடிவு செய்தாள்.

ஒருவேளை ஒருவருக்கு சரி என்று சொன்னால் மற்றவர் களுக்குக் கோபம் வந்து விடுமோ... என்ற எண்ணமும் தோன்றியது. அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. யாராவது ஒருவருக்குத் தான் சரியென்று சொல்ல முடியும் என்று அவள் எண்ணினாள்.

மணியைப் பார்த்தாள் எட்டேகால் ஆகியிருந்தது. சரசரவென்று கீழே வந்தாள். தன்னுடைய செல்போனை எடுத்து சக்திவேலுக்குப் ஃபோன் செய்தாள்.

"சக்தி! நான் உங்ககிட்ட பேசணும்"என்றாள்.

"ஹேய்... இளமதி. உன்னத்தான் நான் நினைச்சு கிட்டிருந்தேன். கரெக்ட்டா ஃபோன் பண்றே... நூறு ஆயுசு"என்றான் சக்திவேல்.

"நூறாயுசெல்லாம் வேண்டாம், சக்தி. உங்ககிட்ட பேசணும்"என்றாள்.

"என்ன விஷயம்டா... சொல்லு"என்றான்.

"இல்லை. இது என் லைஃப் பத்தின விஷயம். உங்க கிட்டத்தான் பேச முடியும்னு தோணிச்சு. நாம சந்திப்போம், தனியா"என்றாள்.

சக்திவேலின் உள்ளம் துள்ளியது. "ரியலி...?"என்றான் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் பொங்க.

"ரியலி"என்றாள் இளமதி.

"எங்க வச்சுப் பேசலாம்?"என்று கேட்டான்.

"நீங்க சொல்லுங்க. எங்க வச்சு வேணும்னாலும் பேசலாம்"என்றாள்.

"நம்மளுக்குன்னு ஒரு கெஸ்ட் ஹவுஸ்... அவுட்டர்ல இருக்கு... போயிடலாமா"என்றான்.

"சரி. எந்த கெஸ்ட் ஹவுஸ்? நிறைய இருக்கிறதாச்சே..."

"சரி. நம்ம தோட்டத்துக்குப் பக்கத்துல ஒரு கெஸ்ட் அவுஸ் இருக்கே... அங்கே போவோமா. தோட்டத்தையும் பார்த்துட்டு அப்படியே பேசின மாதிரியும் இருக்கும்" என்றான்.

அவன் கஷ்டப்பட்டு தன் உற்சாகத்தை குறைத்துக் காட்டுகிறாற் போல அவளுக்குத் தோன்றியது. அவள் மனமும் நெகிழ்ந்தது.

"சரிங்க சக்தி. நாளைக்கு எப்ப பேசலாம்? "என்றாள்.

"நாளைக்கு ஆஃப்டர்னூன்... ம்... நான் ஏதாவது ஒரு வகையில பிளான் பண்றேன். ஏதாவது ஒரு ப்ரொகிராம் கூட கம்பைன் பண்ணிட்டு நாம மட்டும் போற மாதிரி வச்சுக்குவோமா"என்றான்.

"சரிங்க சக்தி"என்றாள்.

"ஹேய். குட்நைட்" என்று அவன் உற்சாகமாகச் சொன்னான்.

"குட் நைட் சக்தி"என்றாள் அவளும்.

அவள் செல்ஃபோனை வைக்கையிலே தன்னுடைய வாழ்க்கை ஏதோ பெரிய மாற்றத்திற்கு உள்ளாவது போலவும் ஒரு நீண்ட நெடிய பாதை தன் கண்முன்னே இருக்கிறாற் போலவும் ஒரு கனமான உணர்வுடன் ஃபோனை வைத்தாள் என்றால்... சக்திவேல் அங்கே உற்சாகத்தின் எல்லைக்கே சென்றிருந்தான்.

★ ★ ★



## அத்தியாயம் 18

ஆதிமூலம் இவ்வளவு ஆக்ரோஷப்படுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. வேட்டியை மடித்துக் கொண்டு ஆங்காரப்படுகிற கிராமத்து நாட்டாமையைப் போல ஆக்ரோஷத்தோடு அந்த நாற்காலியில் அமர்ந் திருந்தார்.

கந்தவேலும், கருப்புசாமியும் அடங்கி ஒடுங்கினாற்போல அருகருகே அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் வாரிசுகள் மூன்று பேரும் எதிரே பவ்வியமாக ஃசோபாக்களில் அமர்ந்திருந்தார்கள். நல்லவேளையாக வீட்டுப் பெண்கள் யாரும் இருக்கவில்லை.

"என்னடா நினைச்சீங்க... தடி எடுத்தவனெல்லாம் தண்டக்காரனா... அவனவன் ஏதாவது முடிவு பண்ணிட்டு வந்து சொல்வீங்களா...? பெரியவங்கன்னு நாங்க எதுக்கு இருக்கிறோம் என்று தாம்தூம் என்று குதிக்கிற தந்தையை கருணாகரன் கவலையோடு பார்த்தான்.

"உங்களுக்கு இதுல என்னப்பா பிரச்னை?"என்று கேட்டான்.

"பல்லைப் பேத்துடுவேன். எனக்கு என்ன பிரச்னைன்னா கேட்கிறே...? நாங்க பெரியவங்க எல்லாம் சேர்ந்து ஏதேதோ திட்டம் போட்டுட்டிருக்கோம். அவனவன் பாட்டுக்கு வந்து எங்களுக்கு அட்வைஸ் பண்ணிட்டு இருக்கீங்க...?"என்றார் ஆதிமூலம்.

அப்படிச் சொல்லிவிட்டு இரண்டு பக்கமும் திரும்பி... கருப்புசாமியையும் கந்தவேலையும் ஒரு பார்வை பார்த்தார்.

ஆதரவுக் குரல் கொடுக்க மாட்டீர்களா... என்ற கேள்வி அதில் இருந்தது. ஆனால் அவர் எதிர்பார்த்தது போல் அவர்கள் இரண்டு பேரும் வாயைத் திறக்கவே இல்லை. கமுக்கமாக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

"ஏப்..பா... என்னப்பா பேச மாட்டேங்கிறீங்க"என்றார்.

"இல்லப்பா... பேசு... நீ தான் பேசறியே"என்றார் கந்தவேல்.

திரும்பவும் கருணாகரன் தான் கேட்டான், "அப்பா! நீங்க என்ன பேசறீங்கன்னு தெரியுதா?"என்று.

"எனக்கெல்லாம் தெரியுதடா... உங்க மூணு பேருக்கும் விஷயம் புரியுதா?"என்றார் அவர்.

"எங்க மூணு பேருக்கும் விஷயம் நல்லா புரியுது. ஆனால் இன்னைக்கு இருக்கிற நிலவரம் என்னங்கறதை நீங்க தான் புரிஞ்சிக்காமப் பேசிகிட்டு இருக்கீங்க"என்றான் கருணாகரன்.

இத்தனைக்கும் காரணம் சக்திவேல் அன்றைக்கு முதல்நாள் கந்தவேலிடம் போட்ட வெடிதான். கந்தவேல் அந்த வெடியைத் தூக்கிக் கொண்டு நேராகப் போய் ஆதிமூலத்திடம் சொன்னார். இரவெல்லாம் ஆதிமூலம் உறங்கவே இல்லை.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமையாக வேறு போய் விட்டது. ஒருவகையில் அவருக்கு அது வசதியாகப் போய் விட்டது.

"எல்லோரும் கெஸ்ட் ஹவுசுக்கு வாங்க"என்று எல்லாரையும் வரவழைத்து விட்டு இளைஞர்களிடத்திலே இப்பொழுது கோபாவேசமாக பேசிக் கொண்டிருந்தார்.

சக்திவேல் தான் ஒடுங்கிப் போய் அமர்ந்திருந்தான். பிரச்னையின் நுனி வேரைக் கொண்டு வந்ததே அவன் தானே. ஏற்கனவே அவன் ஏகமாக வாட்டத்தில் இருந்தான். இதிலே ஆதிமூலம், கந்தவேல் எல்லாம் செய்கிற பிரச்னைகளைப் பார்த்து அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

இதற்கு எல்லாவற்றுக்கும் காரணம் அவனும் இளமதியுமாக சந்தித்தச் சந்திப்பு தான்.



இளமதி வரப்போகிறாள் என்று அவன் கெஸ்ட் அவுசில் காத்துக் கொண்டிருக்க... இளமதி வந்தாள்.

வழக்கம்போல அழகாக உடை உடுத்திக் கொண்டு நளினமான நடையுடன் வந்து சேர்ந்தாள்.

இளமதியோடு அமர்ந்து அப்படி தனிமையாக பேசுவது என்பது சக்திவேலுக்கு உள்ளூர ஒரு மகிழ்ச்சியைத் தந்தது. ஆர்வமும் எதிர்பார்ப்புமாக அவன் அமர்ந்திருக்க இளமதி தயக்கத்தோடு அவள் எதிரில் அமர்ந்தாள்.

"சொல்லு, இளமதி! என்ன வேணும்? என்ன பேசணும்?" என்று கேட்டான்.

"ஏன், சக்தி. உங்ககிட்ட நான் ஒரு விஷயம் கேட்பேன். நீங்க மறைக்காம சொல்லணும்"என்றாள்.

"சொல்லும்மா... உங்கிட்ட மறைக்கற அளவுக்கு என்ன இருக்கு... சொல்லு"என்றான்.

"இல்லை... பெரியவங்களெல்லாம் சேர்ந்து என்னுடைய வாழ்க்கையைப் பற்றி முடிவு பண்ணி வச்சிருக்காங்களா... என்ன?"என்று கேட்டாள்.

"அப்படித் தெரியலை. ஆனால் அரசல்புரசலா உனக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்ணனும்னு பேசிக்கிட்டு இருந்தாங்க" என்றான் சக்திவேல்.

அவள் முகத்தில் ஆழ்ந்த சிந்தனையும் - ஒரு வாட்டமும் பிறகு ஒரு தெளிவும் ஏற்பட்டது.

"ஏன் சக்தி! எனக்குன்னு நான் ஒரு முடிவு எடுத்தா கோவிச்சுப்பாங்களா..." என்று கேட்டாள்.

"ஏன்... கோவிச்சுக்கப் போறாங்க?" என்றான் சக்திவேல் புரியாதவன் போல.

'இப்போதைக்கு சொந்தமாக முடிவெடுக்க அவள் தயாராக இருக்கிறாள்' என்பதே அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"ஏன் கோவிச்சுக்கணும்...?" என்று கேட்டான் மறுபடியும்.

"இல்ல சக்தி. எங்கப்பா போனதுக்கப்புறம் மாமாக்கள் மூணு பேரும்தான் எங்க குடும்பத்தையே தூக்கி நிறுத்தியிருக்காங்க. அவங்களோட ஆதரவு இல்லாம நாங்க இந்த அளவுக்கு ஒரு வாழ்க்கையை நடத்தியிருக்க முடியாது. எனக்கு அந்த அளவுக்கு அவங்க மேல நன்றி இருக்குது. ஆனா... அந்த நன்றிக்காக அவங்க ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து கொடுத்தாங்கன்னா அந்த வாழ்க்கையில் எனக்கு விருப்பம் இல்லைன்னா... நான் வேறு முடிவு எடுக்கலாமா, கூடாதா?"என்று கேட்டாள்.

"என்ன இளமதி இப்படிக் கேட்கிறே?... கண்டிப்பா உனக்கு முடிவு எடுக்கறதுக்கு உரிமை இருக்கு. ஆனா... பெரியவங்கங்கற முறையில நீ தேர்ந்தெடுக்கிறது யாரா இருந்தாலும் அந்தக் குறிப்பிட்ட வகையான வாழ்க்கையில் உனக்கு ஏதாவது கஷ்டங்கள் வருமா... அப்படீங்கறதையும் அவங்க ஆராய்ந்து பார்ப்பாங்க தானே"என்று கேட்டான்.

"ஆராய்ந்து பார்க்கட்டும். கண்டிப்பா... அவங்களுக்குத் தான் அந்த உரிமை இருக்கு. நான் இல்லைன்னு சொல்லல. ஆனா... அப்படி ஆராய்ந்து பார்க்கிறோம் என்கிற கோணத் திலே அவங்க வச்சிருக்கிற கருத்தை என் மேல திணிப் பாங்களா, சக்தி"என்று கேட்டாள்.

சக்திக்கு இன்னும் விஷயம் புரியவில்லை. எதையோ இவள் சுற்றி வளைத்துச் சொல்ல நினைக்கிறாள் என்று நினைத்துக் கொண்டு, ஒரு வினாடி யோசித்தாற் போல அமர்ந்தான்.

"தெரியலையே இளமதி. இந்தப் பெரியவங்க என்ன செய்வாங்கன்னு... தெரியலையே... ஆனா ஒரு அற்புதமான விஷயம் இருக்கு. இந்த நாலு குடும்பங்களுக்கு இடையிலே ஒரு நட்பு இருக்கு. ஏதாவது ஒரு கட்டத்துல விட்டுக்



கொடுத்திடறாங்க. ஒருத்தர் கருத்தை ஒருத்தர் மேல திணிக் கிறதில்லை... இதெல்லாம் ரொம்ப நல்ல விஷயம்... நம்ம ஃபேமிலியைப் பொறுத்தவரைக்கும் ஒரு அற்புதமான விஷயம்" என்றான்.

இளமதியும் ஒரு பெருமிதமான உணர்வுடன் அதனை ஆமோதித்துக் கொண்டாள்.

"ஆனா... இன்னொண்ணு யோசிங்க சக்தி..."என்று சொன்னாள்.

"சொல்லும்மா..."என்றான்.

"நான் எடுக்கிற ஒரு முடிவினால அந்த குடும்பங்களுக் குள்ள பிரச்னை வந்துடக் கூடாதுல்ல சக்தி..."என்றாள்.

இப்பொழுது தான் லேசாக அவள் எப்படி வருகிறாள் என்பது அவனுக்குப் புரிய ஆரம்பித்தது.

தான் எதிர்பார்த்ததற்கு மாறாக வேறு கோணத்தில் பேச்சு போகும் போல இருக்கிறது என்று தோன்றியது.

"சொல்லுங்க... சக்தி" என்றாள்.

"எனக்கு அப்படித் தோணலை இளமதி. அப்படி வரும் பொழுது மூன்று பேருமே உட்கார்ந்து பேசி, ஒரு முடிவு எடுத்துக்குவாங்க. ஒருத்தருக்கு மத்தவங்க விட்டுக் கொடுப்பாங்க அப்படீன்னு எனக்குத் தோணுது"என்றான்.

இளமதி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"சக்தி! நான் சொல்லப்போவதை கவனமாக் கேளுங்க..." என்று... அதற்கு மேல் அவள் இரண்டு நிமிடம் பேசினாள்.

அவள் பேசப்பேசவே... சக்திவேல் முகத்தில் மின்னல் போல மாற்றங்கள் ஏற்பட்டாலும் அவன் சட்டென்று சுதாரித்துக் கொண்டான்.

தன்னுடைய உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தான். தன் முகத்தில் இருந்து இளமதி எதையுமே கண்டு

பிடிக்க முடியாத அளவுக்கு தன் முகபாவத்தை அமைத்துக் கொண்டான்.

எத்தனை காலமாக அவன் தொழில் உலகத்தில் இருக்கிறான் அல்லவா... அதனால் எதிர்ப் பார்ட்டியிடம் போட்டு வாங்குவது எப்படி என்பது அவனுக்குத் தெரியுமல்லவா... அவன் அமைதியாக அமர்ந்து கேட்டுக் கொண்டான்.

இளமதி சொல்லி முடித்ததற்குப் பின்பு ஒரு கனமான அமைதி அங்கே நிலவியது.

ஒரு நிமிட அமைதிக்குப் பிறகு தலை குனிந்திருந்த இளமதி அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அதுவரை இளமதியை ஆழமாக பார்த்துக் கொண்டிருந்தான் போலும்.

சட்டென்று முகத்தை திருப்பிக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டான்.

பிறகு சன்னமான குரலில் சொன்னான். ''இதை நான் எதிர்பார்த்தேனா... இல்லையான்னு எனக்குத் தெரியலை. ஓரளவு எதிர்பார்த்த மாதிரியும் இருக்கு. எதிர்பார்க்காத மாதிரியும் இருக்கு''என்றான்.

அவள் அந்த நேரத்துக்குப் பொருத்தமில்லாத வகையில் லேசாகப் புன்னகைத்து சமாளித்தாள்.

''நான் என்ன செய்யட்டும் சொல்லுங்க''என்றாள்.

அவன் மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, ''நீங்க எதுவும் செய்ய முடியாது. விடு பார்க்கலாம். நடக்கிறது நடக்கட்டும்''என்றான்.

''சக்தி, நீங்க எனக்குக் ஹெல்ப் பண்ணுவீங்க தானே'' என்றாள் ஆழமான குரலில்.

தன் நெஞ்சிலே கத்தியைப் பாய்ச்சினாற் போல இதுவரை பேசிவிட்டு, ''நீ எனக்கு உதவி செய்வாயா...?'' என்று கேட்கிறாளே... என்று அவனுக்கு ஆழ்ந்த வேதனை ஏற்பட்டது.



ஆனால் அந்த கணத்தில் அவள், ''நீங்க தான் எனக்கு உதவி செய்யணும்'' என்கிற மனோபாவத்தோடு அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு எதற்காகவோ ஏங்கி நிற்பது போல... கையேந்தி நிற்பது போல நின்ற தோற்றத்தைப் பார்த்தவுடனே அவன் மனம் உருகி விட்டது.

''கவலைப்படாதே. கண்டிப்பா நான் ஹெல்ப் பண்றேன். நான் இருக்கேன்... எல்லாத்துக்கும் நான் இருக்கேன், கவலைப்படாதே''என்றான்.

அந்த வார்த்தைகள் அவளுக்கு பெரிய தெம்பை அவளுக்கு ஊட்டியது.

''ஐ ஃபைன்ட் எ ப்ரண்ட் இன் யூ சக்தி. எனக்கென்னவோ கருணாகிட்டேயும் இதைச் சொல்ல முடியலை. சின்னு... எந்த அளவுக்கு மெச்சூரிட்டியோட வாங்கிப் பாருன்னு எனக்குத் தெரியலை. யூ ஆர் தி ரைட் பெர்சன். உங்களால என்னைப் புரிஞ்சுக்க முடியுங்கிறதுனால நான் உங்ககிட்ட வந்தேன்''என்றாள்.

''இப்படி என்னைப் புரிந்து கொண்ட நீ, இன்னும் கொஞ்சம் ஆழமாக என்னைப் புரிந்திருக்கக் கூடாதா?'' என்பது போல ஒரு எண்ணம் அவன் மனத்தில் ஓடியது.

அதற்குப் பதில் போல அவள் சொன்னாள்.

''இல்லைங்க சக்தி. பெரியவங்க எதையோ பிளான் பண்ணிட்டு எதையோ பண்ணி... யாருடைய மனத்திலாவது தேவையில்லாம எண்ணங்களை உருவாக்கிக் கிட்டோம்னா... அது அவங்களை பின்னாடி புண்படுத்துகிற மாதிரி ஆயிருமில்லை... சக்தி''என்றாள்.

'புண்படுத்தி விட்டாய், பெண்ணே' என்று அவன் எண்ணிக் கொண்டாலும் அப்பொழுது சிரித்தான்.

''ரொம்ப டிப்ளமாட்டிக்கா பேசறே, இளமதி. ஓகே, விடு. இதையெல்லாம் பாத்துக்கலாம்... எங்கிட்ட சொல்லிட்

டேல்ல...''என்று சற்று நேரம் அவளை ஆசுவாசப்படுத்தி அனுப்பி வைத்தான்.

ஆழ்ந்த வேதனை முகத்தில் தெரிய கொஞ்ச நேரம் அமர்ந்திருந்தான். வேண்டுமென்றே தான் இளமதி தன்னிடம் வந்து சொல்லி இந்தப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறாளோ என்று தோன்றியது.

வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்று எண்ணிக் கொண்டவனாகத்தான் முதல் நாள் இரவே தந்தையிடம் அதைப் பற்றிப் பேசினான்.

தந்தை அந்த நேரம் அமைதியாகக் கேட்டுக் கொண்டு, இவன் உறங்கப் போனதற்குப் பின்பு காரை எடுத்துக் கொண்டு போய் ஆதிமூலத்தைச் சந்தித்திருப்பார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

'அடுத்த நாள் எட்டு மணிக்கே வாங்க' என்று ஆதிமூலம் அதிரடி அறிவிப்பை வெளியிட அடித்துப் பிடித்துக் கொண்டு இவர்கள் வந்ததற்குப் பிறகு தான் அவர் எதைப் பற்றிப் பேசுகிறார் என்பது புரிந்தது.

கருணாவே ஆரம்பிக்கவும் சக்திவேல் அமைதியாக அமர்ந்திருந்தான். இனிமேலும் அமைதியாக இருக்க முடியாது என்பது போல அவன் மெல்லப் பேச ஆரம்பித்தான்.

''பெரியப்பா... நீங்க சொல்றதெல்லாம் சரி தான். ஆனா அவங்கவங்க வாழ்க்கையை வாழ்வதற்கு அவரவர்களுக்கு ரைட் இருக்கு. அதுல இந்த மாதிரி எந்தவிதமான பிசினஸ் கணக்குகளையும் போடாதீங்க. அது அசிங்கமாக இருக்கும். அது மூச்சு முட்டச் செய்யும் அழுத்தும். வேண்டாம் பெரியப்பா...''என்றான்.

''போடா... போக்கத்தவனே...'' என்றார் ஆதிமூலம்.



சக்திவேல் சிரித்துக் கொண்டு சொன்னான். ''இல்லைங்க பெரியப்பா... ரெண்டு கோணம் இதுல இருக்கு. ஒண்ணு... விருப்பமில்லாத எந்த திணிப்பும் வாழ்க்கை முழுக்க உறுத்திக் கிட்டேதான் இருக்கும்நம்பர் ஒன்.

''நம்பர் டூ இதுக்காகத்தானோ என்னமோ அவங்களுக்கு இத்தனை நாள் ஆதரவு கொடுத்து நாம உதவி செஞ்சது... அப்படீங்கற மாதிரி ஆயிடும். செஞ்ச உதவிகளெல்லாம் கேவலமாகி விடும். ஏதோ பலியாட்டுக்கு மாலை போட்டு... வளர்த்த மாதிரி ஆயிடும், பெரியப்பா... யோசிங்க'' என்றான்.

''கரெக்டா சொன்னப்பா...''என்றான் இதுவரை வாயைத் திறக்காத சின்னசாமி.

ஆதிமூலம் கருணாகரனைப் பார்த்தார். கருணாகரனு ் அந்தக் கருத்தை வெகுவாக ஆமோதிப்பதாக தோன்றியது.

''அதாண்டா... நீங்கல்லாம் பெரிய மனுஷங்க ஆயிட்டீங்க'' என்று பெருமூச்சு விட்டார் ஆதிமூலம்.

''பெரிய மனுஷங்க இல்லை... பெரியப்பா. இது தான் நடக்கும்னு இருந்தா நடந்து தான் தீரும். நாம எல்லாருமாச் சேர்ந்து நல்லவிதமா அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறது தான் நியாயம்''என்றான் சின்னசாமி.

கந்தவேல் ஒரு பெருமூச்சு விட்டார். கருப்புசாமியும் அதையே செய்தார். 'இதைத் தவிர வேறு வழியில்லை...' என்று இருவரும் குரல் கொடுக்கவும் ஆதிமூலம் அமைதியானார்.

எல்லாருடைய கருத்தும் தனக்கு எதிராக இருப்பது போல தோன்றவே... ஆதிமூலம் யோசிக்க ஆரம்பித்தார்,.

அப்பொழுது கருணாகரனுக்கு ஒரு செல்போன் ஒலித்தது. எடுத்தான். அந்தப் பக்கத்துச் செய்தியைக் கேட்கக்

கேட்க அவன் முகம் மாறியது." எப்போ...யார் சொன் னாங்க?"என்று கேட்டான்.

"நேற்று ஈவினிங்கே குடுத்துட்டுப் போயிருக்காரு... இன்னைக்கு சண்டே தானே நாளைக்குப் பார்ப்பாங்கன்னு நினைச்சுருப்பாரு... ஆனா... நான் அகஸ்மாத்தா ஒரு ஃபைல் எடுக்கறதுக்காக வந்தேன். பார்த்தேன் "என்றார், அவர்களது மேனேஜர்.

கருணாகரன் திரும்பி... அந்தச் செய்தியைச் சொன்னான்.

எல்லோரும் அதிர்ந்து போய் பார்த்தார்கள்.

"என்னது... சிம்மேந்திரன் ரிசைன்... பண்ணிட் டானா...?" என்றான் சின்னசாமி உரத்தக் குரலில்.

அதற்குப் பதில் அங்கே கனத்த மௌனம் தான் நிலவியது.

★ ★ ★

## அத்தியாயம் 19

பாக்கியம் சிலையாக அமர்ந்திருந்தார்.

"என்னடி... இப்படி பண்ணிட்டே?..."என்றார் மகளிடம்.

இளமதி அவர் முகத்தை பரிதாபமாகப் பார்த்தாள்.

பிறகு சொன்னாள். "வேறு என்ன பண்ணச் சொல்றீங்க..." என்று கேட்டாள்.

"நீ பேசாம ஆபீஸ்க்கு போகாமலேயே இருந்திருக் கலாம்டி..." என்றார் பாக்கியம்.

"இல்லைம்மா... பிரச்னை என்னைக்கிருந்தாலும் வரும். அதற்கான பதிலை என்னைக்கிருந்தாலும் சொல்லித் தான் ஆகணும். நான் சொன்னதுல என்ன தப்பு?. நீங்க சொல்லுங்க" என்றாள்.



"நீ என்னத்தைத் தான் அந்த சக்தியிடம் சொன்னே..." என்று கேட்டார் அம்மா.

"நான் உண்மையைத்தாம்மா சொன்னேன். நீங்களே யோசிச்சுப் பாருங்க. மூணு குடும்பமும் நமக்கு வேண்டிய வங்க... மூணு மாமாக்களுமே எனக்குத் தெய்வம் மாதிரி தான். இதுல யாராவது ஒரு குடும்பத்துல நாம சம்பந்தம் வச்சிகிட்டோம்னா... வெளியில காட்டிக்கலைன்னாலும் மீதி இரண்டு குடும்பத்துக்கும் உள்ளூர ஒரு வருத்தம் இருக்கத்தானே செய்யும்"என்றாள்.

பாக்கியம் பெருமூச்சு விட்டுப் பிறகு சொன்னார். "ஆமாம். நீ சொல்றது ஒருவகையில கரெக்ட் தான். ஆனா மூணு பேர்ல ஒருத்தருக்குத் தானே சரி சொல்ல முடியும்"என்று கேட்டார்.

"அதுல தானே பிரச்னையே... அவங்க எல்லாரையும் சின்ன வயசுல இருந்தே பார்த்து வளர்ந்துருக்கேன். அதனால யார் மேலேயும் எனக்கு அந்த மாதிரி எண்ணம் வர்லையே?... எல்லாருமே எனக்குப் பிரதர்ஸ் மாதிரி தான் தோணுது. அப்படியிருக்கையில நாளைக்கு எப்படி மறுப்புச் சொல்றது. அதனால் தான் இப்பவே சக்திகிட்ட ஆலோ சனை கேட்கிற மாதிரி இந்த ஐடியா எனக்குப் பிடிக்கலைங் கறதச் சொன்னேன்"என்றாள்.

தாயிடம் கூட இன்னொன்றை மறைத்து விட்டாள்.

ஏனோ... சக்திக்கு தன்மீது விருப்பம் இருக்கிற மாதிரி தோன்றுகிறது. அதை வளர விட்டால் நாளைக்குப் பிரச்னை யாகி விடும் என்பதால் தான் நான் இப்படிச் சொல்ல நேர்ந்தது. அது மட்டுமில்லாமல் என்னுடைய மனம் வேறெங்கோ போயிருக்கிறது. வேறு ஓரிடத்தில் நிலைத்திருக் கிறது என்ற சந்தேகம் எனக்குள் இருக்கிறது. எனவே முதலில் இந்தப் பிரச்னையைச் சரி செய்து கொண்டால் தான்

மற்றதைப் பற்றித் தீவிரமாக சிந்திக்கவே முடியும் என்கிற நிலைமை இருப்பதால் தான் நான் அப்படிச் சொன்னேன் என்பதைத் தாயிடம் சொல்ல அவள் விருப்பப்பட வில்லை. ஏனென்றால் அவளுக்கு இன்னும் சில விஷயங்கள் தெரிய வேண்டியதிருந்தது.

பாக்கியம் தொடர்ந்து சொல்வதை கேட்டார்.

தன் சிந்தனை போன போக்கை வலுக்கட்டாயமாக திரும்பி தாயின் கருத்து என்னவென்று கேட்டாள்.

"சரிடி... இப்ப என்னமோ ஆதிமூலம் மாமா ரொம்பக் கோபமா இருக்கிறதாக் கேள்விப் பட்டேனே..." என்றார் பாக்கியம் கவலையுடன்.

"யார் சொன்னா...?" என்றாள் இளமதியும் கவலையுடன்.

"யார் சொல்வா, கருப்புசாமி அண்ணாதான் போன் பண்ணிச் சொன்னாரு. அம்மா, ஆதிமூலம் கோபமா இருக்காரு... கோபமா எதுவும் பேசினாக்கூட நீங்க எதுவும் பேசாதீங்க. அமைதியா இருங்க. அப்புறம் நாங்க கூல்டவுன் பண்ணிக்கிறோம்... அப்படீன்னு சொன்னாரு" என்றாள்.

இளமதி ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

"அம்மா, ஆதிமூலம் மாமா கோபப்படுவதற்கு அவசியமே இல்லை. ஏன்னா... கருணாவுக்கு அப்படி ஒரு ஐடியா இருக்கிற மாதிரியே எனக்குத் தெரியலே" என்றாள்.

"ஏய்! உனக்கு அவங்க மூணு பேரைப் பத்தியும் தெரியாது. அவங்க விட்டுக் குடுத்துக்குவாங்க. சப்போஸ் கருணாவுக்கு இல்லைன்னா சக்திக்கு கல்யாணம் பண்ணி னாலும் சரி... அப்படித்தான் ஆதிமூலம் அண்ணா நினைப் பாரு" என்றார்.

இளமதிக்கு குப்பென்று கோபம் பொங்கியது.

"நான் என்னம்மா தின்பண்டம் மாதியா... இல்லை... விளையாட்டுப் பொருளா...? இவங்களுக்கு இல்லைன்னா



அவங்களுக்குன்னு பேசிக்கிட்டு இருக்கிறதுக்கு... எனக்கும் மனசுன்னு ஒண்ணு இருக்கு. அதிலும் சில ஆசைகள் இருக்கும்... தெரியுமா?" என்றாள்.

பாக்கியம் சடாரென்று திரும்பிப் பார்த்தார்.

"அப்படீன்னா...?"

இளமதி சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"ஐயோ அம்மா, இப்ப அப்படி இருக்குன்னு நான் சொல்லலைம்மா... ஆனா அவங்க மூணு பேர் மீதும் எனக்கு அந்த மாதிரி எந்த ஆர்வமும் வர்ல... அப்படீங்கறதைத் தான் இப்போ எஸ்டாபிளிஷ் பண்ணியிருக்கேன்" என்றாள்.

"என்னத்தை எஸ்டாப்ளிஷ் பண்ணினியோ...?" என்று முணுமுணுத்துக் கொண்டார் பாக்கியம்.

"இல்லைம்மா... மேரேஜ்ங்கறது இரண்டு மனங்கள் சேர்றது. அது, இட் ஷுட் நாட் பி மேரேஜ் ஆப் கன்வீனி யன்ஸ். வசதிக்காக நாம் பண்ணிக்க முடியாதும்மா" என்றாள்.

அம்மா திரும்பிப் பார்த்தார்.

"என்னடி பேசற... எவ்வளவோ பெரிய குடும்பங்கள்ல... அத்தை மக்கள், மாமன் மக்களுக்குள்ளே பண்ணிக்கிறாங்க தெரியுமா... சொத்து வெளியே போகக்கூடாது அப்படீங் கறதுக்காக... எனக்கே தாய் மாமனைக் கல்யாணம் பண்ணினவங்களைத் தெரியும்" என்றார்.

"அம்மா, ஒரு சில குடும்பங்கள்ல பிரச்னை இல்லாம இருக்கலாம் அம்மா... ஆனா அந்த மாதிரி நெருங்கின சொந்தங்கள்ல பண்ணக்கூடாதுன்னு டாக்டர்கள் சொல்றாங்கம்மா..." என்றாள்.

"நாம ஒண்ணும் நெருங்கிய குடும்பம் இல்லையே... ஃப்ரண்ட்ஸ்தானே" என்றார்.

"இருந்தா என்னம்மா... நான் சின்னதுல இருந்து அவங்களைப் பாத்துக்கிட்டு இருக்கேன்... எனக்கு அந்த மாதிரியான ஈர்ப்பு வர்லைன்னு தானே சொல்றேன்"என்றாள் வருத்தத்துடன்.

பாக்கியம் பெருமூச்செறிந்தார்.

"அதைச் சொல்லு. அதை வேணும்னா நான் ஏத்துக்கிறேன்"என்றார்.

"சரிடி... பார்க்கலாம். நீ சொல்றதச் சொல்லிட்டே. விஷயம் பரவியாச்சு. இனி மூணு குடும்பத்திலேயும் பேச்சு வார்த்தை நடக்கும்.இனி உறவுகளில் என்னென்ன மாற்றங்கள் வரப்போகுதோ... எனக்குக் கொஞ்சம் பயமாத் தான் இருக்கு"என்றார்.

இளமதிக்கும் அந்த பயம் இருந்தது. அது அவள் முகத்திலும் பிரதிபலித்தது.

"அம்மா, என்னைப் புரிஞ்சுக்கறீங்களா..." என்று கேட்டாள் வருத்தத்துடன்.

சட்டென்று பாக்கியம் எழுந்து, மகளைத் தன்னோடு சேர்த்து கட்டிப் பிடித்துக் கொண்டார். கன்னத்தைத் தடவிக் கொடுத்தார்.

"புரிஞ்சுக்கிறேன்டி... எதுக்காகவும் உனக்கு விருப்பம் இல்லாத எதையும் நான் திணிக்க மாட்டேன். கவலைப் படாதே"என்றார்.

"என்னடி சொத்து, இன்னைக்கு வரும் நாளைக்குப் போகும். குழந்தைகளோட நிம்மதி தான் முக்கியம். என்ன, இந்த கம்பெனி இல்லைன்னா வேற கம்பெனிக்குப் போ. நாம அதுக்குத் தகுந்த மாதிரி வாழ்ந்துக்கலாண்டி... இல்லை வேணுங்கற சொத்து இருக்கு. பாத்துக்கலாம்"என்று விதவிதமாக அவளை தேற்றினார்.



"தேங்க் யூ அம்மா"என்று தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டு முத்தம் கொடுத்து தன் மகிழ்ச்சியை வெளிப் படுத்திக் கொண்டாள் இளமதி.

சற்று நேரத்துக்குப் பிறகு ஒருவிதமான அமைதி திரும்பியது.

"அம்மா! "என்று ஏதோ சொல்ல விழைந்தாள்.

"சொல்லும்மா..."என்று பாக்கியம் நின்று கேட்க, இளமதி மனத்தை மாற்றிக் கொண்டாள்.

இப்பொழுது தான் ஒரு குண்டு போட்டு வெடித்து எல்லாக் களேபரமும் அடங்கி இருக்கிறது. இனி இன்னொன்றைப் போட்டு அம்மாவின் மனதில் அதிர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமா, என்ன? முதலில் இந்தவிதமான ஒரு வெளிப்பாட்டுக்கு என்ன விதமான பிரதிபலிப்பு வந்து அடங்குகிறது என்று பார்க்கலாம். அதற்குள்ளாக இன்னொரு விஷயத்தை ஏன் கிளப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

தாயைப் பார்த்துச் சொன்னாள். "அம்மா, நான் கொஞ்ச நாளைக்கு ஆபீஸ்க்குப் போகலைம்மா..."என்றாள்.

"சரி விடு. ஏன் வர்லைன்னு கேட்டாங்கன்னா...?"

"இல்லை. அவளுக்கு ஏதோ அன்ஈஸியா இருக்கு. கொஞ்ச நாள் கழிச்சு வர்றேன்னு சொல்றா..."அப்படீன்னு சொல்லுங்க. எப்படியோ சொல்லி சமாளிங்க"என்றாள்.

மறுபடியும் யோசித்தவள் போல, "இல்லம்மா... நான் போறேன். ஏன்னா... கொஞ்ச நாள் போயிட்டு... திடீர்னு போகலைன்னு சொன்னா... ஆபீஸ்ல வேலை செய்யறவங்களுக்கெல்லாம் சந்தேகம் வரும். அதனால நான் போறேம்மா..."என்றாள்.

மகளின் குழப்பத்தைப் பார்த்து தாய்க்கே பரிதாபமாக இருந்தது.

"சரி, அதை அப்புறம் பாத்துக்கலாம். இப்போதைக்கு ஒரு நாலு நாள் லீவுன்னு சொல்லிடு"என்றார்.

இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே இளமதி மனதில் குறுகுறுவென்று ஒரு எண்ணம் ஓடிக் கொண்டு தானிருந்தது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று தன் ஆழ்மனத்துக்குத் தெரிந்திருந்தது. ஆழ் மனமும் சரி, வெளி மனமும் சரி, அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ள தயங்கிக் கொண்டிருந்தது.

"சரிம்மா... நான் ஆபீஸ்க்கு லீவு சொல்லிடறேன்"என்று செல்போனை எடுத்தாள். அதே நேரத்தில் செல்போன் ஒலித்தது. அந்தப்பக்கம் இருந்து சக்திவேல் பேசினான்.

தொடர்ந்து பேசலாமா, வேண்டாமா என்ற குழப்பம் அவளுக்குள் இருக்கும்பொழுதே...

அம்மா, "ஏண்டி எடுத்துப்பேசு"என்றார்.

"அம்மா, சக்தி பேசறாப்ல..."என்று இழுத்தாள் இளமதி.

"பேசுடி... எத்தனை நாளைக்குப் பேசாம இருக்க முடியும். பிரச்னையை சந்தித்துத் தானே ஆகணும். பேசு"என்றார் அம்மா.

"சரி"என்று செல்போனை எடுத்தாள் இளமதி.

செல்போனை ஆன் செய்தவுடனேயே அந்தப்பக்கம் சக்தியின் குரலில் லேசான பதட்டம் இருந்தது.

"இளமதி, உனக்கு விஷயம் தெரியுமா?" என்றான் படபடப்புடன்.

"என்ன சக்தி, என்ன விஷயம்?" என்றாள் அவளும்.

"ஓ! அப்ப உனக்குத் தெரியலை போலிருக்கு..." என்று அவன் ஆசுவாசமானான்.

"எதைச் சொல்றீங்க? ஆதிமூலம் அங்கிள் கோபமாக இருக்காரே அதையா?"என்று கேட்டாள்.



அவன் உச்சுக் கொட்டினான். "அந்த மேட்டர் கிடக்குது. அது ஒருபக்கம் இருக்கட்டும். அது எங்கப் போயிடப் போவுது. பெரியப்பா தானே, அந்த விஷயத்தை நான் பாத்துக்கறேன். பெரியப்பாவை சமாதானப்படுத்திக்கலாம்" என்றான்.

"ஓ" என்று நிம்மதியானாள் இளமதி.

"இளமதி, இன்னொரு விஷயம் நடந்துருக்கு"என்றான் சக்திவேல்.

"என்ன விஷயம்?"என்றாள் இளமதி.

"சிம்மேந்திரன் ரிசைன் பண்ணிட்டான்"என்றான்.

இளமதி அதிர்ச்சியானாள்.

"இந்தர் ரிசைன் பண்ணிட்டாரா, ஏன்?"என்று கேட்டாள்.

"ஏன்னு யாருக்குத் தெரியும். உனக்குத் தெரியுமா?"என்று கேட்டான்.

"எனக்கு... எனக்கு..." என்று அவள் இழுக்க... "நீ ஏதாச்சும் அவன்கிட்டப் பேசினீயா?"

"இல்லையே. நான் உங்ககிட்ட மட்டும் தானே பேசினேன்"என்றாள் இளமதி.

"ம்.."என்று உள்வாங்கிக் கொண்டாள் சக்திவேல்.

"நான் நினைச்சது சரியாத்தான் போச்சு"என்றான்.

"என்ன நினைச்சீங்க...?" என்றாள் இளமதி ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக. ஆனால் அவள் உள்ளத்தில் சிந்தனை வேறுவிதமாக ஓடிக்கொண்டிருந்தது.

"என்ன நினைச்சீங்க...?" என்றாள் மறுபடியும்.

"ஏன், இளமதி. இந்தர் ஏன் ரிசைன் பண்ணியிருக்கான்னு உனக்குத் தெரியாதா?"என்று கேட்டான்.

"நிச்சயமா எனக்குத் தெரியாது. சக்தி. அவர் எங்கிட்ட எதுவும் சொல்லலை"என்றாள்.

"ஏன் இளமதி. அவன் சொல்லலைன்னாக் கூட உன்னால் கெஸ் பண்ண முடியுதா?"என்று கேட்டான்.

"இல்லியே..."என்றாள் அவள். ஆனால் அதில் முழுமையான உண்மை இல்லை என்பது அவளுக்கே புரிந்தது.

"இளமதி, நீ எங்கிட்ட பேசறது மூலமா... ஒரு விஷயத்தைக் கிளப்பிட்டே. அவன் என்னமோ பேசாம தப்பிக்கிறது மூலமா இதில் இருந்து ஓடிறலாம்னு நினைக்கிறான். நீயாவது பரவாயில்லை போலிருக்கே"என்றான் சக்தி கடுப்புடன்.

"புரியலை"என்றாள் இளமதி.

"உனக்கு எல்லாம் நல்லா புரிஞ்சுதான் இருக்கு. புரியாத மாதிரி நடிக்காதே. அவன் ஏன் போனான்னு எனக்குத் தெரியும். சரி, நான் பாத்துக்கறேன். போனை வைக்கிறியா?" என்றான் சக்திவேல் மீண்டும் கடுப்புடன்.

சக்திவேலின் கோபம் அவள் எதிர்பாராததாக இருந்தது.

"எதுக்கு சக்தி, கோபப்படுறீங்க...?"என்றாள்.

"ஹேய்... கோபப்படாம. நீங்க கண்ணாமூச்சி விளையாடு வீங்க. நான் கோபப்படாம சமாதானக் கொடி பிடிக்கணு மாக்கும். நீ..வை ஃபோனை"என்றான் கோபத்துடன்.

இளமதி ஃபோனை ஆஃப் செய்தாள். ஆனாலும் சக்திவேலின் குரலில் கோபத்தைக் காட்டிலும் ஒருவித அன்பு தொனித்ததை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

சக்திவேலுக்கு அவள் இழைத்தது பெரிய அநீதி என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் சூழ்நிலைக்காக சில விஷயங்களை ஏற்றுக் கொண்டால் அது பின்னாளில் அவர்கள்



வாழ்க்கைக்குப் பெரிய அநீதியாக இருக்கும் என்பதற்காக அந்தக் கொடுமைக்கு இந்தக் கொடுமையே தேவலாம் என்று தான் முடிவெடுத்தது சரி தான் என்று இன்னொரு மனது சொன்னது.

அவள் எதிர்பாராதது என்னவென்றால் சக்திவேல் இந்த பிரச்னையை தீவிரமாக எடுத்துக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளில் இறங்குவான் என்பது தான்.

இளமதியிடம் பேசி முடித்ததற்குப் பின்பு சக்திவேல் தீவிர ஆராய்ச்சியில் இறங்கினான். ஃபோனை எடுத்தான். சின்னசாமியை அழைத்தான்.

"ஏய், சின்னு. நீயும் நானும் ஒரு இடத்துக்கு போகலாம், வா"என்றான்.

"எங்கே?"என்றான் சின்னசாமி.

"சிம்மேந்திரன் வீட்டுக்குத் தான். இடியட்"என்றான்.

"யாரைச் சொல்ற. என்னச் சொல்றியா, அவனைச் சொல்றியா?"என்றான் சின்னசாமி.

"இரண்டு பேத்தையும் தான். உனக்கு வாய்ச்ச ஃப்ரண்ட் உன்னை மாதிரி தானே இருப்பான். வந்து தொலைடா... சீக்கிரம்"என்று கடித்தான்.

"வந்தர்றேன்"என்றவன், "சக்தி, எதுவும் கோபமாப் பேசிடாதே..."என்று மெதுவாக ஆரம்பிக்க...

"நீ வந்து சேரு. இன்னும் ஐஞ்சு நிமிஷம் டைம்"என்று கடுப்பாகச் சொல்லிவிட்டு ஃபோனை வைத்தான் சக்திவேல்.

சக்திவேல் என்ன செய்யப்போகிறான் என்பது புரியாமல் குழப்பத்துடன் வந்து சேர்ந்தான் சின்னசாமி.

சக்திவேல் ருத்ரமூர்த்தியாக நிற்பான் என்று எதிர் பார்த்துக் கொண்டு வந்தால்... அவன் அழுத்தமாக காரில் அமர்ந்து கொண்டான். அவன் போகச் சொன்ன திசையிலே

கார் ஓடியது. சின்னசாமி கூட வாயைத் திறப்பதற்குப் பயந்து கொண்டு அமைதி காத்தான்.

★ ★ ★

## அத்தியாயம் 20

"அண்ணா!" என்று ஆச்சரியமானாள் சிம்மேந்திரனின் சகோதரி.

"என்னம்மா... ஏதோ பூதத்தைக் கண்டமாதிரி பயப்படறே..." என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

"இல்லண்ணா... அன்எக்ஸ்பெக்டட் சர்ப்பிரைஸ்..." என்றான்.

"சர்ப்ரைஸ் என்றாலே அன்னெக்ஸ்பெக்டட் தான்" என்று சொல்லிக் கொண்டே சிம்மேந்திரன், "உள்ளே நுழையலாமா?" என்றபடி உள்ளே நுழைந்தான்.

ஒரு பை நிறைய பழங்கள்... ஸ்வீட்கள் என்று எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்த சகோதரனை வாஞ்சையாகப் பார்த்தாள் சகோதரி பத்மா.

"என்னண்ணா இது ஆச்சரியம்" என்றாள் மறுபடியும் நம்ப முடியாதவளாக...

"என்ன ஆச்சரியம். ஒரு அண்ணன், சிஸ்டரைப் பார்க்க வர்றது பெரிய விஷயமா?"என்றான்.

"இல்லை. நீ இருக்கிற பிஸிக்கு நடுவிலே..."என்று இழுக்க...

"அது இருக்கிறதுதாம்மா... அது பாட்டுக்கு அது. அதுக்காக நம்ம கடமைகளைச் செய்யாமல் இருக்க முடியுமா?" என்று அவன் சொல்லவும்... அவள் முகம் மலர்ந்தது.

"யாரும்மா..." என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தார் பத்மாவின் மாமியார்.



"அண்ணன்... அண்ணன் வந்திருக்காங்க..."என்றாள் அவள் மகிழ்ச்சியுடன்.

"வாங்க தம்பி! வாங்க வாங்க..."என்று வரவேற்றார் மாமியார்.

"இல்லம்மா... பிஸினஸ் விஷயமா ஒன் மன்த் ஃபாரீன் போறேன். ஆபீஸ்லே இருந்து அனுப்பறாங்க. அதுக்கு முன்னாடி தங்கச்சியைப் பார்த்துட்டு போலாமேன்னு தோணிச்சு. அதான் வந்தேன்"என்றான்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்" என்று வரவேற்றவர், ட்ரெயின்ல வந்திருப்பீங்க போலிருக்கு. போய் சீக்கிரம் முகம் கழுவிட்டு வாங்க. காப்பி சாப்பிடலாம். கொஞ்சம் குளிச்சு ஓய்வெடுங்க"என்றார்.

இன்னொரு சூட்கேசும் அவனோடு வந்திருந்தது. அதை ஒரு அறையில் கொண்டு போய் வைத்து விட்டு, அவன் குளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாள் பத்மா.

"ஏம்மா... எப்படி இருக்கே..."என்றான்.

"நல்லா இருக்கேண்ணா... எனக்கு ஒண்ணும் பிரச்னையில்ல. சந்தோஷமா இருக்கேன். என் வீட்டுக்காரரு ரொம்ப கைண்ட் உங்களுக்குத் தெரியும்ல..."என்றாள்.

"ஆமாமாம்... தெரியும்"என்றவன், "சரிம்மா. நான் குளிச்சுட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன். கொஞ்சம் திங்ஸ் எல்லாம் வாங்கிட்டு வந்திருக்கேன், உங்க வீட்டுக்கு. குளிச்சுட்டு வந்து எடுத்துத் தர்றேன்"என்றான்.

"அது இருக்கட்டுண்ணா... நீங்க ரெஸ்ட் எடுங்க" என்றாள் அவள்.

தங்கை வீட்டுக்கு வரும்பொழுது வெறுங்கையுடன் வரக் கூடாது என்று தனக்கு இருந்த மனக்குழப்ப நேரத்திலும்கூட அவன் ஷாப்பிங்குக்காக இரண்டு மணி நேரம் ஒதுக்கி, நிறைய துணிமணிகள், பொருட்கள் என்று வாங்கி வந்திருந் தான்.

குளித்து விட்டு இரண்டு மணிநேரம் நன்றாகத் தூங்கி விட்டு எழுந்து வந்தபொழுது அவனுக்காக காலை உணவு தயாராக இருந்தது.

மாமியார் ஸ்வீட் என்றும் பலகாரம் என்றும் தடபுடல் படுத்தி விட்டார்.

''சாப்பிடுங்க தம்பி... பூரி மசால் செஞ்சுருக்கு... இதப்பாருங்க வெஜிடபிள் ரைஸ்...''என்று பிரமாதப் படுத்தினார்.

''அத்தை... எதுக்கு இவ்வளவு பிரமாதப் படுத்தறீங்க. நம்ம வீடு. எப்ப வேணும்னாலும் வருவேன். வழக்கமான ஃபுட் போதுமே''என்றான்.

''இல்லை தம்பி! நீங்க எப்பவுமே ஃபிளையிங் விசிட் மாதிரி வந்துட்டு போவீங்க. இன்னைக்குத் தான் இரண்டு மணி நேரம்னு தங்கியிருக்கீங்க. நம்ம வீட்ல நீங்க ஒரு நாள் கூட நல்ல சாப்பாடு சாப்பிடலை. அதான் இவ்வளவு அரேஞ்ஜ் பண்ணினேன்''என்றார்.

அவன் சிரித்துக் கொண்டான்.

டிபன் சாப்பிட்ட பிறகு சகோதரியை அழைத்தான்.

''பத்மா, இங்க வாப்பா...''என்று அழைத்து அந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டு வரச்சொன்னான்.

இதற்குள்ளாக மைத்துனன் எழுந்து வந்தான். பத்மாவின் கணவன் இப்பொழுது சிம்மேந்திரனிடம் மிகவும் மரியாதையும் அன்பும் உடையவனாக இருந்தான்.

அவன், ''வாங்க மச்சான்... வாங்க''என்று சற்று நேரம் அளவளாவி விட்டு, ''ஆபீஸ்க்கு கிளம்பறேன் மச்சான்'' என்றான்.

''இருங்க மச்சான்... இருங்க''என்றான் சிம்மேந்திரன்.

சகோதரிக்காகவும், மாப்பிள்ளைக்காகவும் தான் எடுத்து வந்திருந்த விலை உயர்ந்த துணிமணிகளைக் கொடுத்தான்.



கிட்டத்தட்ட அதே தரத்தில் மல்லிகாவுக்கும் - சின்னவருக்கும் வாங்கிக் கொண்டு வந்திருந்ததை எடுத்துக் கொடுத்தான்.

பத்மாவின் கொழுந்தன் அலட்சியப் பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தாலும் இந்த உடையின் விலையையும் தரத்தையும் பார்த்தபிறகு அவன் முகத்திலே புன்னகை எழுந்தது.

மாமியாருக்கும் நல்லதாக புடவை வாங்கிக் கொண்டு வந்திருந்தான். எல்லோருமே கலகலப்பானார்கள்.

''சரிங்க. மச்சான். கிளம்பிராதீங்க... ரெண்டு மூணு நாளாவது இருந்துட்டுப் போகணும்''என்றான்.

''இல்லீங்க மச்சான். ரெண்டு மூணு நாளெல்லாம் இருக்க முடியாது. நான் நாளைக்குக் காலையில கிளம்பறேன். இன்னைக்கு ஒரு நாள் மட்டும் சென்னையில வேலையெல்லாம் இருக்கு''என்றான்.

''சரிங்க மச்சான். ஒருநாள்ல எத்தனை வேலையைப் பார்ப்பீங்க. நல்லா ரெஸ்ட் எடுக்களேன். அலைஞ்சு... அலைஞ்சு என்னத்தைக் கண்டீங்க?'' என்று உரிமையோடு கோபித்துக் கொண்டான் மைத்துனன்.

''அப்புறம், இந்த வயசுல அலையாம...''என்று பதில் சொல்லிவிட்டு மைத்துனனை வழியனுப்பி வைத்தான்.

மல்லிகா கூட, ''மச்சான்''என்று வந்து நன்றாகப் பேசினாள்.

''என்னம்மா, நல்லாயிருக்கீங்களா...?''என்றான்.

''என்ன 'வாங்கபோங்க'ன்னு பேசறீங்க. நல்லா ஃப்ரியா பேசுங்க மச்சான்''என்றாள்.

''ஓகே. நல்லாயிருக்கியா...?''என்று சிம்மேந்திரன் சிரிக்கவும் அவளும் சிரித்தாள்.

"இன்னைக்கு மத்தியானம் நான் தான் உங்களுக்குச் சமையல் செய்யப் போறேன்"என்றாள்.

"ஏன் பத்மா, எதுக்கும் இன்ஷ்சூரன்ஸ் எடுத்துக் கலாமா?" என்று திரும்பவும் கிண்டலாகக் கேட்கவும் மல்லிகா, உதட்டைப் பிதுக்கினாள்.

"இதானே வேண்டாங்கறது. இதுக்குப் பேருதான் கோயம்புத்தூர் குசும்பு"என்றாள்.

"அடேயப்பா... உங்க ஊர்ல மட்டும் யாரும் குறும்பே பேசறதில்லையோ..."என்றான் சிம்மேந்திரன்.

"ஆனாலும் உங்க குறும்பு வராது மச்சான்..."என்று சொல்லிக் கொண்டு, "என்ன மெனு வேணும்... சொல்லுங்க"என்று கேட்டாள்.

"பாரும்மா. உனக்கு எது நல்லா வருமோ அதைச் செய். நானும் ரிஸ்க் எடுக்க வேண்டாம். நீயும் ரிஸ்க் எடுக்க வேண்டாம்" என்றான்.

அவள் முறைத்துக் கொண்டு போனாள். சிம்மேந்திரனும் பத்மாவும் சிரித்தார்கள்.

"நல்ல பொண்ணுல்ல..."என்றான்.

"ஆமாண்ணா..."என்றாள் பத்மா.

அவள் பார்வையில் ஒரு மாற்றம் தோன்றியது. அண்ணன் எதற்காகத் திடீரென்று வந்து ஒருநாள் தங்குவது... இந்த மல்லிகாவிடம் வலிந்து வலிந்து பேசுகிறான். இவனுக்கு ஏதாவது கருத்து இருக்குமோ என்ற எண்ணம் தோன்ற அவனை உறுத்துப் பார்த்தாள்.

"என்னம்மா விஷயம்... பார்வை இப்படிப் போகுது" என்றான் சிம்மேந்திரன்.

"இல்லை..."என்று அவள் இழுக்க கடகடவென்றுச் சிரித்தான் சிம்மேந்திரன்.



சிரித்துவிட்டு அவள் தலையைக் கலைத்து விட்டான்.

"ஏம்மா... உலகத்துல இந்த ஒரு உறவு தான் இருக்கா...? வேற இல்லவே இல்லையா?"என்றான்.

"ஐயோ... அண்ணா... உங்கிட்டப் பேசவே முடியாது" என்றாள்.

"ஆமாம். எங்கிட்டப் பேச முடியாது. ஏன்னா... எனக்கு நிறைய ஓர்க் இருக்கு. நான் கொஞ்சநேரம் வேலை பார்ப்பேனாம்"என்று தன்னுடைய லேப்டாப்பை திறந்து எடுத்தான்.

"எங்க உட்காரலாம். வேலை பார்க்கணும்"என்றான்.

"அண்ணா... அந்த முன்னாடி ரூம் இருக்குல்ல. அங்க தான் இவருகூட ஏதாவது ஓர்க் இருந்துன்னா உடகார்ந்து பார்ப்பாரு. பிசி கூட இருக்கு. இடமும் அந்த டேபிள்ல நிறைய இருக்கு. அங்க வச்சுக்கலாம், அண்ணா"என்றாள்.

"நல்லதம்மா..."என்று அவன் "மெயில் இருக்கா?" என்றான்.

"ஆமாம் இருக்கு"என்றாள்.

"நல்லதாப் போச்சு" என்று அந்த அறையிலே போய் அமர்ந்தான். எதையோ கண்டு மிரண்டு வந்த குழந்தையைப் போல தான் ஓடி வந்திருக்கிறோம் என நினைத்தபொழுது அவனுக்குச் சிரிப்பாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

பட்டென்று அவனுக்குப் புரிந்த கணம் இப்பொழுது நினைவுக்கு வந்தது.

அழகான அந்த ரோஜா வண்ணப் புடவையில் நின்றிருந்த இளமதியைப் பார்த்ததும் மின்சாரம் பாய்ந்ததுபோல உணர்ந்து அதிர்ந்து போய் நின்றதும் வேறு ஏதோ பேசிவிட்டு அவளிடத்தில் இருந்து வந்ததும் அவனுக்கு அந்த உண்மையை உரைத்தது.

இளமதியைத் தான் நேசிக்கிறோம் என்ற உண்மை. அதிர்ந்து போனான்.

மளமளவென்று அந்த எண்ணத்துக்கு எதிரான சூழ்நிலை பற்றிய கருத்துக்கள் மனதில் தோன்றின. ஒன்று, அந்தப் பெண் மேல்தட்டுப் பெண். தன்னைப்போல நடுத்தர... நடுத்தர என்ன இன்றைக்கு கதிரவன் ஃபை னான்ஸை விட்டு வெளியே வந்தால் அவனுக்கு வேறு வழியில்லை. புதிதாக ஒரு வேலை தேடி உருவாக்க வேண்டும். கீழ் நடுத்தர குடும்பம் என்றுகூட சொல்லலாம். அப்படிப்பட்ட தனது குடும்பத் தரத்திலே வந்து அவள் வாழ்க்கைப் படுவாளா...? அப்படி அவள் கஷ்டப்பட வேண்டும் என்று அவளுக்குத் தலையெழுத்தா... என்ன?.

இன்னொரு புறத்திலே அவனுக்கு சக்திவேலுக்கு இளமதி மீது லேசாக நாட்டம் இருக்கிறாற் போல என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருந்தது. பல சமயங்களில் ஆதிமூலமும், கந்தவேலும் தங்கள் குடும்பத்திலேயே அந்தப் பெண்ணை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பேசுவது போல அரசல்புரசலாக அவன் கேள்விப்பட்டு இருக்கிறான்.

அது ஒரு பெரிய சாம்ராஜ்யம். அந்த சாம்ராஜ்யத்தின் தூண்கள் அவர்கள். அந்த தூண்களைத் தொட்டு அசைத்துப் பார்த்துவிட்டு அங்கே நாம் குப்பை போட முடியுமா? தனக்கு வேலை கொடுத்து இந்த அளவிற்கு உயர்த்தி விட்ட அந்த நிறுவனத்துக்குச் செய்கிற துரோகம் ஆகாதா? அவ்வளவு ஏன், சின்னசாமியும், சக்திவேலும் தன்னை உயிருக்கு உயிரான நண்பனாக நடத்துகின்றனர்.

ஒருவேளை சக்திவேலுக்கு அந்த எண்ணம் இருக் கிறதோ.. இல்லையோ... ஒருவேளை பெரியவர்களுக்காக அவன் அந்த கருத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியவனாக மாறினால்... நான் அவனுக்குச் செய்யும் துரோகம் ஆகாதா?



எப்படி இப்படியொரு எண்ணம் தோன்றியது என்று நினைத்தபொழுது தான் பட்டென்று அது உறைத்தது.

இளமதி மற்றவர்களைக் காட்டிலும் தன்னிடம் இலகு வாகப் பழகுகிறாள். அலுவலகத்திலே ஒருசில பிரச்சினை களில் கூட அவள் அவனிடத்திலே தனிப்பட்ட முறையிலே கேட்டுத் தீர்வு கண்டு வந்திருக்கிறாள்.

எப்பொழுதுமே களப்பணி... ஃபீல்ட் ஒர்க் என்றால் தன்னோடு வருவதில் அவள் ஆர்வம் காட்டியிருக்கிறாள். அவள் கண்களில்கூட ஏதோ செய்தி இருக்கிறாற் போல உணர்ந்தபொழுதே அவன் அதிர்ந்து போனான்.

இது பெரிய பிரச்னையைக் கொண்டு வரப்போகிறது. இதைத் தாங்குகிற சக்தி தனக்கு இருந்தாலும்கூட அந்தப் பெண் புயலிலே சிக்கிய துரும்பு போல தவித்துப் போவாள்.

அந்த நான்கு குடும்பங்களுக்கு இடையே பெரியதொரு விரிசல் விழுவதற்குத் தான் காரணமாக ஆகி விடுவோம். முளையிலேயே கிள்ளி விடுவது தான் நல்லது. வளர்ந்த தற்குப் பிறகு பிரிவதென்றால் வாள் கொண்டு அறுத்தாற் போல இருக்கும். அதை தாங்குகிற சக்தி தனக்கு இருக்கிறது. ஆனா கொடியைப் போல இருக்கிற அந்தச் சின்ன மனத்துக் காரி... அவளுக்கு இதை தாங்குகிற சக்தி இருக்கிறதா? என்ற எண்ணம் தோன்றியவுடனே அவன் அதிர்ந்து போனான்.

தெளிவாக அவனுக்குப் புரிந்தது. தனக்கு எந்த அளவுக்கு இளமதி மீது நாட்டம் இருக்கிறதோ... அந்த அளவுக்கு இளம திக்கும் தன் மீது நாட்டம் இருக்கிறது என்று! அதற்கான சான்றுகள் போல சில காட்சிகள் அவன் மனதிலே வந்து போயின. அப்பொழுது தான் அந்த முடிவை எடுத்தான்.

ஏழு மணி, எட்டு மணி வரை அலுவலக வேலைகளைச் செய்கிறேன் என்பதுபோலக் காட்டிவிட்டு, ஒரு ராஜினாமா கடிதத்தை எழுதி கருணாகரனின் டேபிள் மீது வைத்து விட்டு வந்து விட்டான்.

சட்டதிட்டங்களெல்லாம் இருக்கின்றன. குறைந்தது இரண்டு மாதமாவது நோட்டீஸ் கொடுக்க வேண்டும், இல்லையென்றால் சம்பளம் பிடித்துக் கொள்ளப்படும் என்று! என்னவோ பண்ணட்டும்,

தன்னுடைய பி.எப். இருக்கிறது. அதில் கழித்துக் கொண்டு கொடுக்கட்டும். கொடுக்காமலேயே போகட்டும். ஆனால் இந்தக் கணத்தில் இந்த இடத்தில் இருந்து வெளியேறுவது தான் மரியாதையுடன் வெளியே போவதற்கான ஒரே வாய்ப்பு என்று பிடிவாதமாகத் தோன்றவும் அங்கிருந்து கிளம்பி வந்து விட்டான்.

எங்கே போவது? என்று யோசித்தபொழுது தான் தங்கை வீட்டுக்கு செல்வோம். அதுமட்டுமில்லாமல் ஒரு மாதம் எங்காவது வெளியூர் போய் விடலாம். வெளியூர் என்றால் கூட கண்டுபிடித்து விடுவார்கள். வெளிநாடு போய் விடலாம் என்று முடிவு செய்து கொண்டு, ஒரு டிராவல்ஸ் கம்பெனியில் தொடர்பு கொண்டான்.

ஐந்து நாள் மலேசியா, ஐந்து நாள் சிங்கப்பூர் என்று அடுத்தடுத்தாக அவன் தன் டூர் ப்ரோகிராம் பிக்ஸ் செய்து கொண்டு தங்கையைப் பார்த்து விட்டுக் கிளம்பி விடலாம் என்று தான் இங்கே வந்திருந்தான்.

அப்பொழுது தான் தோன்றியது. பேசாமல் இந்த மல்லிகாவை கல்யாணம் செய்து கொண்டால் என்ன, என்று! திடுக்கிட்டுப் போனான். எலிக்குத் தப்பி பூனை வாயில விழுந்தமாதிரி ஆச்சே... பாவம் அந்தப் பெண்... அவள் மீது அன்பில்லாமல் அவளை எப்படித் திருமணம் செய்து கொள்வது? ஆகா... எத்தனை திருமணங்கள் அரேஞ்டு மேரேஜாக நடைபெறுகிறது. அப்படிச் செய்து விட்டால் எல்லாருக்கும் பிரச்னை தீர்ந்து விடும்.

இளமதி கூட மனசை லேசாக மாற்றிக் கொண்டு சக்திவேலுக்குச் சரியென்று சொல்வாளோ என்னமோ...



சக்திவேலுக்கு இந்த வாய்ப்பை நாம் கொடுக்கலாம். அவன் பயன்படுத்திக் கொள்வதென்றால் பயன்படுத்திக் கொள்ளட்டும். இப்படி என்னென்னவோ எண்ணங்கள் தோன்ற திகைத்துப்போய் அமர்ந்திருந்த அண்ணனை நோக்கி வந்தாள் சகோதரி.

''அண்ணா, என்ன பிரச்சினை?''என்று கேட்டாள். அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு தங்கையைப் பார்த்தான்.

''ஒண்ணுமில்லைம்மா...''என்றான்.

''பொய் சொல்லாதே அண்ணா... எனக்குத் தெரியும், உன்னைப் பத்தி. இந்த மாதிரி நீ மலைச்சுப் போயி... தவிச்சுப் போயி இருந்ததை நான் பார்த்ததே இல்லை. என்னண்ணா விஷயம்?'' என்று கேட்டாள்.

''ஏம்மா... இந்த மல்லிகாவோட நேச்சர் எப்படி?''என்று அவன் பேச்சை மாற்றினான். அப்பொழுது தான் தங்கை, மடாரென்று அவன் தலையில் அடித்தாற்போல அந்த வாக்கியத்தை சொன்னாள்.

அவன் திகைத்துப் போய் பார்க்க...

''அண்ணா, நீ இப்ப டூர் புரோகிராம் போட்டிருக் கேல்ல... போயிட்டு வாண்ணா... ஒரு மாசம் நல்லா மனசை அலசிப் பார்த்துக்கோ... அதற்குப் பிறகு எந்த முடிவுன் னாலும் எடுக்கலாம்'' என்றவள் மேலும் சில வார்த்தை களைச் சொன்னாள்.

உள்வாங்கிக் கொண்ட சிம்மேந்திரன், பெருமூச்சு விட்டுவிட்டு, ''சரிம்மா... பாக்கலாம்''என்று அவன் திரும்பி இமெயிலுக்குள் பார்வையைச் செலுத்தினான். அவனது அலுவலகத்தில் இருந்து சக்திவேல் மெயில் அனுப்பி இருந்தான்.

உன்னுடைய ராஜினாமா நிராகரிக்கப்பட்டது. ஒரு மாதம் உனக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று போர்டு ஆப் டைரக்டர்ஸ் முடிவெடுத்திருக்கிறார்கள்' என்பது போல ஒரு தபால் அனுப்பி இருந்தான்.

சிம்மேந்திரன் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

★ ★ ★

## அத்தியாயம் 21

சக்திவேல் தன்னுடைய படுக்கை அறையில் இருந்து வெளிப்புறமாக நீட்டப்பட்டு இருந்த அந்த சிட்அவுட்டிலே அமர்ந்து கொண்டிருந்தான்.

சென்ற பௌர்ணமிக்கும், இந்தப் பௌர்ணமிக்கும் எத்தனை வித்தியாசம். பாரி மகளிர் பாடிய பாடல் தான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அந்தப் பௌர்ணமியின் போது எங்கள் நாடும் எங்களிடம் இருந்தது. எங்கள் தந்தையும் எங்களுடன் இருந்தார். இந்தப் பௌர்ணமியின் போது எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம் என்பது போல பாரி மகளிர் பாடியதாக புறநானூறில் ஒரு பாடலில் அவன் படித்திருக்கிறான்.

கிட்டத்தட்ட அந்தத் தழுவலில் தான் கண்ணதாசன் கூட, ''அன்றொரு நாள் அவள் இருந்தாள்...''என்று பாடல் எழுதியதாக அவனுக்கு நினைவு.

இப்பொழுதெல்லாம் இரவுகள் அவனுக்கு சுமையாக இருந்தன.

இளமதியோடும், சிம்மேந்திரனோடும், சின்னுவோடும் அவர்கள் அங்கங்கே சென்ற நாட்கள்... பார்ட்டிகளுக்குச்



சென்ற நாட்கள்... ஏன், களப்பணி என்ற பெயரிலே அவர்கள் சென்று வந்த குடிசைப் பகுதிகளில் கூட எல்லாவற்றையும் முழுமையாக ரசித்தார்கள்; சிரித்தார்கள்; இப்போது அதிலேயெல்லாம் பெரியதொரு விரிசல் விழுந்து விட்டாற் போல உணர்ந்தான் சக்திவேல்.

எதையாவது மனதுக்கு அமைதி தருகிற விஷயமாக கேட்டுக் கொண்டு தான் உறங்கப் போகிறான். இருந்தாலும் சில நாட்களில் பன்னிரெண்டு மணி, ஒரு மணி என்ற அளவிலே தூக்கம் கலைந்து விடுகிறது. இளமதியின் முகம் வந்து மோதத்தான் செய்கிறது அவன் நினைவலைகளில்.

அமைதியாகப் போய் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு இரவை வேடிக்கைப் பார்க்கிறான். முன்பெல்லாம் அவனுக்கு இரவு பிடிக்கும். ரெயில் பயணங்களின் போதும், கார் பயணங்களின் போதும், இரவு நேரப் பயணங்களை மிகவும் ரசித்து இருக்கிறான்.

அதிலும் நண்பர்களோடு காரில் போகும்பொழுது நள்ளிரவு நேரத்தில் கார் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்து அதிர்ந்து நிற்கின்ற முயல்களைப் பார்த்து எப்பொழுதும் அவனுக்கு கருணை பிறக்கும். பளபளவென்று மின்னும் கண்களுடன் அவைகள் திகைத்து நிற்கும். நண்பர்கள், ''டேய் முயல்டா... பிடிக்கலாம்டா... அடிச்சுடலாம்டா'' என்று பறப்பார்கள்.

சக்திவேல் இருந்தால் அதற்கு எப்பொழுதும் அனுமதி கொடுத்ததே இல்லை. சுத்தமாக மறுத்து விடுவான் ''வேண்டாம்டா...''என்று விளக்குகளை அணைத்த பின்பு ஒரே ஓட்டமாக ஓடி மறையும் முயல்களைப் பார்த்து அவன் சிரித்துக் கொள்வான்.

எப்பொழுதாவது வரும் மாட்டு வண்டிகள்...!

தூரத்தில் வரும் அந்த மாட்டு வண்டிகள்... மாடுகளின் கண்கள் மின்னுவது பார்க்க அழகாக இருக்கும். அப்படி இரவை ரசிப்பான்.

சில நேரங்களில் நல்ல பாடல்கள் கேட்பான். அவன் நண்பர்களிடம் கூட சொல்வதுண்டு. ''பால்கனியிலோ இல்ல, மொட்டை மாடியிலோ இருந்துகிட்டு எம்.எஸ்.விஸ்வநாதன், பி.சுசீலா, டி.எம்.சவுந்தர்ராஜன் காம்பினேஷனில் கண்ணதாசன் பாடல்கள் கேட்டிருக்கிங் களாடா... அந்த சுகமே தனிடா...'' என்பான்.

பொறுக்கியெடுத்த பாடல்களை இதற்காகப் பதிவு செய்து கேட்டு மகிழ்வான். இப்பொழுதெல்லாம் அதிலே ஆர்வம் போய் விட்டது. கேட்டால் எரிச்சல் தான் வந்தது. எப்படி வாழ்க்கை தலைகீழாக மாறியது? கிட்டத்தட்ட பதினைந்து நாட்களுக்குப் பிறகு... இன்றைக்குத் தான்... இப்பொழுது தான் மெதுவாக அவன் தேறிக் கொண்டு வருகிறான். ஆழ்ந்த அமைதியில் அமர்ந்திருந்தான்

இரவை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பௌர்ணமி நிலவு அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் இருந்த செடிகள் மீதெல்லாம் பாய்ந்து ஒரு வித்தியாசமான தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

யாரோ வருகிற மாதிரி தெரிந்தது. திரும்பிப் பார்த்தான்...!

அவனது தந்தை!

''வர்லாமாப்பா... டிஸ்டர்ப் பண்றேனா...'' என்று கேட்டுக் கொண்டே வந்து அமர்ந்தார். அப்படி அமர்வதற்கு முன்பாக மெல்ல அவன் தலையைத் தடவிக் கொடுத்தார்.

பொங்கிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட சக்திவேல், அவரைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தான்.

''என்னப்பா... தூங்கலையா?''என்றான்.



''நீ தூங்கலையாடா... ராஜா...'' என்றார் அப்பா.

''சும்மா தான் அப்பா. கொஞ்ச நேரம் ஃப்ரியா உட்கார்ந்திருக்கலாம்னு உட்காந்தேன்''என்று சமாளித்தான் மகன்.

அவர் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் அமைதியாகவே அமர்ந்திருந்தார்கள்.

''ஏம்ப்... பா... தேவையில்லாம நானும் உசுப்பி விட்டுட் டேனோ...'' என்று கேட்டார் கந்தவேல், குற்ற மனப் பான்மையோடு. சக்திவேல் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''உசுப்பி விட்டீங்கன்னு சொல்ல முடியாதுப்பா... ஆனா ஓரத்திலே ஒரு தைரியம் இருந்தது. பெத்தவங்களை கன்வின்ஸ் பண்றதுக்காக கஷ்டப்பட வேண்டியதிருக்காது... அப்படியொரு எண்ணம்''என்றான்.

இப்பொழுது பெருமூச்சு விடுவது அவருடைய முறையாயிருந்தது. மெல்ல சொன்னார்.

''எல்லாமே நல்லதுக்குத்தாம்ப்பா... இதை நீ கடந்துருவே. கடந்துரனும். எல்லாருடைய வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு கட்டத்திலே ஒரு சின்ன அளவிலாவது ஈர்ப்பு இருந்துருக் கும்ப்பா... ஏதோ ஒரு ரயில் பயணத்திலே... கோவில்லே... சினிமாவிலே... காலேஜ்ல... எங்கேயோ பார்த்த பெண்ணை... பழகின பெண்ணை... அப்படீன்னு மனசுக்கு பிடிச்சவங்க யாராவது கண்டிப்பா இருக்கத்தான் செய்வாங்க. ஆனா கடக்கணும்ப்... பா... உன்னால கடக்க முடியுங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு''என்று அவன் கைகளின் மேல் கைகளை வைத்து அழுத்திக் கொடுத்தார்.

அவன் அன்பாக அப்பாவைப் பார்த்து புன்னகைத்தான்.

''கடந்துருவேன்ப்பா... நீங்க நினைக்கிற மாதிரி தீவிரமான காதலெல்லாம் இல்லைப்பா... இது வெறும் சலனம். ஜெயிச்சுருவேன்ப்பா...'' என்றான்.

"ஆனா... நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்ப்பா..." என்றார்.

"நீ என்ன கேட்கப் போறேன்னு எனக்குத் தெரியும்ப்பா..." என்றார் தந்தை.

நீங்களே சொல்லுங்கள் என்பது போல அவன் பார்க்க, "சிம்மேந்திரனுக்கு கல்யாணம் பண்ணி வைக்க ஏற்பாடு பண்ணுங்கன்னு சொல்லுவே, இல்லையா. தயவுசெய்து மன்னிச்சுக்கப்பா... இதுல என்னால தலையிட முடியாது"என்றார்.

சக்திவேல் அவரை வருத்தமாகப் பார்த்தான்.

"பின்னே என்னப்பா... என் மகனை வேண்டாம்னு சொன்ன பொண்ணுக்காகப் போயி... அவளுக்குப் புடிச்சப் பையனைக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்கிற அளவுக்கு நான் புத்தன் இல்லைப்பா... மகாத்மா காந்தியும் இல்லை..." என்றார்.

சக்திவேல் மறுபடியும் புன்னகைத்தான்.

"உங்களை அப்படியெல்லாம் செய்யச் சொல்லலைப்பா... இதுக்கு முன்னாடி நீங்க சொன்னீங்களே... நான் தலையிட மாட்டேன்னு... அதை மட்டும் காப்பாத்தினீங்கன்னா போதும். மத்ததையெல்லாம் நான் பார்த்துக்குவேன்" என்றான்.

கந்தவேல் முகத்தில் கோபம் தொனித்தது. "என்னடா நீ, தியாகியா?"என்று கேட்டார்.

"தியாகி இல்லப்பா... நிதர்சனவாதி."

"அப்படியெல்லாம் நினைச்சுக்காதேடா... நாங்க மூணு பேருமாச் சேர்ந்து பாக்கியத்துகிட்டப் பேசினா... கண்டிப்பா இளமதியை உனக்குக் கொடுத்து தான் ஆகணும். என்ன, கொஞ்ச நாளைக்கு அந்தப் புள்ளைக்கு அந்தப் பையன் நினைப்பு இருக்கும். கொஞ்சநேரத்துக்கு முன்னாடி



சொன்னேனே... எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒரு பொண்ணு வந்துட்டுத்தான் இருக்கும்னு. கண்டிப்பா பொண்ணுகளுக்கும் அதாம்ப்பா நிலைமை. எல்லா பொண்ணுங்க மனசுலேயும் அவளுக்குப் புடிச்ச ஆம்பளை யாராச்சும் இருந்துகிட்டிருந்திருப்பான். எல்லாருக்கும் ரெண்டும் ஒண்ணா அமைவது கஷ்டம். சில பேருக்குத் தான் அமையும். உனக்குச் சொன்ன மாதிரிதான் அந்தப் பொண்ணும் கடந்து வந்தா வேலை முடிஞ்சது"என்றார்.

சக்திவேல் முகத்தில் ஒரு கணம் அதிர்ச்சி தோன்றி மறைந்தது.

"அதைவிட அசிங்கம் வேறு எதுவுமில்லப்பா..." என்றான்.

"ஹ்ம்... அதுக்காகத் தாண்டா நான் பேசாம இருக்கேன். ஒண்ணு வேணும்னா செய்யறேன். நீங்க என்ன வேணும் னாலும் பண்ணிட்டுப் போங்க. நான் தலையிட மாட்டேன். அந்த உறுதி மட்டும் குடுக்கிறேன்"என்றார்.

"அது மட்டும் பத்தாதுப்பா..." என்றான்.

"பின்னே... என்னடா... கல்யாண ஏற்பாடெல்லாம் என்னைப் பண்ணச் சொல்றியா? அந்த சிம்மேந்திரன் பய எங்காவது என் முன்னாடி வந்துடப் போறான்..." என்றார் கந்தவேல்.

"நியாயமே இல்லப்பா... இதுல அவன் என்னப்பா தப்பு செஞ்சான்... இரண்டு மனசு ஒத்துப் போறதுங்கறதுக்கு எத்தனையோ காரணங்கள் இருக்கு. இளமதிக்கும் அவனைப் பிடிச்சுருக்கில்ல... அப்ப விட்டுக் குடுத்து தானே ஆகணும்"என்றான் சக்திவேல்.

"அதுக்காக அவன் தோளைத் தட்டிக் கொடுத்து கொஞ்சச் சொல்றியா..." என்று கேட்டார் கந்தவேல்.

"அதெல்லாம் வேண்டாம்ப்பா... அட்லீஸ்ட் உங்களுடைய கோபம் ஆறுகிற வரைக்குமாவது நீங்க... ஜஸ்ட் அவன் ஒரு ஸ்டாஃப்பு அப்படீங்கற அளவில் அவன்கிட்ட டிஸ்டென்ஸ் கீப்அப் செய்தால் போதும். நான் ஒண்ணு கேட்கிறேன். அதற்குப் பதில் சொல்லுங்க..." என்றான்.

"சொல்லு..." என்றார்.

"நெஞ்சுல கைவச்சு சொல்லுங்க. இந்த அஞ்சு வருஷத்துல... சிம்மேந்திரன் வந்ததுக்கு அப்பறம் நம்ம கம்பெனி எவ்வளவோ வளர்ச்சி அடையலையா... என்ன? வளர்ச்சிக்கு மட்டும் ஒருத்தனைப் பயன்படுத்திக்கலாம். ஆனா அவன் மனசுல தன்னையும் மீறி ஏற்படக்கூடிய இயற்கையான ஒரு உணர்வுக்கு தடை போடணுமா? இது எந்த வகையில நியாயம்ப்பா...?" என்றான்.

கந்தவேல் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

"வேணுங்கறப்ப மட்டும் நாம பயன்படுத்திக்குவோம், ஆனா தேவைகள் முடிஞ்ச உடனே... நீ யாரு... தெரியுமா உனக்கு...? அங்க நில்லு அப்படீங்கறோம்... இல்லப்பா..." என்றான்.

மறுபடியும் கந்தவேல் ஒன்றும் சொல்லவில்லை.

சற்று நேரம் கழித்து, "இங்க பாருப்பா... சிம்மேந்திரன் கிட்ட நான் எப்படி நடந்துக்கப் போறேங்கறதை அப்புறமாப் பாத்துக்கலாம். ஆனா உன்னைப்பத்தி நான் பெருமைப் படறேன்"என்றார்.

சக்திவேல் மெல்ல பெருமூச்சு விட்டுவிட்டு "அந்த நம்பிக்கை இந்தருக்கு என் மேல வர்லியே அப்பா..." என்றான்.

"அது எப்படியப்பா நீ இப்படியெல்லாம் நடந்துக்கு வேன்னு தெரியும்.? விடு... ஊரை சுத்திக்கிட்டு வரட்டும். அவனும் அனலைஸ் பண்ணிட்டு வரணும். வரட்டும். ஆனா எனக்கு ஒரு உறுதிமொழி கொடு"என்றார்.



சக்திவேல் அவரைப் பார்க்க "ஒருவேளை சிம்மேந்திரன் வந்து மனசு மாறி உங்க கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டா... நீ கல்யாணம் பண்ணிக்குவியா?"என்று கேட்டார்.

சக்திவேல் திடுக்கிட்டுப் போய் அப்பாவைப் பார்த்தான்.

"என்னப்பா... விளையாடறீங்களா...?" என்று கேட்டான்.

"ஒத்துக்குவியா... அதைச் சொல்லு"என்றார்.

"அதை அப்புறம் பாக்கலாம்ப்பா..." என்று தந்தையை சமாதானம் செய்து அனுப்பி வைத்தான்.

அவரை அந்தப் பக்கம் அனுப்பியதற்குப் பின்பு தான் அவனுக்குப் பயம் தோன்றியது. ஒருவேளை கந்தவேல் வேறு மாதிரியான முயற்சிகளில் இறங்கி விடுவாரோ"என்று!

உண்மையிலேயே கந்தவேல் வேறுவிதமாக திட்டம் போட்டுக் கொண்டிருந்தார் என்பது அப்பொழுது அவனுக்குப் புரியவில்லை.

## அத்தியாயம் 22

பதினாறு நாட்கள் ஓடி இருந்தது. !

மலேசியாவில் இருந்த அந்த புகழ்பெற்ற ஹோட்டலில் ஒரு அறையில் இருந்தான் சிம்மேந்திரன். கடந்த ஆண்டு களில் அவன் செய்த சிறந்த சேவைக்காக அவனுக்கென்றே அலுவலகம் ஒரு பயணத்துக்கான அனுமதியை வழங்கி யிருந்தது. அந்த அனுமதியை இப்பொழுது அவன் பயன் படுத்திக் கொண்டான்.

பதினைந்து நாட்கள் அங்கேயும் இங்கேயும் சுற்றிக் கொண்டிருந்தபோதிலும் கூட உள் மனத்தில் அந்த அழகு

முகம் வந்து கொண்டே தான் இருந்தது. அதிலிருந்து அவனால் தப்பிக்கவே முடியவில்லை. சரி, இதை ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும் போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

இதற்கப்புறமும் ஓடிக் கொண்டிருக்க முடியாது, அலுவலகத்தில் என்ன தான் நடந்திருக்கிறது பார்ப்போம் என்று லேப்டாப்பை எடுத்து வைத்துக் கொண்டு அலுவலகத்துக்கான அந்த ஈமெயில் ஐடி தொடர்பைப் புதுப்பித்துக் கொண்டான்.

தினம் ஒரு செய்தியாக கருணாகரனிடம் இருந்து வந்திருந்தது. ஒவ்வொரு செய்தியும் நச்சென்று முகத்தில் அறைகிறாற்போல இருந்தது. இடையிடையே கதைகள் வேறு.

நான்கு சிங்கங்கள் ஓட்டப் பந்தயத்தில் ஓடின. அதிலே மூன்று சிங்கங்கள் பின்தங்கி விட்டன. ஒரே ஒரு சிங்கம் மட்டும் வெற்றி வாய்ப்பை அடைகிற நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டு படுத்துக் கொள்கிறாற் போல நடித்தது, அடிபட்டு விழுந்து விட்டதாம்!

சற்று கழித்துப் பார்த்தால் அந்த ஓட்டப்பந்தயத்தில் மற்ற மூன்று சிங்கங்களில் ஏதாவது ஒரு சிங்கம் வென்றிருக்கும் என்று எண்ணிக் கொண்டு மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தால் இன்னும் சற்று தூரத்திலேயே அந்த மூன்று சிங்கங்களும் அந்த சிங்கத்தைப்போலவே படுத்துக் கொண்டு நடித்துக் கொண்டிருந்தனவாம் என்று ஒரு குறுஞ்செய்தி இருந்தது.

சிம்மேந்திரனுக்கு லேசான புன்னகையும் வந்தது. எங்கே நீ தப்பித்துப் போக முடியும் என்பது போன்ற ஒரு கேள்வியைத் தான் அவன் கேட்டிருக்கிறான் என புரிந்தது.



அன்றைக்கெல்லாம் ஆலோசனையில் இருந்தான். அன்று மாலை அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டான். இன்ன இடத்தில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டான்.

மறுநாள் கருணாகரனிடம் இருந்து ஒரு குட்டிக்கதை வந்திருந்தது. ஒரு இளைஞன் மொட்டை மாடியிலே நின்று யோசித்துக் கொண்டிருந்தானாம். உயரமான இரண்டு இலக்குகளை மையமாக வைத்து யோசித்துக் கொண்டிருந் தானாம்.

ஒரு மரத்தின் உச்சி...! பக்கத்திலே இருந்த சின்ன மலைக் குன்றினுடைய உச்சி... இந்த இரண்டில் எதை அடைவது என்று யோசித்துக் கொண்டிருந்தானாம். அந்தக் குன்றுக்குப் போகிற வழியில் நிறைய ஏழைகள் அவனைக் கண்டு கும்பிட்டார்களாம். இன்னும் கொஞ்சம் தூரம் போனவுடனே... கடையில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த பெண்களெல்லாம் ஓடி வந்து இவனைக் கும்பிட்டார்களாம். இன்னும் சற்று தூரத்திலே நிறைய கட்டிடங்கள் எழும்புகிறாற் போல அதற்காகத் தோண்டிக் கொண்டிருந்தார்களாம்.

ஓரத்திலே இங்கே பள்ளிக் கூடங்கள் கட்டப்படுகின்றன என்று ஒரு ஃபோர்டு வைத்திருந்தார்களாம்.

பெண்களெல்லாம் கும்பிட்ட உடனேயே அந்த இளைஞன் சட்டென்று திரும்பி வந்து விட்டானாம். எதற்காக இவ்வளவு சிரமப்பட வேண்டும், பேசாமல் இந்த மரத்தின் உச்சியிலே ஏறி நின்று கொண்டாலே உயரத்தைத் தொட்டு விட்ட மாதிரித் தானே... என்று எண்ணிக் கொண்டானாம்.

அன்று இரவு உறங்கிக் கொண்டிருந்தபொழுது அவனுக்கு ஒரு கனவு வந்ததாம். அந்தக் கனவிலே அவனைப் பார்த்துக்

கும்பிட்ட பெண்களெல்லாம் எங்களை இப்படிக் கைவிட்டு விட்டாயே என்ற புலம்பினார்களாம்.

விழித்தெழுந்தானாம். நள்ளிரவு என்றுகூட பார்க்காமல் அந்தக் குன்றின் உச்சியை நோக்கி நடந்தானாம்.

இப்படியொரு கதை... சிம்மேந்திரனைத் தாக்கிய இந்தக் கதை அவனுக்குள்ளே பல கேள்விகளை எழுப்பியது.

கருணாகரன், நீ அந்த அலுவலகத்தில் எதற்காக வேலை செய்கிறாய், உன்னுடைய உன்னதமான நோக்கங்கள் என்ன, உயர்வான சிந்தனைகள் என்ன... அதை விட்டுவிட்டு கேவலம் இந்த தனிப்பட்ட உணர்வுக்காக ஓடி விடுவாயா? என்று கேட்பது போல இருந்தது.

ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு உறங்கினான்.,

நள்ளிரவில் உண்மையாகவே அவனுக்குக் கனவு வந்தது. அந்தக் கனவில் அவன் வசூலுக்கு செல்கிற இடங்களில் இருந்த அவனுக்கு பரிச்சயமான முகங்களெல்லாம்... அதிலும் குறிப்பாக பெண்களின் முகங்களெல்லாம் வந்து போயின.

ஒரு பெண், இன்னொரு சின்னக் குழந்தையிடம் சொன்னாள். "தம்பி, இனிமே படிக்கிற ஆசையையெல்லாம் விட்டுரு. அந்தக் கம்பெனியில் இருந்து நம்மளை கவனிச்சுக்குறதுக்குன்னு யாருமில்லை. நம்ம முன்னே மாதிரியே இனிமே கஷ்டப்பட வேண்டியது தான்" என்று சொல்லிக் கொண்டு அழுகிறாற் போல ஒரு காட்சி!

இன்னொரு காட்சியிலே... "இனிமே எவன்டீ... உன்னைக் கேட்பான். அவன் தான் ஓடிப்போயிட்டானே... எவன்டீ கேட்பான்... எவனும்! கேட்க முடியாது" என்று குடிபோதையிலே குழறிக் கொண்டு அடிக்கிற ஒரு கணவன்!

இத்தனை நாள் எதிர்த்து நின்றாற் போல இல்லாமல் அதை மௌனமாக வாங்கிக் கொள்கிற மனைவி!



திடுக்கிட்டு விழிந்தெழுந்து அமர்ந்தான், சிம்மேந்திரன். முகமெல்லாம் வியர்த்துப் போய்விட்டது.

உண்மை தான் எத்தனை பெரிய விஷயங்களை நடத்த வேண்டியதிருக்கிறது. நம் ஒருவனுடைய உணர்வுக்காக அங்கே இருந்து ஓடி வந்து விட்டால் அது பொறுப்புகளில் இருந்து தப்பித்து வந்தது போல இருக்காதா? என்று எண்ணம் தோன்றியவுடனேயே... அந்த நேரத்திலேயும் கூட அவன் லேப்டாப்பை எடுத்தான்.

மணியைப் பார்த்தான். நள்ளிரவு இரண்டு மணி. !

ஐந்து நாட்களில் அலுவலகத்துக்கு வந்து சேருகிறேன் என்று செய்தி கொடுத்தான்.

மறுநாள் காலை கருணாகரன் அந்தச் செய்தியைப் படித்து விட்டு மெல்லப் புன்னகைத்துக் கொண்டான்.

★ ★ ★

"வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும், வாசல்தோறும் வேதனை இருக்கும்... உனக்கும் கீழே உள்ளவர் கோடி... நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு..." என்று இரவு படுக்கப் போகும்பொழுது கேட்ட அந்தப் பாடல் இளமதியின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

அந்தக் காலத்தில் அரசக் குடும்பத்துப் பெண்களெல்லாம் அரச குடும்பத்து உறவுக்காகவே திருமணம் செய்து கொள்வார்களாம். மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களின் கீழே அவர்கள் வசித்தாலும்கூட, அவர்கள் வாழ்க்கையும் தியாகமயமாகத் தான் இருந்திருக்கிறது.

என் ஒருத்திக்காக... என் சுயநலத்திற்காக ஒரு பெரிய நிறுவனத்துக்குள்ளே குழப்பங்களை ஏற்படுத்துவது எந்த வகையில் நியாயம்? இந்த மூன்று குடும்பங்களும் இதுநாள் வரை தங்கத் தட்டிலே வைத்து தாங்கியதைப் போலத் தன்னைத் தாங்கியிருக்கிறார்கள்.

தந்தை இல்லாத குறை தெரியாமல் வளர்த்து இருக்கிறார்கள். வாழ்க்கையில் மிக உயர்வான தரத்தில் தங்களை வைத்திருக்கிறார்கள். எந்த விதத்தில் நன்றி செலுத்துவது? ஏதோ ஒரு விதத்தில் செலுத்தத்தான் வேண்டும். எத்தனைப் பெண்கள் வாழ்க்கையில் எத்தனை பெண் பார்க்கும் படலங்கள் நடக்கின்றன.

முதன் முதலாக ஒரு மாப்பிள்ளை வருகிறபொழுது சிலிர்ப்பும் சந்தோஷமு மாக இருப்பார்கள். போய் லெட்டர் போடுகிறோம் என்று போகிறவர்கள் தகவலே கொடுக்க வில்லை என்றால் அடுத்த ஜாதகம்... அடுத்த மாப்பிள்ளை பார்க்கத் தானே செய்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த மாதிரி உணர்வுச் சலனங்கள் தோன்றியிருக்காதா என்ன, அதைக்கடந்து தானே வாழ்கிறார்கள். நானும் அப்படித்தான் முடிவெடுத்துக் கொள்ள வேண்டும்.

இருக்கிறவர்களிலே சக்திவேல் மட்டும் தான் தன்னிடம் லேசான சலனத்தோடு பழகியது போல அவளுக்கு தோன்றியது.

நிச்சயமாக கருணாகரனுக்கு அந்த எண்ணம் இல்லை. சின்னசாமிக்கும் சுத்தமாக அந்த எண்ணம் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். கருணாகரன் தன்னைப் பாதுகாக்கிற ஒரு தளபதியைப் போல இருக்கிறான் என்பதும் சின்னசாமி தன் உடன்பிறந்த சகோதரனாக இருக்கிறான் என்பதும் அவளுக்குப் புரிந்திருந்தது.

சக்திவேல் தான் இன்னமும் எந்த முடிவும் எடுக்காமல் இருக்கிறான் என்றாலும் தான் அவனிடத்திலே போய் சொன்னதும் பொறுப்பை எடுத்துக் கொண்டு தன்னுடைய தந்தையிடத்திலே போய் சொல்லி... அந்த மூன்று பேரிடத்திலேயும் சொல்லி தனக்காகப் போராடுவதைப் பார்க்கும்பொழுது அவள் மனதிலே சக்திவேலுக்கு ஒரு



உயரிய இடம் கிடைத்தது. மரியாதையோடு பார்க்கத் தொடங்கி இருந்தாள்.

நான்கைந்து நாட்கள் கழித்து அலுவலகம் போக ஆரம்பித்து இருந்தாள். சக்திவேல் கவனமாக எந்தத் தனிப்பட்ட பேச்சையும் தவிர்த்து விட்டான். அதற்காக அவளிடம் பேசாமல் இல்லை, சிரிக்காமல் இல்லை. ''உன்னுடைய சுதந்திரத்தை நான் மதிக்கிறேன். உன் உணர்வை நான் மதிக்கிறேன்''என்கிற மிகப்பெருந் தன்மையான ஒரு நடத்தை அவனிடத்திலே இருந்தது.

பார்க்கப் போனால் இதிலே இருந்து ஓடிப்போனவர் சிம்மேந்திரன் தான். ஒரு மாத விடுமுறை என்று போட்டுவிட்டு ஓடிப்போனால் பிரச்னைகள் தீர்ந்து விடுமா, என்ன? பிரச்னைகள் எழும் நேரத்திலே நின்று அதைச் சந்திக்க வேண்டாமா? ஏன் சிம்மேந்திரன் சந்திக்க வில்லை?... இத்தனைக்கும் சிம்மேந்திரனோ... இளமதியோ நேருக்கு நேராக தாங்கள் ஒருவரை ஒருவர் விரும்புவதாக சொல்லிக் கொள்ளவேயில்லை. இருவருக்கும் புரிந்திருந்தது. அல்லது ஒரு கணத்தில் புரியவும்தான் சிம்மேந்திரன் விலகிப் போனாரோ... என்ற கோபம் அவளுக்கு இருந்தது.

அலுவலகத்தில் இருந்து கொண்டு... மேஜை மேல் ஒரு பென்சிலை உருட்டிக் கொண்டு இப்படியெல்லாம் யோசித் தாள், இளமதி.

மணியைப் பார்த்தாள். ஐந்து மணி ஆகியிருந்தது. அலுவலகத்தில் இருந்து கிளம்பினாள். தன்னுடைய சின்ன மாருதி காரை செலுத்திக் கொண்டு நேராக கந்தவேலின் அலுவலகத்துக்குப் போனாள். கந்தவேல் இருக்க வேண்டும், கிளம்பியிருக்கக் கூடாது என்று வேண்டிக்கொண்டே போனாள்.

கந்தவேல் அவளைப் பார்த்தவுடனே ஒரு இறுக்கமான முகபாவத்துடன் தான் வரவேற்றார். ''வாம்மா, இளமதி. சொல்லு, என்ன விஷயம்?''என்று!

இளமதி அவர் முன்னாலே அமர்ந்து தன்னுடைய மனக்கருத்தைச் சொன்னாள். கந்தவேல் அவளைக் கூர்ந்து கவனித்தார். ''நல்லா யோசிச்சுக்கிட்டியா அம்மா''என்று கேட்டார். ''யோசிச்சுக்கிட்டேன் அங்கிள்''என்றாள்.

''நாளைக்கு வாழ்க்கை பூரா பிரச்னைகள் வரலாம். சந்திக்கத் தயாராக இருக்கணும்''என்றார்.

''கண்டிப்பா சந்திப்பேன், அங்கிள்''என்றாள்.

''அப்ப சரி, எப்ப வேணும்னாலும் கல்யாணம் வச்சுக்கலாமா?''என்று கேட்டார்.

''வச்சுக்கலாம் மாமா''.

''பரவாயில்லைம்மா... இப்போதைக்கு இந்த முடிவு மனசுக்கு வருத்தமாக இருந்தாலும் பின்னாலே பெரியவங்க ஏன் சிலதுங்களைச் சொல்றாங்க என்பதை நீ உணர்ந்துக்குவே. அப்படி உணர்ந்துக்கும்பொழுது எங்க மேல உனக்கிருந்த கோபமெல்லாம் மாறிடும்''என்றார்

''ஆமாம் மாமா''என்றாள் அவள், தலையைக் குனிந்து கொண்டு.

மாமாவிடம் பேசிக் கொண்டிருக்கையிலேயே மேஜை மேலே இருந்த அந்த பேப்பரை எடுத்துக் கொண்டு அதிலே அவள் கையில் கிடைத்த பேனாவால் எழுதிக் கொண்டிருந்தாள். 'சிம்மேந்திரன், சிம்மேந்திரன்...' என்று தன்னை அறியாமல் எழுதிக் கொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை.

''நிச்சயமான முடிவு தானேயம்மா...'' என்று கந்தவேல் கேட்க, ''ஆமாம் மாமா...'' என்று மறுபடியும் சொல்லிக்



கொண்டே கவனித்தவள் சிம்மேந்திரன் என்று தான் எழுதியிருப்பதை உணர்ந்து பக்கத்திலே இருந்த ஒரு ரப்பரை எடுத்து அழித்தாள். அழித்து விட்டு ஒரு கோட்டைப் போட்டாள்.

குறுக்கு கோட்டை மீறிக் கொண்டு 'சிம்மேந்திரன்' என்ற பெயர் பளிச்சென்று அவளைப் பார்த்து சிரித்தது.

''சரி மாமா, நான் கிளம்பறேன்''என்று புறப்பட்டாள்.

''சரிம்மா'' என்றார் கந்தவேல்.

புறப்பட்ட வேகத்தில் அந்தத் தாளை மேஜை மேலேயே விட்டுவிட்டாள். அந்த தாளை கையிலே எடுத்துக் கொண்டு கந்தவேல் யோசனையோடு அதனை நீவிக் கொடுத்தார்.

* * *

## அத்தியாயம் 23

கடை பரப்பிக் கொண்டிருந்தான் சிம்மேந்திரன்.

இது மலேசியாவில் வாங்கினது, இது சிங்கப்பூரில் வாங்கியது... என்று விதவிதமான பொருட்களை அவன் தாயின் முன்னால் எடுத்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

தாயின் கண்கள் அந்தப் பொருட்களின் மேல் போய் வந்தாலும் கூட, சிம்மேந்திரன் அறியாமலேயே அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். சிம்மேந்திரன் அதைக் கவனிக்கவில்லை.

செயற்கையாக வரவழைத்த உற்சாகத்துடன் அவன், தாயிடம் தன்னுடைய பயணத்தைப் பற்றியெல்லாம் சொல்லி மகிழ்விக்க முயன்று கொண்டிருந்தான்.

''அம்மா, இந்த கப்பல்..லே போனது எவ்வளவு அருமையாக இருந்துச்சு தெரியுமா? அப்புறம்... ம்மா... அந்த

மலேசியாவில அந்தக் கோயில் இருக்கே... முருகன்... நான் கூட ஒருதடவை படத்திலே காண்பிச்சேன்ல... பத்து மலைக்கோயில்... அந்தக் கோயிலு... அப்புறம் அந்தக் கிளி பேசற இடம்... மா..." என்று ஒவ்வொரு இடமாக விவரிக்க விவரிக்க அதன் மேல் ஆர்வம் சென்றாலும்கூட.... இந்த பயணத்தை ஏனோ மகன் முழுமையாக அனுபவிக்கவில்லை என்ற எண்ணமும் அவர் மனதில் தோன்றிக்கொண்டு தானிருந்தது.

"ஏம்ப்பா...? திடீர்னு ஏம்ப்பா..பயணம் கிளம்பிட்டே...." என்று கேட்டார்.

இவ்வளவு நேரம் விவரித்துக் கொண்டிருந்ததை தாய், உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தது போக... அவருடைய கேள்வி ஒருநிமிடம் அவனை உசுப்பியது.

"சும்மா தான் அம்மா..." என்றான்.

"ஏம்ப்பா... சும்மா நீ இப்படி அவசரமாக முடிவு எடுக்கிறவனில்லையே" என்று கேட்டார் அம்மா.

"என்னம்மா நீ, குடைஞ்சு... குடைஞ்சு கேட்கிறே..." என்று சொன்னவன், "இல்லம்மா... ஓர்க் லோட் ரொம்பவும் அதிகமாயிடுச்சு. திடீர்னு ஒரு பாய்ன்ட்ல இதுபோதும் எதுக்காக ஓடிட்டு இருக்கணும்னு தோணிச்சு... அதான் பார்த்தேன். சரி போய், ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு வர்லாம்னு முடிவு பண்ணினேன். ஏற்கனவே எனக்கு ஒரு போனஸ் மாதிரி இந்த ட்ரிப்புக்கான செலவைக் குடுத்துட்டாங்க... கம்பெனியில... பாஸ்போர்ட் எல்லாம் இருந்தது. டிராவல்ஸ் கம்பெனியைக் கேட்டேன். அரேஞ்ச் பண்ணித் தர்றேன் னாங்க. கிளம்பிட்டேன். அவ்வளவு தான்" என்றான்.

"ஓகோ... அப்படியா" என்று கொஞ்சமாக சமாதானம் ஆகிக்கொண்டாலும்கூட இந்தப் பயணத்தின் காரணம் இதுவல்ல என்று அந்தத் தாயின் மனது சொல்லிக்கொண்டே இருந்தது. தாய் அறியாத சூலா என்பார்களே அதுபோல ஏதோ ஒரு உள்ளுணர்வு, மகனை ஏதோ தின்று கொண் டிருக்கிறது. அவன் மனத்தில் ஏதோ ஒன்று ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது.



சொல்வதென்றால் மகன் இதற்குள்ளாகச் சொல்லி யிருப்பான். இதற்கு மேலும் கேட்பது அவ்வளவு நன்றாக இருக்காது என்று விட்டுவிட்டார்.

"சரிப்பா... நீ நல்லா ரெஸ்ட் எடு" என்றார்.

உண்மையாகவே சிம்மேந்திரனுக்கு ஓய்வு தேவையாக இருந்தது. மனதில் உள்ள சிந்தனைகளையெல்லாம் அப்பால் வைத்தாற்போல அவன் உடம்பு ஒரு உதறிவிட்டு நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டது.

ஒரு நாள் முழுவதும் படுத்து எழுந்தான். அதற்குப் பின்தான் மனம் கொஞ்சம் நிகழ்காலத்துக்கு வந்தது.

இரண்டு நாள் கழித்து வருவதாகத்தான் அலுவலகத்தில் சொல்லியிருந்தான். இத்தனைக்கும் தன் திட்டங்களைச் சொல்கிற சின்னசாமிக்கும் கூட இந்த தடவை அவன் சொல்லவில்லை. ஆனால் மாலையில் சற்று ஓய்வாக அமர்ந்து கொண்டிருந்தான்.

கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்குப் பிறகு தாய் கொடுத்த அந்த தேனீர் மிகவும் சுவையாக இருந்தது. ஊர் உலகமெல்லாம் சுற்றி விட்டு வந்தாலும் அவரவர் வீட்டுப் பழைய சோற்றுக்கும், ஊறுகாய்க்கும் ஒரு தனி சுவை தோன்றுமல்லவா... அதுபோல அந்த தேனீரும் அம்மா கொடுக்கிற பக்கோடாவும் அவ்வளவு சுவையாக இருந்தது.

அனுபவித்து அருந்திக் கொண்டிருந்தபொழுது எதிர்பாராத விதமாக சின்னசாமி அங்கு வந்தான்.

ஒருவேளை தெரிந்து தான் வந்தானோ என்னவோ... அம்மா சொல்லியிருப் பார்களோ என்ற எண்ணம் தோன்றியது.

சின்னசாமி உள்ளே நுழைந்தவுடனே, "இந்தப் பக்கமாப் போனேண்டா... ஒருவேளை நீ இருப்பியோ என்ற சந்தேகம். வந்தேன்..." என்று விளக்கம் சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான்.

"அதான் வந்துட்டேல்ல... அப்புறம் என்ன விளக்கம். உள்ளே வா"என்றான்.

"என்னடா இப்படிச் சொல்றே... ஒரு மாசம் ஊரைச் சுத்திட்டு வந்திருக்கிறே... எனக்கு ஏதாவது... வாங்கிட்டு வந்திருப்பே... கேமிரா கீமிரான்னு ஆசையா வந்துருக் கேன்டா..." என்று தனது வருகையை இலகுவாக்க முயன்றான் சின்னசாமி.

"தெரியுமே. மோப்பம் பிடிச்சுட்டு வந்துருவியே... அதெப்படிடா கரெக்ட்டா கேமரா வாங்கிட்டு வந்தேன்னு சொல்றே..." என்றான்.

"பின்னே... எனக்கு என்ன ஃபைவ் ஸ்டார் சாக்லெட்டா வாங்கிட்டு வருவே... அப்புறம் என்ன... நான் என்ன உன்னோட லேடி லவ்வா... எனக்கு ஏதாவது புடவை கிடவைன்னு வாங்கிட்டு வருவேன்னு சொல்றதுக்கு... எனக்குன்னு வாங்கிட்டு வந்தா இப்படித்தானேடா வாங்கிட்டு வருவே..." என்றான்.

"ரொம்ப விபரம்..." என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

"அப்படித் தெரியலைடா..." என்றான் சின்னசாமி.

"ஏன்...ஏன் அப்படிச் சொல்லிக்கறே..." என்று கேட்டான் சிம்மேந்திரன் மறுபடியும்.

"இல்லை... அவ்வளவு விபரமாக இருந்திருந்தா... நீ எதுக்கு திடீர்னு ஓடினே... எதில் இருந்து தப்பிச்சு ஓடினே...



அப்படீன்னு இந்த மரமண்டைக்குப் புரிஞ்சுருக்குமில்ல..." என்றான்.

சிம்மேந்திரன் இந்த நேரடித் தாக்குதலை எதிர்பார்க்க வில்லை.

சட்டென்று மௌனம் ஆனான்.

"இல்லடா... எல்லாத்திலே இருந்தும் கொஞ்சம் விலகி இருந்தா நல்லாயிருக்கும் போலிருந்தது. அதான் போனேன்" என்றான்.

"நீ அப்படிப் போனா... நாங்க விட்டுருவோமா...? அதென்ன கோழைப் பயலாட்டம் ரெசிக்னேஷன் லெட்டரை டேபிள்ல சொருகிட்டுப் போறது... உன்னை என்ன இந்தக் கம்பெனி அப்படியா வச்சிருக்குது"என்று உண்மையான கோபத்துடனேயே கேட்டான் சின்னசாமி.

"நான் ரிசைன் பண்ணினதுக்கும், கம்பெனிக்கும் சம்பந்தம் இல்லைடா... கம்பெனிக்கும் எனக்குமான உறவு என்றைக்கும் ஒண்ணு போலத்தான் இருக்கு" என்றான்.

"அப்படின்னா எதுக்கு பெர்சனல் மேட்டரையெல்லாம் இதுக்குள்ள நுழைக்கிறே..." என்று கேட்டான் சின்னசாமி.

"என்ன பெர்சனல் மேட்டரை நுழைச்சேன். எனக்குப் போதும்னு தோணிச்சு... வெளியே கிளம்பினேன்" என்றான்.

"அப்படியெல்லாம் வெளியில கிளம்பினா விட்டுரு வோமா நாங்க. ஒரு நோட்டீஸ் குடுக்க மாட்டியா... ஒரு டூ மன்த்ஸ், த்ரி மன்த்ஸ்னு"என்று கேட்டான்.

சிம்மேந்திரன் நீண்ட பெருமூச்சு விட்டுட்டு, "ஆமாம். குடுத்திருக்கோணும். எனக்குப் போனா போதும்னு இருந்துச்சுன்னு வச்சுக்கயேன்"என்றான்.

சின்னசாமி அவன் எதிரிலே வந்து அமர்ந்தான். அவனை ஊடுருவிப் பார்த்தான்.

"ஏண்டா... எங்க யாரையுமே உனக்கு நண்பர்களாகத் தெரியலே இல்ல..." என்று கேட்டான்.

சிம்மேந்திரன் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு, சொன்னான்.

"நண்பர்களாகத் தெரிஞ்சதுனால தாண்டா போனேன். எதுக்காகவும் இந்த நட்பு விலகிடக்கூடாதுங்கறதுக்காகத் தான் போனேன்"என்றான்.

ஒரு கனத்த மௌனம் நிலவியது.

"ஏன் சிம்மேந்திரன் ஒரு மூணு குடும்பம் கிட்டத்தட்ட ரெண்டு டெகேடா அதாவது இருபது வருஷமா ஒத்துமையா இருக்காங்க அப்படீன்னா... அவங்களுக்குள்ள ஏதோ ஒரு அண்டர்ஸ்டேண்டிங் இருக்கணும். எல்லாருக்கும் கொஞ்சம் மெச்சூரிட்டி இருக்கணும் அப்படீங்கறது உனக்குத் தோணலையா...?"என்று கேட்டான்.

சிம்மேந்திரன் இப்பொழுது நேரடியாக சின்னசாமியைப் பார்த்தான்.

"இருக்கும். இல்லைன்னு நான் சொல்லலை. ஆனா அது எதனால... நீங்களெல்லாம் பார்ட்னர்ஸ். அதனால் நீங்க ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் குடுத்துக்குவீங்க. நான் ஆஃப்ட்ரால் யாருடா, ஒரு எம்ப்ளாயி... உங்களுக்கு கீழே இருக்கிறவன். இதுல எந்த இடத்திலே... எந்த பாய்ன்ட்ல நான் போட்டிக்கு வரமுடியும் சொல்லு... பார்க்கலாம்" என்று கேட்டான்.

சின்னசாமி குபீரென்று சிரித்தான்.

"அப்படிப் போடு. இப்ப வந்துச்சுப் பாரு உண்மை" என்றான்.

சிம்மேந்திரன் திருதிருவென்று விழித்தான்.



"பின்னே என்னடா உளறிட்டேல்ல... நீ போட்டிக்கு வந்தேன்னு... எதுல போட்டிக்கு வந்தே சொல்லு"என்று கேட்டான்.

சிம்மேந்திரன் உளறிவிட்டோம் என்பதைப் புரிந்து கொண்டான்.

"இல்லை... போட்டிக்குன்னு நான் சொல்லலை..." என்று இழுத்தான்.

சின்னசாமி அவனது தோளைத் தட்டிக் கொடுத்துவிட்டு, சொன்னான்.

"இதெல்லாம் இயற்கை தானப்பா... இதுல உன் தவறு எதுவுமில்ல... எல்லா விஷயத்துக்கும் ரெண்டு பக்கம் இருக்கு. ஒரு கை மட்டும் ஓசை எழுப்பாது"என்றான்.

சிம்மேந்திரன் தலையைக் குனிந்து கொண்டான். சற்று நேரம் அமைதியாக இருந்தான். பிறகு நிமிர்ந்து பார்த்தான்.

"ஓசை எழுப்புறதுக்கு அந்த இன்னொரு கை வில்லிங்கா இருக்கான்னு நான் தெரிஞ்சுக்கவே விரும்பலைடா... தெரிஞ்சுகிட்டா வரப் போற பிரச்னை என்னன்னு நினைச்சுப் பார்க்கும்பொழுதே ஒரு பயம் வந்துருச்சு" என்றான்.

"என்ன பயம்?"என்று கேட்டான் சின்னசாமி ஆழமான குரலில்.

"நான் ஆசை ஆசையா வேலை செய்யற நிறுவனம். என்னை வளர்த்துவிட்ட நிறுவனம்டா... அதுல என்னால குழப்பம் வரக்கூடாது அப்படீங்கறதுக்காகத்தான் ஒதுங் கினேன்" என்றான்.

"ஒதுங்கினால் எந்தப் பிரச்னையும் தீராது, சிம்மேந்திரன். ஃபேஸ் பண்ணு. உட்காந்து பேசு. சால்வ் பண்ணு"என்றான்.

"இல்லைப்பா... நான் சால்வ் பண்றதுக்கெல்லாம் வர்லை. என்னுடைய வாழ்க்கைக்கு மட்டும் தான் சொலியூஷன் பார்த்துக்கிட்டேன். அவ்வளவு தான்"என்றான்.

"ஓகோ! உன்னுடைய வாழ்க்கை. அப்போ நண்பர் களான எங்களுக்கெல்லாம் அதிலே எந்தவிதமான பங்கம் இல்லை"என்றான்.

"இல்லைப்பா... என் குடும்பத்துக்குத் தான் முதல் உரிமை"என்றான் சிம்மேந்திரன் அழுத்தமான குரலில்.

சின்னசாமி இதை எதிர்பார்க்கவில்லை.

"சரிப்பா... நான் கிளம்பறேன்"என்றான்.

"இரு..இரு. அம்மா கையால காப்பி சாப்பிட்டுட்டுப் போ"என்றான்.

அதற்குப் பிறகு பத்து நிமிடங்களுக்கு மேல் அங்கே இருந்தாலும் கூட அவன் வரும்பொழுது இருந்த உற்சாகத்தை இழந்தவனாகக் கிளம்பிப் போனான்.

அவன் போகிற பாதையை சற்றுநேரம் வெறித்துப் பார்த்து விட்டு, அம்மாவை அழைத்தான் சிம்மேந்திரன்.

"ஏம்மா... ஏதோ கல்யாணம்... பொண்ணு பாக்கறதா... சொல்லிக்கிட்டிருந்தியே... யாருக்கு?"என்று கேட்டான்.

"இல்லைப்பா... பொண்ணு பாக்கறது இல்ல. மாப்பிள்ளை பாக்கறதுக்குத் தான்னு சொல்லிக்கிட்டு இருந்தேன்"என்றார் அம்மா.

"யாருக்கு...?"என்று கேட்டான் தெரியாதவன் போல.

"அதாம்பா... நம்ப பத்மாவோட கொழுந்தி... அவ பேரென்ன மல்லிகா... மல்லிகாவுக்கு..." என்றார்.

"நல்ல மாப்பிள்ளையா கோயம்புத்தூரிலேயே பார்த்திரலாமே..." என்றான்.



"நீயே ஒரு நல்ல மாப்பிள்ளை சொல்லு..." என்றார் அம்மா.

"உனக்கு கண்ணுக்கு முன்னாடி இருக்கிறவங்களை எல்லாம் நினைச்சுப் பாரும்மா..." என்றான்.

"கண்ணுக்கு முன்னாடி யா...? இப்ப கண்ணுக்கு முன்னாடி நீதான் இருக்கே. ஒத்துக்கவா போறே..." என்று கேட்டார் அம்மா.

"நான் ஒத்துக்க மாட்டேன்னு... நீ எப்படி முடிவு எடுக்கலாம்?"என்றான் சிம்மேந்திரன்.

அம்மா ஒருநிமிடம் அதிர்ச்சியானாற் போல பார்த்தார்.

"நிஜமாச் சொல்றியாடா...?"என்று கேட்டார்.

"நான் எதுவுமே சொல்லலைம்மா... நீயா பாத்து ஒரு முடிவு எடும்மா..."என்று சொல்லிவிட்டு எழுந்தான்.

"அப்ப கல்யாணத்துக்கு ஒத்துக்கறேங்கறியா..." என்று கேட்டார் அம்மா மறுபடியும்.

"அட போம்மா... குடைஞ்சு குடைஞ்சு கேட்டுட்டு..." என்று அந்தக் கேள்விக்கு ஆமாம் என்றும் பதில் சொல்லாமல் இல்லை என்றும் பதில் சொல்லாமல் அவன் அங்கே இருந்து நகர்ந்தான்.

"என்னடீ இது கூத்தாயிருக்கு. ஆமான்னும் சொல்ல மாட்டேங்கறான். இல்லைன்னும் சொல்ல மாட்டேங் கறான்" என்று கன்னத்தில் கைவைத்துக் கொண்ட அம்மா, "இந்த காலத்துப் பயலுக எப்பெப்ப எப்படி மார்றாங் கன்னே தெரியலியே..." என்று தனக்குத் தானே பேசிக் கொண்டார்.

இதுக்குப் பேசாம நம்ம பத்மாவைக் கேக்கலாம். அவளுக்குப் ஃபோன் செய்து விவரம் கேட்டா தெரிஞ்சு போகும். இவன் சென்னைக்கெல்லாம் போயிருக்கான். அந்த

மல்லிகா புள்ளைகிட்ட கலாட்டாவாப் பேசினானாம். என்னமோ ஒண்ணும் புரிய மாட்டேங்குது என்று குழப்பத்துடன் ரிசீவரைக் கையில் எடுத்தார், எண்களைச் சுழற்றலாம் என்று!

அதற்குள்ளாக அடுப்பில் பால் வைத்து விட்டு வந்த ஞாபகம் வர, ரிசீவரை வைத்து விட்டுப் போனார். பாலை இறக்கி விட்டு வந்த அந்தக் கணத்திலே ஃபோன் மணி ஒலித்தது. எடுத்தார். அந்தப் பக்கம் இருந்து பத்மா பேசினாள்.

''அம்மா, அண்ணன் ஏதாவது சொன்னாங்களா?''என்று கேட்டான்.

''ஆமாடி... நானே உனக்குப் ஃபோன் பண்ணலாம்--னு நினைச்சேன். உங்க அண்ணன் என்ன இந்த ஒரு மாசத்துக்கு முன்னாடி ஒரு மாதிரியாப் பேசினான். இப்போ ஒரு மாதிரியாப் பேசறான். பய புள்ள... சும்மா மூடை மாத்திக்கிறாண்டி''என்று சிரித்தார் அம்மா.

அந்தப்பக்கம் பத்மா சிந்தனையுடன் பேசினாள்.

''அம்மா, நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்கோ...'' என்று கிட்டத்தட்ட இரண்டு நிமிடத்துக்கு மேல் பேசினாள்.

அவள் பேசிய வார்த்தைகளையெல்லாம் முழுமையாகக் கேட்டுக் கொண்ட தாய், ஃபோனில் பேசியபடியே சிந்தனையில் ஆழ்ந்தார்.

ஊருக்குப் போய்விட்டு வந்து உற்சாகம் போல காட்டிக் கொண்டாலும் உள்ளத்தின் ஆழத்தில் உற்சாகமில்லாமல் மகன் நடமாடியதற்கு காரணம் அவளுக்கு ஓரளவுக்குப் புரிந்தாற்போல இருந்தது.

''அப்படியாடி... சொல்றே...'' என்று கேட்டார்.



''ஆமாம்மா... அப்படித் தான் சொல்றேன். அவசரப்பட வேண்டாம்''என்பது போல அவள் சொல்லவும், ''சரி வுடு, நான் அவன்கிட்டே பேசறேன்''என்றார்.

''வேண்டாம்மா... பேசாதே''என்றாள் மகள்.

'என்னடா இது. மகன் பேசு' என்கிறான். 'மகள் இப்படியே வை' என்கிறாள். ஒன்றும் புரியவில்லையே என்று யோசித்துக் கொண்டே ரிசீவரைக் கீழே வைத்தார்.

காலம் தன் மகனின் வாழ்க்கையில் தன் விளையாட்டை ஆரம்பித்து விட்டது என்பது அப்பொழுது அவருக்குப் புரியவில்லை.

* * *

## அத்தியாயம் 24

**அ**லுவலக வேலையின் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருந்தாள் இளமதி. இப்பொழுதெல்லாம் சுற்று வட்டாரத்தை அவள் அதிகமாக கவனிப்பதில்லை.

கருணாகரன் அலுவலகத்தில் தான் அவன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். வேலைக்கு வராமல் ஓடினால் எதிலிருந்தும் தப்பித்து விட முடியாது என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது.

எல்லாவற்றுக்கும் ஒரு தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அம்மாவிடம் அவள் ஒரு தீர்வு சொல்லியிருந்தாள்.

அந்தத் தீர்வு அம்மாவுக்கும் திருப்தியாக இருந்தது. குடும்பத்துக்கும் திருப்தியாக இருந்தது. திருப்தியாக இருந்தது என்று அம்மா சொன்னாலும் உள்ளூர அம்மாவுக்கு ஏதோ ஒரு கவலை இருந்தாற் போல அவளுக்குத்

தோன்றியது. அதனால் கிட்டத்தட்ட வீட்டிலே இருந்தவள், அதன்பிறகு தன் தாயிடம் சொன்னாள்.

"அம்மா, நான் பேசாம ஆபீஸ்க்கே போறேம்மா... அங்க போனா நிறைய வேலை இருக்கு. ஏதாவது ஒரு வேலையை எடுத்துச் செஞ்சிட்டு இருந்தா பொழுதாவது போகும். இங்க வீட்ல உட்காந்துட்டு கண்டதையும் யோசிச்சுகிட்டு இருந்தா கஷ்டமா இருக்கும்மா..." என்றாள்.

அம்மா, அவளை அன்புடன் பார்த்தார்.

"சரி, அப்படீன்னா நீ ஆபீஸுக்கே போ" என்று அனுப்பி வைத்து விட்டார்.

தன்னுடைய மனக்கவலையை மாற்றிக்கொள்வதற் காகவோ என்னவோ அவள் முழுமையாக அலுவலகப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

தினமும் ஒரு முறை சக்திவேல் பேசுவான். கந்தவேல் பேசுவார். கந்தவேல் இப்பொழுதெல்லாம் மிகவும் மகிழ்ச்சி யாகப் பேசினார். ஏனென்றால் அவர் எதிர்பார்த்தது நடக்கப் போகிறதே, அதனால். சக்திவேல் கடமைக்குப் பேசுகிறாற் போல பேசுவான். தனிப்பட்ட முறையிலே அவளிடத்திலே எந்த விசாரணையும் வைத்துக் கொள்ள மாட்டான். அவளும் அதைப்போலவே பேசுவாள்.

முடிந்தவரை அலுவலக வளாகத்தில் இளமதி, சக்திவேலை சந்திப்பதைத் தவிர்த்தாள். சின்னச்சாமி குறைந்தது இரண்டு முறையாவது அவள் எங்கே இருக்கிறாளோ... அங்கே வந்து அவளைச் சந்தித்து விட்டுப் போவான். எல்லாரைக் காட்டிலும் சின்னசாமியிடம் அவளால் கொஞ்சம் லகுவாகப் பழக முடிந்தது.

சின்னச்சாமி மிகவும் லாவகமாக சூழ்நிலையைக் கையாண்டான் என்று தான் சொல்லவேண்டும். தனிப்பட்ட விவகாரங்கள் எதையும் அவன் பேச மாட்டான். பொதுப் படையாக ஏதாவது அரசியல், சினிமா என்று ஒரு அரைமணி நேரம் பேசிவிட்டு அவளை மகிழச்செய்து விட்டுப் போய் விடுவான். இதில் எதிலும் பட்டும்படாமலும் இருந்தவன் கருணாகரன் தான். தங்கள் குடும்பத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு விஷயம் அலுவலகத்தில் நடந்திருக்கிறது என்பதையே அவன் கண்டுகொள்ளாதவன் போல நடமாடிக்கொண்டிருந் தான்.



ஒருசில நேரத்தில் இளமதிக்குக் கோபம் கூட வரும். இவன் என்ன மனிதன், கல்நெஞ்சக்காரனா... செத்தாயா பிழைத்தாயா என்று கூட கேட்க மாட்டானா? என்று அவளுக்குத் தோன்றும். எனினும் முழுமையான முடிவுகள் எடுக்கப்படவில்லை என்றாலும் முடிவு இதை நோக்கித்தான் போகப்போகிறது என்பதைப் போல கந்தவேல் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்.

சக்திவேலுக்கு உள்ளூற மகிழ்ச்சி என்றாலும் அவன் இப்பொழுதும் வெளிப்படையாக எந்த உணர்வுகளையும் காட்டாமல் தான் நடந்து கொண்டான்.

வழக்கம்போல அலுவலக ஃபோர்டு ஆப் டைரக்டர்ஸ் மீட்டிங்கில் எல்லாம் எல்லாரும் கலந்து கொள்வார்கள். எல்லோரும் கலகலப்பாகப் பேசிக் கொள்வார்கள். இருந்தாலும் மற்றவர்களுக்குத் தெரியாதவண்ணம் லேசான ஒரு விரிசல் இழையோடுவது போல அவர்களுக்குத் தோன்றியது.

நான்கு குடும்பங்களுக்குள்ளும் தன்னால் விரிசல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத் தானே தன்னையே தியாகம் செய்கிற முடிவுக்கு தான் வந்தோம் என்று எண்ணித் தன்னைத் தேற்றிக் கொண்டாள் இளமதி.

அப்பொழுது பதினொரு மணி இருக்கும். அவள் ஏதோ ஒரு ஃபைலை எடுத்து அதில் ஆழ்ந்து போய் இருந்தாள்.

யாரோ தன் டேபிளுக்கு முன்னால் வந்து நிற்கிறாற்போல தோன்றியது இளமதிக்கு.

''வேலை பார்க்கணும்தான் இளமதி. அதுக்காக நெருப்புக்கோழி மாதிரி தலையை ஃபைலுக்குள்ளேயே நுழைச்சுக்கணும்னு அவசியமில்லை''என்ற குரல் கேட்கவும் நிமிர்ந்து பார்த்தாள்.

கருணாகரன் நின்று கொண்டிருந்தான்.

மெல்லப் புன்னகைத்து விட்டு, ''முக்கியமான ஃபைல்'' என்றாள்.

''சொல்லு பாக்கலாம். இந்த ஆபீஸ்ல எந்த ஃபைல் முக்கியமில்லைன்னு... எல்லா ஃபைலும் முக்கியம்தான்'' என்றான், கருணாகரன்.

அவள் மறுபடியும் புன்னகைத்தாள்.

''லைஃபும் முக்கியம் தான்''என்றான் கருணாகரன்.

ஏதோ ஒரு பழைய படத்தில் இந்த ஃபைல், லைஃப் இரண்டு விஷயங்களை வைத்துக் கொண்டு வாக்குவாதம் நடக்கிற காட்சி அவளுக்கு நினைவுக்கு வந்தது.

இதற்குள்ளாக கருணாகரன் எதிரே இருந்த நாற்காலியில் அழுத்தமாக அமர்ந்தான்.

''சுற்றுப்புறத்தைப் பாக்கலாம் இளமதி. சுற்றுப்புறத்தில என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம்''என்றான் கருணா கரன்.

அவன் இரண்டு பொருளில் சொல்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அவள் மெல்ல ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு அமைதியாக அமர்ந்திருந்தாள்.

''ஏன்... இளமதி! எல்லாரைப்பத்தியும் நினைச்சுப் பாக்கறே... என்னை நினைச்சுப் பாக்க மாட்டியா...?''என்று கேட்டான்.



அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

''என் லைஃப் மட்டும் முக்கியமில்லையா?''என்று கேட்டான் கருணாகரன்.

''என்ன கருணா, இப்படிக் கேட்கிறீங்க...?'' என்று அவள் தயங்கியபடியே கேட்க, அவன் குறும்பாகப் புன்னகைத் தான்.

''இந்தக் குடும்பத்தில நானும் ஒரு மனுஷன் தான் இளமதி. எனக்கும் ஒரு வாய்ப்புக் குடுக்கணும்''என்றான்.

அவளுக்கு அடிவயிற்றில் இருந்து பயம் கிளம்பியது.

என்ன கருணா இப்படி பேசுகிறார். இப்பொழுது தான் ஒரு பிரச்னை கிட்டத்தட்ட முடிவான மாதிரி இருக்கிறது. முடிவென்ன... அந்த முடிவில் தன் வாழ்க்கையே பறிபோகப் போகிறது. இருந்தாலும் ஒருவருடைய தியாகத்தால் ஒரு நிறுவனமும் நான்கு குடும்பங்களுக்குள் இருக்கிற நல்ல உறவும் காப்பாற்றப்படுமானால் அதற்காகத் தான் எந்தத் தியாகத்தையும் செய்யலாம் என்ற எண்ணத்தில் தான் அவள், அந்த முடிவுக்கு வந்திருந்தாள்.

இப்பொழுது இது என்ன புதுக்குழப்பம்? கருணா வேறு திகில் கிளப்புகிறாரே... என்று எண்ணிக் கொண்டாள்.

கருணாகரன் கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல் அசராமல் அவளைப் பார்த்தான்.

''ஆமாம், இளமதி. எனக்கும் ஒரு வாய்ப்பு கொடுக் கணும்''என்றான்.

''புரியலை...'' என்றாள் இளமதி.

''நீ எங்கிட்டேயும் பேசணும். என்னோட கருத்துக் களையும் கேட்கணும். எனக்குன்னு சில எண்ணங்கள் இருக்கலாம் இல்லையா? அது என்னன்னு பாக்க மாட்டியா? கேட்க மாட்டியா?''என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

"எனக்கு கவிதை சொல்லத் தெரியாது இளமதி. நான் பெரிய சாதனையாளன் இல்லை. ரொம்ப யதார்த்த மானவன் என்று சொல்லமுடியாது. ஆனா எனக்கும் மனசுன்னு ஒண்ணு இருக்கு. அந்த மனசுக்குள்ளேயும் யாராச்சும் இருக்கலாம் இல்ல..." என்று கேட்டான்.

கிட்டத்தட்ட இளமதி மயக்கமடைந்து விழுகிறாற்போல ஆகிவிட்டாள்.

"புரியலை..." என்றாள் கலக்கத்துடன்.

"இப்பப் புரியாம இருக்கிறது தான் நல்லது. ஆனா எனக்கும் நீ ஒரு வாய்ப்பு கொடுத்தாகணும். இன்னைக்கு சாயங்காலம் நீ என்கூட வர்றே..." என்றார்.

"என் கார்..." என்று அவள் இழுக்க...

"பொல்லாத காரு. அந்த காருக்கு நான் ஒரு ஏற்பாடு செய்ய மாட்டேனா... கார் உன் வீட்டுக்கு வந்துரும். நீ ரெடியா இரு. நீயும் நானும் வெளியே போறோம்" என்றான்.

அவள் மறுபடியும் அதிர்ச்சியாகப் பார்க்க, "ஒண்ணும் பண்ணமாட்டேன் இளமதி. நான் மனுஷன்தான். பத்திரமாக் கொண்டு வந்து வீட்ல விட்ருவேன்"என்றான்.

அவன் பேசுகிற தோரணையே வித்தியாசமாக இருந்தது. பூடகமாகப் பேசுகிறாற்போல தோன்றியது. கேலியாகப் பேசுகிறானா... இல்லை எப்படி எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்காமல் போனாய் என்று உண்மையாகவே பேசுகிறானா? என்று அவளுக்குள் கவலை தோன்றியது. கூடவே கோபமும் கிளம்பியது.

நான் என்ன விற்கிற பண்டமா? ஆளுக்கு ஆள் எனக்கு வாய்ப்பு கொடு, என்னைக் கேட்டாயா? என்று



கேட்கிறார்களே. எனக்கு என்று ஒரு மனம் இருக்காதா? என்று கோபம் பொங்கியது.

பழைய காலத்து நாடகங்களில் எல்லாம் ஒரு விளக்கை வைத்துக் கொண்டு அதற்கு முன்னாலே வட்டமான அட்டையோ தகரமோ எதையோ கட்டி வைத்து விடுவார்கள். அதிலே வட்டவட்டமாக இடைவெளி இருக்கும். அந்த இடைவெளிகளிலே கலர் காகிதங்களை ஒட்டி வைத்து விடுவார்கள். அந்தப் பட்டையை ஒரு சுற்று சுற்றினால் மேடையில் நடிக்கிற வர்கள் முகத்தில் நீலநிறம், பச்சை நிறம், மஞ்சள் நிறம் என்று மின்னி மறையுமாம். அம்மா சொல்லக் கேட்டிருக் கிறாள்.

இப்பொழுது அது அவளுக்கு நினைவுக்கு வந்தது. கருணாகரன், கொஞ்சம் கூட அசையாமல் எதிரிலே அமர்ந்து கொண்டு அவளது முகத்து உணர்வுகளையெல்லாம் படித்துக் கொண்டிருக்கிறாற் போல கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அதிர்ச்சியா இருக்கா?"என்று கேட்டான்.

"கருணா, ப்ளீஸ்"என்றாள்.

"என்ன ப்ளீஸ். ஐ..யம் சீரியஸ். நீ இன்னைக்கு ஈவினிங் என்கூட வர்றே. வி ஹேவ் டூ டாக்'என்றான்.

"என்ன பேசணுமோ... இங்கேயே..." என்றாள்.

"இங்கேயா, கொஞ்சம் அப்படியே பாரு. அந்த கடைசியில இருக்கிற டைப்பிஸ்ட் நம்மளையே பார்த்துக் கிட்டிருக்கா பாரு. இந்த ஓரமா உட்காந்திருக்கானே பாலகிருஷ்ணன்... அக்கவுண்டன்டு... ரொம்ப தீவிரமாக வேலை செஞ்சிட்டு இருக்கான்னு தானே நினைச்சு கிட்டிருக்கே. ஒரக்கண்ணு பூரா இங்க தான் இருக்கு. இங்க நான் என்னத்தை பேச முடியும்? ஒருவேளை நான்

புரொபோஸே பண்றேன்னு வச்சுக்கோ... இங்க பண்ண முடியுமா?''என்றான்.

இளமதி சுத்தமாக அதிர்ந்து போனாள்.

''கருணா...'' என்றாள்.

''ஹலோ... ஹலோ... நான் ஒண்ணும் முடிவு சொல்லலை. வி ஆர் டாக்கிங், யூ ஆர் கம்மிங்''என்றான்.

இளமதி உண்மையிலேயே பயந்து போனாள்.

''பேசலாம்''என்றாள்.

கருணாகரன் குபீரென்று சிரித்து விட்டான்.

''பயப்படாதே. நீ பயப்படற மாதிரி நான் எதுவும் பேச மாட்டேன்''என்றான்.

இளமதி மறுபடியும் விழித்தாள்.

எழுந்த கருணாகரன் இரண்டு எட்டு எடுத்து வைத்து விட்டு மறுபடியும் திரும்பி வந்து, ''மறுபடியும் சொல்றேன். நீ பயப்படற மாதிரி நான் எதுவும் பேச மாட்டேன். ஓகேவா... யூ ஆர் மை டார்லிங்... ஓகேவா?''என்று சொல்லி விட்டுப் போனான்.

இளமதி மயக்கம் போடாத குறையாக அமர்ந்திருந்தாள். அதற்குப் பிறகு அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை.

மாலை எப்போதடா வரும் என்று கருணாகரன் காத்திருந்தான் என்றால் மாலை நேரம் ஏன் வருகிறது என்பது போல இளமதி நேரத்தை ஓட்டினாள்.

ஐந்தரை மணி முடிந்ததும் சரியாக வந்து நின்றான் கருணாகரன்.

''என்ன கண்ணம்மா... போலாமா?''என்றான்.

அவன் வேண்டுமென்றே டார்லிங் என்றும் கண்ணம்மா என்றும் தன்னை அழைக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. செய்வதறியாது அவனைப் பார்த்தாள்.



''எஸ் மேடம். வி ஆர் லீவிங்''என்றான் அவன்.

அவள் திகைத்துப் போய் மெல்ல எழுந்தாள். அவன் காருக்குப் போக அவளும் பின்தொடர்ந்து சென்றாள்.

முன்சீட்டில் அமருமாறு அவன் கதவைத் திறந்து கொண்டு நிற்க... அவள் ஏறி அமர்ந்து கொண்டாள். அவளைப் பொறுத்தவரை சக்திவேலுடனோ... சின்னசாமியுடனோ... ஏன் சிம்மேந்திரனுடனோ கூட காரில் போவது வழக்கம்.

கருணாகரனும் இரண்டு மூன்று முறை அவளைக் கொண்டு போய் விட்டிருக்கிறான் என்பதால் அலுவலகத்தில் யாரும் அதை வித்தியாசமாகப் பார்க்கவில்லை.

பெரியவர்களோடு கூட அவள் செல்வது வழக்கம் தான். ஆனால் இன்றைக்கு ஏனோ அவளுக்கு கை, கால்களெல்லாம் லேசாக நடுங்கின. இனியொரு பிரச்னை கிளம்பினால் அதை தான் எப்படிச் சமாளிக்கப் போகிறோம்.?

தனக்கென்று மனசொன்று இல்லையா... இந்தக் கதிரவன் ஃபைனான்ஸ் பற்றி மட்டும் தான் தன்னுடைய கருத்தெல்லாம் இருக்க வேண்டுமா? தன்னால் கருணாகரனுக்கும், சக்திவேலுக்கும் பிரச்னை வருமா? இத்தனை நாள் கருணாகரன் தன்னை அந்தக் கோணத்தில் நினைக்கவே இல்லை என்றுதானே நினைத்துக் கொண்டிருந்தோம்.

இது ஏதடா புதுத் தலைவலி? கருணாகரனையும் இவளுக்குப் பிடிக்கும் தான். ஆனால் அவள் அந்த ஒருவனைத் தவிர வேறு யாரையும் அந்தக் கோணத்தில் நினைக்கவில்லை. அதையும் கூட இப்பொழுது மனதில் இருந்து அழித்து விட முயற்சி செய்து கொண்டிருக்கிறாள்.

இப்படி இருக்கிற கட்டத்தில் கருணாகரன் இப்படி பிரச்னையைக் கிளப்புகிறானே என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. மெல்ல அவனைத் திரும்பிப் பார்த்து, ''எங்கே போறோம்?''என்று கேட்டாள்.

"தெரிஞ்சுக்குவே கொஞ்ச நேரத்திலே... கொஞ்சம் ஊரைவிட்டு வெளியே போயிடலாம். ஊருக்குள்ளேயா இருந்தா யாராவது டிஸ்ட்ர்ப் பண்ணுவாங்க. ஐ வாண்ட் டு டாக் டூ யு மேடம். அட்லீஸ்ட் ஆஃப் அன் அவர் வேணும். மனசுல இருக்கிறதை எல்லாம் சொல்ல வேண்டாம்...?" என்றான்.

அவள் மறுபடியும் அவனைப் பார்க்க...

"ஏன்... சக்திவேல் மனசுல இருக்கிறதை மட்டும்தான் கேட்பியா, நான் சொல்றதைக் கேட்க மாட்டியா?" என்றான்.

அவள் திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.

கார் ஒரு பதினைந்து இருபது நிமிடத்துக்கு மேல் ஓடி நகரை விட்டு வெளியே சென்றது. கிராமப் பகுதியில் இடதுபுறமாகத் திரும்பி சற்று தூரத்திலே ஒரு சிறிய பண்ணை வீட்டுக்கு சென்றது.

"நம்ம கம்பெனி கெஸ்ட் அவுஸ் தான். சில கிறுக்கனுக வில்லேஜ் பக்கமா தங்கணும்னு கேட்பானுங்கல்லே... அவனுகளுக்காக..." என்று அழைத்துக் கொண்டு போனான்.

ஒரு இருபத்தைந்து செண்டுக்குள்ளாக அந்த சிறிய பண்ணை வீடு அமைந்திருந்தது. அவர்கள் கார் நின்றவுடனே அங்கிருந்த காவலாளி கதவைத் திறக்க, "கம்மின் மேடம்... கம்மின்"என்று அழைத்துக் கொண்டு போனான்.

காவலாளியிடம் கண்ணைக் காட்டி, "இரண்டு சேர் கொண்டா..." என்றான்.

ஓடிப்போய் இரண்டு பிளாஸ்டிக் சேர்களைக் கொண்டு வந்து போட... அந்தப் பண்ணை வீட்டுக்கு முன்னாலே இருக்கிற இடத்திலேயே அமர்ந்து கொண்டான்.

"வேண்டாம், உள்ளே போனா உனக்குப் பயமா இருக்கும். இங்கேயே உட்காரலாம்"என்றான்.



ஏதோ ஒரு விதத்தில் அவன் தன்னைக் கேலி செய்வது போல தோன்றியது, இளமதிக்கு. ஆனால் அதைக் குறிப்பிட்டு தொட்டுக் காட்ட முடியாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

"இப்ப நான் பேசறதை நீ கேட்கணும். நான் பேசி முடிக்கிற வரைக்கும் நீ வாயையே திறக்கக்கூடாது. ஓகேவா..." என்றான். இளமதி பதிலொன்றும் சொல்ல வில்லை.

கருணாகரன் ஒரு பதினைந்து இருபது நிமிடங்களுக்கு மேல் பேசினான். இளமதி திகைத்துப் போய் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன மேடம்?" என்றவாறு அவன் எழுந்து நிற்க, தன்னையும் மீறி இரண்டு எட்டு எடுத்து வைத்துச் சென்று கருணாகரனின் மார்பில் சாய்ந்து கொண்டு கேவிக்கேவி அழுதாள்.

கருணாகரன், "அசட்டுப் பொண்ணு..." என்று சொல்லிவிட்டு, அவள் தலையை நீவிக் கொடுத்தான்.

"அங்க பாரு அவனுக்குப் பொறாமையா இருக்கும்" என்று அவளை மெல்லத் திருப்பினான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்,

கண்கள் நிலைகுத்தி நிற்க நின்றாள்.

★ ★ ★

## அத்தியாயம் 25

"என்னடா... எல்லா அரேஞ்ஜ்மென்டும் கரெக்ட்.. டா... இருக்கா"என்று உற்சாகமாக கேட்டுக் கொண்டிருந்தார் கந்தவேல்.

"இருக்கு பெரியப்பா..." என்றான் சின்னசாமி.

''ஆமாடா... ஆளுக்கு ஆள் கரெக்ட்டா ஒர்க்கைப் பிரிச்சுகிட்டீங்க தானே...'' என்று கேட்டார்.

''ஆமாம், பெரியப்பா. ஒவ்வொரு டிபார்ட்மென்டும் ஒவ்வொருத்தருக்கு... நாங்க ஜேஜேன்னு நடத்திருவோம். நீங்க ஏன் ஒரி பண்ணிக்கிறீங்க?''என்றான் சின்னசாமி.

''பாக்கலாம், பாக்கலாம். ஒரு கம்ப்ளெயின்ட் கூட வரக்கூடாது. ஊர்ல இருக்கிற அத்தனை விஐபியும் வர்றாங்க. நம்ம குடும்பங்கள்ல முதல் கல்யாணம். ஜாக்கிரதை''என்று திரும்பத் திரும்ப சொல்லிவிட்டு திரும்புகையில் சக்திவேல் அங்கு வந்தான்.

பட்டுவேட்டியில் பார்ப்பதற்குப் பாந்தமாக இருந்தான். ''நீ எங்கடா இங்கே வந்தே. நீ போய் உன்னோட வேலையைப் பாரு''என்றான் சின்னசாமி.

''என் வேலைதாண்டா...'' என்றான்.

''ம்ஹூம்... நீ போய் அங்க இரு. மணவறையிலதான் உனக்கு வேலை இருக்கு ஓடு, ஓடு...'' என்று கிண்டலாகச் சிரித்து விட்டுப் போனான் சின்னசாமி.

மகனை மகிழ்ச்சியாகப் பார்த்து விட்டு நகர்ந்தார் கந்தவேல்.

எல்லோருமே பட்டு சட்டை, வேட்டியில் இருந்தார்கள்.

கருணாகரன் விஐபிக்களுக்காக ஒதுக்கப்பட்டு இருந்த அந்த பெரிய டைனிங் ஹாலில் வந்தவர்களை சரியாக வரவேற்று உபசரித்து உணவு சரியாகப் பரிமாறப்படுகிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தான்.

''சும்மா சொல்லக்கூடாதுப்பா... ஜேஜேன்னு நடத்தியிருக்கீங்க...'' என்றார் வந்த ஒரு விஐபி.

''அப்புறம். இத்தனை பேர் நாங்க தடிப்பசங்க இருந்துட்டு இந்தக் கல்யாணத்தை நல்லா செய்யலைன்னா என்ன சார் அர்த்தம்?''என்றான் கருணாகரன்.



''நீங்களாப்பா தடிப் பசங்க... உங்க மாதிரி பிள்ளைங்க எங்களுக்கு இல்லையேன்னு நாங்க கிளப்ல பேசிக்காத நாளே இல்லை''என்றார் அவர்.

உண்மையில் ஒரு மிகப்பெரிய தொழிலதிபர் குடும்பத்தில் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவர் அவர். அவருக்கும் இரண்டு ஆண் மக்கள். ஆனால் அவர்கள் யாரும் தொழிலில் பெரிய ஆர்வம் காட்டாதவர்கள் மட்டுமில்லாமல் இருக்கிற சொத்தைக் காப்பாற்றவே அவர் தனியாகப் போராடிக் கொண்டிருந்தார்.

அதனால் இவர்களைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவருக்கு, பரவாயில்லை. கதிரவன் மைக்ரோ ஃபைனான்ஸ்ல நல்ல குழந்தைங்களாப் பெத்து வச்சிருக்காங்க என்று அடிக்கடிச் சொல்லிக் கொள்வார்.

''அதனால் என்ன, ஸ்டிரிக்ட்டாக் கூப்பிட்டு டிரெயினிங் குடுங்க மாமா, சரியாப்போகும்''என்றான் கருணாகரன்.

''வேணும்னா ஒன்னு பண்ணட்டுமாப்பா... உங்கிட்ட ட்ரெயினிங் அனுப்பட்டுமா?''என்றார் அவர்.

''அனுப்புங்க... ஆனா ரெண்டே நாள்ல ஓடிருவானுங்க'' என்று சிரித்தான் கருணாகரன்.

''ஏன் அப்படிச் சொல்றே...?''

''பின்ன... அந்த விரட்டு விரட்டிருவோம்ல...''என்றான்.

''நான் செய்ய முடியாததை நீயாச்சும் செய்யப்பா... உண்மையாத் தான் சீரியஸாத்தான் கேட்கிறேன்''என்றார்.

''அப்படி வேணாம் அங்கிள். இங்கு ஏற்கனவே மூணுபேர்... நாலு பேர் இருக்காங்க. கண்டிப்பா உங்களுக்கு ஒரு அரேஞ்ஜ்மென்ட் பண்றேன். என் ஃபிரண்ட் ஒருத்தன் கம்பெனி நடத்திகிட்டு இருக்கான். அங்க ட்ரெயினிங் அனுப்புவோம்''என்றான்.

"ரொம்ப சந்தோஷம்பா..."என்ற அவர் இவனது கையைப் பிடித்துக் கொண்டார்.

கல்யாண வேலைகளுக்கு இடையிலே இப்படிப்பட்ட பரோபகார வேலைகளும் நடந்து கொண்டிருந்தன.

"ஏண்டா... பந்தியை கவனிக்கிறியா... இல்லை வந்தவங்களோட அன்கோ போட்டுக்கிட்டு இருக்கியா...?"என்று கேட்டான் சக்திவேல்.

"ஏம்பா... உனக்கென்ன கவலை. எங்க மேல நம்பிக்கை இல்லையா...? நாங்க நல்லா நடத்திக் கொடுக்க மாட்டோமா...?"என்றான் கருணாகரன்.

"கண்டிப்பா... நீங்க நல்லா நடத்திக் குடுப்பீங் கங்கற நம்பிக்கையிலதானே நான் எட்டிப்பார்க்காம இருக்கேன்" என்றான் சக்திவேல்.

"அப்படியே இரு. விசேஷமெல்லாம் ஜாம்ஜாம்முன்னு நடந்துரும்"என்றான் கருணாகரன்.

சக்திவேல் சிரித்துவிட்டு நகர்வதை கருணாகரன் ஆழ்ந்த பார்வையோடு பார்த்துக் கொண்டிருந்தான். கருணாகரனும் பட்டு வேட்டி சட்டையில் தானிருந்தான். சக்திவேலும் பட்டு வேட்டி சட்டையில் தான் இருந்தான். கருணாகரனின் பார்வை சக்திவேலின் முகத்தைத் துளைத்துக் கொண்டு போனது.

"குடுத்து வச்சவன்..."என்று ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. ஒரு மண்டபத்தில் வைத்தால் இடம் கொள்ளாது என்று நினைத்தவர்கள் பெரியதொரு பந்தலைப் போட்டு இருந்தார்கள். இது அல்லாமல் மூன்று நான்கு பிரிவாக டைனிங்குக்காக ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.



ஒவ்வொரு வகையான உணவும் ஒவ்வொரு பந்தலில் என்றில்லாமல் ஒவ்வொரு பந்தலிலும் எல்லாவிதமான உணவுகளும் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

யாரும் கவனிக்கப்படாமல் விட்டுவிடப் படவில்லை என்பது போல ஏற்பாடுகள் அவ்வளவு சிறப்பாக இருந்தன. எல்லா தரப்புக்காரர்களும் அந்தத் திருமணத்துக்கு வந்திருந்தார்கள். அத்தனை பேர்களுக்கும் திருப்தியான கவனிப்பு கொடுக்கப்பட்டது.

மணமகன், மணமகள் கழுத்தில் தாலி கட்டுகிற அந்த நேரத்தில் எல்லோரும் மனதார வாழ்த்துகிற சூழல் அமைந்திருந்தது.

"கெட்டிமேளம், கெட்டிமேளம்" என்று முழங்க எல்லாரும் அட்சதை தூவி வாழ்த்தினார்கள்.

மணமகன், மணமகள் கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு," என்னம்மா..." என்று மெல்லச் சிரித்தான்.

இளமதி, ஒரு ஆழமான பார்வையோடு மணமகனை நிமிர்ந்துப் பார்த்தாள்.

சற்றுத் தொலைவில் கதிரவன் ஃபைனான்ஸின் பார்ட்னர்ஸ் என்று அழைக்கப்படும் பங்குதாரர்களின் அத்தனை குடும்பங்களும் நின்று பார்த்து புளகாங்கிதம் அடைந்து கொண்டிருந்தார்கள்.

இளமதியின் நெஞ்சத்தில் எத்தனையோ எண்ணங்கள் முட்டிக் கொண்டு வந்தன. ஆனால் அது பேசுவதற்கு நேரமில்லை என்பது போல தலையைக் குனிந்து கொண்டாள்.

கண்களில் இருந்து தரதரவென்று கண்ணீர் கொட்டியது.

"அப்பாடா... கல்யாணமெல்லாம் நல்லபடியாக முடிஞ்சது" என்ற வந்து அமர்ந்தார் ஆதிமூலம்.

"ஆமாப்பா..." என்று இன்னொரு புறம் சந்தோஷமாக வந்து அமர்ந்தார்கள் கந்தவேலும், கருப்புசாமியும்.

பெரியவர்கள் கூட்டணி இங்கே என்றால்... அந்தப் பக்கத்தில் இளையவர்கள் கூட்டணி இருந்தது. பேச்சும் கலகலப்புமாக நேரம் ஓடியது.

"ஏண்டா... உன் ப்ரண்டுன்னு ஒருத்தன் வந்தான்ல..." என்று சின்னசாமியைத் திரும்பிப் பார்த்து கேட்டான் கருணாகரன்.

"அவன் என்னடா... இந்தப்பந்தியிலும் இருந்தான்... அந்தப்பந்தியிலும் இருக்கிறான்"என்று கேட்டான்.

"சரி வுடு. இந்த மாதிரி ஃபுட் எல்லாம் பாத்திருக்கவே மாட்டானுங்க. வுடு, இன்னைக்கெல்லாம் தின்னு சலிக்கட்டும்" என்றான் கருணாகரன்.

சின்னசாமி, "அவனுக்கு வேணுங்கற வசதி இருக்குப்பா... ஆனா சாப்பாட்டைக் கண்டா அலைவான்" என்றான்.

"உன்னோட ஃபிரண்ட் இல்லை. வேற எப்படியிருப்பான்?" என்றான் கருணாகரன்.

"அது சரி, எல்லாரும் அமைதியா உட்காந்துட்டீங்க. ஏற்பாடு பண்ண வேண்டாமா?"என்றான் சின்னசாமி.

"என்ன ஏற்பாடு?"

"ஏம்ப்பா... சிம்மேந்திரனுடைய வரவேற்புக்கு போகணும்ல..." என்றான்.

"ஆமாம். அது வேற இருக்குல்ல. அது ஏழு மணிக்குத் தாண்டா ஆரம்பிக்குது"

"ஏய், நாம முன்னாடியே போய் ஏற்பாடெல்லாம் செய்யலைன்னா... அவன் கோபப்பட்டுக்குவாண்டா..." என்றான் கருணாகரன்.



"மெழுகுப்பொம்மையைக் கல்யாணம் பண்ண மாட்டேன், பண்ண மாட்டேன்னு சொல்லிக் கிட்டிருந் தாண்டா... கடைசியில் மெழுகு பொம்மையைத் தாண்டா கல்யாணம் பண்ணியிருக்கான்"என்றான் சின்னசாமி.

"அதுல வேற உனக்குப் பொறாமையா? உனக்கும் ஒரு மெழுகுப் பொம்மையாப் புடிச்சுடலாம்"என்றான் கருணா கரன்.

"எங்க போயி புடிப்பே..." என்றான் சின்னசாமி.

"ஏன், உனக்கு கொஞ்சம் கருப்புக் கலர்ல புடிச் சுடலாம்டா... இல்லைன்னா ப்ரவுன் கலர் மெழுகுப் பொம்மையாப் புடிச்சுடலாம்"என்றான் கருணாகரன்.

"பாத்தியா, நிற வேற்றுமை கூடாதுன்னு உலகமேப் போராடிக்கிட்டு இருக்குது. நீ என் விஷயத்தில இந்த... நண்பன்கிட்டேயே கலர் டிஃபரன்ஸெல்லாம் காட்டி மாட்டிக்காதேடா..."என்றான் சின்னசாமி மிரட்டுவது போல.

கருணாகரன் ரசித்துச் சிரித்தான். மேலோட்டமாக இப்படி தன்னைக் கேலி செய்தாலும் தன்னை மிகவும் மதிக்கிறவர்கள் என்பது சின்னசாமிக்குத் தெரியும். அதனால் தான் அவன் விளையாட்டுப் போல பேசினாலும் ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்துவான்.

"சரிப்பா... இப்படிப் பேசிக்கிட்டே இருந்தா..." என்றான்.

"டேய். மூணு நாளா அரேஞ்ஜ்மென்ட்ஸ்க்காக அலைஞ் சாச்சுடா... ஒரு டூ அவர்ஸ்... சின்ன தூக்கம் போட்டுட்டு நாலு மணிக்கு கிளம்பிறலாம்டா"

"நாலு மணிக்கா... இப்பவே மணி மூணு ஆச்சு"என்றான் சின்னசாமி.

"ஓகே. இன்னும் விஐபிஸ் கிளம்பின பாடில்லையே... ஓகே. சரி, ஒண்ணு பண்ணு. நீ போயி ஒன் அவர் ரெஸ்ட் எடுத்துட்டு வர நான் முன்னாடி போறேன். நீ பின்னாடி வா''என்றான் கருணாகரன்.

"ஓகே. ஓகே... அங்க அவன்கூட நாம இல்லைன்னா வருத்தப்படுவாண்டா...''என்றான் சின்னசாமி.

"ஏன் ஒரு டீமே அங்க வேல செஞ்சுகிட்டு இருக்குடா... நாம சும்மா பேருக்குப் போயி நின்னாப் போதும். அதை அப்பப்ச் செக் பண்ணிட்டுத்தான் இருக்கேன்''என்றான் சின்னசாமி.

"ஏய், சக்திவேலுக்குச் சொல்லு... புறப்படச் சொல்லு...'' என்றான்.

"அவன் நம்மளுக்கு முன்னாடி போயிருவான். அவனை எங்கே ஆளையேக் காணோம்.''

"வருவாரு... வருவாரு... ஐயா வராம எங்கே போவாரு...'' என்றான் சின்னசாமி.

"சரிப்பா... நாம போயி நிக்கணும்''என்று கருணாகரன் அந்தப் பெரிய பந்தலின் பின்னாலே இருந்த பங்களாவில் ஒரு அறையில் போய் கதவைச் சாத்திக் கொண்டு ஒரு மணிநேரம் உறங்கப் போய் விட்டான்.

சிம்மேந்திரன் கடிகாரத்தை... கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான். அவன் திருமண வரவேற்பு ஏற்பாடு செய்திருந்தான்.

அவனுடைய திருமண வரவேற்பு கண்டிப்பாக அந்த நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுடன் தான் நடத்தப்பட வேண்டும் என நினைத்தான். தன் சக்திக்கு ஏற்ப ஒரு வரவேற்பை அமைத்திருந்தான்.

அதிலும் கிட்டத்தட்ட இரண்டாயிரம், மூவாயிரம் பேரை அழைத்திருந்தான். ஏழு மணிக்கு என்றால் அநேக



மாக ஆறு ஆறரை மணிக்கெல்லாம் வந்து விடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தான். அதிலும் காலையில் நடந்த பெரிய வீட்டு கல்யாணம் போலில்லாமல் தன்னுடைய திருமண வரவேற்புக்குக் குடும்பத்தோடு வருவார்கள் என்று அவன் எதிர்பார்த்தான்.

வயிறார அவர்களுக்கு உணவளிக்க வேண்டும் என்று திட்டமிட்டு இருந்தான். அதனால் கொடுத்த பத்திரிகையை விட அதிகமாகவே வருகையாளர்களின் எண்ணிக்கையைக் கணக்குப்போட்டு ஏற்பாடு செய்திருந்தான்.

அவனுடைய சேமிப்பின் பெரும்பகுதி இதற்காகக் கரைந்தாலும் பரவாயில்லை என்று முடிவு செய்து ஆத்மார்த்தமான ஏற்பாடுகளில் ஈடுபட்டு இருந்தான்.

"தம்பி! நீ இன்னும் ரெடியாகவில்லையா?''என்று கேட்டார் அம்மா.

"ரெடியாயிடறேன்... ம்மா... பொண்ணை ரெடியாகச் சொல்லுங்க''என்றான்.

"பொண்ணு அஞ்சு மணிக்குத்தான் வருவாப்ல போலிருக்கு''என்றார்.

"ஏனாம்...?''

"இல்லைப்பா அலங்காரத்துக்காக போயிருக்காப்ல''

"அம்மா, பெரிய அளவில அலங்காரமெல்லாம் வேண்டாம்னு சொன்னேனே...'' என்றான்.

"இருக்கட்டும்பா... இருந்தாலும் ஒரு சின்ன அளவிலாவது அலங்காரம் பண்ணத் தானே வேணும்'' என்றார் அம்மா.

"அதுக்கு ஃபியூட்டிஷியனை இங்க வரச்சொல்ல வேண்டியது தானே...'' என்றான்.

"என்னமோ பிரியப்பட்டா... நான் எப்படி வேண்டாம்னு சொல்றது"என்றார் அம்மா.

அவன் காத்திருந்தான். திரும்பிப் பார்க்கிறபொழுது இந்தப்பக்கம் நண்பர்கள் வருவதைப் பார்த்தான்.

"ஏம்ப்... பா... இப்பத் தான் வருவீங்களா?"என்று கேட்டான்.

"டே... டேடே... தெரிஞ்சுருந்தும் கேட்கிறியேடா... ரெண்டு மூணு நாளா வேலை செஞ்சு அலைஞ்சுருக்கிறோம். ம்... ஒரு ஒன் அவர் ரெஸ்ட் எடுத்துட்டு வர்றதுக்குமா பர்மிஷன் தரமாட்டீங்க"என்று கோபமாகக் கேட்டான் கருணாகரன்.

"ஐயய்யோ... நான் உங்களுக்குப் பெர்மிஷன் தர்றதா...?" என்று சிம்மேந்திரன் பதற..." நோ... இது ஆபீஸ் இல்ல. நண்பர்கள் வட்டம். இங்கு பேச்சு முறையே வேறயா இருக்கணும்"என்றான் கருணாகரன்.

கருணாகரனின் மிரட்டலான தொனியை ரசித்துப் பார்த்துக் கேட்டான் சிம்மேந்திரன்.

"கருணா, இப்படி பேசியே... எல்லாரையும் சமாளிச் சுடறீங்க... மிரட்டலாவே" என்றான்.

"பின்ன... மிரட்டி மிரட்டித் தானப்பா... எல்லாம் நடந்துருக்கு"என்றான்.

"அப்படியா...?"என்றான் சின்னசாமி கிண்டலாக.

"அதுல என்னடா உனக்கு டவுட்டு?"என்றான் கருணாகரன்.

"சரி, அந்த மாப்பிள்ளை எங்கேப் போனாரு... அந்த மாப்பிள்ளை..." என்றான் கருணாகரன்.

"வந்துருவாரு..." என்றபொழுதே காரில் இருந்து இறங்கி சக்திவேல் வந்தான்.



"யூ ஆர் லேட் மேன்..." என்றான் கருணாகரன்.

"அப்படியெல்லம்... இல்லை கரெக்ட்டா... ஆறு மணி டைம்... ஜஸ்ட் கரெக்ட் டைம்"என்றான் சக்திவேல்.

"சரி, சரி. ஆகற வேலையப் பார்ப்போம்"என்றான் கருணாகரன்.

"என்ன ஆகணும்?"

"இல்லை... நீ பெரிய விஐபிக்களையெல்லாம் கூப்பிட்டிருக்கிறே... அவங்களயெல்லாம் நின்று வரவேற் கணும்ல..." என்று சிம்மேந்திரனிடம் சொல்லவும் அவன் நெகிழ்ச்சியாகப் பார்த்தான்.

"உண்மையா, நீங்கெல்லாம் வரவேற்பில நிக்கப் போறீங்களா...?" என்று கேட்டான்.

"பின்னே... நமக்கு மதிப்புமிக்க வாடிக்கையாளர் களப்பா... அவங்களே வரவேற்கிறதுல என்ன தப்பு?"என்று அவர்கள் சொல்லவும் அவன் உண்மையாகவே நெகிழ்ந்து போனான்.

"சரி, சரி போதும். ரொம்ப ரப்பர் மாதிரி வளைஞ் சுடாதே. எங்கே உன்னோட அம்மணி?"என்றான் சின்னசாமி.

"மேக்அப்புக்குப் போயிருக்காப்ல..."

"ஏற்கனவே இருக்கிற அழகே கண்ணு கூசுது. இதுல மேக்அப் வேறயா... என்றான்.

"சொன்னாக் கேட்டாத்தானப்பா"என்றான் சிம்மேந் திரன்.

அதேநேரத்தில் கார் வந்து நிற்க அதில் இருந்து மணமகள் இறங்கினாள்.

நால்வருடைய கண்களும் அந்த மணமகளை நோக்கி பாய்ந்தன. எல்லோருடைய முகங்களிலும் புன்னகை அரும்பியது.

"அப்புறம்... தேனிலவு எப்போ...?" என்றான் கருணாகரன்.

"ஒன்னும் ப்ளான் பண்ணலைப்பா..." என்றான் சிம்மேந்திரன்.

"நீ என்ன ப்ளான் பண்றது. நாங்க ப்ளான் பண்ணி வச்சுருக்கோம். நாளைக்கு ஒருநாள் விட்டா... நாளைண்ணைக்கு அந்த மெழுகு பொம்மையும் நீயும் ரெண்டு பேருமா ஃபிளைட் ஏர்றீங்க... ஸ்விட்சர்லாந்து கண்ணா ஸ்விட்சர்லாந்து" என்றான்.

"அதெல்லாம் வேண்டாம்ப்பா..." என்றான் சிம்மேந்திரன்.

"சரி வுடு. காஷ்மீராவது போயிட்டு வாங்க. ஜஸ்ட் ஃபோர் ஃபைவ் அவர்ஸ்ல டிசைட் பண்ணிட்டு சொல்லுங்க" என்றான் கருணாகரன்.

சக்திவேல் அமைதியாகவே இருந்தான்.

"இன்னைக்கு நைட் முடிவு பண்ணிருங்கப்பா..." என்று சொல்லி நால்வரும் சிரித்தார்கள்.

"இப்படித்தான் எதுக்கெடுத்தாலும் சிரிப்பீங்களா..." என்று கோபித்துக் கொண்டாள் மணமகன்

"பின்னே... இந்த சமயத்துல சிரிக்காம எந்த சமயத்துல சிரிக்கிறது" என்று கேட்டான் சின்னசாமி.

அவர்கள் நால்வருடைய முகங்களையும் பார்த்துக் கொண்டு நெகிழ்ந்த முகபாவத்துடன் நின்று கொண்டிருந்தாள் இளமதி.

ஆம். இளமதியே தான்!



## அத்தியாயம் 26

தலை குளித்து மிக சிம்பிளான பட்டுப்புடவை உடுத்திக் கொண்டு பொட்டு வைப்பதற்காக டிரஸ்ஸிங் டேபிள் முன்னால் நின்று கொண்டிருந்தாள் இளமதி.

நெற்றியில் பொட்டை அழுத்தி வைக்கும்பொழுது பின்னால் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். இல்லை... இல்லை... திரும்பிப் பார்ப்பதற்கு அவள் முயற்சி செய்தாள்.

அதற்குள்ளாகவே சிம்மேந்திரன் பின்னாலே இருந்து அவளை அணைத்துக் கொண்டான்.

"இப்பத் தான் குளிச்சிட்டுப் பிரஷ்ஷா இருக்கிற மாதிரி இருக்கு" என்று அவள் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். அந்தத் தொடு உணர்வில் சிலிர்த்துப் போனாள் இளமதி. லேசான வெட்கத்துடன் நின்றாள்.

"யப்பா... மலையைக் கிள்ளி எலியைப் பிடிச்ச மாதிரி இருக்கு" என்று அவன் அவள் தோளில் இருந்து முகத்தை எடுக்காமலேயே கிளுகிளுப்பான குரலில் சொன்னான்.

இளமதி சட்டென்று திரும்பி அவனைத் தள்ளிவிட்டு விட்டு முறைத்தாள்.

"என்ன கோபம்?" என்று அவன் கெஞ்சலாகப் பார்க்க...

"எந்த மலையை நீங்க கிள்ளினீங்க... ஆக்சுவலா... நீங்க ஓடிப் போயிட்டீங்க" என்றாள்.

"எல்லா சிக்கலையும் நீயே சமாளின்னு சொல்லிட்டு ஓடிப்போயிட்டவரு தானே நீங்க" என்று கேட்டாள் கோபமாக.

சிம்மேந்திரனின் முகம் தீவிர பாவத்துக்கு மாறியது. நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''ஏய்... இது நியாயமில்லாத குற்றச்சாட்டு''என்றான்.

''என்ன நியாயமில்லாத குற்றச்சாட்டு. உங்களுக்கு என்னைக்கு மனசுக்குத் தெரிஞ்சது?''

''எது?''என்றான்.

''என் மீது நாட்டம் இருக்குன்னு எப்ப உங்களுக்குத் தெரிஞ்சது?''என்றாள்.

''அதான் அன்னைக்கு அந்த ரோஸ் கலர் டிரஸ்ல வந்தியே... அப்பப் புரிஞ்சுப் போச்சு''என்றான்.

''அப்ப நீங்க என்ன செஞ்சிருக்கணும்?''என்றாள் போலி கோபத்துடன்.

அவன் சட்டென்று அவள் காதைத் திருகிவிட்டுச் சொன்னான். ''அசட்டுப் பொண்ணே விபரம் தெரியாமல் பேசாதே... எனக்குத் தெரிஞ்சுருச்சு நல்லா... உனக்கும் தெரிஞ்சிருச்சுன்னு எனக்குத் தெரிஞ்சுருச்சு. நல்லா யோசிச்சுப் பாரு. எனக்கு ஏற்பட்ட போராட்டமெல்லாம் உனக்கு ஏற்பட்டுச்சா இல்லையா... அதனால தான் நீ... நீ...'' என்று அவன் முடிக்கும் முன்பாகவே... அவன் முகத்தில் வேதனையின் நிழல் படிந்து மறைந்தது.

அவளுக்கும் புரிந்தது. அவள் சக்திவேலை திருமணம் செய்து கொள்வதற்கு சம்மதித்ததைக் குறிப்பிடுகிறான் என்று!

சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''இல்லைங்க... என் இடத்திலே இருந்து நீங்க நல்லா யோசிச்சுப் பாருங்க. வாய்விட்டு உன் மேல பிரியம்னு நீங்க அதுவரைக்கும் சொல்லலை. நீங்க ஏதாவது சொல்லியிருந் தால் கூட அதை வச்சுகிட்டாவது நான் போராடி இருப்பேன். நீங்களும் ஒன்னும் சொல்லலை. எந்த அடிப்படையில நான் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது''என்று கேட்டாள்.



''இப்பப் புரியுதா... எனக்கும் அதே நிலைமை தான். என் மனசு உன்மேல பாய்ஞ்சிருச்சுன்னு தெரிஞ்சது... உனக்கும் கொஞ்சம் நாட்டம் இருக்கிறமாதிரி இருந்தது. யோசிச்சுப் பார்த்தேன். பெரிய ஒரு நிறுவனம். அந்த நிறுவனத்துல நான்கு தூண்கள் மாதிரி நான்கு குடும்பங்கள். ரொம்ப ஒற்றுமையா இருக்கிற குடும்பங்கள், ஒண்ணு. இதுல நம்மால குழப்பம் வர்றது எந்த வகையில நியாயம்? இது முதல் காரணம்''என்றான்.

அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டாள். அவள் கேட்கிறாளோ... இல்லையோ என்பது பற்றிக் கவலைப் படாமல் அவன் தொடர்ந்தான்.

இரண்டாவது உங்கிட்ட இருந்து எந்தவிதமான பதிலும் வர்ல, தெளிவான ஒரு நிலைமையும் தெரியல. ஏன்னா... நாம அதைப் பற்றிப் பேசலை. ஐ வோண்ட் ப்ளேம் யூ. ஆனா... அதைப் பற்றிப் பேசற மாதிரி சூழ்நிலையே வர்லை. உன் மனசு தெரியாம நான் என்ன பண்ண முடியும்?'' என்றான்.

அவள் மறுபடியும் மௌனமே சாதித்தாள்.

''மூன்றாவதாக... நல்ல நட்புள்ள நான்கு குடும்பங்களைக் காட்டிலும் எத்தனையோ ஏழைபாளைகளுக்கு உதவி செஞ்சுகிட்டு இருக்கிற நிறுவனத்தை உடைக்கிறதைக் காட்டிலும் நான் மட்டும் வேதனைப்படறது ஒண்ணும் பெரிய விஷயமே இல்லை''என்று சொல்லும் பொழுதே அவன் முகத்தில் வேதனை படிந்தது.

அவள் சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள். ''போதும். இனிமே அதைப்பற்றிப் பேசாதீங்க''என்றாள்.

அவன் இன்னும் அழுத்தமாகத் தன் மனைவியை தன்னோடு சேர்த்துக் கொண்டான்.

"இல்லைடா... பேசிடலாம். எல்லாத்தையும் பேசி கிளியர் பண்ணிட்டோம்ன்னு வச்சுக்கோ அதுக்கப்புறம் இந்த பிரச்னைகள் மனசில் இருக்காது. தெளிவா வாழ்க்கையைத் தொடர முடியும்''என்றான்.

அதற்குள்ளாற... "சாப்பிட வர்லையா...?'' என்று யாரோ குரல் கொடுத்தார்கள்.

"சரி கண்ணம்மா... இப்ப போய் நாம டிஃபன் சாப்பிடலாம். நமக்காக எல்லாரும் வெயிட் பண்ணிகிட்டு இருக்காங்க. அதான் நாம நாளைக்குக் கிராமத்துக்குப் போறோம்ல... அங்க வச்சுப் பேசுவோம்''என்றான்.

அவளும் சரி என்றாள்

சிம்மேந்திரனின் வீடே அல்லோகலப்பட்டுக் கொண்டிருந்தது இரண்டு நாளாக... உற்றார் உறவினர்கள் நிறைய பேர் குவிந்திருந்தார்கள். எல்லோருமாக அவர்களைக் கேலி செய்தபடி தான் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

"நீங்க போங்க. நான் பின்னலைப் பின்னிட்டுப் பின்னால வந்துடறேன்''என்றாள்.

"இல்லடா... நான் வெயிட் பண்றேன்''என்றான்.

பின்னலைப் பின்னிக் கொண்டே அந்த அறையை நோட்டமிட்டாள் இளமதி.

தனக்காக தனது கணவன் கட்டிய அறை. எப்பொழுது திருமணம் என்று முடிவாகியதோ.. இரண்டே மாதங்களுக்குள்ளாக இரண்டு அறைகளைக் கட்டியிருந்தான் சிம்மேந்திரன்.

அவர்கள் வீடு ஓட்டு வீடாம். அந்த வீட்டில் இளமதி இருக்க முடியாதாம். தேவையானால் ஏசி வசதி கூட செய்து தருவானாம் என்றெல்லாம் அவளிடத்தில் சொல்லிக்



கொண்டிருந்தான். அவள் செல்லமாக அவன் தலையில் ஒரு குட்டு கொட்டினாள்.

''எனக்கு வசதியா முக்கியம். உங்களோட வாழ்க்கை தான் முக்கியம்''என்றாள்.

இந்த பேச்சுவார்த்தை நடத்தி ஒரு வாரம் இருக்கும். அப்பொழுது அவன் சொன்னான்.

''வாழ்க்கை முக்கியம்தான். கொஞ்சநாள் நல்லாயிருக்கும். அதுக்கப்புறம் அடிப்படை வசதிகளே இல்லையே என்ற வருத்தம் உனக்கு வரும். அதுக்காக என்னோட சக்திக்கு முடிஞ்ச வசதிகளைச் செய்து தர்றேன்''என்று சொல்லி... இரண்டு பெரிய அறைகளாக பத்துக்கு பதினாறு என்று ஏற்பாடு செய்திருந்தான்.

அந்த அறைக்குள்ளாக அவளுக்குத் தேவையான வசதிகளெல்லாம் இருந்தது. அவள் நெகிழ்ந்து போனாள். தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கணவனின் அருகில் போய் மறுபடியும் அவனைக் கட்டிக் கொண்டாள்.

பிறகு சொன்னாள். ''இனிமேல் எனக்காக எதுவும் மெனக்கிட்டு செய்யாதீங்க. போதும். இந்த வசதிகளுக்குள் வாழ நான் பழகிக்கிறேன்''என்றாள்.

சிம்மேந்திரன் அவளைப் பார்த்து நேசத்துடன் புன்னகைத்தான்.

"அவ்வளவு நிலைமை மோசமாக இருக்காது அம்மணி... நானும் ஓரளவுக்குச் சம்பாதிக்கிறேன். நீயும் சம்பாதிக்கிறே... கொஞ்ச நாள்ல இந்த வீட்டையே எடுத்துக் கட்டிடலாம். ஒண்ணும் பிரச்னையில்லை. என்னோட சக்திக்கேற்ப அதே சமயம் நீ வாழ்ந்த வாழ்க்கைத் தரத்துக்கு கீழே வராம உனக்கொரு வாழ்க்கைத் தரத்தை என்னால கொடுக்க முடியும்''என்றான்.

மறுபடியும் யாரோ அழைத்தார்கள். எழுந்து போனார்கள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே இளமதியின் மனது பின்னோக்கி ஓடியது.

சிம்மேந்திரன் ராஜினாமா என்று சொன்ன உடனே அவளுக்குள்ளே கலக்கம் தோன்றியது. இந்த ராஜினாமாவுக்குப் பின்னே தன்னுடைய பேச்சு தான் இருக்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது. இரண்டு முறை இதற்குள்ளாக சக்திவேலை சந்தித்து இருந்தாள்.

முதல் முறை சந்தித்தபொழுது சக்திவேலிடம், அவள் சொன்னாள். "சக்தி, நம்ம குடும்பத்திலே... மூணு குடும்பத்திலே யாராவது ஒருத்தரை நான் கல்யாணம் பண்ணிக் கணும்னு பெரியவங்க நினைக்கிறாங்க. அது சரியா, தப்பா?" என்று அவனிடத்தில் கேட்டாள்.

"அது உன் மனசைப் பொறுத்தது இளமதி. உனக்கு சரின்னு பட்டா சரி. இல்லைன்னா இல்ல. வற்புறுத்தி செய்யக் கூடாது"என்றான் சக்திவேல்.

"சக்தி, உங்ககிட்டத் தான் ப்ரியா என் மனசைச் சொல்ல முடியும்னு நினைக்கிறேன்"என்றாள் இளமதி தயக்கத் துடன்.

சக்திவேல் உள்ளூர ஒரு நப்பாசையுடன் அவளைத் திரும்பிப் பார்த்து, "சொல்லு... சொல்லு"என்றான்.

இளமதி கொஞ்சம் தயங்கினாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். பிறகு சொன்னாள்.

"சக்தி, உங்க மூணு பேர் மேலேயும் யார் மேலேயும் எனக்கு நாட்டமில்லை. தயவுசெய்து புரிஞ்சுக்கோங்க" என்றாள்.

"ஓ"!

"ஆமாங்க சக்தி. சின்னதுல இருந்து உங்களையெல்லாம் பார்த்துக்கிட்டு இருக்கேன். ரொம்ப ஃபெமிலியர் பேஸஸ்



நீங்க... அதோட நம்ம குடும்பங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை... போக்குவரத்து... இதெல்லாம் பாத்துகிட்டே தானே இருக்கேன், தொடர்ச்சியா உங்க அறிமுகம் இருந்து கிட்டு இருக்கிறதால... திடீர்னு உங்களை வேற கோணத்துல நினைக்க முடியலை''என்றாள்.

சக்தியின் முகம் சற்றே வாடியது.

"இது மட்டும் தான் காரணமா? இல்ல வேறு ஏதாவது இருக்கா?"என்று கேட்டான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். தரையைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"இவ்வளவு நம்பிக்கையோட இவ்வளவு சொல்லிட்டே யில்ல... இளமதி. அதையும் சொல்லிடு"என்றான்.

"இல்ல... சக்தி. எனக்கு... எனக்கு..." என்று இழுக்க...

"சிம்மேந்திரனைப் பிடிக்குது... அப்படித்தானே..." என்றான் சக்திவேல்.

அவள் சட்டென்று அவனை நிமிர்ந்துப் பார்த்தாள்.

ஆமாம் என்று வாயால் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டினாள்.

சக்திவேலின் முகத்தில் இருந்து எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

"நீ என்ன சொல்றேன்னு புரியுதா, இளமதி? ஹீ இஸ் அன் எம்பிளாயி... நம்மகிட்ட வேலை செய்றான்"என்றான்.

அவள் முகத்தில் திடீரென்று ரோஷத்தோடு கூடிய ஒரு பாவம் தோன்றியது.

"அப்படியெல்லாம் இல்லை சக்தி. அவர் எங்க வேணும் னாலும் போய் பிழைச்சுப்பாரு. அவரு படிச்சுருக் காரு. எந்த நேரத்தில் வேணும்னாலும் அவர் வேலைக்குப் போக

ஆரம்பிக்கலாம். ஹி வில் ஃஷைன். அவராலதான் நம்ம கம்பெனிக்கு நன்மையே ஒழிய நம்ம கம்பெனியினால அவருக்கு ஒண்ணும் பெரிசாக் கிடைச்சுடலை...'' என்றாள்.

சக்திவேல் லேசாகப் புன்னகைத்தான்.

''அப்பஙெ்கறே..?..''என்றான்.

''ஆமாம். ஃபீல்டுக்கு நான் அவர் கூடப் போயிருக்கேன். ஒவ்வொரு இடத்திலும் அவரோட திட்டங்களும் மக்களுக்குச் செய்யறதும்... அவங்க திருப்பி அவருகிட்ட அன்பு காட்டறதும்... இதெல்லாம் உங்களுக்குத் தெரியுமா, சக்தி. அதனால் தான் அவருகிட்ட...'' என்று வெட்கத்துடன் நிறுத்தினாள்.

''மனசப் பறிகொடுத்திட்டியோ...''என்றான் சக்திவேல்.

அவனுக்கு உள்ளூர ஒரு கோபம் இருந்தது.

''ஆமாம் சக்தி. அதுல என்ன தப்பு? தன்னோட தொழிலையே தொண்டா மாத்திக்கிறவங்க எத்தனை பேரு... அதையே ஒரு சேவையா எடுத்துட்டு அதுல ஆத்மார்த்தமா பங்கெடுத்துட்டு செய்கிறாரே... அந்த உயர்ந்த குணம்... பரம்பரையா வந்த உங்க மூணு பேர்ல யாருக்கு இருக்கு?''என்று கேட்டாள்.

பேசியதற்குப் பிறகுதான், தான் அதிகமாகப் பேசி விட்டோமோ என்று நினைத்துக் கொண்டு நாக்கை கடித்துக் கொண்டாள்.

சக்திவேல் கோபப்படவில்லை. மாறாக புன்னகைத்தான்.

''நீ சொல்றது கரெக்ட்தான். இல்லைன்னு சொல்லலை'' என்று பெருந்தன்மையாகவே எடுத்துக் கொண்டான்.

''ஆனா நீ வாழ்ந்து கிட்டிருக்கிற வாழ்க்கைத் தரம் வேற. அவனுடைய வாழ்க்கைத் தரம் வேற...



''வேண்டாம். இந்தக் காரணங்களெல்லாம் வேண்டாம். எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு. அப்படியொண்ணும் ரொம்ப குடிசையில கொண்டு போய் வச்சுட மாட்டாரு. எனக்குத் தேவையான மினிமம் தேவைகள் கிடைக்கத்தான் செய்யும். நானும் கம்பெனியில தொடர்ந்து வேலை செய்யலாம்னு தான் இருக்கேன்''என்றாள்.

''ஓ! எல்லாம் தெளிவாகத்தான் முடிவு பண்ணி வச்சுருக்கே'' என்றவன், ''சரி, இப்ப வியாபாரத்துக்கு வரலாம் என்பது போல எங்கிட்ட என்ன எதிர்பார்க்கிறே'' என்றான்.

''இல்ல நீங்க தான் பெரியவங்ககிட்டப் பேசி இத சரிபண்ணிக் குடுக்கணும்''என்றாள்.

''என்னால உறுதியெல்லாம் சொல்ல முடியாது இளமதி. முயற்சி பண்றேன். எதனாலேன்னா... நீ என்மேல நம்பிக்கை வச்சயே அதனாலே...'' என்று சொல்லிவிட்டுப் போன சக்திவேல் உண்மையாகவே முயற்சி செய்தான்.

இப்பொழுது சக்திவேலை நினைக்கும்பொழுது பெருமையாக இருந்தது. ஏனென்றால் அவள் மீது நாட்டம் இருந்தபோதிலும் கூட அவளுடைய விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து முயற்சி எடுத்தான். இடையில் எந்த சதிவேலையும் செய்யாமல் முயற்சி எடுத்தான்.

அந்தப் பெருந்தன்மையை அவளால் மறக்கவே முடியாது.

திடுக்கிட்டு விழித்தாற் போல திரும்பினாள். பந்தியிலே பக்கத்திலே அமர்ந்திருந்த சிம்மேந்திரன் மற்றவர்கள் பார்க்காதவண்ணம் லேசாக அவளை ஒரு இடி இடித்திருந்தான்.

''என்ன?''என்றாள் வெட்கத்துடன்.

''இல்லே எங்க போயிருச்சு யோசனை... இப்ப நீ என்னைத் தானேம்மா நினைக்கணும்''என்றான் சிம்மேந்திரன்.

அவள் அவனை ஆழமாகப் பார்த்து விட்டு, ''இல்லை நாம சேர்றதுக்கு காரணமானவங்களையும் நினைக்கத் தானே வேணும்''என்றாள்.

''அப்படியா? அப்ப யாரைப் பற்றி நினைச்சே...'' என்றான்.

சக்திவேலைப் பற்றி அவள் நினைவுப்படுத்த அவனும் ஆழ்ந்த அமைதியுடன் தொடர்ந்து சாப்பிடத் தொடங் கினான்.

சாப்பிட்டு முடித்தவுடன் அவள் குபீரென்று சிரித்தாள்.

"என்ன?"என்றான் அவன்.

''இல்லை..இந்த கருணா... எப்படி... என்னைக் கலக்கிட்டாரு...'' என்றாள்.

"எல்லாத்தையும் பேசலாம்டா... இப்ப நம்மளைப் பத்தி மட்டும் பேசு. எல்லாத்தையும் பேசலாம்... நாளைக்கு'' என்றான் சிம்மேந்திரன் முணுமுணுப்பாக.

பேசினார்கள்! அடுத்த நாள். !

★ ★ ★

## அத்தியாயம் 27

மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந் திருந்த அழகான பங்களா அது.

பாக்கியம் தனது கணவர் மறைந்ததற்குப் பிறகு தங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுத்த பணத்தையெல்லாம் வீணடிக்காமல் சொத்துக்களாக மாற்றி இருந்தார்.

ஏதோ ஒரு நேரத்தில் மாணிக்கவேலே இல்லாதபொழுது எதற்காக அவர் குடும்பத்துக்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மற்ற பங்குதாரர்களுக்கு வரக்கூடும் என்ற பயம் அவருக்கு ஆரம்ப காலத்தில் இருந்தது.



பிற்காலத்தில் அது மாறி விட்டது. இருந்தாலும் கூட... அப்பொழுது தொடங்கிய நல்லத் திட்டங்களை மாற்றிக் கொள்ளவில்லை.

அந்தக் காலக் கட்டத்தில் நிலங்களின் விலையும் குறைவாக இருந்த காரணத்தால் அவருக்கு வந்த தொகை அதாவது... மாதாமாதம் கொடுத்த தொகையே பெரிய தொகையாக இருந்தது.

எவ்வளவு சிக்கனமாக செலவு செய்யமுடியுமோ அவ்வளவு சிக்கனமாக செலவு செய்து அவர்களின் துணை யுடனேயே சொத்துக்களை வாங்கிப் போட்டு இருந்தார்.

நகரத்திலும் ஆங்காங்கே வீடுகள் கட்டி வாடகை வருகிறாற்போல செய்திருந்தார்.

மற்ற மூவரும் தங்கள் மனைவியிடம் கூட சொல்வ துண்டு.

''பாக்கியம் பாத்தியா எவ்வளவு புத்திசாலித்தனமாக இன்வெஸ்ட் பண்ணுது''என்று அவர்கள் பாராட்டிக் கொள்வார்கள்.

அப்போது வாங்கிப் போட்டிருந்த நிலம் தான் இது.

இருபது ஏக்கர் வாங்கிப் போட்டிருந்தார். தேனிலவுக்குப் போகலாம் என அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்த பொழுது சிம்மேந்திரன், ''நீ சொல்லு. எங்கே போகலாம்?'' என்றான்.

அப்பொழுது இளமதி சொன்னாள். ''இப்பத் தான் நீங்க ஒரு மாசம் லீவு எடுத்திருக்கீங்க. கொஞ்ச நாள் தள்ளிப் போடுவோம், வெளிநாட்டுப் பயணத்தை...! இங்கேயே எங்காவது ஃபோர் பைவ் டேஸ்... ஒன் வீக் அதிகபட்சம் போயிட்டு வந்துடலாம்''என்றாள்.

அவளது பொறுப்பான சிந்தனையை அவன் பாராட்டிக் கொண்டான்.

"எங்கே போலாம்... சொல்லு''என்றான்.

"பொறந்த வீட்டுக்கே...'' என்று அவள் சொல்ல ஆரம்பித்தவுடனேயே சட்டென்று குனிந்து தன் பரிசுகளை வாரி இறைத்தான்.

"என்ன இது?''என்று அவள் திகைக்க...

"சட்டென்று பிறந்த வீட்டுக்கு அப்படீன்னு சொன்னீயே... அது ரொம்ப பிடிச்சுருந்தது''என்றான்.

"ஆமாம். இனிமே இதுதானே என்வீடு''என்றாள் அவள்.

அவன் மேலும் மகிழ்ந்து போனான்.

"மேட்டுப்பாளையம் போகும்வழியில் பெரியநாயக்கன் பாளையம் தாண்டி இடது பக்கத்துல ஒரு ரோடு இருக்கு. அந்த ரோட்ல அம்மாவுக்கு நிலம் இருக்கு. அங்கே ஒரு பங்களா இருக்கு. அங்கப் போலாம்..''என்றாள்.

சரி என்று வந்திருந்தார்கள்.

ஒரு அரை கிலோ மீட்டர் நடந்து போனால் அழகான ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அதுவும் அவர்களுக்குப் பிடித்திருந்தது. அந்த ஆற்றங்கரையில் தான் ஒரு சின்ன கற்பாறையின் மீது அவன் சாய்ந்து அமர்ந்திருக்க... அவன் மார்பில் சாய்ந்து அவளும் அமர்ந்திருந்தாள்.

அப்போது தான் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

"பயந்தே போனேன்... இந்தர்''என்றாள்.

"எதுக்கு. இப்ப நானல்லவா உன்னைப் பாத்து நடுங்கிக்கிட்டிருக்கேன்''என்று அவன் கேலி போல பேச, "ஐயே... ரொம்ப பயந்தவங்க தான்''என்று அவளும் அவன் மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு...

"இல்லை... அன்னைக்கு கருணா பண்ணின கலாட்டா இருக்கே...'' என்று சொல்லவும் அவன் சிரித்தான்.



"கருணா சொன்னாப்ல... போட்டு கலக்கிட்டாராம், உன்னை...'' என்று அவன் ரசித்துச் சிரித்தான்.

"ஆமாம். டார்லிங்... கண்ணம்மா... அப்படி இப்படின்னு கூப்பிட்டு... சக்திவேல் போட்டிருக்கிற குண்டுவேற பத்தாதா... அப்படீங்கற மாதிரி என்னைப் பயப்படுத் திட்டாரு''என்றாள்.

"எங்கே சொல்லு...''என்று அவன் கேட்க அவள் சொன்னாள் நடந்ததை.

கருணாகரன் அவளை அந்த கெஸ்ட் அவுசுக்கு அழைத்துச்சென்று அமர வைத்துவிட்டு, அதுவரை இருந்த குறும்புத்தனத்தையெல்லாம் மூட்டை கட்டிவிட்டு வாங்குவாங்கென்று வாங்கி விட்டான்.

"நீ என்ன பெரிய இவளா... கம்பெனிக்காக தியாகம் பண்றியா... நீ என்ன நினைச்சுக்கிட்டு இருக்கே... மத்த மூணு குடும்பங்களும் உனக்குச் சும்மா செய்துகிட்டிருக் குன்னு நினைச்சுகிட்டு இருக்கியா... உங்க அப்பாவோட பங்கு தான் மேஜர் பங்கு, இந்தக் கம்பெனியில தெரியுமா? அவர் பார்த்து அன்னைக்கு எல்லாருக்கும் அமௌவுண்ட் கொடுத்தது... மட்டுமில்லாமல்... கருப்புசாமி அங்கிள் ஃஷேர் கூட... அவர்தான் போட்டது,அவ்வளவு பண்ணி... எல்லா ஐடியாவும் கொடுத்து உருவாக்கினது தான் இந்தக் கம்பெனி. அதனால பெரிய இவளாட்டம் யாருக்கும் நன்றிக் கடனெல்லாம் கட்ட வேண்டாம்''என்று பொறிந்தான்.

அவள் பரிதாபமாகப் பார்த்தாள்..

"ஆமாம். இப்ப பார்க்கற பாரு... இப்படித்தான் சக்தி வேலைக் கல்யாணம் பண்ணிகிட்டேன்னு வச்சுக்க... நாங்கல்லாம் உன்னை இப்படித்தான் பரிதாபமாக பார்த்துக் கிட்டு இருக்கணும். அவனுக்காவது அறிவு வேண்டாம்.

ஏதோ ஒரு பொண்ணு போனாப் போவுதுன்னு கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா அதுக்கு ஒத்துக்கிறதா?'' என்றான்.

''அவரை ஒண்ணும் சொல்லாதீங்க. நான் தான் வற்புறுத்திச் சொன்னேன்''.

''என்னத்தை வற்புறுத்தி சொன்னே...? இதென்ன பண்டமா.. இல்ல புடவையா... நீயே வச்சுக்க... இல்ல உனக்குப் பிடிக்கலைன்னா... நான் வச்சுக்கிறேங்கறதுக்கு... உண்மையைச் சொல்லு. நீ சக்திவேலை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கிறியா?''

''இல்லை. எத்தனை இடங்கள்ல அரேஞ்ஜ்ட் மேரேஜஸ் நடக்குது''என்று அவள் கேட்டாள்.

''அரேன்ஜ்ட் மேரேஜ் நடக்கும். ஆனால் அந்த பொண்ணுக்கோ... அந்தப் பையனுக்கோ... அதுல விருப்பம் இருந்திருக்கணும். அல்லது வேற யார் மேலேயும் விருப்பம் இல்லாத பட்சத்துல பேரண்ட்ஸ்கிட்டச் சொல்றாங்க. நடக்குது. நெஞ்சைத் தொட்டுச் சொல்லு. உன் மனசுல யாரும் இல்லையா?''என்று கேட்டான்.

அந்தக் கணத்தில் இளமதி உடைந்து போனாள். கண்களில் தரதரவென்று கண்ணீர் கொட்டியது.

''பாரு. கொஞ்சம் குத்தினவுடனே எவ்வளவு வெளியே வருது பாரு... லைஃப் லாங்கா இதைச் சுமந்துகிட்டு நடந்துகிட்டிருப்பியா...? உனக்கு யாருமில்லைன்னு நினைச்சயா? நான் ஒருத்தன் மலையாட்டம் இருக்கேன்ல... உன் பிரச்னையை எங்கிட்ட சொல்லியிருக்கலாம்ல...''என்று கேட்டான்.

''எப்பவுமே நீங்க ஒரு மாதிரி கடுகடுன்னு...'' என்றாள்.

''கடுகடுன்னு இருந்தா மனசில்லாமப் போயிருமா? மனசு இல்லாமலா கொலுசு வாங்கிக் கொடுத்தேன். உங்கிட்ட



நான் எப்பவாவது கடுகடுன்னு பேசியிருக்கேனா?''என்று கேட்டான்.

அவள் கண்ணீருடன் தலையாட்டினாள்.

அவள் கண்ணீரைப் பார்த்தவுடன் சட்டென்று நெகிழ்ந்து போனான்.

''மக்கு, மக்கு. நான் உன்னை என் கூடப்பிறந்த சிஸ்டர்ன்னு நினைச்சுட்டிருக்கேன். தெரியுமா?''என்றான்.

அவன் குரலில் தெரிந்த வேதனையைப் பார்த்ததும் அவளுக்கும் வேதனையாகி விட்டது.

''இல்லை... கந்தவேல் மாமா, நான் சக்திவேலைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ரொம்ப ஆசையா எதிர் பார்த்துகிட்டு இருந்தது மாதிரி இருந்தது''என்றாள்

''ஆமாம். எங்கப்பாவுக்கு கூட அப்படி ஒரு ஐடியா இருந்தது. பெரியவங்களுக்கு எண்ணங்கள் இருக்கிறது தான். நாம தான் சொல்லி விளக்கணும்''என்றான் கருணாகரன்.

''நான் எந்தப் பெரியவங்க கிட்ட...'' என்று ஆரம்பிக்க...

''வெச்சேன்னா ,,,ஓங்கி அறைஞ்சிருவேன்''என்றான்.

அவள் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

''இது தான் கடைசி சான்ஸ்... பைத்தியக்காரத்தனமா உன் வாழ்க்கையை தொலைச்சுக்காதே. உன் மனசுல இருக்கிறதைச் சொல்லு. ஓபனா சொல்லு... எங்கிட்ட சொல்லு. உன் மனசுல இருக்கிறபடி நடத்தி வைக்கவேண்டியது என் பொறுப்பு''என்றான்.

அவள் மறுபடியும் அவனைப் பரிதாபமாகப் பார்த்து விட்டு, ''இந்த ஸ்டேஜ்ல நான் சொன்னா... சக்திவேலுக்கு மனசுல சங்கடம் வராதா?''என்றாள்.

''அடப் பொண்ணே... வேற ஒருத்தரை மனசுல நினைச்சுட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக்கறதை விட,

அவனுக்குச் செய்யற கொடுமை வேறு எதுவும் இருக்காது தெரியுமா? அப்படி அவன் ஏத்துக்கிட்டான்னா... அவனை விட பைத்தியக்காரன் உலகத்திலே யாரும் கிடையாது, தெரியுமா?"என்றான்.

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு அமர்ந்து கொண்டாள்.

"இங்கே பாரு. எப்பவாவது இந்த விஷயத்தை சரி பண்ண முடியும்ன்னா... அது இப்பத்தான்... இந்த நேரத்துல தான். இந்தச் சான்ஸை விட்டேன்னா லைஃப் லாங்கா உள்ளுக் குள்ள அழுதுகிட்டுத் தான் இருப்பே"என்றான்.

அவளுக்கும் அது புரிந்திருந்தது.

மெல்ல மனம் திறந்தாள்.

"எனக்கு சிம்மேந்திரனைத் தான் பிடிச்சுருக்கு..." என்றாள்.

"அதான் ஊருக்கே தெரிஞ்சுருக்கே..." என்றான் அவன்.

"ஊருக்கு...எப்படி...?" என்று விழிக்க...

"அவன் ராஜினாமா பண்ணிட்டு ஓடறான். நீ ஒருவாரம் லீவு போடறே... சோகமா நடமாடிக்கிட்டு அப்புறம்... தியாகச் சித்திரமா நின்னுகிட்டு சக்திவேல கல்யாணம் பண்றேன்னு சொல்லுவே. உடனே அவனும் இதான் சான்ஸ்ன்னு...! ...சே! அவனைச் சொல்லி பிரயோஜன மில்லை... எல்லாம் பெரியப்பா வேலை...! நான் பெரியப்பா கிட்டப் பேசிக்கறேன்"என்றான்.

"ஓகே. இப்ப உனக்கு சிம்மேந்திரன் தான் பிடிச்சுருக்கு. முடிவு தானே... தெளிவு தானே"என்றான்.

"ப்ளீஸ் கருணா... இனிமே போய்க் குழப்பாதீங்க"என்று அவள் சொல்ல...



"நீ பண்ணியிருக்கிற குழப்பமே போதும். இதுக்கு மேல குழப்பம் யாரும் பண்ண முடியாது. இதைச் சரி பண்றதுக்குத் தான் நான் இறங்கி இருக்கிறேன். புரியுதா? நீ சிம்மேந்திரனைத் தான் கல்யாணம் பண்றே..." என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் பார்க்க...

"மறுபடியும் சக்திவேலு... கந்தவேலு... ஆதிமூலம்னு ஆரம்பிக்காதே... அவங்களை எல்லாம் எங்கிட்ட விட்ரு... யூ அன்டர்ஸ்டான்ட்..." என்றான்.

அந்தக் கடுமையான பேச்சுக்கு உள்ளே இருக்கிற கருணை முகமும், அன்பின் ஆழமும் அவளுக்குப் புரிந்தபொழுது தான் அவள் அப்படி எழுந்து நின்றிருந்த கருணாவை நோக்கி ஓடி அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு அழுதது.

அப்போது தான் அவன், "மக்கு, மக்கு... அசட்டுப் பொண்ணு... என்றெல்லாம் செல்லமாகக் கோபித்துக் கொண்டு அதற்குப்பிறகு...

"பாரு. அவன் பொறாமையாப் பாக்கறான் பாரு..." என்று கையை நீட்ட திரும்பிப் பார்த்தாள்.

அங்கே சிம்மேந்திரன் நின்று கொண்டிருந்தான்.

திடுக்கிட்டுப் போன அவள் கருணாவையும், சிம்மேந்திரனையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"என்னத்தைப் பாக்கறே... அந்த மடையனுக்கும் இப்படித்தான் ஒரு ஷாக் ட்ரீட்மென்ட் குடுத்து இழுத்துட்டு வந்து நிக்க வச்சிருக்கிறேன். பேசு போய்"என்றான்.

இளமதி முகத்தில் பல்வேறு விதமான பாவங்கள் மாறிமாறித் தோன்றின.

கருணாகரன் அதை ஆழ்ந்த அன்புடன் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

"ஏன், நான் இங்க இருக்கிறது இடைஞ்சலா இருக்கா... சரி அம்மணி நீங்க போய் பேசுங்க. இதே மாதிரி ஷாக் ட்ரீட்மென்ட் இன்னும் ரெண்டு பெரியவங்களுக்கும்... இன்னொருத்தன் இருக்கானே... சக்திவேலு... அவனுக்கும் குடுக்க வேண்டியதிருக்கு. பாத்துக்கறேன். பேசுங்க, பேசுங்க" என்று சொல்லி விட்டு அவன் வேகமாக அங்கிருந்து கிளம்பினான்.

இரண்டு எட்டு போனவன் திரும்பி வந்து... "நான் எப்படி... தனியா... அப்படீன்னு எல்லாம் சொல்லாதே. உன் கார் வீட்டுக்குப் போய் சேர்ந்தாச்சு. அவன்கிட்ட கார் இருக்கில்ல... கம்பெனி கார்தான். அதுல வந்து சேருங்க. பாரு... ரொம்ப நேரம் எடுத்துக்கக் கூடாது. ஆஃப் அன் அவர் டு ஒன் அவர்... அவ்வளவு தான்"என்று மிரட்டலாகச் சொல்லிவிட்டுப் போகிற கருணாகரனை அவள் நேசத்துடன் பார்த்துவிட்டுத் திரும்பினாள்.

சிம்மேந்திரன் அவளை நோக்கி நான்கைந்து அடிகள் எடுத்து வைக்க... பேச்சுக்கு அங்கே வேலையே இல்லை என்பது போல ஓடிப்போய் அவன் மார்பில் அடைக்கலம் புகுந்து கொண்டாள் இளமதி.

"இதே வேலையாப் போச்சு. ஒண்ணு அவன்கிட்ட... அழுக வேண்டியது. இல்லைன்னா என்கிட்ட அழுக வேண்டியது"என்றான் சிம்மேந்திரன்.

இளமதி கண்களில் கண்ணீர் வழிந்தோட... சிரித்தாள்.

"சிரிக்காதே. இத்தனை நாளா மனுஷனுக்கு... எத்தனை கஷ்டம் தெரியுமா? அந்தக் கஷ்டம் உனக்கு எங்கே புரியப்போகுது"என்று அவன் வலக்கையால் அவளை அணைத்துக் கொண்டான்.

அந்த முதல் ஸ்பரிசத்தின் அதிர்ச்சியிலும், சுகத்திலும் சற்றுநேரம் மெய்மறந்து நின்றார்கள். பிறகு அவள் மெல்ல



அவனை நிமிர்ந்துப் பார்த்து, "நீங்க என்ன கஷ்டப் பட்டீங்க? விட்டுட்டு ஓடிப் போனீங்க"என்றாள்.

அவன் அப்பொழுதும் மெல்ல அவள் முதுகை நீவி விட்டுவிட்டு பிறகு சொன்னான்.

"ஓடிப் போகலை இளமதி. எனக்குத் தெளிவு பண்ணிக் கிறதுக்கு டைம் வேண்டியிருந்தது"என்றான்.

"நீ தெளிவு பண்ணிக்குவே என்று நான் நினைச்சேன். ஆனா தெளிவா தப்பான முடிவு எடுத்துட்டே..."என்றான்.

"நான் வேற என்ன செய்யட்டும்? கந்தவேல் மாமா ரொம்ப ஆசையா எதிர்பார்க்கிறாங்க".

"வேண்டாம். அதெல்லாம் இனிமே கருணா பார்த்துக்கு வாரு. சக்திவேலும், கருணாவும் பேசி முடிவு பண்ணிக்கு வாங்க"என்றான்.

சட்டென்று அவள் நிமிர்ந்து அவனது சட்டைக்காலரை வலது கையால் இறுக்கிப்பிடித்து, "நீங்க மட்டும் ரொம்ப நல்லவரா? நீங்க மட்டும் ஏதோ உங்க தங்கையோட கொழுந்தியைக் கல்யாணம் பண்ணிக்கிறதா சொன்னீங் களாம்" என்று கேட்டாள்.

அவன் முகத்திலும் வெட்கத்தின் சாயல் படிந்தது.

"அந்த வெட்கக் கேட்டை ஏன் கேட்கறே...? நீ எடுத் தேல்ல முடிவு. அதேமாதிரி தான். ரெண்டு பேரும் என்னமோ பெரிய தியாகசீலர்கள் மாதிரி முடிவு எடுத்தோம்" என்றான்.

இப்போது அதெல்லாம் நினைவுக்கு வர அன்றைக்குப் போல இன்றைக்கும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த இளமதி, மெல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் காதலுடன் புன்னகைத்தான்.

''இல்ல இளமதி. நீயோ தியாகம் பண்றதா முடிவு எடுத்திட்டே...! அப்போ நான் மட்டும் கல்யாணம் பண்ணாம எதிர்லே நடமாடிட்டு இருந்தா... உனக்கும் ஒரு குற்ற மனப்பான்மை இருக்கும். அதுக்காகவாவது நான் ஒரு கல்யாணம் செஞ்சுக்கணும்னு முடிவு எடுத்தேன்''என்றான்.

''ஆனா... சிக்கி இருந்தேன்னா மாட்டியிருப்பேன், அந்த மெழுகு பொம்மைகிட்ட...'' என்று சொல்ல... சட்டென்று அது நினைவுக்கு வந்தாற் போல மறுபடியும் சொன்னான்.

''இன்னொண்ணு தெரியுமா, உனக்கும், கருணாவும், சக்திவேலும் மெழுகு பொம்மைன்னு பேர் வச்சிருக்காங்க... இதுல முக்கியமான சதிகாரன் யாரு தெரியுமா, சின்னசாமி'' என்று சிரித்தான் சிம்மேந்திரன்.

''ஹூம்... என்னையும் மெழுகு பொம்மைன்னு சொல்வாங்களா...?'' என்று கோபமாகக் கேட்டாள் இளமதி.

''ஆமாம். ஆனா நீ கொஞ்சம் அறிவுள்ள மெழுகு பொம்மையாம்''என்றான்.

''மூணு பேரும்... இல்லை இல்லை நாலுபேரும் சேந்தீங்கன்னா என்ன வேணும்னாலும் பண்ணுவீங்க''என்று செல்லமாக அவன் மார்பில் குத்த...

''அம்மணி தொடர்ச்சியை நாளைக்குப் பேசுவோமா? இப்ப எனக்கு முக்கியமான வேலை இருக்கே..''என்றான்.

''என்ன வேலை... ஆபீஸ்க்குப் போகணுமா?''என்றாள் இளமதி.

''ஆபீஸா...? ஒரு வாரத்துக்கு ஆபீஸை எல்லாம் எவனும் நினைக்கப் போறதில்ல... நீ கொஞ்சம் உள்ளே வா''என்று அவளை இழுத்துக்கொண்டு போனான்.

''ஓகோ, என்ன வேலைன்னு புரிஞ்சுடுச்சு...'' என்று அவள் சிரித்தாள்...



''புரிஞ்சாச் சரி...'' என்று இடக்கையால் அணைத்துக் கொண்டு உள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

* * *

## அத்தியாயம் 28

மனமெல்லாம் நிறைந்திருந்தது இருவருக்கும்.

இரண்டு பேரும் நிலவொளியில் நடந்து கொண்டிருந்தார்கள். அநேகமாக ஒன்பது மணி இருக்கும்.

''அங்கே ஒரு மதி. இங்கே ஒரு மதி''என்றான் சிம்மேந்திரன்.

''உளற ஆரம்பிச்சாச்சு''என்று சிரித்தாள் இளமதி.

''இப்படி உளறவோ... இப்படி உன்னோட கைகோர்த்து நடக்கவோ... இப்படியொரு ஆனந்தம் பொங்கற மாதிரியோ நமக்கு வாய்ப்பு கிடைக்குமா... அப்படீன்னு மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் உட்கார்ந்துகிட்டு ஏங்கினவனுக்கில்லே அது தெரியும்''என்றான் சிம்மேந்திரன்.

அவள் மௌனமாக அதைக் கேட்டுக் கொண்டாள்.

''என்ன பண்றதுன்னே தெரியலை இளமதி. நல்லா தெரிஞ்சுடுச்சு அன்னைக்கு. ஆனா அந்த ரோஸ் நிற டிரஸ்ஸை நினைச்சாலே இப்பவும் பொங்கிட்டு வருது...'' என்றவன் சுற்றும்முற்றும் பார்த்துவிட்டு அருகிலே இழுத்துக் கொண்டு கொஞ்சநேரம் கொஞ்சி மகிழ்ந்தான்.

''ப்ளீஸ். சும்மா இருங்க. யாரும் பார்க்கப் போறாங்க'' என்றாள்.

''இந்தப்பக்கம் தென்னந்தோப்பு. கொஞ்ச தூரத்தில ஆறு. சுற்றுமுற்றிலும் யாரும் இல்லையே... யாரு பாத்துடப் போறாங்க''என்றான் அவன்.

அவன் மார்பிலே அவள் ஒண்டிக் கொண்டாள்.

"அப்படியே இருந்தாலும் லைசென்ஸ் இருக்குது அம்மணி" என்றான்.

அவள் செல்லமாகச் சிணுங்கினாலும் அவனது தேடுதல்களுக்கு இடம் கொடுத்தாள்.

"எனக்கே என்னைப் புரிஞ்சவுடனே அதிர்ச்சியாப் போச்சு. இது என்னடா வம்பாப் போச்சு... அந்த மூணு குடும்பத்துல யாருக்காவது ஒருத்தருக்குத்தான் பொண் எடுக்கணும்னு பேசிக்கிட்டிருப்பாங்கன்னு கேள்விப் பட்டிருக்கேன். சின்னசாமிக்கு அந்த ஐடியா இல்லைன்னு தெரியும். இருந்தாலும் கருணாகரனும், சக்திவேலும் எலிஜிபிள் பேச்சலர்களாச்சே... நமக்கிங்கே ஏது இடம்...? அப்படியே இருந்தாலும் இளமதிக்கு விருப்பம் இருக்குமான்னு என்னன்னவோ தோணிப்போச்சு இளமதி. எனக்கே என்னைப் புரிஞ்சுக்கிறதுக்கும் தெளிவாக்கிக்கிறதுக்கும் அவசியம் வந்தது. அதுமட்டுமில்லை... இங்க இருந்து செய்யறதை விட வெளியில இருந்து யோசிக்கிறது இன்னும் பெட்டரா இருக்கும்னு தோணிச்சு. அதனாலதான் இம்மீடியட்டா ரிசைன் பண்ணினேன்"என்றான்.

அவள் முகத்தில் வேதனை படிந்து மீண்டது.

"என்னடா...?" என்றான் அவன்.

"இல்லை. நான் அன்னைக்கு முதல் நாள் தான் சக்திகிட்ட என்னோட மனசை வெளிப்படுத்தியிருந்தேன். அடுத்த நாள் நீங்க ரிசைன் பண்ணிட்டு போனவுடனே எங்கிட்ட இருந்து விலகி ஓடறீங்க அப்படீன்னு ரொம்ப வேதனைப் பட்டுட்டேன். அந்த வேதனையில்தான் இனிமே வாழ்க்கை எப்படிப் போனா என்ன... அப்படீன்னு தோணிப்போய் அட்லீஸ்ட் குடும்பத்துக்காவது நம்மால ஒரு



சந்தோஷம் கிடைக்கட்டும். சக்தியோட ஆசையாவது நிறைவேறட்டும்னு தான் சம்மதம் கொடுத்தேன்"என்றாள்.

அவனும் ஒரு பெருமூச்சு விட்டான்.

"புரியுது"என்றான்.

"நானும் அதேமாதிரி தான் இளமதி"என்றான்.

இளமதி மெல்லத் தன் வலதுகையால் அவனது கன்னத்தை வருடிக் கொடுத்தாள்.

"முதல்ல... அந்த மல்லிகாவுக்கு... என்று ஐடியா சொன்னப்ப எனக்குக் கோபம் பொங்கிட்டு வந்துச்சு. அதான் முதல்லே சொன்னேனே... நீ சக்திவேலை கல்யாணம் பண்ணிக்கப் போற ஐடியா இருக்குன்னு தெரிஞ்சவுடனே ரொம்ப மனசுக்கு வேதனையாப் போச்சு. நீ எப்படி உன்னோட குடும்பத்தைத் திருப்திப்படுத்தலாம்னு நினைச்சியோ... அதுமாதிரி நானும் என் குடும்பத்தைத் திருப்திப் படுத்தலாம்னு முடிவெடுத்தேன். ஆனால் உண்மையிலேயே உனக்கு எப்படி கருணாவோ... எனக்கு அந்த மாதிரி பத்மா"என்றான்.

"ஆமாம்.பத்மா அண்ணிக்கு நான் ரொம்ப தேங்க் பண்ணனும்"என்றாள்.

"எதுக்கு?"

"இல்லை. நல்லா நாலு குட்டு குட்டி உங்களை உங்களுக்குப் புரிய வச்சாங்களே அதுக்காக..." என்றாள்.

"ஓகோ... லேடீஸ் எல்லாம் ஒண்ணா கட்சி சேர்ந்துக்கிட்டீங்களாக்கும்"என்று அவன் சிரித்தான்.

"சென்னையில நான் சிஸ்டர் வீட்ல இருந்தண்ணைக்குச் சாயங்காலமா புறப்படுவதற்கு முன்பு சிஸ்டர் எங்கிட்டப் பேசினா" என்றான்.

அப்பொழுது மீண்டும் அன்றைக்கு நடந்தது நினைவுக்கு வந்தது.

அண்ணனிடம் வந்த தங்கை பத்மா கேட்டாள்.

''ஏண்ணா... நீ என்ன மல்லிகாகிட்டே எல்லாம் ஃப்ரீயாப் பேசறே''என்றாள்.

''இல்லைம்மா... உனக்கும், அம்மாவுக்கும் இந்த மல்லிகா மேல...'' என்று அவன் இழுக்க...

''வேண்டாம் அண்ணா... தப்பு பண்ணாதே. நான் பாத்தவரைக்கும் இத்தனை நாள்ல உன் முகத்திலும், மனத்திலும் இவ்வளவு கலக்கம் இருந்ததில்லை. உண்மையைச் சொல்லு. என்ன விஷயம். திடீர்னு ஏன் ஃபாரின் டூர் போட்டே... மறைக்காமச் சொல்லுண்ணா...'' என்று கேட்டாள்.

''சொல்லுண்ணா...'' என்று தயங்கிய அண்ணனிடம் மேலும் பேசிய அவள் கண்கள் கலங்கியது.

''அண்ணா எதுவானாலும் சொல்லிக்கிறதுக்கு எனக்கு நீயும் உனக்கு நானும்தானே இருக்கோம். அம்மாகிட்ட எல்லாத்தையும் சொல்ல முடியாதுன்னு தெரியும். ஏண்ணா மறைக்கிறே... சொல்லு''என்றாள்.

அப்போது அவன் மெல்லத் தேறிக் கொண்டு சொன்னான்.

''இல்லை பத்மா, எங்க கம்பெனி ஓனர்ஸ்ல மாணிக்க வேல் சாரோட பொண்ணு இளமதி...! திடீர்னு நேற்று எனக்குப் புரிஞ்சுது. அவங்க மேல எனக்கு ஒரு நாட்டம் இருக்கு அப்படீன்னு''என்றான்.

பத்மா திடுக்கிட்டுப் போனாள்.

''மீறின இடமாச்சே அண்ணா...'' என்றாள்.



''மீறின இடந்தான். அதனால தான் நானும் ஒரு தெளிவுக்கு வரணும் அப்படீங்கறதுக்காகத் தான் இந்த ஒன் மன்த்துக்கு டிராவலிங் பிளான் போட்டுக் கிளம்பினேன்'' என்றான்.

தங்கை அவன் சொன்னதை உள்வாங்கிக் கொண்டாள்.

பிறகு கேட்டாள். ''ஏண்ணா... அந்தப் பொண்ணுக்கு...'' என்றாள்.

''ஓபனா அவங்க சொல்லலை. ஆனா அவங்களுக்கும் இருக்கிறமாதிரி எனக்குத் தெரியுது. இதனால என்னென்ன பிரச்னைகள் வருமோ... அப்படி ஒருவேளை நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பிரிஞ்சுட்டோம்னா... கம்பெனிக் குள்ள பெரிய ப்ராப்ளம்ஸ் வரும். அந்த மூணு பார்ட்னர்ஸ்ல யாராவது ஒருத்தர் பையனுக்கு எடுத்துக்கலாம்னு பெரிய வங்க நினைச்சுகிட்டு இருக்காங்க. ஸ்டேட்டஸ்ல நாம அவங்களுக்குச் சமமில்லை. எல்லாம் யோசிச்சுத் தாம்மா குழம்பிப் போய் ஒரு முடிவுக்கு வந்தேன். இத்தனையும் எதுக்கு? மாவுக்கேத்த பணியாரம் அப்படீங்கற மாதிரி நமக் கேத்த பொண்ணு மல்லிகா தான் அப்படீன்னு நினைச்சேன்''என்றான்.

சட்டென்று தங்கை அவள் வாயைப் பொத்தினாள்.

''வேண்டாண்ணா... கண்டிப்பா மல்லிகா உனக்கு ஏத்த பொண்ணு கிடையாது. நல்ல பொண்ணு தான். ஆனால் உன்னோட இன்டலிஜென்சுக்கோ உன்னோடலெவலுக்கோ மல்லிகா ஒத்துவர மாட்டா. பிரச்னைகள் தான் வரும். அதுவும் பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்கிறதுங்கறது அவசியமில்லாதது. மல்லிகாவுக்கு நாமே நல்ல மாப்பிள்ளை பார்த்து பண்ணி வைக்கலாம். இதோட இந்த ஐடியாவை விட்டுருண்ணா... நீ இளமதியைக் கல்யாணம் பண்ற

துங்கறது வேற. அந்த இஷ்யூ வேற. அதையும் இதையும் லிங்க் பண்ணாதேண்ணா..." என்றாள்.

அந்தக் கணத்தில் அது தான் சரி என்று சிம்மேந்திரனுக்கும் புரிந்தது.

"இல்லைம்மா... எதுக்கும் நான் அம்மாகிட்ட... அம்மாவுக்கு ஆசை இருக்கும் போல இருக்கு"என்றவன்...

ஊரில் இருந்து வந்தவன் அம்மாவிடம் மெதுவாக பிரஸ்தாபித்தான்.

நிகழ்காலத்தில் பிரச்னையில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் கண்டிப்பாக இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் தான் சரிவரும் என்று முடிவு எடுத்த தால் தான் மல்லிகாவைப் பற்றித் தாயிடம் பேசினான், ஒரு நாள். ஆனால் அப்பொழுதும் தங்கை தாயிடம் சொல்லி விட்டாள்.

"அம்மா, அண்ணன் அவலை நினைச்சுட்டு உரலை இடிக்கிறாங்க. இது சரி வராது. ஏதோ நினைப்புல ஏதோ பண்றாங்க"என்று கோடி காட்டி விட்டு இதுக்காக மல்லிகாவை கல்யாணம் பண்ணி அவங்க முழு மனசா ஒப்பி வாழலைன்னா நாளைக்கு பிரச்னைகள் வரும். அது என்னையும் பாதிக்கும். அப்படி அண்ணன் தீவிரமாகச் சொன்னாங்கன்னா வேற பொண்ணைப் பாக்கலாம்"என்று அம்மாவின் முயற்சிகளைத் தடுத்ததும் அவள் தான்.

இப்போது அதை நினைக்கையில் தங்கையைப் பற்றிப் பெருமிதம் தோன்றியது சிம்மேந்திரனுக்கு.

"என் மனசை கரெக்டா புரிஞ்சுகிட்டா பத்மா"என்றான்.

"ஆமாம். நம்ம இரண்டு பேருக்குமே மத்தவங்க எல்லாருக்கும் புரிஞ்சதுக்கப்பறம் தான் புரிஞ்சுது" என்று சிரித்தாள் இளமதி.



"ஹே..அப்படியா? நான் என்ன ஸ்லோஹெட்டா...? நேத்தே உனக்குத் தெரிஞ்சுருக்குமே. எப்படின்னு?"என்று அவன் சீண்டினான்...

"இதானே வேண்டாங்கறது..." என்று அவர்களுக் குள்ளே பேசிக் கொள்கிறாற் போல ஏதோ ஒரு செல்லமான வார்த்தையைப் பயன்படுத்த கடகடவென்றுச் சிரித்தான்.

"அப்பாடா... எல்லா விளக்கமும் முடிஞ்சுதா...?" என்று கேட்டான்.

"இன்னொண்ணு பாக்கியிருக்கு"என்றாள் இளமதி.

"என்னப்பா"என்றான் அவன்.

"ஒரு விஷயம் தெரியுமா, இத்தனைக்கும் பின்னால யார் இருக்கா தெரியுமா, சின்னசாமி"என்றாள்.

"அப்படியா..." என்று ஆச்சரியமானான் சிம்மேந்திரன்.

"சும்மா இருந்த கருணாவைப் போயி, ஏண்டா நீ தலையிட மாட்டியா...? கல்யாணமாடா நடக்குது... வியா பாரம். அந்த சக்திவேலுக்கு தான் புரியலைன்னா உனக் காவது புரியவேண்டாமா? நீ பாத்துக்கிட்டு உட்காந்துருக்கே என்று உசுப்பி விட்டதே சின்னசாமி தானாம்"என்றாள்.

சிம்மேந்திரன் நெகிழ்ந்து போனான்.

"எப்படியோ ஆதிமூலம் அங்கிள் கூட ஒத்துக்கிட்டாரு. கந்தவேல் அங்கிள் தான் ப்ராப்ளம் பண்ணுவாருன்னு நினைச்சேன்"என்றான்.

"அது... சக்திவேலே பேசியிருக்காப்ல. மாமாகிட்ட..." என்றாள்.

கருணாகரன் போய் சக்திவேல்கிட்டே பேசியதற்குப் பிறகு சக்திவேல் தந்தையிடம் போய் சொன்னான்.

"அப்பா, இந்தக் கல்யாண ஏற்பாட்டை நிறுத்திடுங்க" என்று.

"ஏண்டா...?"என்று கேட்ட அப்பாவிடம் சொன்னான்.

"வேண்டாம்ப்பா... இளமதி மனசார இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லலை. ஏதோ ஒரு நினைப்புல... என்னமோ நினைச்சுட்டு... என்னமோ பண்ணுது. இப்படியான அரேன்ஜ்மென்ட் வேண்டாம்ப்பா..." என்று பிடிவாதமாகச் சொல்லி தடுத்து நிறுத்தியதோடு மட்டுமில்லாமல்...

"நம்ம பார்ட்னர் என்பதினாலோ அல்லது மாணிக்கவேல் பெரியப்பா இல்லைங்கறதுனாலேயோ நாம வற்புறுத்தி இளமதிக்கு ஒரு வாழ்க்கையை ஏற்படுத்தக் கூடாதுப்பா... உண்மையிலேயே இதுவரைக்கும் அவங்களுக்கு செஞ்ச நல்லது. எல்லாத்தையும் மனசார செஞ்சுருக்கோம் அப்படீன்னா இன்னைக்கு அவளுக்கு விருப்பமான ஒருத்தனோட கல்யாணம் பண்ணி வைக்கிறது தான் நல்லது"என்று சொன்னான்.

கந்தவேல் நீண்டதொரு பெருமூச்சு விட்டார்.

"என்னடா... நான் ரொம்ப ஆசையா இருந்தேன்" என்றார்.

"நீங்க எதுல ஆசையா இருந்தீங்க. அந்தப் பொண்ணு இங்க வந்தா ஒரு பங்கு சொத்து அதிகமா வரும்னு தானே ஆசையாக இருந்தீங்க"என்று சக்திவேல் கேட்கவும் அவர் திகைத்துப் போனார்.

"ஆமாம்ப்பா... இந்த மாதிரி ஏற்பாட்டை வலுக்கட்டாயமாப் பண்ணினா அதனோட அர்த்தம் இதுதான்" என்றான் சக்திவேல்.

"இப்பொழுதும் ஒண்ணும் கெட்டுப் போயிடலைப்பா. நம்ம உறவு ஒண்ணும் மாறப்போறதில்ல... இளமதிக்கு தாய்மாமா தான் நீங்க. ஒரு தாய் மாமன் மகனா கூடநின்னு



செய்யவேண்டிய சீரையெல்லாம் செய்வோம். எனக்கும் சலனம் இருந்தது. இல்லைன்னு சொல்லலைப்பா... சில நேரங்கள்ல ஒரு பொண்ணைப் பார்க்கிறோம். எல்லாம் பிடிச்சுருக்குன்னு நினைச்சு கல்யாணம் பண்ணிக்க விரும்புகிறோம். அது தப்பிப் போறதில்லையா?..." என்றான்.

கந்தவேல் அமைதியாக வாங்கிக் கொண்டார்.

"அதுமட்டுமில்லைப்பா... அந்தப் பொண்ணு கருணா கிட்டச் சொல்லியிருக்கு. நான் உங்க எல்லாத்தையும் முறைக்காரர்கள்னு நினைக்கிறதில்லை... சின்னதுல இருந்தே பார்த்து வளர்ந்ததுனால ஒரு சகோதரர்கள் போலத்தான் ஃபீலிங் இருக்குன்னு சொல்லியிருக்கு. அப்படியிருக்கிறவளை கட்டாயப்படுத்திக் கல்யாணம் பண்ணிக்கறது தப்புப்பா..." என்று சொன்னதற்குப் பிறகு... கந்தவேல் ஏற்றுக் கொண்டார்.

தன்னை கன்வின்ஸ் செய்யறதுக்காகப் போராடுகிற மகனை அன்புடன் தட்டிக் கொடுத்தார்.

"புரிஞ்சுதுடா... விடு. நாம இந்த ப்ரொபோசலே பண்ணல. புரிஞ்சதா? அந்தப் புள்ளைக்கு யாரைப் பிரியமோ... அவனைப் பண்ணி வைப்போம். சந்தோஷமாப் பண்ணி வைப்போம். ஜேஜே ன்னு பண்ணி வைப்போம்" என்று சொன்னார்.

சொன்னது மட்டுமல்ல. அந்த மூன்று குடும்பத்தாரும் சேர்ந்து அவ்வளவு அருமையாக அந்தத் திருமணத்தை நடத்தினார்கள்.

சிம்மேந்திரன் ஒரு விஷயத்தில் பிடிவாதமாக இருந்தான். தான் தனியாக ஒரு ரிஷப்சன் வைக்க வேண்டும் என்றும் அந்த ரிசப்ஷனுக்கு தான் களப்பணிக்குப் போகிற ஏரியாவில இருக்கிற வாடிக்கையாளர்களை மட்டுமே அழைத்து

அவர்களுக்காக ஒரு சிறப்பான விருந்து அளிக்க வேண்டும் என்பதிலும் அவன் குறியாக இருந்தான்.

பெரியவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

"நாங்க மூணு வீடும்... மூணு தாய் மாமனுக... மூணு பேரும் சீர் செய்வோம்" என்று போட்டிப் போட்டுக் கொண்டு இளமதிக்கு சீர் செய்தார்கள்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது, சிம்மேந்திரன் இளமதியிடம் தனியாக பேச நினைத்த நேரத்தில் சொன்னான்.

"இளமதி, இந்த வசதிகளெல்லாம் இங்கே இருக்கட்டும். இருக்கட்டும் ஒருபக்கம். ஆனா... என்னோட வசதிக்குள்ள நீ வாழப் பழகினா... நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். அங்கேயும் ரொம்ப மோசமான வாழ்க்கைத் தரமில்லை... உனக்குத் தேவையானதை என்னால குடுக்க முடியும். இந்த மூணு மாதக் காலத்துக்குள்ளே நீ அங்க வந்தால் வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தருவேன்"என்றான்.

அவள் அப்போதே அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

"உங்க கூட இருக்கிறதுங்கறதே எனக்குப் போதுங்க" என்றாள்.

"இதெல்லாம் சொல்றதுக்கு நல்லாயிருக்கும். நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராது"என்று சொல்லிவிட்டுத் தான் அவளுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தான்.

ஆதிமூலம், கந்தவேல், கருப்புசாமி மூன்று பேரும் மாலை போட்டுக் கொண்டு இளமதிக்கு பட்டம் கட்டி... மோதிரம் அணிவித்து, செயின் போட்டு பிரமாதப்படுத்தி அவளை மணவறைக்கு அழைத்து வந்தபொழுது அடுத்த தலைமுறை இளைஞர்கள் மூன்று பேரும் மணவறைக்கு நேர்



எதிராக நின்று கொண்டு அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள், சக்திவேல் உள்பட.!

சக்திவேல் உண்மையிலேயே தனியாக அமர்ந்து... சிந்தித்து மனத்தோடு பேசி தன்னைத் தெளிவாக்கிக் கொண்டான்.

தெளிவாக்கிக் கொண்டதற்குப் பிறகு ஒரு நிமிடமும் திரும்பிப் பார்க்கவில்லை. ஏற்பாடுகளில் முழுமையாகக் கலந்து கொண்டான்.

இதையெல்லாம் நினைத்து இப்பொழுது பேசிச் சிரித்துக் கொண்டார்கள் இளமதியும் சிம்மேந்திரனும்.

"ஏங்க. உண்மையிலேயே அவ்வளவு பெரிய கல்யாண மேடையை விட இந்த ரிசப்ஷன்ல வந்தவங்க தான் எனக்கு மனசுக்குப் பிடிச்சுருந்தது"என்றாள் இளமதி.

"ஆமாம். அவங்க கௌரவத்துக்காக வர்லை. மனசார வாழ்த்தறதுக்கு வந்தாங்க. ஒவ்வொருத்தர் கண்ணும் கலங்கி எப்படி வாழ்த்து சொன்னாங்க பாத்தேயில்ல..." என்றான் சிம்மேந்திரன்.

"உண்மைதாங்க"என்றாள்.

"இன்னொரு விஷயம் தெரியுமா இளமதி?"என்றான் சிம்மேந்திரன்.

"என்னங்க..." என்றாள்.

"நேத்து மாமாக்கள் மூன்று பேரும் என்னைக் கூப்பிட்டாங்க"என்றான்.

"அப்படியா, எதுக்கு? எனக்குத் தெரியாம!..." என்றாள்.

"உனக்குத் தெரியாம எனக்கு ஒரு பரிசு குடுக்கிறாங்களாம்".

"ம்ஹூம்... என்ன பரிசு? பத்து பவுன் செயினா?" என்றாள்.

"ச்சே... பத்து பவுன் செயினா...? அதைக் காட்டிலும் கோடி மடங்கு பெரிய விஷயம்"என்றான்.

"என்ன?"என்றாள் அவள் ஆர்வமாக.

"நான் ஒரு ப்ராஜெக்ட் கொடுத்திருந்தேன்ல... செயின் ஆப் ஸ்கூல்ஸ்... திருமணப் பரிசா அதை க்ராண்ட் பண்ணிட்டாங்களாம்"என்றான்.

இளமதி மகிழ்ந்து சிரித்தாள்.

"அப்படியா... உங்களுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குமே"என்றாள்.

"நானும் அவங்கிட்ட தீர்மானமாச் சொல்லிட்டேன். நானும் சரி, இளமதியும் சரி. தொடர்ந்து வேலைக்காரர் களாகத் தான் இருப்போம். எங்களுக்குச் சம்பளம் குடுத்திருங்க... மத்ததையெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம் என்று சொல்லிட்டேன். ஏன்னா... நீ சிம்மேந்திரனுடைய மனைவி., எப்பவும் மாணிக்கவேலோட மகள் தான். அந்த பார்ட்னர்ஷிப்பெல்லாம் அப்புறம் என்று சொல்லிட்டேன்" என்றான்.

"நல்லவேளையா சொல்லிட்டீங்க"என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டு மெல்ல நீவிக் கொடுத்தாள்.

"இளமதி! நீ மனசுக்குள்ள வந்து விழுந்த ஒளிப்புள்ளின்னு நினைச்சேன். ஆனா உயிருக்குள்ளேயே நுழைஞ்சு ஊடுருவிப் போவேன்னு நான் அன்னைக்குப் புரிஞ்சுக் கலை... ஆனா அந்த ஒரு மாசமும் மலேசியாவிலும் சிங்கப் பூர்லேயும் அலைஞ்சுக்கிட்டிருந்தேன் பாத்தியா... அப்பதான் என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்தவள் மட்டுமல்ல நீ... என்னோட உயிரகத்தில் ஒளியானவள்; உயிரகத்தே ஒளியாகி என்று நான் வள்ளலார் பாடல்ல படிச்சிருக்கேன்.



அது மாதிரி என் உயிருக்குள்ளே ஒளியாகி மாறினவள் நீ... அப்படீன்னு புரிஞ்சது என்று.

அவள் பேச வாய் எழாமல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் இண்டு மூன்று நாட்களில் பௌர்ணமி வருகிறது என்ற நிலையில் நிலவொளி அவள் முகத்தில் பாய்ந்து அவனை மேலும் அழகாக்கியது.

"பள்ளிக்கூடம் சாங்ஷன் பண்ணிட்டாங்க. அந்தப் பள்ளி ஒருபுறம் இருக்கட்டும். இந்தப்பள்ளிக் கூடத்திலும் நான் பாடம் சொல்லித் தரப்போறேன் புரியுதா?" என்று அவள் நோக்கி குனிய... அவள் வாகாக வளைந்து கொடுத்தாள்.

உயிரகத்தே ஒளியாகி... என்று அவன் குறிப்பிட்டது அவள் மனசுக்குள் ஒளியாகப் பாய. உளம் தொட்டு உணர்வு நெகிழ்ந்து அன்பே வடிவமாக அவள் அங்கே புளகித்துப் போய் நின்றாள்.

இரண்டு பேரும் இனிமேல் வாழப்போகின்ற வாழ்க்கையில் அந்த நிறுவனமும், அந்த ஏழை மக்களும் பெரும் பங்கு வகிக்கப் போகிறார்கள் என்பதோடு தன் கணவன் ஒரு சாதனை மன்னனாகத் திகழப் போகிறான் என்கிற பெருமிதமும் அவள் முகத்தில் தோன்றியது.

"உயிரகத்தே ஒளியாகி...!" என்று அவள் மெல்ல திரும்பச் சொல்லிக்கொண்டாள்.

"ஆமாம். கண்ணே... என் உயிரகத்தே ஒளியானவள் நீ" என்று மீண்டும் தன் அன்பைப் பொழிய ஆரம்பித்தான்.

மிகப் பெரியதொரு எதிர்காலம் அவர்களுக்காகக் காத்திருக்கின்றது. அந்த எதிர்காலத்திலே அவர்கள் வெற்றி

மேல் வெற்றியாக பெற்று முன்னே அடியெடுத்து வைக்கப் போகிறார்கள் என்பதையும் அதைப் பார்க்க உலகம் காத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் மெல்ல சலசலத்து ஓடிக் கொண்டிருந்த அந்த நீரோடையும், வானத்திலே எழுந்து கொண்டிருந்த நிலவும் புரிந்து கொண்டிருந்தன. அவை இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்து சிரித்துக் கொண்டன.

அவர்கள் இருவரும் கூட.

அன்பும், காதலும் அங்கே ஆட்சி செலுத்துகின்றன!

★ ★ ★